942.11
வாஸ்
SL/PR

# ஈழத்தின் கதை

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்
M. H. A. SALMAN
74, St. Joshep Street
COLOMBO 14
Date 18-9-62
K. M. M. A. CADER

கே. பி. எஸ். வாஸ். எம். ஏ.,

25355
M. H. A. SALMAN
74, St. Joshep Street
COLOMBO
Date
K. M. M. A. CADER
Proprietor

கலைஞன் பதிப்பகம்
கர... சென்னை – 17

நவலட்சுமி புத்தகசா...
பிரபல புத்தக வியாபா...

# முன்னுரை

## கங்கை ஆசிரியர் : பகீரதன்.

ஈழநாடு என்ருலே மனத்தில் ஒரு பயங்கரம்தான் ஏற்படுகிறது. அந்தச் சின்னஞ் சிறு தீவில் என்னதான் இருக்குமோ தெரியவில்லை. ஒருபுறம் செல்வம் கொழிக்கும் வளம் இருக்கிறது. இன்னெருபுறம் ஓயாமல் ஒழியாமல் சண்டையும் சச்சரவும், படுகொலைகளும் பாதகங்களும் ஏற்பட்டவண்ணமே இருக்கின்றன. இது இன்று நேற்று ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கவில்லை. ராவணன் இலங்கையை ஆண்டதாக புராண இதிகாசங்கள் கூறுகின்றனவே அன்று முதல் இன்றுவரை ஈழநாடு அப்படித்தான் இருக்கிறது.

இந்த ஈழத்தின் வரலாற்றுச் சரித்திரத்தை 'ஈழத்தின்கதை' என்ற பெயரால் நண்பர் திரு. கே. வி. எஸ். வாஸ் அவர்கள் எழுதியிருக்கிருர். சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஈழத்தின் கதையைச் சொல்லுகிருர்.

சரித்திரத்தை மக்களுக்குச் சொல்லுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. சரித்திரத்தையும் கற்பனைப் பாத்திரங்களைச் சேர்க்காமல் சொல்லுவது மிகக் கடினம். அப்படியே சொன்னலும் அதைக் கேட்பவர் ரஸித்து மகிழும்படி சொல்துவ மகத்தான சாதனை என்றுதான் சொல்லவேண்டும் அந்தச் சாதனையில் வெற்றி பெற்றிருக்கிருர் நண்பர் திரு. வாஸ்.

இலங்கையின் ஆதார பூர்வமான சரித்திரம், இலங்கையின் சரித்திரத்தை விளக்கும் மகாவம்சம், இலங்கையில் வழங்கும் கர்ணபரம்பரையான கதை இன்னும் இலங்கை சம்பந்தமாக மேல்நாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள சரித்திர நூல்கள் முதலியவற்றைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து இந்த அற்புதமான வரலாற்று நூலை எழுதியிருக்கிருர்.

ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஒரு சிறு கதைபோல் சுவைகுன்ருமல் எழுதியிருக்கிருர். அடடா! அந்தத் தீவுக்குள்தான் எத்தனைவிதமான அற்புதங்கள் நடைபெற்றிருக்கின்றன. எவ்வளவு சாகசங்கள் நிகழ்ந்திருக்கின்றன. எவ்வளவு பாதகங்கள் நடைபெற்றிருக்கின்றன. அன்பைப்போற்றி வளர்க்கும் தெய்வீக அம்சங்களும் செழித்து வளர்ந்திருக்கின்றன. மனிதனை மனிதன் வெட்டிக்கொண்டும் குத்திக்கொண்டும் சாவும் பல வஞ்சக நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவுக்கும் காரணம் என்ன? சிங்கத்துக்கும் மனிதனுக்கும் பிறந்த ஒரு புது இனம்தான் 'சிங்கள இனம்' என்றுசொல்லுகிருர்களே அதுதானே என்னவோ?

கா

எது எப்படி இருந்தாலும் ஈழத்தின் கதை ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெறவேண்டிய நூல். தமிழ்நாட்டு நாகரிகமும் சிங்கள நாகரிகமும் ஒன்றை ஒன்று எவ்வாறு தழுவிவளர்ந்திருக்கின்றன என்பதை நன்கு விளக்கிக்காட்டும் அற்புதமான நூல். காதலின் சக்தியைப் படம்பிடித்துக் காட்டும் நூல். காதலுக்காக முடிதுறந்த மன்னன் சாலியின்கதை மனத்தை உருக்கும் அருமையானகதை. வீரசாகசகங்கள் பல புரிந்த மன்னர்களின் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிகளும் ஒரு பெரிய நாவலைப் படிப்பதுப்போன்ற உணர்ச்சியை நமக்கு ஊட்டுகின்றன. இலங்கையில் புத்தமதம் பரவிய வரலாறும் அது செய்த சாதனைகளும் மனத்தை உருக்கும் சிறு கதைகள். இவ்வாறு இந்த ஈழத்தின் கதையில் உள்ள 20 அத்தியாயங்களும் 20 சிறு கதைகள் என்றே சொல்லலாம். புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் ஈழநாட்டுச் சரித்திரத்தைப் படித்தோம் என்ற உணர்வு தோன்றுகிறது. இவ்வாறு முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரையில் சுவை குன்றாமல் விறு விறுப்புடன் எழுதியிருக்கும் திரு. கே. வி. எஸ். வாஸ் அவர்களின் சக்தி வாய்ந்த தமிழ் நடையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திரு வாஸ் ஒரு பத்திரிகை நிருபர், ஒரு பத்திரிகை ஆசிரியர், ஒரு கட்டுரை ஆசிரியர், ஒரு கதை ஆசிரியர், ஒரு நாவலாசிரியர், ஒரு சரித்திர நூலாசிரியர். இவ்வாறு நவீன இலக்கியத்தில் அவர் ஈடுபட்டு வெற்றியடையாத துறையே இல்லை என்று சொல்லலாம். இப்படிச் சகலகலா வல்லவராக இருப்பதால்தான் இது போன்ற சரித்திர நவீனங்களைத் தகுந்த ஆதாரத்துடனும், சுவைகுன்றாமலும் எழுத முடிந்திருக்கிறது.

நூலில் ஆங்காங்கு திரு வாஸ் அவர்கள் தரும் விளக்கக் குறிப்புகளும், சொந்த அபிப்பிராயங்களும், அவருடைய ஆழ்ந்த ஆராய்ச்சித் திறமையும், அனுபவ சாதனைகளும், யாருமே மறுக்க முடியாத அழுத்தத்துடன் காண்பிக்கின்றன.

திரு வாஸ் அவர்களை ஈழநாடு வைத்துக்கொண்டு பெருமைப்பட்டு வருகிறது. ஆமாம்; அந்தக் காலத்தில் தமிழன் ஈழநாடு சென்று அரசாண்டான் என்று சரித்திரம் சொல்கிறது. ஆனால் இன்று திரு வாஸ் அவர்கள் ஈழத்தையே வென்று ஆண்டு வருகிறார் என்பதை நிதர்சனமாகப்பார்த்து வருகிறோம்.

திரு வாஸ் அவர்கள் இதுபோல் தமிழ் நாட்டுச் சரித்திரங்களையும் ஆராய்ந்து சுவை மிக்க பல நவீனங்களைத் தமிழ் இலக்கியத்துக்குத் தருவார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஷெனாய் நகரம்,
2—12—59.

பகீரதன்

## பதிப்புரை

தமிழகத்தின் அண்டை நாடு இலங்கை. அதன் வரலாறு இந்திய — தமிழக வரலாற்றுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஈழத்தின் கதையைப் படிப்பதன் மூலம் இலங்கைத்தீவின் ஆதிக் குடியேற்ற மனிதன் முதல் அங்கு அரசோச்சிய மன்னர்கள் ஈறாக யாவற்றையும் தெள்ளத் தெரிந்து கொள்ளலாம்.

வரலாற்று நிகழ்ச்சிகள் சில தமிழக மன்னர்களின் வாழ்வில் நிகழ்ந்துள்ளவை போலவே ஈழத்து மன்னர்கள் வாழ்விலும் நிகழ்ந்துள்ளன சிலசில மாற்றங்களுடன். இந்த இணை சம்பவங்கள் ருசிகரமானவை.

புத்த மதம் ஈழத்தில் பரவக் காரணமாக இருந்த அசோகனைப் பற்றியும் அதைப் பரப்புவதில் மகிந்தர் கொண்ட சோதனை அனுபவங்களையும் இது நன்கு விளக்குகிறது.

ஆசிரியர் வாஸ் அவர்கள் புராதன நூல்களான மகாவம்சம், ராஜவழி போன்ற சிங்கள நூல்களை ஆதாரமாகக்கொண்டு இந்நூலை எழுதியுள்ளார். 'வால்மீகி' என்ற புனைப்பெயரில் ஆசிரியரது இந்த 'ஈழத்தின் கதை' ஆனந்த விகடனில் தொடர்கதையாக வெளி வந்த போது வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இந்தப்புத்தகத்தை ஈழமும், தமிழகமும் விரும்பி ஏற்கும் என நம்புகிறோம்.

இந்த நூலை வெளியிட வாய்ப்பளித்த ஆசிரியருக்கும், சிறந்த முன்னுரை வழங்கியுள்ள கங்கை ஆசிரியர் திரு பகீரதன் அவர்களுக்கும் நன்றி.

தியாகராய நகரம்
சென்னை-17

மாசிலாமணி

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்




கல்யாணியி லிருந்து மஹாகயைக்கு தேவி யின் படகு சென்ற பாதை




துட்டகமனுவின் படை யெடுப்பு நடந்த பாதை

# ஈழத்தின் கதை

## 1. சிங்கன் பிறந்தான்

பகவான் புத்தர் அவதரித்து ஒரு புதிய மார்க்கத்தைக்காட்டி வந்த காலம் அது. அவரது பொன்னுரைகள் வட பாரதத்தில் மெள்ள மெள்ளப் பரவி வந்தன. எனினும், பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்திருந்த ஆரியாவர்த்தத்தில் அமைதி குலைந்து நித்திய கண்டமும் பூர்ண ஆயுசுமாக ஜனங்கள் வாழ்ந்து வந்தார்கள்.

மகத வம்சத்தின் ஆதி பிதாவான சிசுநாகன் காலத்திலிருந்தே கலிங்கத்தின்மீது மகதத்துக்கு ஒரு கண் உண்டு. தென் இந்தியாவின் கோட்டைக் கதவுபோலிருந்த கலிங்கத்தை வெற்றிகொள்ள அசோகன் காலம் வரையில் அதாவது 400 ஆண்டுகள் வரையில், மகத மன்னர்கள் அடுத்தடுத்து முயற்சிசெய்து வந்தார்கள். பாரதம் முழுவதையும் மகதக் கொடியின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்பதே அவர்களது ஏகாதிபத்திய லட்சியமாயிருந்தது.

இன்றைக்குச் சரியாக 2,600 ஆண்டுகளுக்கு முன் மகத மன்னன் பிம்பிசாரனைப் படுகொலை செய்துவிட்டு அவன் மகன் அஜாதசத்ரு அரசைக் கைப்பற்றினான். கோசல மன்னன் பிரசன்னஜித், திமிர்பிடித்த அஜாதசத்ருவுக்கு நல்லதொரு பாடம் கற்பிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கையில், அஜாத சத்ரு ஒரு பிரம்மாண்டமான சேனையைத் திரட்டிக்கொண்டு முற்றிலும் எதிர்பாராத விதமாகக் கோசலத்தின்மீது பாய்ந்துவிட்டான்.

இந்த யுத்தத்தின் முடிவு என்ன ஆகுமென்பதைப்பற்றி யாரும் சந்தேகிக்கவில்லை. மகத வேந்தன் அஜாதசத்ரு

கோசலத்தை இணைத்துக் கொள்வதுடன் திருப்தியடைந்து விடமாட்டான் என்பதிலும் யாருக்கும் சந்தேகமில்லாமலிருந்தது. வட்டமிடும் மகதக் கழுகை எதிர்த்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சிற்றரசுகள் முகாம் கூட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்தச் சமயத்தில்தான் வங்க மன்னன் கலிங்க நாட்டு இளவரசியை மணந்து, திருமணத்தொடர்பால் இரு தேச உறவையும் பலப்படுத்தினான். இந்தத் திருமணத்தின்மூலம் வங்க மன்னனுக்கும் கலிங்க இளவரசிக்கும் பிறந்த ஒரு பெண் குழந்தைதான் இலங்கைச் சிங்கள வம்சத்தின் ஆதிகர்த்தாவாக நேர்ந்தது.

* * *

சுபா என்று அந்தக் குழந்தைக்குப் பெயரிட்டிருந்தார்கள். குழந்தையின் மழலையிலே மெய்மறந்து மகிழ்ந்திருந்தார்கள் ராஜ தம்பதிகள். அது அற்ப சந்தோஷமாக முடியப் போகிறதென்பதை அவர்கள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

துள்ளி விளையாடும் பிராயத்தில் சுபா முழுமதியெனப் பொலிந்து விளங்குவதைக் கண்டு ராஜ தம்பதிகளுக்குத் தலைகால் தெரியவில்லை. அவர்கள் கொடுத்து வந்த செல்லமும், விதியின் கதியும் இணைந்து இளவரசி சுபாவின் போக்கில் விபரீதமான சில மாறுதல்களை ஏற்படுத்த ஆரம்பித்தன.

வெறியூட்டும் இவளுடைய சௌந்தரியமும் பல விபரீதங்களுக்குக் காரணமாயிருந்தது. அரண்மனை வட்டாரங்களில் பலர் பலவிதமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்த பொழுதுதான், மன்னனின் கண் திறந்தது. அதன் பலனை இளவரசிக்குப் பலமான கட்டுக்காவல் ஏற்பட்டது.

மன்னன் அரண்மனை ஜோதிடர்களை அழைத்து விசாரித்தான். "சொல்லவும் பயமாயிருக்கிறது; சொல்லாமலும் இருக்க முடியவில்லை. இப்படித் தவிக்கிறோம் நாங்கள்!" என்றார்கள் அவர்கள்.



கலவரமடைந்த வங்க மன்னன், "ஏன் தயங்குகிறீர்கள்? இளவரசியின் குணம் மாறவே மாறாதா? தைரியமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"சொல்லுகிறோம் மன்னா! சொல்லுகிறோம். இளவரசியின் ஜாதகத்தை நாங்கள் எல்லோரும் அலசிப் பார்த்துவிட்டோம்" என்று சொல்லி விட்டு, மேலும் தயங்கினார் ஜோதிடர்களில் முதியவர்.

"ஜாதகத்தில் என்ன தெரிகிறது?" என்று அவசரப்படுத்தினான் மன்னன்.

"இளவரசிக்கு மிருகராஜா கணவனாகப் போகிறான்!"

"என்ன சொல்லுகிறீர்கள்? எந்த ராஜா? மிருகராஜா என்றா சொன்னீர்கள்?"

"ஆமாம், மன்னா! முறை தவறி, மனித நியதிகளையெல்லாம் விட்டு, சிங்கத்தை தங்கள் மகள் கணவனாக அடையப்போகிறாள்! அது மட்டுமா, மன்னா? இன்னும் சொல்லுகிறோம் கேள்! அவள் வயிற்றில் பிறக்கும் குழந்தை ஒரு புதிய வம்சத்துக்கே ஆதிபிதாவாக இருக்கப்போகிறது; நாங்கள் சொல்லவில்லை; கிரகங்கள் இப்படிச் சொல்லுகின்றன!"

அரசன், கண்களில் கோபக் கனல் பறக்க, "கிரகங்கள், கிரகங்கள் சொல்லுகின்றன! நானும் பார்க்கிறேன்!" என்று கர்ஜனை செய்துவிட்டு வேகமாக எழுந்து போய்விட்டான்.

இரவு முழுவதும் மன்னனுக்கு மன நிம்மதியே யில்லை. மறுநாள் அந்தரங்கமாக மந்திரி சபையில் ஆலோசனை நடந்தது. இளவரசி சுபா தேவியைத் தற்காலிகமாகச் சிறை வைத்திருப்பதுதான் சிறந்த மார்க்கமென்று மந்திரிகள் யோசனை சொன்னார்கள்.

அதன்படி இளவரசி பலத்த கட்டுக் காவலுடன் ஒரு கோட்டைக்குள் சிறை வைக்கப்பட்டாள். "கிரகங்களை

ஏமாற்றி விடுவோம்; விதி எப்படி இந்தக் கோட்டைச் சுவர்களைத் தாண்டிக்குதித்து உள்ளே வரப் போகிற தென்பதைப் பார்ப்போம்" என்று சபதம் செய்துவிட்டு இறுமாந்திருந்தான் மன்னன்.

விதியின் முன்னிலையில் கோட்டையும் கொத்தளங் களும் எம்மாத்திர மென்பதை அந்த அப்பாவி மன்னன் அப்பொழுது உணர்ந்திருக்கவில்லை. சிறைப்பட்டிருந்த சுபா காவலாளிகளின் உதவியைக் கொண்டு ஒரு நாள் தப்பியோடி விட்டாள். பச்சைக்கிளியைத் தங்கக்கூண்டி லடைத்து பால் சோறு போட்டு வளர்த்தாலும் அது சிறகு அடித்துக்கொண்டு சுதந்தரமாகப் பறந்தோட சமயம் பார்த்துக் கொண்டுதானிருக்கும்? அதே போல சிறு வயது முதல் யாருக்கும் கட்டுப்படாமல் யதேச்சையாக வளர்ந்தவள் கட்டுக்காவலுக்கு மத்தியில் எப்படி நிம்மதி யுடன் இருப்பாள்?

இரவு முழுவதும் ஓட்டமும் நடையுமாக நாட்டின் எல்லையை அடைந்த சுபா, வணிகர்கள் கூட்டம்மொன்று போவதைக்கண்டு அந்த கோஷ்டியுடன் சேர்ந்துகொண் டாள். முறையான போக்குவரத்துகள் இல்லாத அந்தக் காலத்தில் கள்வர்பயம் அதிகமாதலால் பிரயாணிகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து பிரயாணம் செய்வது வழக்கம். அவ்விதக் கோஷ்டியுடன் இளவரசி சுபாவும் சேர்ந்துகொண்டு விதிவிட்ட வழியே செல்லலானாள்.

கருணை உள்ளம் படைத்த ஒரு வியாபாரி சுபாவை யாரென்று தெரிந்து கொள்ளாமலே தன்னுடைய வண்டி யில் ஏற்றிக்கொண்டான். கலிங்கத்தை நோக்கி அவள் இவ்விதம் சுகமாகப் பிரயாணத்தைத் தொடங்கினாள்.

அவளுடைய பிரயாணத்தில் முதல் இரண்டு தினங் கள்வரையில் ஒரு விசேஷமும் நடக்கவில்லை. மூன்றாவது நாள் மாலை அந்த கோஷ்டி ஒரு காட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்த பொது ஒரு சிங்கத்தின் கர்ஜனை இடி முழக்கத்தைப்போல அவர்களுக்குக் கேட்டது. அந்த சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் வியாபாரிகள் போட்ட



தைப் போட்டபடி விட்டுவிட்டு மூலைக்கு ஒருவராகத் தலை தெரிக்க ஓடிவிட்டார்கள். ஆனால் சுபா மாத்திரம் ஓட வில்லை. அமைதியாக வண்டியிலிருந்து இறங்கி சப்தம் பிறந்த திசையை நோக்கினாள். எதையும் கூர்மையாகவும் அபாரத்துணிவுடனும் நோக்கும் அவளுடைய தீரப் பண்பு நெருக்கடியான அச்சமயத்திலும் அவளுக்கு உற்ற துணையாக இருந்து உதவியது.

பயங்கரத் தோற்றத்துடன் ஒரு ஆண்சிங்கம் நான்கு கால் பாய்ச்சலில் விரைந்து வருவதை சுபா கண்டாள். அப்பொழுதும் அவள் மனம் கலங்கவில்லை. வைத்த விழிகளை வாங்காமல் * காட்டு ராஜனை அவள் முறைத்துப் பார்த்துக்கொண்டு இடம் பெயராமல் நின்றாள். அருகில் வந்த சிங்கம் குறுக்கே நின்ற ஒரு மாட்டை ஓரேயடியாக அடித்துப் பசியாற்றிக் கொண்டது. அந்த பயங்கரக் காட்சியும் சுபாவின் மனோதிடத்தைத் தளர்வடையச் செய்யவில்லை. ஜோதிடர்களின் கூற்று மெய்யாகி விடுமோ என்ற எண்ணம் அவளுடைய உள்மனத்திலே இலேசாக எழுந்தது.

மாட்டை அடித்துத்தின்ற சிங்கம் உண்ட மயக்கத்தில் மெதுவாகத் தலையைத்தூக்கி சுபாவைப் பார்த்தது. பிறகு அவளை நோக்கி கம்பீர நடைபோட்டு நடந்து வந்தது.

"மாட்டை விழுங்கியதைப்போல என்னையும் விழுங்க வருகிறாயா? வா, அருகில் வா! நாட்டு ராஜாவிடமே பயப் படாத நானா காட்டு ராஜாவாகிய உன்னிடம் பயப்படு வேன்? சிறைப்பட்டிருப்பதைக் காட்டிலும் சுதந்திரமாகச்

* சியீகம் என்பது சிங்கன் என்ற பெயருடைய புஜபல பராக்கிரமம் பொருந்திய கொள்ளைக்காரனயிருக்க வேண்டு மென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சிங்கத்தின் பல முடையவன் என்பதற்காகவும் காட்டு ராஜா என்பதற்காகவும் சிங்கம், சிங்கன் என்ற பெயர்கள் அவனுக்குஏற்பட்டிருக்கலாம்,

சாவதை விரும்பிவந்தவள் நான், சாவுக்கே பயப்படா தவளுக்கு உன்னிடம் என்னபயம்?" என்றாள் இளவரசி.

முகத்திலும் கால்களிலும் மாட்டு ரத்தம் சொட்டச் சொட்ட, பயங்கரமான தோற்றத்துடன் அந்த ஆண் சிங்கம் இளவரசியை நோக்கி வந்தது. அருகில் வந்ததும் பழக்கப்பட்ட நாய்க்குட்டியைப்போல வாலைக் குழைத்துக் கொண்டு பரம சாதுவாக நின்றது. சுபா தைரியமாக அதன் பிடரிமயிர்களை ஒதுக்கித் தலையிலும் முதுகிலும் தட்டிக்கொடுத்தாள். மேலே ஏறி உட்கார்ந்து கொள் என்று சமிக்ஞை செய்யும் முறையில் அந்தச் சிங்கம் முதுகை வளைத்துத் திரும்பி நின்றுகொண்டது. இளவரசி அதன்மீது ஏறி உட்கார்ந்து பிடரி மயிர்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டாள். அவ்வளவுதான் தாமதம். காட்டு ராஜா அழகுப் பெண்ணைச் சுமந்துகொண்டு தனது குகையை நோக்கி வேகமாக நடந்தது.

காட்டுக்குள் சுற்றிச் சுற்றி நெடுந்தூரம் சென்ற சிங்கம் கடைசியாக தனது குகைக்குள் போய் நின்றது. விசாலமான அந்த குகையே தனது வருங்கால வாசஸ்தல மாயிருக்கப் போகிறதென்பதை இளவரசி தெரிந்து கொண்டாள். ஆடம்பர வைபவங்களுடன் அரண்மனையில் கைதியாயிருப்பதைவிட காட்டுக்குகையில், விலங்குகளுடன் சுதந்திரமாக வாழ்வதே மேலானதென்று அவளுக்குத் தோன்றியது. சிங்கத்தைக் கணவனாகக்கொண்டு அடுத்து இருபது வருடகாலம் வரையில் அந்தக்குகையில் அவள் வசித்துவந்தாள்.

சுபாவுக்கு ஒரு ஆண்குழந்தையும் ஒரு பெண்குழந்தை யும் பிறந்தனர். மூத்த குழந்தைக்கு சிங்கபாகு என்றும் இளைய குழந்தைக்குச் சிங்கவல்லி என்றும் பெயரிடப் பட்டது. இவ்விரு குழந்தைகளின் மூலமாக உலகில் ஒரு புதிய வம்சம் தோன்றி சீரும் சிறப்புமாக விளங்கப் போவ தாய் ஜோதிடர்கள் சொல்லியிருந்த படியினால் அந்தக் குழந்தைகளை சுபா கவனமாக வளர்க்கலானாள்.

குழந்தைகளுக்கு வயது ஆக ஆக அவர்களுடைய தோற்றம் சாதாரணக் குழந்தைகளைப் போலில்லாமல்



சற்று மாறுபட்டிருப்பதைக் கண்டு இளவரசி துணுக் குற்றாள். குழந்தைகளின் உடல் முழுதும் உரோமம் வளர்ந்திருந்தது. விரல்களில் நகங்கள் கூர்மையாக நீண்டிருந்தன. கோரப் பற்கள் அவர்களுடைய உரு வத்தை பயங்கரமாக்கியிருந்தன. பேசுவதற்கு கற்றுக் கொண்டிருந்தது மட்டுமே அவர்களிடம் தென்பட்ட மனித அம்சம்.

சிங்கபாகு பகுத்தறிவைப் பயன்படுத்தி சிந்திக்கும் வயதையடைந்ததும் தனது வரலாற்றைத் தாயிடம் கேட் டுத்தெரிந்து கொண்டான். அது முதல் விலங்குகள் வாழும் காட்டைவிட்டு மனிதர்கள் வாழும் நாட்டுக்குப் போகவேண்டுமென்ற ஆசை அவன் மனதில் கொழுந்து விட்டு எரிந்தது, ஒரு நாள் சிங்கம் வேட்டைக்குச் சென் றிருந்த சமயம்பார்த்து தாயை ஒரு தோளிலும் தங்கையை இன்னொரு ;தோளிலும் சுமந்துகொண்டு காட்டை விட்டு வெளியேறி ஒரு கிராமத்துக்கு அவன் வந்து சேர்ந்தான்.

விநோதமான மனிதர்கள் திடீரென்று தங்கள் மத்தி யில் தோன்றியதைக் கண்டு கிராமவாசிகள் திகைத்துப் போயினர். சிங்கபாகு, சிங்கவல்லி ஆகிய இருவரின் அசாதாரணமான தோற்றமும் அவர்கள் ஆச்சரி யத்தைப் பன் மடங்கு அதிகமாக்கிற்று. தங்களுக்குள் பேசி ஒரு முடிவு செய்துகொண்டு கிராம ஜனங் கள் அந்த மூவரையும் இளவரசன் அனுராவிடம் அழைத்துப் போனார்கள். இளவரசன் அனுரா, சுபாவின் வரலாற்றைக் கேட்டுவிட்டு "உன் கதை யாருக்கும் தெரிய வேண்டாம். நீங்கள் மூவரும் என்னோடு இருந்து விடுங்கள்" என்றான். காலக்கிரமத்தில் சுபா அந்த இளவரசனின் மனைவியானாள்.

இதற்கிடையில் வங்கத்தில் சுபாவின் தகப்பன் காலமாகி, சுபாவின் மாமனாகிய கலிங்கநாட்டு இளவரசன் பட்டத்துக்கு வந்திருந்தான். அவனுடைய மூத்த பிள்ளை தான் சுபாவை மறுமணம் செய்து கொண்ட அனுரா இளவரசன். தன்னுடைய முறைப்பெண் தன்னிடம்

திரும்பி வந்து சேர்ந்ததில் அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சி யென்றாலும் ஓடிப் போனவளைச் சேர்த்துக் கொண்டதாக தகப்பனிடம் தெரிவிக்க அனுராவிற்குத் துணிவு இல்லை.

சுபாவை விட்டுப் பிரிந்த ஆண் சிங்கம் அவளைத் தேடி யலைந்தது. அதன் துக்கம் ஒரு வெறியாக மாறியது. ஒவ்வொருநாளும் வங்க நாட்டில் நுழைந்து சர்வ நாசங்களைச் செய்ய ஆரம்பித்தது. அந்தச் சிங்கத்தைக் கொல்லு கின்ற வீரனுக்கு பொன்னும் மணியும் அள்ளித் தருவதாக மன்னன் பறை சாற்றுவித்தான். அந்தப் பரிசுகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யும் துணிவு சிங்கபாகு ஒருவனைத் தவிர வேறு எவருக்குமில்லை. சிங்கபாகுவை யும் அவனுடைய தாயாகிய சுபா தடுத்து வைத்திருந்தாள்.

“பரிசுக்கு ஆசைப்பட்டு தகப்பனைக் கொன்ற பாவத்தைக் கட்டிக்கொள்ளாதே” என்று சுபா தன் மகனை எச்சரித்தாள். ஆயினும் நீண்டகாலத்துக்கு அவனை பெற்ற தாயினாலும் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை. சிங்கத்தைக் கொன்று அதன் தலையை கொண்டு வருபவருக்கு ராஜ்யத்தின் எல்லையிலுள்ள சில பிரதேசங்களை வழங்குவதாக மன்னன் அறிவிக்கவே, சிங்கபாகு தாயிடமும் சொல்லிக் கொள்ளாமல் வில்லை எடுத்துக் கொண்டு சிங்கத்தின் குகையை நோக்கிவிரைந்தான். படுத்திருந்த சிங்கம் காணாமற் போன மகனைக் கண்டதும் ஆவலோடு எழுந்து வந்தது. அருகில் வருவதற்குள் அதைக் கொன்று வீழ்த்திவிட்டான் சிங்கபாகு.

தகப்பனின் தலையை மாத்திரம் துண்டித்து எடுத்துக் கொண்டு அவன் நாடு திரும்பியபொழுது அதற்குள் வங்க மன்னன் காலமாகிவிட்டான். கொடிய சிங்கத்தை அழித்து நாட்டைக் காப்பாற்றிய சிங்கபாகுவுக்கு மந்திரிகளும் மக்களும் ஒரு முகமாகச் சேர்ந்து பட்டம் சூட்ட விரும்பினார்கள். ஆனால் சிங்கபாகு அதற்குச் சம்மதிக்கவில்லை. அவன் யோசனைப்படி இளவரசன் அனுரா வங்கத்தின் மன்னனாகவும் இளவரசி சுபா ராணியாகவும் பட்டம் சூட்டப்பட்டனர். பட்டாபிஷேக வைபவங்கள்



நடந்து முடிந்ததும் * சிங்கபாகு தனது சகாக்களில் சிலரை அழைத்துக்கொண்டு தனது தகப்பனின் பூர்வீக தேசமான கலிங்கத்துக்கு வந்து சேர்ந்தான். கலிங்கத்தின் எல்லையிலிருந்த ஒரு காட்டுப் பிரதேசத்தை பட்டினமாகத் திருத்தியமைத்து அதற்குச் சிங்கபுரம் என்று அவன் பெயரிட்டான். வங்கத்திலிருந்து தனது சகோதரி சிங்கவல்லியைத் தருவித்து அவளையே மனைவியாகவும் மணந்து கொண்டு சிங்கபுரத்தில் அவன் ஆட்சி நடத்தலானான்.

** சிங்கபாகுவின் மனைவியான சிங்கவல்லி இரட்டைக் குழந்தைகளாக 16 தடவை பிரசவித்தாள். இந்த 32

---

* சிங்கபாகு ஸ்தாபித்த சிங்கபுரம் கலிங்கத்திலுள்ள ஒரு சிற்றூர் என்பதற்கு பிரபல சரித்திர ஆசிரியரான முதலியார் ராஜநாயகம பல ஆதாரங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கடிபொழி லுடுத்த கலிங்க நன்னாட்டு
தீம்புனற் பழனச் சிங்கரபுரத்தினும்.

என்று சிலப்பதிகாரத்திலும்

காசிப்பூம் பொழிற் கலிங்க நன்னாட்டுச்
சிங்கபுரம்

என்று மணிமேகலா காவியத்திலும் சிங்கபுரத்தின் பட்டினப் பெருமை வருணிக்கப்பட்டிருப்பதை முதலியார் ராஜநாயகம் எடுத்துக் காட்டி சிங்கள வம்சத்தின் ஆதிமுதல்வர்கள் வாழ்ந்த சிங்கபுரம் தமிழ்நாட்டில் உள்ளதே யன்றி ஆரிய வர்த்தத்தைச் சேர்ந்த வங்கத்தில் இல்லை யென்பதை ஆணித்தரமாகக் கூறுகிறார்.

** ஒரிஸ்ஸாவில் கஞ்ஜம் ஜில்லாவில் சிக்காகோல் பகுதியில் சிங்கபுரம் என்று பெயருள்ள ஒரு சிற்றூர் இன்னமும் இருக்கிறது. பாழ் அடைந்த நிலைமையிலுள்ள இந்த இடமே சிங்கபாகு ஸ்தாபித்த சிங்கபுரமாயிருக்கலாம் என்று கருதப் படுகிறது.

கஞ்சம் நகருக்கு மேற்கே 115 மைல்களுக்கப்பாலிருக்கும் சிங்கபுரம் சிங்கபாகுவின் தலைநகராயிருந்திருக்கக் கூடுமென்று பிரபல ஆராய்ச்சியாளரான ஜெனரல் கன்னிங்ஹாம் கூறுகிறார். ஒரு காலத்தில் இது கலிங்கத்தின் தலைநகரமாக இருந்திருக்கக் கூடுமென்பதும் அவர் கருத்து.

குழந்தைகளில் மூத்தவனே சரித்திரப் பிரசித்திபெற்ற விஜயன் என்ற இளவரசன்.

இளமையிலேயே விஜயன் மிகக் கொடியவனு யிருந்தான். வாலிப வயதை அடைந்தவுடன் விஜயன் தன் சகாக்களைச் சேர்த்துக் கொண்டு நாட்டில் பலவித மான அட்டூழியங்களைச் செய்து வந்தான். சிங்கபாகுவும் சிங்கவல்லியும் அவனைத் திருத்த பெரும் பிரயத்தனங் களைச் செய்து பார்த்தார்கள். ஆனல் அவர்களுடைய முயற்சி பயனளிப்பதாயில்லை. பொழுது விடிந்தால் விஜயனின் அட்டகாசங்களைப் பற்றி புதிய புதிய புகார்கள் வருவதைக் கேட்டு விஜயனின் பெற்றேர்கள் மனம் உடைந்து போனுர்கள்.

ஒருநாள் நகரமக்கள் கூட்டமாக அரண்மனை வாசலுக்குத் திரண்டு வந்து விஜயனைக் கடுமையாக தண்டிக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் ராஜ்யத்தை விட்டு தாங்கள் எல்லோரும் வெளியேறி விடுவதாயும் முறையிட்டார்கள். சிங்கபாகுவிற்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்து விட்டு விஜயனையும் அவனுடைய சகாக்களையும் நாடு கடத்துவதைத் தவிர வேறு வழியில்லை யென்று முடிவுக்கு அவன் வந்தான்.

விஜயனையும் அவனுடைய 700 சகாக்களையும் ஒரு மரக்கலத்திலும், அவர்களுடைய மனைவிமார்களை இன்னெரு மரக்கலத்திலும், குழந்தைகளை மூன்றுவது மரக்கலத்திலும் ஏற்றி திசை தெரியாத கடலில் அனுப்பி னர்கள்.

குழந்தைகளுடன் சென்ற மரக்கலம் நாகத்வீபம் என்ற மணிவல்லபத்தீவில் போய் நின்றது. பெண்களுடன் சென்ற மரக்கலம் வேறெரு தீவை அடைந்தது. அதற்கு மகிலத்வீபம் (மகில—பெண்கள்) என்ற பெயர் ஏற்பட்டது. விஜயனும் அவன் கோஷ்டியும் போன மரக்கலம்



*ஸூர்ப்பாரகா என்னுமிடத்தில் ஒதுங்கியது. விஜயனும் அவன் நண்பர்களும் மகிழ்ச்சியுடன் கரையில் இறங் கினுர்கள்.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதைப் போல, தண்டித்து நாடு கடத்தப்பட்ட பிறகும் தீய பழக்கங்கள் அவர்களை விட்டுப் போகவில்லை. புதிய நாட்டிலும் அவர்கள் பல தீய செயல்களில் ஈடுபடவே, ஜனங்கள் திரண்டெழுந்து தாக்க ஆரம்பித்தார்கள். அவர்களிடமிருந்து தப்பிக் கொண்டு விஜயனும் அவன் நண்பர்களும் மறுபடியும் மரக்கலத்தில் ஏறி பிரயாணப் பட்டனர்.

விஜயனும் அவன் சகாக்களும் பலதினங்கள் வரையில் கடற் பிரயாணம் செய்தார்கள். மரக்கலத்தில் கொண்டு வந்திருந்த உணவும் குடிதண்ணீரும் தீர்ந்து போய்விடவே பட்டினியாக அனேக தினங்களை அவர்கள் கழிக்க வேண்டியதாயிற்று. தெய்வாதீனமாகத் தாங்கள் பூமியில் இறங்க நேரிட்டால் இனி பரம யோக்கியர்களாக நடந்து கொள்ளுவதென்று தங்களுக்குள் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

பலநாள் பிரயாணத்துக்குப் பிறகு, ஒரு நாள் சூரிய உதயத்தின் பொழுது வெகு தூரத்துக்கப்பால் சமணகூட பர்வதம் (இப்பொழுது ஸ்ரீபாத மலையென்னும்

*ஸூர்ப்பாரகா என்னுமிடம் மேற்கிந்தியாவில் பம்பாய்க்கு வடக்கே தாணுஜில்லாவில் சொபாரா என்ற பெயருடன் இப் பொழுதிருக்கிறது. கிழக்கிந்தியாவிலிருந்து கப்பல் பிராய ணத்தை ஆரம்பித்த விஜயன் கோஷ்டி மேற்கிந்திய நகரத்தை எப்படி அடைந்தார்களென்று புரியவில்லை. மகாவம்ச கர்த்தாக் களுக்கு, ஒன்று இந்திய பூகோள அமைப்பு தெரியாமலிருக்க வேண்டும், அல்லது தெறிந்திருந்தும் விஜயன் பிரயாணத்தை கவர்ச்சி மிக்க வரலாராக சித்தரிக்க மனம் போனபடி எழுதி வைத்திருக்க வேண்டுமென்று முதலியார் ராஜநாயகம் எடுத்துக் காட்டுகிருர்.

சிவன் ஒளிபாதம் என்றும் ஆடம்ஸ் பீக் என்றும் அழைக்கப்படும் மலைச்சிகரம்) அவர்கள் கண்களில் பட்டது. சிறிது நேரத்துக்குள் அவர்களுடைய மரக்கலம் இலங்கையின் வடமேற்குக் கரைக்கு வந்து சேர்ந்தது. முதன் முதலாக விஜயனே மரக்கலத்திலிருந்து கரையில் தாவிக் குதித்தான். காண்போமா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த நிலத்தைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் பூமாதாவுக்கு அஞ்சலி செய்ய இரண்டுகைகளையும் ஊன்றிக் கொண்டு தரையில் வீழ்ந்து வணங்கினான். எழுந்து பார்த்த பொழுது கைகளில் செம்மண் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் *"தாம்பர வருணி" (தாமிர நிறம்) என்று அவன் கூச்சலிட்டான். அது நீண்ட காலம் வரையில் இலங்கையின் பெயராகவே நிலைத்துவிட்டது.

*தாம்பரவருணி என்பது இலங்கையின் பழமையான பெயர்களில் ஒன்று. அசோகனின் சிலசாஸனங்களில் இலங்கைக்கு தாம்பர வருணி என்ற பெயரே கொடுக்கப்பட்டுள்ளது. சந்திர குப்தனின் அவைக்களத்தை அலங்கரித்த மெகஸ்தனீஸ் என்ற கிரேக்கப் பெரியாரும், சீன யாத்ரீகர் ஹூவோங் சுவாங் என்பாரும் இலங்கையை இவ்விதமே அழைத்தனர். புத்தர் காலத்திலும் அதற்குப்பின் பல நூற்றாண்டுகள் வரையிலும் அயல் நாட்டவர்கள் இலங்கையை Tamdapanni அல்லது Taprobane என்று தாமிரத்தை சம்பந்தப்படுத்தி குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

விஜயன் இலங்கையில் இறங்கிய இடம் கொழும்பு நகருக்கு வடக்கே, வடமேற்குக் கரையோரத்திலுள்ள புத்தளத்தின் அருகில் உள்ளது என்பது சிலருடைய கருத்து. வடக்கே தமிழர் அரசிருந்த மாதோட்டத்தில் என்பது வேறுபலரின் நம்பிக்கை. இன்று திருக்கேதீச்வரம் என்று அழைக்கப்படும் ஸ்தலமே பழைய மாதோட்டம் என்ற உலகப் பிரசித்தி பெற்ற துறைமுகப் பட்டனமாகும். காவிரிப்பூம்பட்டினத்தை கடல் கொண்ட பொழுது மாதோட்டமும் அழிந்து போனதாகத் தெரிகிறது. இப்பகுதியின் கரையோரங்களில் இன்றைக்கும் செம்மண்ணைக் காணலாம். கிரேக்க உரோமானிய நாணயங்கள் அடிக்கடி அகப்படும் இவ்விடத்தில் விரிவான முறையிலே புதை பொருள் ஆராய்ச்சி நடத்தினால் பல அரிய சரித்திர உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.



விஜயன் இலங்கையில் அடியெடுத்து வைத்த அதே சமயத்தில் ஆரியா வர்த்தத்தில் ஒரு அதிமுக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. புத்தபிரான் உலகில் அவதரித்த இலட்சியம் பூர்த்தியடைந்து பரிநிர்வாண மெய்தினார். அதற்குச் சற்று முன்னதாக தமது புதிய சித்தாந்தம் இலங்கையில் நிலைபெறப் போவதையும் விஜயன் இலங்கையை நெருங்கிக் கொண்டிருப்பதையும் அவர் ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டாராம். புத்தர் பிரான் சக்கரக் கடவுளிடம் இலங்கையையும், இலங்கையில் இறங்க விரைந்துகொண்டிருக்கும் விஜயன் கோஷ்டியாரையும் பாதுகாக்குமாறு வேண்ட, சக்கரக் கடவுள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாராம். புத்தர் பிறந்ததும், ஞானோதயம் பெற்றதும், பரி நிர்வாண மெய்தியதும், சிங்கள வம்சத்தின் ஆதி முதல்வனான விஜயன் இலங்கையில் அடியெடுத்து வைத்ததும் எல்லாம் வைகாசி விசாகத்தில் நடந்ததால் விசாகபௌர்ணமியை விசாக் பண்டிகை என்ற பெயருடன் பிரதிவருடமும் கொண்டாடுகிறார்கள்.

# 2. விஜயனின் வெற்றி

**வி**ஜயன் இலங்கைக்கு வந்த சமயம் அந்தநாட்டின் நிலைமையும் அங்கு வாழ்ந்த மக்களின் நிலைமையும் எவ்விதம் இருந்தது என்பதைக் கவனிப்பது கதையின் போக்கிற்கு அவசியமாகிறது. இராவணன் அழிவுக்கும் விஜயன் வருகைக்குமிடையில் 1844 ஆண்டுகளுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இடையிலுள்ள இக்காலத்தில் இலங்கையில் மனித சஞ்சாரமில்லையென்றும் அரக்கர், யட்சர், நாகர் முதலானவர்கள் இலங்கையிலிருந்ததாயும் மகாவம்சம், ராஜவழி போன்ற புராதன பாலிநூல்கள் கூறுகின்றன. இராவணனும் அவனுடைய சந்ததியார்களும் திராவிடத் தமிழர்களே என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. வட இலங்கைக்கு நாகத்துவீபம்

என்ற பெயர் நீண்ட காலத்துக்கு நிலைத்திருந்தது. தமிழர்களிலே ஒரு பிரிவினர்களான நாகர் என்ற வகுப்பினர் செல்வச் சிறப்புடன் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆட்சி நடத்தி வந்தார்கள். நாகப்பட்டினம், நாகபுரி, நாகர் கோயில், நாகார்ஜுனகொண்டா முதலான ஊர்ப்பெயர்களும் சர்ப்ப வழிபாடும், இதற்குச் சான்றுகள்.

மஜும்தார், ராய்சௌத்ரி, வின்சென்ட்ஸ்மித், ஹேவல் முதலான சரித்திர மேதைகளின் கருத்துப்படி மகாபாரத வரலாறு சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது புத்தர் பரி நிர்வாணமடைந்ததற்கு 19 நூற்றாண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றிருக்கவேண்டும். அவ்வளவு புராதனமான வரலாற்றில் நாகமன்னர்களைப்பற்றியும் நாகத்துவீபத்தின் தலைநகரமான மணிவல்லபத்தைப்பற்றியும் குறிப்புகளிருப்பதைக் காணலாம். மணிமேகலா தெய்வம் இலங்கைக்கு விஜயம் செய்தது இதே மணிவல்லபத்திற்குத்தான்.

புத்தர் ஞானோதயம் பெற்ற 9 வது ஆண்டில் இலங்கைக்குச்சென்று கோடிக் கணக்கானவர்களுக்கு தமது மார்க்கத்தை உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் மகோதரன்,குலோதரன் என்ற இரு நாகர்மன்னர்களுக்கிடையிலே நவரத்தின சிம்மாசனம் ஒன்றின் உரிமைக்காக அதி பயங்கரமான யுத்தம் உருவாகிக்கொண்டிருந்தது. ரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி நடத்தும் அளவிற்கு நாக மன்னர்களின் ஆட்சியில் நாடு மகோன்னத நிலைமையிலிருந்தது. புத்தர் பிரான் இரண்டாவது முறையாக இலங்கைக்கு விஜயம் செய்து பகைமை பாராட்டிய நாகமன்னர்களுக்கிடையில் சமாதானத்தை உண்டு பண்ணினர். போர் முனையில் மகோதரனுக்கு உதவி புரிவதற்காக வந்திருந்த அவனுடைய மாமனும் கல்யாணியின் (இப்பொழுது களனி என்று அழைக்கப்படும் கொழும்பிற்கு அருகிலுள்ள புராதன க்ஷேத்திரம்) மன்னனுமான மாணிக்கநாகனின் அழைப்பிற் கிணங்க புத்தர்பிரான் களனியென்ற கல்யாணிக்கும் விஜயம் செய்தார்.



ஞானோதயம் பெற்ற 8-வது ஆண்டில் புத்தர் 500-பிக்ஷுக்கள் சகிதம் கல்யாணி மன்னன் மாணிக்க நாகன் அழைப்பிற் கிணங்க மூன்றாவது தடவையாக இலங்கைக்குவந்து பல கோடி ஜனங்களுக்கு தர்மோபதேசம் செய்தார். மகாவம்சம் கூறும் இந்த வரலாறுகள் புத்தர் காலத்திலேயே நாகர் என்ற தமிழர்கள் இலங்கை முழுவதிலும் சிறப்புடன் வாழ்ந்து வந்ததைக் காட்டுகின்றது. இவ்வளவு கூறும் மகாவம்சம் நாகர்களையும் யட்சர்களையும் மனிதர்களல்ல வென்றும் விஜயன் வருமளவும் இலங்கையில் மனித சஞ்சாரமே யில்லையென்றும் கூறுவதும், அதே சமயம் புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது கோடிக்கணக்கான ஜனங்களை புத்த தர்மத்துக்கு மாற்றினரென்று கூறுவதும் முன்னுக்குப்பின் முரணை மட்டுமல்ல விந்தையாகவும் தோன்றுகிறது.

நிற்க, விஜயனும் அவனுடைய சகாக்களும் கரையில் இறங்கியதும் பல தினங்களாகச் சாப்பிடாததினால் அவர்களுக்குப் பசி குடலைப்பிடுங்கியது. அவர்களுடைய நல்ல காலம், எதிரில் ஏராளமான தென்னை மரங்கள் தென்பட்டன. சிலர் மரத்தில் ஏறி தேங்காய்களைப் பறித்து அவற்றை உடைத்துக் குடித்தார்கள். ஒருவாறு பசியைத் தணித்துக்கொள்ள தேங்காய்கள் அவர்களுக்கு உதவின.

இதற்குள் கொஞ்சதூரம் நடந்துபோய்ப் பார்த்துவிட்டு வந்த ஒருவன் "அதோ அந்த ஆலமரத்தடியில் ஒரு சாமியார் நிஷ்டையில் இருக்கிறார். பார்த்தால் நம் தேசத்துத் துறவியைப் போலவே இருக்கிறார்" என்றான்.

அந்தத் துறவியைக்காண எல்லோரும் விரைந்தார்கள். வானளாவி வளர்ந்திருந்த ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தின் குளுமையான நிழலில் துறவுக்கோலத்தில் நிஷ்டையில் அமர்ந்திருந்த சக்கரக் கடவுளைக் கண்டதும் விஜயனும் அவன் சகாக்களும் அவர் பாதத்தில் விழுந்து வணங்கி "அய்யா பெரியவரே! இந்த நாட்டின் பெயர் என்ன?" என்று கேட்டார்கள்.

K. M. M. A. CADER

"நீங்கள் இருப்பது இலங்கைத்தீவு. இராவணன் சந்ததியார்களான ராட்சதர்களும், யக்ஷர்களும், பேய், பிசாசு, பூதகணங்களும் தான் இத்தீவில் வசிக்கின்றன. அவர்களை விரட்டி இந்நாட்டை நேர்மையுடன் நீங்கள் ஆள வேண்டுமென்பது இறைவன் கட்டளை. மந்திர தந்திரங்களில் கைதேர்ந்த அமானுஷ்யமான இத்தீவு வாசிகளிடமிருந்து உங்களை ரட்சிக்க ரக்ஷாபந்தனம் செய்கிறேன். இப்படி வாருங்கள்" என்றார் அந்தத்துறவி. விஜயன் கையிலும் அவன் சகாக்களின் கைகளிலும் மந்திரோச்சாடனம் செய்த ரட்சையைக்கட்டி கமண்டலத்திலிருந்து மந்திரம் ஜபித்த ஜலத்தையும் தெளித்துவிட்டு காஷாயதாரியான துறவி மாயமாய் மறைந்தார். துறவியின் திடீர் பிரசன்னமும் திடீர்மறைவும் அவரிடம் விஜயன் கோஷ்டியாருக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தின. அவரை இறைவனின் திருத்தூதராக இருக்கவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். கெட்டழிந்ததினால் நாடுகடத்தப்பட்டு திக்குத்திசை தெரியாத திரைக்கடலிலே தவித்தபொழுது ஏற்பட்ட தெய்வபக்தி இப்பொழுது பன்மடங்கு உறுதியாக மனதில் நிலைத்தது.

"இறைவன் அருளினால் இந்த நாடு என்வசமாகும் பட்சத்தில் நீதி தவறாமல் நல்லாட்சி நடத்துவேன் என்று விஜயன் மனதிற்குள் பிரதிக்ஞை செய்து கொண்டான்.

இதற்கிடையில் கடற்கரைப் பிரதேசத்து ராணியான குவினி என்ற யட்சிணிக்கு ஏராளமான அந்நியர்கள் வில் அம்புகள் சகிதம் ஆயுத பாணிகளாக மரக்கலத்தில் வந்திறங்கியிருக்கும் தகவல் ஒற்றர்கள் மூலம் எட்டியது. அவர்களைத் தனித்தனியாகப் பிரித்து சாதுர்யமாகச் சிறைப்படுத்தத் திட்டமிட்டு தனது தோழிகளில் ஒருத்தியை அழைத்தாள்.

"நாய் உருவில் நீ அங்குபோ! அவர்களை ஒவ்வொருவராகத் தந்திரமாக இங்கு அழைத்துவா!" என்று குவினியிடமிருந்து உத்தரவு பிறந்தது.

மந்திர தந்திரங்களில் கை தேர்ந்த யட்சிணிகளுக்கு விரும்பியபடி உருமாறும் சக்தியிருந்தது. குவினியின் உத்திரவைப்பெற்ற தோழிப்பெண் ஒரு அழகான நாயின் உருவில் விஜயனும் அவனுடைய சகாக்களும் இளைப்பாறிக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்று வாலைக் குழைத்துக் கொண்டு நின்றாள்.



"இதைப் பார்த்தால் வீட்டில் வளர்க்கும் நாயைப் போலிருக்கிறது. பக்கத்தில் ஏதாவது ஒரு கிராமம் இருக்கவேண்டும்!" என்றான் விஜயன்,

"போய்ப் பார்த்து விட்டால் போகிறது" என்றான் ஒருவன்.

இதற்குள் நாய் எழுந்து மெதுவாக நடக்க ஆரம்பித்தது. ஒருவன் அதைப் பின்பற்றிச் சென்றான். அவனைச் சுற்றிச்சுற்றி அழைத்துச் சென்ற நாய் தெள்ளிய தாமரைத் தடாகம் ஒன்றின் கரையில் கொண்டுவந்து சேர்த்தது. தடாகத்தைப் பார்த்தவுடன் நல்ல தண்ணீரை கண்ணால் கண்டு பல தினங்களாகிய அம்மனிதனுக்கு சொர்க்கத்தைப் பார்த்ததைப் போலிருந்தது. ஆயுதங்களையும் ஆடைகளையும் களைந்து கரையில் வைத்துவிட்டு தடாகத்தில் குதித்துக் குளித்தான். தாமரைத் தண்டுகளைப் பிடுங்கித்தின்று வயிறு நிறைய தண்ணீரையும் குடித்துவிட்டு கரையேறிய பொழுது கரையில் விட்டுவந்த ஆயுதங்களையும் நாயையும் அங்கு காணோம். அவைகளுக்குப் பதில் அதிபயங்கரமான தோற்றத்துடன் யக்ஷிணி குவினி அங்கு நின்றுகொண்டிருந்தாள்.

"வா! வா! நரமாமிசத்தை ருசிபார்த்து நீண்டகாலமாகியது! ருசியான மானிடனே நெருங்கிவா!" என்று சொல்லிய வண்ணம் அம்மனிதனை விழுங்க ஆவலோடு நெருங்கினாள் குவினி.

அந்த மனிதனுக்கு இனிப் பிழைக்க மாட்டோமென்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. ஆயினும் பயத்தில் அவன் பிரக்ஞையை இழந்து தரையில் விழுந்துவிட்டான். "இவனைக் கொண்டுபோய் இருட்டு அறையில் அடைத்து வையுங்கள்" என்று தனது ஆட்களுக்கு ஆணையிட்டாள் ராணி குவினி. இதேபோல விஜயனின்

சகாக்கள் அனைவரையும் ஒவ்வொருவராகத் திருவித்து அவள் சிறையிலடைத்தாள்.

கடைசியாக விஜயனும் தனது சகாக்கள் சென்ற பாதையில் விரைந்து வந்தான். அவன் வருவதைக் கண்டதும் ஒரு பெண் துறவியைப்போல் உருமாறி ஒரு மரத்தடியில் அமர்ந்து நூல் நூற்றுக்கொண்டிருந்தாள் குவினி.

"இந்தப் பக்கம் வந்த என் நண்பர்களைப் பார்த்தாயா? அவர்கள் எங்கே போனார்கள்?" என்று விசாரித்தான் விஜயன்.

குவினி இலேசாக நிமிர்ந்து பார்த்து "உன் நண்பர்களா? இந்தப் பக்கம் வந்தார்களா? நான் யாரையும் பார்க்கவில்லையே!" என்று சாந்தமாகப் பதிலளித்தாள்.

"உண்மையாக அவர்களை நீ பார்க்கவில்லையா? இதோ உன் அருகில் அவர்களுடைய காலடிச் சுவடுகள் இருக்கின்றனவே!" என்றான் விஜயன்.

இதற்கு குவினி சரியாகப் பதில் சொல்லவில்லை. அவளுடைய பார்வையும் போக்கும் விஜயனுக்கு உண்மையைப் பளிச்சென்று அறிவுறுத்திவிட்டன. ஆலமரத்தடியிலிருந்த துறவி ஏற்கனவே எச்சரித்திருந்ததைப்போல பெண் துறவி வேடத்திலிருப்பவள் ஒரு யக்ஷிணியாக இருக்க வேண்டுமென்றும், அவளே தனது சகாக்களின் மறைவுக்குக் காரணமாயிருக்க வேண்டுமென்றும் விஜயன் முடிவுக்கு வந்தான். நஞ்சு தடவிய அம்பை வில்லில் வைத்து நாணேற்றி "இப்பொழுது கேட்கிறேன். உயிர்மீது ஆசையிருந்தால் உண்மையைச் சொல்லிவிட்டுப் பிழைத்துப்போ!" என்று முழங்கினான்.

ஆச்சரியமான சக்திகள் படைத்த அந்த யட்சிணிக்கு விஜயன் ரட்சாபந்தனத்துடன் வந்திருக்கிறானென்பதும் அவனிடம் தனது மந்திர தந்திரங்களில் ஒன்றும் பலிக்காதென்பதும் இதற்குள் தெரிந்துபோயிருக்கவேண்டும்.



அவள் சொன்னாள்: "நான் இந்நாட்டின் கரையோரப் பகுதியின் ராணி. உன்னைப்போன்ற ஒரு வீரனின் வருகைக்காகவே இங்கு தவம் கிடக்கிறேன். உன் சகாக்கள் என் அரண்மனையில் பத்திரமாயிருக்கிறார்கள். என்னை மணந்துகொண்டு இந்நாட்டு மன்னனாகச் சம்மதித்தால் நீயும் சுகப்படலாம். உன் நண்பர்களும் சுகப்படலாம். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள் குவினி.

"இந்த நிபந்தனைக்கு இணங்காவிட்டால் உயிரை விட்டுவிடுவாய், இல்லையா?" என்று கிண்டல் செய்தான் விஜயன்.

"ரட்சாபந்தனம் உன்னை இவ்வளவு துடுக்காகப் பேசச்செய்கிறது இல்லையா? உன் அம்பு என்னை வேண்டுமானால் மாய்க்கலாம். ஆனால் அதற்கு சிறையிருக்கும் உன் சகாக்கள் இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுக்க சக்தி கிடையாது. உன் நண்பர்கள் பாதாளச் சுரங்கத்தில் பட்டினிகிடந்து அணு அணுவாகத் துடித்துச் சாவதில் உனக்குப் பிரியாமா?" என்றாள் குவினி.

விஜயன் ஒரு கணம் யோசித்தான்.

"உன் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளுகிறேன். எந்தக் காலத்திலும் எனக்குச் சதிசெய்து தீங்கிழைக்கமாட்டேனென்று சத்தியம் செய்" என்றான்.

"சர்வேச்வரன் சாட்சியாக உங்களுக்கு ஒரு காலத்திலும் துரோகம் செய்யமாட்டேன். இந்த நாடு நியாயமாக எனக்குத்தான் சொந்தம். தவறான வழியில் என் மாமன் நாட்டைக்கைப்பற்றி ஆண்டு வருகிறாள். எனக்குரிய சிம்மாசனத்தை மீட்டுக்கொடுக்க என்றைக்காவது ஒருநாள் ஒரு மாவீரன் வருவானென்று இவ்வளவு காலமும் காத்திருந்தேன். நான் காத்திருந்த மாவீரன் நீங்கள்தான். உங்களுக்கு நான் துரோகம் செய்வேனா? இதோ உங்கள் நண்பர்களையெல்லாம் விடுவிக்கிறேன்."

இவ்வாறு உருக்கமாகச் சொல்லிய குவினி, சிறையிடப்பட்டிருந்தவர்களை விடுதலைசெய்ய உத்தரவு பிறப்

பித்தாள். விபத்துக்கு உள்ளாகிய கப்பல்களிலிருந்து கைப்பற்றிய கணக்கில்லாத ஐசுவரியங்களை விஜயனுக்குக் காட்டி "இனி இவ்வளவும் உங்களுக்குச் சொந்தம்" என்றாள். விஜயனின் பரிவாரங்களுக்கு அழகான பல கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. விஜயனுக்கென்று தனியாக ஒரு கூடாரம் அமைத்து அதில் மணம் கமழும் மலர்மஞ்சம் போடப்பட்டிருந்தது.

அன்று மாலை அந்தி மயங்கும் நேரம். விஜயன் கூடாரத்திலே தனித்திருந்தான். குவினி ராஜரீக உடையணிந்து அரசிளங்குமரியாக அவன் முன்பு வந்து நின்றாள்.

அவள் யாரென்று விஜயனுக்குப் புரியவில்லை. "யாரம்மா நீ? இங்கு உனக்கு என்ன வேண்டும்?" என்று விசாரித்தான்.

குவினி இளமுறுவல் செய்தாள். "என்னைத் தெரியவில்லையா? உங்கள் மனைவி; இந்நாட்டின் ராணி குவினி!" என்றாள் அவள்.

"நீயா குவினி? இல்லை. அவள் இப்படியிருக்க மாட்டாள்!" என்றான் அவன்.

"நான் உங்கள் குவினியேதான் இப்பொழுது சரியாகப் பார்த்துச்சொல்லுங்கள்?" என்று கூறிய வண்ணம் பெண் துறவியைப்போல ஒரு கணம் உருமாறித் தோன்றினாள் யட்சிணி.

"நீ எவ்விதம் விருப்பம்போல உருமாறுகிறாய்? என்று கேட்டான் விஜயன்.

"உங்கள் கண்களுக்குப் புலப்படாமல் அருவமாயிருக்கும் சக்தியும் யட்சர்களான எங்களுக்கு உண்டு." குவினி சொல்லியபொழுது "நீயும் ஒரு யட்சிணிப் பெண்ணா?" என்று விஜயன் விசாரித்தான்.

"ஆம்" என்று அவள் தலை அசைத்த சமயம் வெகு தூரத்துக்கப்பால் பறை முழங்கும் சப்தம் பேரொலியாக அவர்களுக்குக்கேட்டது.



"அதென்ன சப்தம்?" என்று கேட்டான் விஜயன்.

"அதுவா? அங்கு ஒரு கல்யாணம் நடக்கிறது. யட்சர்களில் முதியவரான மகாகுலசேனரின் மகள் பொலமித்தைக்கு இன்று திருமணம்! பக்கத்து ராஜ்யங்களிலிருந்து நூற்றுக்கணக்கான யட்சர்கள் இன்று அங்கே கூடியிருக்கிறார்கள்!" என்றாள் குவினி.

"மகாகுலசேனரும் ஒரு மன்னரா?" என்று விசாரித்தான் விஜயன்.

"ஆமாம். அவர் லங்கர்புரி பட்டினத்தின் அரசர். அவருடைய பெண்ணுக்கும் ஸ்ரீ ஸவஸ்து நகர இளவரசனுக்கும் கல்யாணம். இந்நாட்டில் லங்காபுரியும் ஸ்ரீஸவஸ்துவும் இரு முக்கியமான யட்ச ராஜ்யங்கள்" என்றாள் குவினி

"கல்யாணம் நடப்பது எங்கே? லங்காபுரியிலா? ஸ்ரீ ஸவஸ்துவிலா?"

"ஸ்ரீ ஸவஸ்துவில்"

குவினி சற்று நேரம் மௌனம் சாதித்தாள். அவள் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி தீவிரமாகச் சிந்திப்பதைப் போலத் தோன்றியது.

"என்ன யோசிக்கிறாய்? என்று கேட்டான் விஜயன்

"இலங்கையில் உங்களைக் குடியேற அனுமதித்த என்னை என் குலத்தவர்கள் ஒரு போதும் மன்னிக்கப் போவதில்லை. இதை அவர்கள் அறியும்பொழுது அவர்கள் என்னைத் தீயில் தள்ளி விடுவார்கள். அருகில் யட்சர்கள் இருக்கும் வரையில் உங்களுடைய நிலைமையும் பத்திரமாயிருக்கப்போவதில்லை. நம் இருவருடைய நன்மையையும் உத்தேசித்து இன்று திருமண வைபவத்திற்காகக் கூடியிருக்கும் யட்சர்களின் கூட்டத்தை நாசம் செய்துவிட வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் குவினி.

"அவ்வளவு பேர்களை நாங்கள் எப்படி வெற்றி கொள்ள முடியும்?"

" சமயம் பார்த்து அவர்களைத் திடீரென்று தாக்கினல் தங்களுக்கு வெற்றி கிடைப்பதோடு என் ராஜ்யமும் எனக்குத் திரும்பக் கிடைக்கும். யோசனை செய்தால் நெஞ்சில் பயம் வளரும். பயம் வீரர்களின் பரம விரோதி. முதலில் நான் அங்கு போய் கல்யாண கோலா கலங்களில் அவர்கள் மெய் மறந்திருக்கும் சமயம் பார்த்து சமிக்ஞை கொடுக்கிறேன். நாற்றிசையிலும் சூழ்ந்து நின்றுகொண்டு உடனே எதிர் பாராதவிதமாக அவர் களைத் தாக்குங்கள்!" என்று குவினி சொல்லிவிட்டுப் போனள்.

விஜயன் தனது சகாக்களுடன் கலந்து யோசித்தான்.

" துறவி கொடுத்த ரட்சை குவினியிடமிருந்து நம்மைக் காப்பாற்றியது உண்மையாயிருக்குமானல் அதே ரட்சை இப்பொழுதும் நமக்குப் பக்கபலமாயிருக்கும். எப்படியும் நாம் இங்கு சும்மாயிருக்க முடியாது. நமது நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்ள குவினி சொல்லுவதைப் போலச் செய்வதுதான் புத்திசாலித்தனமானது."

இவ்வாறு விஜயனுக்கு அவனுடைய நண்பர்கள் யோசனை கூறினர்கள்.

இதன் பிறகு அவர்கள் விஜயன் தலைமையில் போர்க் கோலம் பூண்டு குவினி சென்ற பாதையில் சென்றனர். கல்யாணம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டு குவினியின் சமிக்ஞைக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

யட்சர்கள் மதுவெறியில் மயங்கிக் கிடந்த சமயம் பார்த்து குவினி சமிக்ஞை கொடுத்தாள். விஜயனும் அவன் சகாக்களும் திடீரென்று தாக்கியபொழுது போதையில் உணர்விழந்தவர்களுக்கு பதில் தாக்குதல் நடத்தும் சக்தியில்லை. பெரும்பாலோர் ஸ்தலத்திலேயே உயிர் துறந்தார்கள். சிலர் குத்துயிருடன் ஓடி மறைந்தனர்.

" ஆஹா! இன்றுதான் என் விரதம் நிறைவேறியது. என்னை வஞ்சித்தவர்கள்மீது பழிக்குப்பழி வாங்கி



இழந்த அரசை திரும்பப் பெறுவதென்று செய்த சபதம் உங்கள் உதவியால் நிறைவேறிவிட்டது. இலங்காபுரிப் பட்டினத்துக்கு இனி நீங்களே சக்கரவர்த்தியாவீர்கள்" என்றுள் பெருமிதத்துடன் குவினி.

" பட்டினமென்கிருயே குவினி, இதுவா பட்டினம்? காடு மண்டி இடையிடையே களிமண் குடிசைகளுள்ள இடத்துக்குப் பட்டினமென்று பெயரில்லை. அது எப்படி இருக்குமென்பதை வெகுசீக்கிரம் நீ பார்க்கப் போகிருய்?" என்ருன் விஜயன்.

விஜயனுடைய தோழர்களில் உபதீசன் என்ற அந்தணரும் ஒருவர். அறிவில் சிறந்த அவரே விஜய னுக்குப் பிரதம மந்திரியைப் போலிருந்தார். யட்சர் களின் பயம் நீங்கியதும் விஜயனும் அவன் கோஷ்டி யாரும் திட்டமிட்டு, காடுகளை வெட்டி நாடு நகரங்களைப் அவ்விடங்களிலும் நிர்மாணித்தார்கள். அனுரா என்பவன் நிறுவிய கிராமத்துக்கு * அனுராதகமா என்ற பெயர் வைக்கப்பட்டது. இதேபோல உபதீசகமா, உருவிலை, விஜிதபுரம், உஜ்ஜயினி என்று பல சிற்றூர்களும் தோன்றின.

இதற்கிடையில் விஜயனை மணந்து கொண்ட ராணி குவினிக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண்குழந்தையும் பிறந்தனர். இலங்கையில் சீரான ராஜ்யம் ஸ்தாபிக்கப் பட்டதும் அதன் அரசனை விஜயனுக்கு முடிசூட்ட அவன் சகாக்கள் விரும்பினர்.

---

* அனுராதகமா என்ற கிராமம் பிற்காலத்தில் மகோன்னத மான புகழுடன் இலங்கையின் தலைநகரமாகப் பல நூற்றுண்டு கள் வரையில் விளங்கிய அனுராதபுரமாகும். இன்று புராதன அனுராதபுரம் பாழடைந்த நிலைமையிலிருக்கிறது. ஆயினும் அங்கு தென்படும் கற்குவியல்களும் இடிந்த கட்டடங்களும் ஒரு காலத்தில் அந்த நகரம் எவ்வளவு உன்னதமான நிலமையி லிருந்ததென்பதை எடுத்துக் காட்டும் கம்பீரமான சான்று களாக உள்ளன. விஜிதபுரம் இருந்த இடம் நிச்சமமாகத் தெரியவில்லை.

இதற்கு விஜயன் சம்மதிக்கவில்லை. "அமானுஷ்யமான ஒரு யட்சிணியை ராணியாகப் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு பட்டம் கட்டிக்கொள்ள நான் தயாரில்லை. என் ராஜ அந்தஸ்துக்குத் தகுதியான இளவரசியாக ஒரு பெண்ணரசி கிடைத்தால்தான் மகுடாபிஷேகம் என்றான் விஜயன்.

உபதீசரும் வேறு சிலரும் "நல்லது. மதுரைப் பாண்டியன் பெண்ணை மணம் பேசி அழைத்து வருகிறோம்" என்று சொல்லிவிட்டு பாண்டிய மன்னனுக்கான ஏராளமான வெகுமதிகளை எடுத்துக்கொண்டு மரக்கலத்தில் பிரயாணமானார்கள்.

# 3. அலைகடலில் வந்த அழகி

மதுரைக்கு விஜயனின் நண்பர்கள் வந்தபொழுது அவர்களைப் பாண்டியன் அன்போடு வரவேற்று உபசரித்தான். விஜயனின் பூர்வோத்திரங்களையும் இலங்கையில் செழிப்பான ஒரு ராஜ்யத்தை அவன் ஸ்தாபித்திருப்பதையும் கேள்விப்பட்டு இலங்கையுடன் நெருங்கிய உறவுகொள்ள அவன் விரும்பினான்.*

---

* சிங்கள வம்சத்தில் தமிழர் ரத்தக் கலப்பு இருப்பதாகச் சொல்லிக்கொள்ள விரும்பாத சில சிங்கள சரித்திர நூலாசிரியர்கள் விஜயனுக்குப் பெண்ணெடுத்தது தென் மதுரையில் அல்லவென்றும், வட மதுரையை அண்ட பாண்டு மன்னனிடமே விஜயனின் தூதர்கள் சென்றார்களென்றும் கூறுவர். ஆனால் வட மதுரையில் விஜயன் காலத்தில் பாண்டு என்ற பெயருடைய ராஜ வம்சம் இருந்ததாக ஆதாரமில்லை. தென் மதுரையில் விஜயனுக்குப் பெண் கொடுத்த பாண்டியன் யார் என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் விஜயன் தூதர்கள் சந்தித்தது அனேகமாக பசும் பொன் பாண்டியனாக இருக்கலாமென்று ஊகிக்க இடமிருக்கிறது. இவன் கிட்டத்தட்ட விஜயன் காலத்தைச் சேர்ந்தவன்.



"இதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது மன்னவா!" என்று ஆரம்பித்து தாங்கள் தூது வந்த காரணத்தை அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

திருமண சம்பந்தத்தின் மூலமாக இலங்கையுடன் தொடர்பு கொள்ளுவது நல்லதென்று பாண்டியனுக்கும் தோன்றியது. தனது குமாரிகளில் ஒரு பெண்ணையும், உடன் எழுநூறு தமிழ்ப் பெண்களையும் பாண்டியன் இலங்கைக்கு அனுப்பி வைக்கச் சம்மதித்தான். அவர்களுடன் சகல கலா வல்லவர்களான நூற்றுக்கணக்கான சிற்பிகள், பற்பல தொழில் வல்லவர்களான தொழிலாளர் குடும்பங்களையும் இலங்கையில் குடியேற்றி அந்நாட்டை வளப்படுத்த பாண்டியன் மனம் உவந்து அனுப்பித் தந்தான். அவர்கள் வட இலங்கையில் உள்ள ஒரு துறைமுகத்தில் வந்திறங்கியதும் அந்த மாபெரும் கூட்டம் வந்திறங்கிய துறைக்கு *மகாதித்த என்ற பெயர் ஏற்படலாயிற்று.

பாண்டிய நாட்டு இளவரசி ஏராளமான தமிழ்ப்பெண்களுடன் இலங்கையில் வந்திறங்கிய செய்தி குவினிக்கு எட்டியதும் அவள் துணுக்குற்றாள். விஜயனிடம் விரைந்து போய் உண்மை என்னவென்று விசாரித்தாள்.

அவளிடம் விஜயன் உண்மையை மறைக்கவில்லை. "என் குலத்தைச் சேர்ந்த ஒருத்தியை மணக்கத் தீர்மானித்

---

* மன்னார் ஜில்லாவில் இன்று திருக்கேதீச்சரம் என்று அழைக்கப்படும் ஸ்தலமே பழங்காலத்தில் மகாதித்தா என்றும் மாதோட்டம் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இதே இடத்தில்தான் விஜயன் வந்திறங்கியதாகக் கருதப்படுகிறதென்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். விஜயனும் அவன் நண்பர்களும் தமிழர்களாகவும் இந்துக்களாகவும் இல்லாதிருந்தால் அவர்களை மணக்க பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பெண்மணிகள் வந்திருக்கமாட்டார்களென்பதைப் பிரபல தமிழறிஞர் ஸ்ரீ குலசேகரம் எடுத்துக் காட்டியிருக்கிறார். சிங்களவர்களின் முன்னோர்கள் தமிழர்களேயன்றி ஆரியர்களல்ல என்பதற்கு இது ஒரு சான்று.

திருக்கிறேன். இதற்காக நீ வருந்துவதற்கு நியாயமில்லை எப்பொழுதும் போல நீயும் என் மனைவியாயிருக்கலாம். ஆனால் பாண்டியன் மகளுக்குத்தான் பட்ட மகிஷி ஸ்தானம்" என்றான் விஜயன்.

குவினி அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அவள் அரண்மனையை விட்டு வெளியேறி தனது இனத்தவர்கள் வாழும் மலைப்பிரதேசத்துக்கு விரைந்தாள். அவளை நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகியென்று குற்றஞ் சாட்டி யட்சர்கள் கொன்று விட்டார்கள். நல்லவேளையாக அவளுடைய இரு குழந்தைகள் மட்டும் சமணகூட மலைக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். இவர்களில் அண்ணன் தங்கையை மணந்தான். காலக்கிரமத்தில் அந்தக் குடும்பம் பல்கிப்பெருகி புலிந்தர் என்ற ஒரு புதிய ஜாதி அவர்கள் மூலம் தோன்றலாயிற்று. இலங்கையின் பழங்குடிகளான வேடர்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாம்.

பாண்டிய இளவரசி மகாதித்த என்ற மாதோட்டத்தில் வந்திறங்கியிருக்கும் செய்தி விஜயனுக்கு எட்டியதும் அவன் தனது பரிவாரங்களுடன் சென்று அரசகுமாரிக்கு ஆடம்பரமான வரவேற்பளித்தான். விஜயனுடைய திருமணமும் அவன் சகாக்களின் திருமணமும் மிகுந்த கோலாகலத்துடன் நடைபெற்றன. விஜயன் இலங்கையின் முதலாவது மன்னனாகவும் பாண்டிய ராஜகுமாரி இலங்கையின் முதலாவது அரசியாகவும் மகுடாபிஷேகம் செய்து கொண்டு 38 வருடகாலம் சிறப்பாக ஆட்சி நடத்தினார்கள்.

அவனுடைய ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வந்த பாண்டிய நாட்டுக் தமிழ்க்கலைஞர்களும், தொழிலாளரும் காடுவெட்டி நாடு நகரங்களை அமைத்து இலங்கையைப் பொன் கொழிக்கும் சொர்க்க பூமியாக்கினர். விஜயனுக்கு சகல சௌபாக்கியங்களுமிருந்தும் புத்திரப் பேறு இல்லாதது பெருங் குறையாயிருந்தது. தனது அந்திய காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்த அவன் தனக்குப் பிறகு அரசாள ஒரு பிள்ளையில்லாத குறையால் வருந்தினான். தனது சகோதரர்களில் ஒருவனை அழைத்து வர எண்ணி மந்திரிகளில்சிலரைச் சிங்கபுரத்துக்கு அவன் தூது அனுப்பினான்.



இதற்கிடையில் சிங்கபுரத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இங்கபாகு காலமாகி அவனுடைய இரண்டாவது பிள்ளையும் விஜயனின் தம்பியுமான சுமித்திரன் அரசாண்டுவந்தான். அவனுடைய பட்டத்து ராணி, சென்னை மன்னனின் பெண்ணான ஒரு தமிழ்க்குல ராஜகுமாரி. இந்த தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். கடைசிப் பிள்ளையின் பெயர் பாண்டு வாசுதேவன்.

விஜயனின் மந்திரிகள் சுமித்திரனைச் சந்தித்து இலங்கையில் செல்வச் சிறப்புடன் ஒரு புதிய ராஜ்யம் ஏற்பட்டிருப்பதையும் அதைச் கட்டியாள சந்ததியில்லாமல் விஜயன் வேதனைப்படுவதையும் எடுத்துரைத்தார்கள்.

"இலங்கைக்கு நான் வருவதற்கில்லை. எனது பிள்ளைகளில் எவரேனும் விரும்பினால் நீங்கள் அழைத்துப் போவதில் ஆட்சேபனையுமில்லை" என்றான் சுமித்திரன்.

அவனுடைய மூன்று பிள்ளைகளில் இளையவனான பாண்டு வாசுதேவன் இலங்கை செல்லச் சம்மதித்தான். தகப்பனின் நல்லாசியுடனும் மந்திரி குமாரர்களில் 32 பேர்களை நண்பர்களாக அழைத்துக் கொண்டும் இலங்கையின் இரண்டாவது மன்னராகப் பதவியேற்க பாண்டு வாசுதேவன் புறப்பட்டான்.

பாண்டுவாசுதேவன் இலங்கையை அடைவதற்கு முன்னதாகவே விஜயனின் காலம் முடிந்துவிட்டது. எனவே பாண்டுவாசுதேவன் இலங்கை வந்தவுடன் ஆட்சிப் பொறுப்பைத் தாமதமின்றி ஏற்றுக்கொண்டு விட்டான். அவனுக்கு திருமணமாகதாமையால் உத்தியோக பூர்வமான மகுடாபிஷேக வைபவத்தை ஒத்தி வைக்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில் வட பாரதத்தில் பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்திருந்தன. புத்தர் பிரானின் தந்தையும்

கபிலவஸ்துவின் குறுநில மன்னருமான சுத்தோதனருக்குப் பிறகு அவரது சகோதரர் அமிதோதனரும் அவருக்குப்பின் பாண்டு என்பவரும் கபில வஸ்துவில் அரசாண்டார்கள். பாண்டுவுக்கு ஆறு பிள்ளைகளும் பத்ரகாஞ்சனா என்ற ஒரு பெண்ணும் உண்டு. கோசல நாட்டின் இடைவிடாத தாக்குதலைச்சமாளிக்க முடியாத பாண்டு தனது குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறி கங்கா நதிதீரத்தில் புதியதொரு ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டு, புத்தர் அவதரித்த சாக்கிய வம்சம் நசித்து விடாதபடி ஒரு சிற்றரசனாக ஆட்சி செய்து வந்தான்.

புதிய இடத்துக்கு வந்தும் துன்பம் அவனை விட்ட பாடில்லை. இப்பொழுது ஒரு புது மாதிரியான தொல்லை அவனுக்கு ஏற்பட்டது. அவன் மகள் பத்ரகாஞ்சனா ஈடு இணையற்ற பேரழகியாக விளங்கினாள். அவளுடைய புகழ் எட்டுத் திக்குகளிலும் பரவியிருந்தது. அழகு நடையிலும் எழில் ஓவியமென்று கவிவாணர்கள் அவளை வருணித்தார்கள். அவளை மணக்கப் பல முடிமன்னர்கள் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டுவந்தனர். இதனால் பலருடைய பகையையும் மனஸ்தாபத்தையும் பாண்டு மன்னன் கட்டிக்கொள்ள வேண்டியதாயிற்று. அவனுடைய புதிய அரசு பத்ரகாஞ்சனாவின் அழகு காரணமாக ஆட்டம் கொடுத்துக் கொண்டிருந்தது.

துன்பம் தோன்றும் பொழுது சோதிடம் பார்ப்பது மனித இயல்பு. தெய்வ சக்தியிலும் விதியிலும் அபரிமிதமான நம்பிக்கையிருந்த பழங்காலத்தில் சோதிடன் வாக்கு கிட்டத்தட்ட வேதவாக்காகவும் இருந்து வந்தது. பத்ரகாஞ்சனாவின் பேரழகினால் பெரிய ஆபத்து உருவாகி வருவதைக் கண்ட பாண்டு சோதிடர்களை அழைத்து கிரக ஆராய்ச்சிகள் நடத்தச் செய்தான்.

"பத்ரகாஞ்சனாவின் கணவன் கடல் கடந்த பிரதேசத்திலிருக்கிறான். அவளை ஒரு மரக்கலத்தில் ஏற்றி கங்கா நதி தீரத்தில் விட்டுவிடுங்கள். அந்தப் புனித யாத்திரை அவளுடைய கணவனிடம் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்" என்று சோதிடர்கள்



பாண்டுவிற்கு யோசனை சொன்னார்கள். இம்சை பொறுக்க மாட்டாமல் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு பத்ரகாஞ்சனாவையும் அவளுக்கு வழித்துணையாக 32 தோழிப் பெண்களையும் ஒரு மரக்கலத்தில் ஏற்றி விதிவிட்ட வழியே அவர்களை அனுப்பி வைத்தான்.

பலநாள் அலைகடற் பிரயாணத்துக்குப்பின்னர், பத்ரகாஞ்சனாவின் மரக்கலம் இலங்கையை அடைந்து காந்தார நதி தீரத்தில் கோணக்கிராமம் என்னுமிடத்தில் வந்து நின்றது.

அழகு விளைவிக்கக்கூடிய அனர்த்தங்களை அனுபவத்தில் அறிந்திருந்த பெண்கள் முன்பின் அறியாத நாட்டில் சுய உருவத்துடன் நடமாட விரும்பாமல் துறவிகளைப் போல மாறுவேட மணிந்து மரக்கலத்திலிருந்து இறங்கினார்கள். அருகிலிருந்த ஒரு கிராமத்தை அடைந்த பொழுது அங்கு அவர்களுக்குப் பிரமாதமான வரவேற்புக் கிடைத்தது.

புத்தர் பிரானின் சாக்கிய குலத்தில் பிறந்த அழகு மிக்க பல பெண் துறவிகள் வந்திருக்கிறார்களென்ற தகவல் அரண்மனைக்கு எட்டியது. பாண்டு வாசுதேவன் தனது மந்திரிகளை அனுப்பி அந்தத் துறவிகளைக் கையோடு அரண்மனைக்கு அழைத்துவரச் செய்தான். பத்ரகாஞ்சனாவின் வரலாற்றைக் கேட்டறிந்ததும் "என் குறை தீர்க்க இறைவன் அனுப்பிய பரிசு நீ!" என்று சொல்லி அவளையே பாண்டு வாசுதேவன் திருமணம் புரிந்துகொண்டான். இளவரசியின் 32 தோழிகளும் மன்னரின் 32 தோழர்களைத் திருமணம் செய்துகொண்டு நிம்மதியாக வாழலானார்கள்.

---

* காந்தார நதியென்ற புராதனப் பெயருடைய நதி எதுவென்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆயினும் பத்ரகாஞ்சனா வந்திறங்கிய இடம் அப்பொழுது உலகப்பிரசித்தி பெற்று விளங்கிய மாதோட்டம் என்ற துறைமுகமாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்வது தவறாயிருக்கமாட்டாது.

சில வருடங்களுக்குப் பின்னர் பத்ரகாஞ்சனு தனது தந்தையின் க்ஷேமத்தை அறிய ஒரு தூதுவரைப் பாரதத்துக்கு அனுப்பிவைத்தாள். அந்தத் தூதன் மூலம் பத்ர காஞ்சனு செல்வச் சிறப்புடனிருப்பதைக் கேட்டு பாண்டு மன்னன் அகமகிழ்ந்தான். அவனுடைய ஆறு பிள்ளைகளிலே ஒருவனைத்தவிர மற்றவர்கள் தங்களுடைய சகோதரியைப்பார்க்க ஆவலோடு இலங்கைக்குப் புறப்பட்டு வந்தார்கள்.

அப்பொழுதும்கூட இலங்கையின் பெரும் பகுதி காடுகளாகவே யிருந்தது. காடு வெட்டி நாடு நகரங்களை ஏற்படுத்தப் பெரும் பிரயாசைப் படவேண்டியிருந்தது. தமிழகத்திலிருந்து ஏராளமான தொழிலாளர் கிடைத்தார்கள். என்றாலும் அவர்களிடம் வேலை வாங்கவும் நாட்டு நிர்வாகத்தைத் திறமையுடன் நடத்தவும் அனுபவ மிக்கவர்களின் உதவி பாண்டு வாசுதேவனுக்கு மிகவும் தேவையாயிருந்தது. பத்ரகாஞ்சனுவைப் பார்த்துவிட்டுப் போக அவளுடைய சகோதரர்கள் வந்தபொழுது "நீங்கள் ஏன் பாரதத்துக்குத் திரும்பவேண்டும்? உங்கள் தகப்பனுக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்க மூத்தவன் அவர் பக்கத்திலேயே இருக்கிறான். அங்குபோய் நீங்கள் செய்யக்கூடியதைவிட உபயோகமான பல காரியங்களை இங்கு செய்யலாம். இந்நாட்டில் விருப்பமான இடத்தில் குடியேறி உங்களுக்கென்று ஒரு நகரத்தையும் நிர்மாணித்துக்கொண்டு சந்தோஷமாயிருங்கள்" என்றான் பாண்டு வாசுதேவன்.

பத்ரகாசனுவும் வற்புறுத்திச் சொல்லவே அவளுடைய சகோதரர்கள் இலங்கையில் தங்கிவிடச் சம்மதித்தார்கள். அவர்களில் அனுராதா என்பவன் * அனுராதபுரத்தையும் ராமன் என்பவன் ராமகோன நகரையும், விஜிதன், திகாயு

* அனுராதபுரம் முதலிய மேற்படி நகரங்களை விஜயனின் சகாக்கள் அமைத்ததாக மகாவம்சம் ஒரு இடத்தில் கூறுகிறது. அதே மகாவம்சம் மற்றொரு இடத்தில் பத்ரகாஞ்சனுவின் சகோதரர்கள் இந்த நகரங்களைக் கட்டியெழுப்பியதாகச் சொல்லுகிறது.



ரோஹண என்பவர்கள் அப்பெயருள்ள ஊர்களையும் அமைத்து சிற்றரசர்களாக ஆண்டுவர ஆரம்பித்தார்கள்.

பத்ரகாஞ்சனுவுக்கு பத்து பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். பட்டத்து இளவரசனின் பெயர் அபயன். கடைசியாகப் பிறந்த பெண்ணின் பெயர் சித்ரா. பிள்ளைப் பிராயத்திலேயே அவள் கைதேர்ந்த ஓவியர்கள் எழுதிய சித்திரத்தைப்போலிருந்தாளாம். ஆகையால் சித்ரா என்ற காரணப்பெயர் அவளுக்கு ஏற்பட்டது.

தாயைப்போலப் பெண் என்பார்கள். ராணி பத்ர காஞ்சனு யௌவனத்தில் எப்படி ஈடு இணையற்ற பேரழகியாக விளங்கினுளோ அவளைவிடப் பன் மடங்கு கவர்ச்சி மிக்கவளாய் வளர்ந்தாள் சித்ரா. அழகு விளைவிக்கக் கூடிய அனர்த்தங்களைச் சொந்த அனுபவத்தில் அறிந்திருந்த ராணிக்கு, சித்ராவின் சௌந்தர்யம் பெருமிதத்துக்குப் பதிலாக பெரும் திகிலையும், கவலையையும் கொடுத்துவந்தது. இதற்கு அனுசரணையாக சித்ராவின் எழில் தோற்றத்தைக் கவிவாணர்கள் நாடெங்கும் பரப்ப ஆரம்பித்தார்கள். பார்ப்பவர்கள் மனதைப் பேதலித்து உன்மத்தமடையச் செய்யும் சித்ராவுக்கு உன்மத்த சித்ரா என்ற புதியதொரு காரணப்பெயர் ஏற்பட்டு அது நாட்டில் நிலைத்துப்போயிற்று.

ஒரு நாள் மன்னன் பாண்டு வாசுதேவன் அரண்மனை சோதிடர்களை அழைத்து சித்ராவின் ஜாதகத்தைப் பார்க்கச்சொன்னுன். சோதிடர்களோ சித்ராவின் ஜாகத்தை ஏற்கனவே கணித்து வைத்திருந்தார்கள்.

"விதியை எவராலும் வெல்ல முடியாது. நடப்பது நடக்கத்தான் போகிறது. ஜாதகத்தைப் பார்த்து பின்னுல் நடக்கப்போவதை முன்னுல் அறிந்துகொண்டு வேதனைப் படுவானேன்?" என்று சோதிடர்கள் மழுப்பினுர்கள்.

ஆனுல் மன்னன் விடுவதாயில்லை. சித்ராவின் மூலமாக ஏதோ ஒரு பெரிய துன்பம் ஏற்பட விருப்பதை

உணர்ந்துகொண்ட அவன் உண்மையைச் சொல்லுமாறு சோதிடர்களை வலியுறுத்தினாள்.

"சித்ராவின் வயிற்றில் பிறக்கும் பிள்ளை தனது மாமன்மார்களில் ஒன்பது பேர்களைத் தன் கையாலேயே கொன்றுவிட்டு அரசைக் கைப்பற்றுவான். அவனுடைய ஆட்சியில் நாடு மகோன்னதமான நிலைமையிலிருக்கும்" என்று சோதிடர்கள் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டதும் மன்னன் திடுக்கிட்டான். ஒரு பெண்ணுக்காக அவளோடு கூடப்பிறந்த ஒன்பது பிள்ளைகளைத் தியாகம் செய்வதா? பிள்ளைகளுக்கு ஆபத்து என்று சோதிடர்கள் சொல்லுவதை நம்பி அருமை பெருமையாக வளர்த்த பெண்ணைத்தான் தியாகம் செய்வதா? மன்னனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எப்படியும் இந்த விபரீத சோதிட பலன்களைப்பற்றி சித்ராவுக்கு ஏதும் தெரியாமலிருப்பதே நல்லதென்று அவனுக்குத்தோன்றியது.

மன்னனின் சஞ்சலத்தை ஒருவாறு ஊகித்த சோதிடர்கள் "அரசே! சித்ரா தீர்க்காயுளாக இருக்கப் போகிறாள். மகாராணியை அவரது தகப்பனார் மரக்கலத்தில் ஏற்றி நாடுவிட்டு நாடு அனுப்பியதைப்போல இளவரசியையும் தேசப்பிரஷ்டம் செய்தால் விதியை வென்று விடலாமென்று நீங்கள் நினைப்பதாயின் தயவு செய்து அந்த யோசனையை மாற்றிக்கொள்ளுங்கள். கண்ண பரமாத்மாவின் கதையைக் கேட்டிருக்கிறீர்களா? வசுதேவரையும் தேவகியையும் சிறையில் அடைத்ததால் கண்ணன் பிறக்காமலிருக்க வில்லை. கம்ஸன் விதியை வென்று விடவுமில்லை. கடவுள்மீது பாரத்தைப் போட்டு நம் கடமையைச் செய்வதே விவேகமானது" என்றார்கள்.

"என் கடமை என்னவென்பதை நான் அறிவேன். இப்பொழுது உங்களுடைய கடமை சித்தராவுக்கு இதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் வாயைப் பொத்திக் கொண்டிருப்பதுதான். நீங்கள் போகலாம்" என்றான் மன்னன்.



பிறகு மகாராணியையும் தனது பிள்ளைகளையும் அழைத்து சோதிடர்களின் கூற்றைத் தெரிவித்து மேற்கொண்டு என்ன செய்வதென்பதைப் பற்றி அவன் மந்திராலோசனை நடத்தினான்.

அதைக் கேட்டதும் ராணி பத்ரகாஞ்சனா கண்ணீர் விட்டுக் கதறினாள். "நான் செய்த பாபங்களெல்லாம் சேர்ந்து ஒரு பெண்ணாகப் பிறக்க வேண்டுமா? சித்ரா பிறக்காமலே இருந்துவிடக் கூடாதா?" என்று சொல்லிப் புலம்பினாள். பட்டத்து இளவரசன் அபயன் ஒருவனைத் தவிர மற்ற ஒன்பது பிள்ளைகளும் பதறிப் போனார்கள். சித்ராவை ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று அவர்கள் ஒரு குரலில் முழங்கினார்கள்.

"குலத்தை அழிக்கப் பிறந்த தங்கை இருந்தென்ன, இல்லாமலிருந்தென்ன? காலடியில் கிடப்பது கொடிய பாம்பு என்று தெரிந்தும் அதை அடித்துக் கொல்லாமல் கடிக்க அனுமதிப்பது விவேகமா? இந்த ஒரு விஷயத்தில் யார் என்ன சொன்னாலும் நாங்கள் கேட்கப்போவதில்லை. சித்ரா உயிருடனிருக்கும் ஒவ்வொரு விநாடியும் எங்கள் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும். அவளைத் தீர்த்துக் கட்டிய பிறகே மறு காரியம் பார்க்கப்போகிறோம்" என்று அவர்கள் பிடிவாதமாகச் சொன்னார்கள்.

# 4. கட்டுக் காவலை மீறிய காதல்

இளவரசி உன்மத்த சித்ராவை ஒழித்துக் கட்டிய பிறகுதான் தங்களுக்கு மன நிம்மதியேற்படுமென்று ஒன்பது தம்பிமார்களும் முழங்கியபொழுது பட்டத்து இளவரசன் அபயன் மாத்திரன் அமைதியாக உட்கார்ந்திருந்தான். மற்றவர்கள் பேசி முடிந்ததும் அவன் சொன்னான்.

"தம்பிமார்களே! நீங்கள்தான் இப்படிச் சொல்லுகிறீர்களா? எவனோ ஒருவன் சோதிடம் சொன்னான் என்பதற்காக உடன் பிறந்தவளைக் கொல்ல வேண்டுமென்று கூச்சலிடும் அளவுற்கு நீங்கள் பண்பு கெட்டுப் போய் விட்டதைப் பார்த்து நான் வெட்கமும் துக்கமும் அடைகிறேன். சித்ரா நம் கூடப்பிறந்த தங்கை. அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையினால் நமக்கு ஆபத்து ஏற்படப் போவதாகக் கூறுவது உண்மையாகவே இருந்தால் கூட, மகன் செய்யப் போகும் பாபத்துக்கு தாய் என்ன செய்வாள்? பிள்ளையின் பாவத்துக்காக தாயைக் கொல்லுவதாகக் கூறும் நீங்கள், சித்ராவைப் பெற்றெடுத்த பாபத்துக்காக நமது பெற்றோர்களையே தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று கூடச் சொல்வீர்கள் போலிருக்கிறது! சித்ரா பிறப்பதற்கு முன்பே இப்படி ஒருவன் சாக்குருவி சோதிடம் சொல்லியிருந்தால், சித்ரா பிறப்பதைத் தடுக்க நம் தாயையே தீர்த்துக் கட்டியிருப்பீர்களா? தயவுசெய்து மறுபடியும் அப்படி முட்டாள்தனமாகப் பேசாதீர்கள். சித்ரா வயிற்றில் பிறக்கும் பிள்ளையினால் ஏதாவது விபரீதம் நடக்க வேண்டுமென்று விதியிருந்தால் அதை மாற்ற நம்மால் முடியப்போவதில்லை. விதி எந்த உருவத்லும் தனது வேலையைச் செய்தே தீரும். இதற்காக கீழ்த்தரமான பாப காரியத்தை நாம் செய்ய வேண்டாம். ஆயினும் உங்கள் மன அமைதிக்காக நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். சித்ராவுக்குப் பிள்ளை பிறக்கச் சந்தர்ப்பமே இல்லாதபடிச் செய்து விடுவோமானால் நமக்கு அபாயமில்லையல்லவா? என்றான்.

"அதெப்படி முடியும்?" என்றான் ஒருவன்.

"அவசரப்படாதே. சித்ராவுக்குக் கல்யாணம் செய்யாமல் கன்னிப் பெண்ணைக் கட்டுக் காவலுடன் ஒரு கோட்டைக்குள் கைதியைப் போல வைத்திருப்போம்" என்றான் அபயன்.

இந்த யோசனையின்படி சித்ராவைச் சிறை வைப்பதென்று தீர்மானமாயிற்று. அரண்மனையின் ஒரு பகுதியில் மேன்மாடத்தில் அவள் இருக்க வேண்டுமென்றும்



பெற்றோர்களையும் சகோதரர்களையும் தவிர வேறு எவரும் அங்கு போகக் கூடாதென்றும் ஏற்பாடு செய்தனர். சித்ராவுக்குத் துணையாக அவளுடைய வயதுக்கு ஒத்த சந்திரிகா என்ற ஒரு தோழிப் பெண் அமர்த்தப்பட்டாள்.

சோதிடர்களின் கூற்றைப் பற்றி சித்ராவுக்கு ஒன்றும் தெரியாதென்று அவளுடைய அண்ணன்மார்கள் எண்ணிக் கொண்டிருந்த பொழுதிலும், உண்மையில் சித்ரா எல்லாவற்றையும் நன்கு தெரிந்து கொண்டிருந்தாள். அதே சமயம் தெரிந்ததாக அவள் காட்டிக் கொள்ளவும் இல்லை. சோதிடத்தை நம்பித் தனது வாழ்வை இப்படிச் சீர்குலைக்கிறார்களே என்ற துக்கம் அவள் இதயத்தின் அடிவாரத்தை லேசாக அறித்துக் கொண்டிருந்தது. ஆயினும் கூடப் பிறந்தவர்களுக்குத் தன்னால் எவ்விதமான அபாயமும் ஏற்படக் கூடாதென்ற கவலையும் அக்கறையும் அவளுக்கு இல்லையென்றும் சொல்லிவிட முடியாது. விதியின் மீது சுமையைப் போட்டு வாளாயிருப்பதைத் தவிர வேறு வழியில்லை யென்ற விவேகமான முடிவுக்கு அவள் வந்திருந்தாள்.

சித்ரா இருந்த கன்னிமாடம் ஆற்றின் கரையோரத்தில் இருந்தது. மறுகரையில் அடர்ந்த காடு. மேன்மாடத்தில் நதியையும் காட்டையும் நோக்கியவாறு ஒரு சாளரம் இருந்தது. பகல் முழுவதும் சித்ரா அந்தச் சாளரத்தின் அருகில்தான் உட்கார்ந்திருப்பாள்.

ஒருநாள் மாலை ஆற்றின் மறு கரையில் காட்டின் விளிம்பில் நின்று ஒரு சுந்தர வாலிபன் தன்னையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதை இளவரசி கவனித்தாள். சென்ற பல மாதங்களுக்கிடையில் ஒரு அந்நிய புருஷனை முதல் முதலாக அவள் பார்க்க நேரிட்டது இதுவே முதல் தடவை. அவன் யார்?

அந்த யுவனைப் பார்க்கக் கூடாதென்று எண்ணி அவள் வேறு திசையில் திரும்பி உட்கார்ந்து கொண்டாள். எனினும் அவளுடைய ஓரக்கண் பார்வையில் பல தடவை அந்த வாலிபன் அகப்பட்டுக் கொண்டுதான் இருந்தான்.

நன்ருக இருட்டி பார்வை மங்கும் வரையில் அவன் அந்த இடத்தைவிட்டு அகலவில்லை. இந்தச் சம்பவம் சித்ராவுக்கு வியப்பாகவும் ஒரு புதுமையான அனுபவ மாகவும் இருந்தது.

அன்றிரவு சித்ராவுக்கு மன நிம்மதியேயில்லை. அவனை மறக்க எவ்வளவு பிரயாசைப்பட்டு முயன்ருளோ, அவ்வளவு ஆழமாக அவன் உருவம் அவள் உள் மனத்தில் பதிந்து போயிருந்தது.

கிழக்கு வானம் வெளுத்தவுடன் அவள் கால்கள் அவளை அறியாமலே ஜன்னலின் அருகில் இழுத்துக் கொண்டு போயின. என்ன ஆச்சரியம்! முந்தின நாள் இரவில் பார்த்த இளைஞன் அதே இடத்தில் உட்கார்ந் திருப்பதைக் கண்டதும், சித்ரா அடைந்த திகைப்புக்கு அளவேயில்லை.

இரவு முழுவதும் அவன் வேறு எங்கும் போக வில்லையா? அதே இடத்தில்தான் இரவைக் கழித்தானு? இந்தக் கேள்விக்குப் பதில் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்படி ஒரு வார காலம் கழிந்தது.

பிறகு ஒருநாள் தன் தோழியைக் கூப்பிட்டு, "சந்திரிகா! அதோ ஆற்றின் அக்கரையில் பார்! ஒற்றைக் காலில் தவம் செய்யும் அந்த அரசிளங்குமரன் யாரடி?" என்று கேட்டாள் சித்ரா.

"ஐயையோ! ராஜ குமாரர்களைப்பற்றியெல்லாம் இளவரசி பேசவே கூடாது!" என்று எச்சரித்தாள் சந்திரிகா.

"அந்த வாலிபன் ஒரு இளவரசனுக இருந்தால் தானே அவனைப்பற்றிய பேச்சு எனக்கு ஒத்துக் கொள்ளாது? அவன் ஒரு சாதாரண வழிப் போக்கனு யிருந்தால்?" என்று கேட்டாள் சித்ரா.

"வழிப்போக்கன் இல்லை, இளவரசி! அவன் விஷமக்காரன்!"



"அவ்வளவுதூரம் தெரிந்து வைத்துக்கொண்டிருக் கிருயா?"

"யோக்கியமான மனிதனுயிருந்தால் ஏன் அப்படிக் கல்லுப் பிள்ளையார் மாதிரி நாட் கணக்கில் அங்கே உட் கார்ந்திருக்கிருன்?"

"ஓ! உனக்கு அதுவும் தெரியுமா?"

"அதுவும் தெரியும்; இளவரசியே! நீங்கள் அவனை ஓயாமல் பார்த்துக்கொண்டிருப்பதும் தெரியுமே!"

"இவ்வளவுதூரம் தெரிந்தும் என்னிடம் ஏன் ஒன்றுமே கேட்கவில்லை?"

"கேட்பதற்கு என்ன இருக்கிறது? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டால், தேனுக்குக் கஷ்டமா? முடவனுக்குக் கஷ்டமா?"

"தேனுக்கு நஷ்டம்; முடவனுக்குக் கஷ்டம்!" என்ருள் சித்ரா.

சந்திரிகா சித்ராவை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "அப்படியா?" என்ருள்.

"எவர் கையிலும் அகப்படாமல் உச்சாணிக் கொம்பி லிருக்கும் தேன் காலக்கிரமத்தில் உபயோகமில்லாமல் போய்விடுகிறது" என்று சித்ரா சொல்லிக்கொண்டிருக் கையில், மணியோசை கேட்டது. சித்ரா அவசரம் அவசர மாக ஜன்னல் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டுக் கட்டிலில் உட்கார்ந்தாள்.

பட்டத்து இளவரசன் அபயன் தங்கையைப் பார்த்து விட்டுப்போக மேன் மாடத்துக்கு வந்தான். சித்ராவிடம் அவனுக்கு எப்பொழுதுமே ஒரு அலாதி வாஞ்சை.

கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷத்துடன் குடும்பம் நடத்த வேண்டிய சித்ரா கன்னிப் பெண்ணுகச் சிறையில் அடைபட்டுக் கிடப்பது அபயனுக்கு வேதனை யைக் கொடுத்து வந்தது. காலக்கிரமத்தில் தம்பிமார்

களின் மனத்தை மாற்றலாமென்று அபயன் நம்பிக் கொண்டிருந்தான்.

இந்த நம்பிக்கையுடன் தங்கைக்கு ஆறுதல் சொல் வதற்காக அவன் அடிக்கடி வந்து அவளைப் பார்த்து விட்டுப் போவது வழக்கம்.

வழக்கம்போல் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அபயன் போன பிறகு, சித்ரா மறுபடியும் சந்திரி காவை அழைத்தாள். "சந்திரிகா! எனக்கு ஒரே ஒரு சந்தேகம். இந்த அரண்மனையின் இரண்டாவது அடுக்கில் யாராவது இருக்கிறார்களா, இல்லையா?" என்று மிகுந்த அக்கறையுடன் விசாரித்தாள்.

அந்தக் கேள்வியின் பொருளைப் புரிந்துகொண்ட சந்திரிகா, "இரண்டாவது மாடியிலும் கீழ்த் தளத்திலும் ராணுவ வீரர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் அவர் களுக்கு ஒன்றே ஒன்று மட்டும் இல்லை!" என்றாள்.

"மூளையில்லை என்கிறாயா?"

"அது கொஞ்சம் இருக்கிறது. காட்டுப் பக்கம் கண் காணிக்க அந்த இரண்டு இடங்களிலும் ஜன்னல் இல்லை."

சித்ரா ஒரு நெடு மூச்செறிந்தாள். பிறகு, "அவன் யாராயிருக்கும்?" என்றாள்.

"அது எனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியா விட்டாலும் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லதில்லையா சந்திரிகா?"

சந்திரிகா: எதற்காக?

சித்ரா: எனக்குச் சொல்வதற்காக!

சந்திரிகா: நான் நன்றாய் இருப்பதில் உங்களுக்கு இஷ்டமில்லையா?

சித்ரா: நீயும் உன் புருஷனும் நன்றாயிருக்கவேணும். குழந்தை குட்டிகளோடு உன் குடும்பம் முழுவதும் க்ஷேமமா யிருக்க வேணும். அதோடு கூட....



சந்திரிகா: ஏன் நிறுத்தி விட்டீர்கள்? சொல் லுங்கள், இளவரசி?

சித்ரா: அதோடு உலகத்தில் இருக்கும் எல்லாப் பெண்களையும்போல நானும் நன்றாக வாழ வேண்டு மென்று நினைப்பது தவறா சந்திரிகா?

சந்திரிகா ஒரு கணம் மௌனமாகச் சித்திராவை நிமிர்ந்து பார்த்தாள். "சந்திரிகா; நான் உன் மனதைப் புண் படுத்தி விட்டேனா" என்று கேட்டாள் சித்ரா.

சந்திரிகா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "ஒன்றுமில்லை, இளவரசி!" என்றாள்.

சித்ரா: ஒரு பெண்ணின் இதயத் துடிப்பை ஒரு பெண்ணினால்தான் உணர்ந்து கொள்ள முடியும்! என் அண்ணன்மார்கள் எப்படிப் புரிந்து கொள்வார்கள்!

அன்று அவர்கள் இதற்கு மேல் பேசவில்லை. சந்திரிகா அன்று சிந்திய கண்ணீர் சித்திராவுக்கு ஒரு புது மாதிரி யான தைரியத்தைக் கொடுத்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள், "அந்த வாலிபனை இளவரசனென்று சொன்னீர்களே, இளவரசி! உங்கள் வாக்கு அப்படியே பலித்து விட்டது!" என்றாள் சித்திராவிடம் சந்திரிகா.

"அப்படியா? எனக்குத் தெரியும். எப்படியாவது நீ விசாரித்து விடுவாயென்று!"

"நான் விசாரிக்கவில்லை. வலுவில் அவரே சொன்னார் நான் உங்களுடைய தோழி யென்பதை அறிந்து உங்களைப் பற்றி விசாரிக்க என் கணவரைச் சந்தித்திருக்கிறார்."

"அதில் தவறு ஒன்றுமில்லையே? அவர் யார்? உன் கணவனிடம் என்ன சொன்னார்?"

"அவர் உங்கள் மாமன் மகன்! உங்கள் ஆறு மாமன் மாரில் ஒருவரான திகாயு இளவரசரின் மூத்த புதல்வர்தாம்

முறைப் பெண்ணுக்காகக் கானகத்தில் காத்திருந்து கடுந் தவம் புரிகிறார்!

அவர் பெயர் என்னவோ?"

"திக காமினி" என்று சொல்லிச் சந்திரிகா தொடர்து பேசினாள்: இளவரசியின் சௌந்தரியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் பாரதத்திலிருந்து வந்தாராம். திகாயு இளவரசர் சமீபத்தில் பெற்றோரைப் பார்க்கப் போயிருந்த பொழுது உங்களைப் பற்றி அவரே சொல்லியிருக்க வேண்டும். திகாயு ஈழத்துக்குத் திரும்பிய பொழுது அவருடன் அவர் பிள்ளை திக காமினியும் வந்திருக்கிறார்."

சித்திரா: உன் கணவர் அவருக்கு என்ன பதில் சொன்னார்?

"சந்திரிகா: என்ன பதில் சொல்லுவார்! இளவரசியைப் பற்றி நினைத்தாலே உடலில் உயிர் தரிக்காதென்று எச்சரித்தாராம்.

சித்ரா: உம்! அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்?

சந்திரிகா: இந்த ஜன்னல் வழியாக ஒரு நூல் ஏணியைக் கட்டி விட்டால் ஒருவருக்கும் தெரியாமல் மேன் மாடத்துக்குச் சுலபமாகப் போய் வரலாமே என்றாராம். இந்த உதவியைச் செய்தால் ஐம்பது பொற் காசுகள் பரிசு கொடுப்பதாகவும் ஆசை காட்டினாராம்.

சித்ரா: நான் ஒன்று சொல்லுகிறேன்; அதையும் உன் கணவரிடம் போய்ச் சொல்லுவாயா?

"சந்திரிகா: என்ன?

சித்ரா: இளவரசர் ஐம்பது பொற்காசு தருவதாகச் சொன்னாரல்லவா? அதோடு சேர்த்து நான் ஐநூறு பொற்காசு தருவதாகவும் உன் கணவரிடம் தயவு செய்து சொல்லு.



அன்று முழுவதும் அவர்கள் இளவரசன் திககாமினியைப் பற்றியே பேசினார்கள். சித்ரா சொல்லிய யோசனையின் படி மூன்று நான்கு புடைவைகளைக் கயிறு போல நன்றாக முறுக்கிச் சாளரத்தில் கட்டித் தரையில் விட்டார்கள்.

மங்கலான நிலவு வெளிச்சத்தில் இதைக் கவனித்துக் கொண்டிருந்த திககாமினி படகின் உதவியினால் அரை நொடியில் ஆற்றைக் கடந்து மறு கரையை வந்தடைந்தான். கயிறு போலத் தொங்கிய புடவையைப் பற்றிக் கொண்டு சில நிமிஷங்களுக்குள் சித்ராவின் அறையில் வந்துகுதித்தான்.

இரு தூய இளங் காதலர்களையும் இஷ்டம் போல உரையாட விட்டுச் சந்திரிகா ஒதுங்கிக் கொண்டாள். கோழி கூவும் சப்தம் கேட்கும் வரையில் இளவரசன் திககாமினி அத்தை மகளுடன் இன்பமாக பொழுது போக்கிக் கொண்டிருந்தான்.

திககாமினியும் இளவரசியும் இப்படி அடிக்கடி சந்தித்தார்கள். சிறைவாசம் இளவரசிக்குச் சொர்க்க வாசமாக மாறியது.

இதன் விளைவு பாண்டு வாசுதேவனுக்கும் பத்ர காஞ்சனாவுக்கும் தெரியச் சுமார் ஆறுமாத காலமாயிற்று.

சித்ராவின் விவகாரத்தை இனி மறைக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, மன்னன் பாண்டு வாசுதேவன் மீண்டும் தனது புதல்வர்களையெல்லாம் அழைத்து நடந்ததைச் சொன்னான். அபயனைத் தவிர மற்ற இளவரசர்கள் மறுபடியும் சீறி யெழுந்தார்கள். அப்பொழுது அபயன் மீண்டும் அவர்களைப் பக்குவமாகச் சமாதானப் படுத்தினான்.

"இப்பொழுதும் காரியம் மிஞ்சி விடவில்லை. வயது வந்த ஒரு பெண்ணை உரிய காலத்தில் ஒருவனிடம் ஒப்படைக்காமல் நித்திய கன்னியாக வைத்திருக்க முயன்றது நம்முடைய குற்றம். நல்ல வேளையாக நம்

மாமன் மகனையே அவள் வரித்துக் கொண்டதை நினைத்து நாம் சந்தோஷப்பட வேண்டும். நடந்தது நடந்துவிட்டது. இன்னும் நான்கு மாதங்களில் சித்ரா ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள். அதற்குள் முறையாகத் திக காமினிக்கே அவளை மணம் செய்து கொடுத்து விடுவது தான் விவேகமானது. பிறக்கும் குழந்தை பிள்ளையா யிருந்தால் பிறந்தவுடனேயே அதைக் கொன்று விடுவோம் பெண்ணைகப் பிறந்தால் பிழைத்துப் போகட்டும்" என்றான் அபயன்.

நீண்ட நேர விவாதத்துக்குப் பின் அபயன் யோசனையை அவனுடைய தம்பிகளும் ஒப்புக்கொண் டார்கள். அதிக ஆடம்பரங்கள் இல்லாமல் சித்ராவுக்கும் திககாமினிக்கும் திருமணம் நடந்தது.

புது மணத் தம்பதிகள் கட்டுக் காவலுடன் அரண் மனையிலேயே வைக்கப்பட்டிருந்தார்கள். இளவரசன் திககாமினி வெளியே போய்வர அனுமதிக்கப்பட்ட போதிலும் சித்ரா எக்காரணத்தை முன்னிட்டும் மேன் மாடத்திலிருந்து கீழே இறங்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிரசவ காலம் நெருங்க நெருங்கப் பிறக்கப் போகும் குழந்தையின் நிலைமையை எண்ணி யெண்ணி சித்ரா கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். ஒரு நாள் அபயன் வந்தபொழுது "அண்ணா, எனக்கு ஆண் குழந்தை பிறந்தால் அதைக் கொல்லத்தான் வேண்டுமா? குழந்தை உயிர்வாழ வேறு வழியே கிடையாதா?" என்று துயரம் மேலிட கண்ணீருடன் கேட்டாள்.

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே சித்ரா! பிறப்பது ஆண் குழந்தையாயிருந்தால் அந்தக் குழந்தையைக் காப் பாற்றுவது என்னுடைய பொறுப்பு!" என்று சொல்லித் தங்கையைத் தேற்றினான் அபயன்.

**சி**த்ராவுக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டவுடன் அந்த அரண்மனையில் கட்டுக் காவல் பல மடங்கு பலமாயிற்று.



பத்ர காஞ்சனாவையும் அபயனையும் தவிர வேறு எவருமே சித்ராவைப் பார்க்க அனுமதிக்கப் பெறவில்லை. அபயன் ஏற்பாட்டின்படி, அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திர மான ஒரு மருத்துவப் பெண் சித்ராவுக்கு அமர்த்தப் பட்டிருந்தாள்.

ஒரு நாள் நடு நிசியில், சித்ரா ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அபயன் திட்டமிட்டிருந்தபடி சித்ரா வின் உயிர்த் தோழியான சந்திரிகா அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு எவர் கண்ணிலும் படாமல் நூலேணி வழியாகக் கீழே இறங்கினாள்.

ஆற்றங்கரையில் காத்திருந்த திககாமினி, சந்திரிகா வையும் குழந்தையையும் படகிலேற்றிச் சில நிமிஷங்களில் ஆற்றைக் கடந்து காட்டுக்குள் கொண்டுபோய்ச் சேர்த் தான். அதே நூலேணியின் வழியாக இரண்டு மூன்று தினங்களுக்கு முன் பிறந்த ஒரு பெண் குழந்தை கொண்டு வரப்பட்டுச் சித்ராவின் பக்கத்தில் படுத்திருந்தது. சித்ராவுக்குக் குழந்தை பிறந்த தகவல் இதன் பிறகுதான் வெளியாயிற்று.

சித்ரா பிரசவித்த சமயம், அபயன் ஒருவனைத் தவிர மற்ற இளவரசர்கள் அரண்மனையில் இல்லை; வேட்டை யாடக் காட்டுக்குப் போயிருந்தார்கள். அது அபயன் திட்டத்துக்கு உதவியாயிருந்த தென்றாலும், சந்திரிகா கொண்டுபோன குழந்தைக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய தாகவும் இருந்தது.

குழந்தையை எடுத்துக்கொண்டு காட்டில் நுழைந்த சந்திரிகா, முன்னேற்பாட்டின்படி அங்கு வந்திருந்த ஒரு அங்காடிப் பெண்ணிடம் குழந்தையையும் ஆயிரம் பொற் காசுகளையும் கொடுத்து விட்டு, அரண்மனைக்குத் திரும் பினாள். அந்த அங்காடிப் பெண் குழந்தையை ஒரு பெரிய கூடையில் மறைத்துத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு கிராமத்தை நோக்கி விரைந்தாள்.

கொஞ்ச தூரம் சென்றவுடன் பின்னேயிருந்து யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. அவளோ திரும்பிப் பாராமல் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

"உயிர்மேல் ஆசை யிருந்தால் அப்படியே நில்!" என்று ஒரு உத்தரவு பிறந்தது. அங்காடிப் பெண் பதை பதைத்துத் திரும்பிப் பார்த்தாள். வேட்டைக் கோலத்தில் இருந்த ராஜகுமாரர்கள், வேகமாக வருவதைக் கண்டதும் அவளுக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது!

அருகில் வந்த இளவரசர்களில் ஒருவன், "கூடையில் என்ன? ஆச்சி! கீழே இறக்கு, பார்க்கலாம்" என்றான்.

"பலகாரம் கொண்டு போகிறேன் அடுத்தகிராமத்தில் விற்க!" என்றாள். அங்காடிப் பெண் கூடையை இறக்காமல்.

"இங்கேயே, எங்களுக்கே விற்றுவிடு. அகோரப் பசி! கூடையைக் கீழே இறக்கி வை" என்றான் வேறொரு இளவரசன்.

என்ன செய்வதென்று அங்காடிப் பெண் தவித்துக் கொண்டிருக்கையில், முற்றிலுப் எதிர் பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இரண்டு பெரிய காட்டுப் பன்றிகள் கோரமாக உறுமிக் கொண்டு அவர்களை நோக்கி வந்தன. இளவரசர்கள் பரபரப்புடன் அந்தப் பன்றிகளை நோக்கி அம்புகளை எய்ததும், அவை வந்த திசையை நோக்கித் திரும்பி ஓட்டம் பிடித்தன.

அங்காடிப் பெண்ணையும் பலகாரத்தையும் மறந்து இளவரசர்கள் காட்டுப் பன்றிகளைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

பெண்ணும் மயிரிழையில் தப்பிக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வேறு திசையில் ஓட்டம் பிடித்தாள். அபயன் சொல்லி அனுப்பியிருந்தபடி அங்காடிப் பெண் துவாரமண்டல கிராமத்தை அடைந்து, ஒரு ஆட்டு இடையனிடம் குழந்தையையும், ஐந்நூறு பொற்காசுகளையும் கொடுத்து விட்டுத் திரும்பினாள்.

வேட்டையாடச் சென்ற இளவரசர்கள் அரண்மனைக்குத் திரும்பியபொழுது சித்ராவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்ற செய்தி அரண்மனையில் காத்திருந்தது.



முப்பத்தெட்டு வருஷ காலம் சிறப்பாக ஆட்சி நடத்திய பாண்டு வாசுதேவன், சித்ரா பிரசவித்த மறுதினமே திடீரென்று காலமாகி விட்டான்.

மூத்த பிள்ளையான அபயன் இலங்கையின் மூன்றுவது அரசனை முடிசூட்டிக் கொண்டான். அடுத்த சில வருஷங்கள் வரையில் விஷேசமான சம்பவம் ஒன்றும் நடைபெறவில்லை. சித்திராவின் பிள்ளையோ, பாண்டு அபயன் என்ற பெயருடன் ஆட்டிடையனின் ஆதரவில் வளர்ந்து வந்தான்.

மாமனை கம்ஸனைக் கொல்லப் பிறந்த கண்ணன் கோகுலத்தில் வளர்ந்து வந்ததை எவ்விதமாகக் கம்ஸன் கண்டுபிடித்துக் கண்ணனைக் கொலை செய்யப் பிரயத்தனங்கள் செய்தானே, அப்படியே பாண்டு அபயன் வளர்ந்து வந்ததை அவன் மாமன்மார் எப்படியோ கண்டுபிடித்துப் பாண்டு அபயனைத் தீர்த்துக் கட்டப் பல மாதிரியான உபாயங்களைக் கையாண்டு பார்த்தார்கள். பல முறை பாண்டு அபயன் பேராபத்துகளிலிருந்தும் விதியின் விசித்திர கதியால் தப்பிப் பிழைத்தான்.

இவனுடைய பதினாறுவது வயதில் வளர்ப்புத் தகப்பனை ஆட்டிடையனைத் தேடிக்கொண்டு அரண்மனைத் தோழி சந்திரிகா ஒரு நாள் வந்து சேர்ந்தாள். பாண்டு அபயனின் க்ஷேமத்தை உத்தேசித்து இவனைத் தென்னிலங்கையில் பாண்டுலா கிராமத்திலிருக்கும் ஒரு அந்தணனின் பொறுப்பில் உடனே ஒப்படைத்து விட வேண்டுமென்று இளவரசி சித்ரா ஓலை எழுதி யனுப்பி யிருந்தாள்.

அந்த ஓலையுடன் ஆட்டிடையனுக்கும் அந்தணனுக்கும் ஏராளமான வெகுமதிகளையும் அனுப்பியிருந்தாள். அதன் பிறகுதான் பாண்டு அபயனுக்கு அவனுடைய பிறப்பு வளர்ப்பைப்பற்றிய இரகசியங்கள் ஆட்டிடையன் மூலமாகத் தெரியவந்தன.

சித்ராவின் ஆணையின்படி, பாண்டு அபயன் பாண்டுலா கிராமத்திலுள்ள அந்தணன் பொறுப்பில்

ஒப்படைக்கப் பெற்ருன். அந்த அந்தணனுக்குப் பாண்டு அபயன் வயதை யொத்த சந்திரன் என்ற ஒரு பிள்ளை யிருந்தான். பாண்டு அபயனும் சந்திரனும் உயிர்த்தோழர் களாகச் சேர்ந்து அந்த அந்தணனிடம் வித்தைகளைக் கற்ருர்கள்.

குதிரை யேற்றம், வாட்போர், அஸ்திரப் பிரயோகம், யுத்த தந்திரம் முதலியவைகளை யெல்லாம் அந்தணன் வருங்கால அரசனுக்குக் கற்றுக் கொடுத்தான். அவன் அம்மட்டோடு நிற்கவில்லை. பொற்காசுகளைப் பெருவாரி யாகச் செலவிட்டு, ஒரு பெரிய சேனையையும் திரட்டி அதற்குத் தீவிரமான பயிற்சியையும் அளித்தான்.

"பாண்டு அபயா! நீ அரசாளவேண்டிய காலம் வந்துவிட்டது. உனக்காகத் திரட்டி வைத்திருக்கும் சேனையுடன் போருக்குப் புறப்படு. நீ சிம்மாசனம் ஏறும் பொழுது, என் மகன் உன் நம்பிக்கைக்குப் பாத்திரமான முதல் மந்திரியாயிருக்க வேண்டும் என்பது என்ன ஆசை" என்ருன் அந்தணன்.

"இன்னென்றும் உனக்குச் சொல்லி வைக்கிறேன் உனக்கு அன்னம் அளிக்கும் எந்தப் பெண்ணின் கைபட்டவுடன் இலை தங்கமயமாக மாறுவதை நீ காண்பாயோ, அவளே உன் மனைவியாவாள்!" என்றும் அந்தணன் சொல்லியனுப்பினன்.

நன்கு பயிற்சியளிக்கப்பட்ட 500 வீரர்களுடன் பாண்டு அபயனும் சந்திரனும் போருக்குக் கிளம்பினர் கள். நடுவழியில் வேறு இளைஞர்களையும் இவர்கள் படையில் சேர்த்துக்கொண்டு போனர்கள்.

முதலில் பாண்டு அபயனின் மாமன் மார்களில் ஒருவனை கிரிகந்த சிவனது நிர்வாகத்திலிருந்த பிரதேசத்தைப் பாண்டு அபயன் அடைந்த பொழுது, கிரிகந்த சிவன், விவசாயிகள் நடத்திய அறுவடைத் திருவிழாவில் கலந்து கொள்ளப் போயிருந்தான். அவனுடைய பெண்ணை பாலியும், தனது பரிவாரங்களோடு அதே திருவிழாவுக்குப் போய்க்கொண்டிருந்தாள்.



வேவுகாரர்கள் மூலம் இதை அறிந்த பாண்டு அபயன் பாசறையிலிருந்து தனியாகப் புறப்பட்டு இளவரசி பாலியை வழிமறித்து அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். "ரொம்பப் பசியாயிருக்கிறது; சாப்பிடுவதற்கு ஏதாவது இருந்தால் கொஞ்சம் கொடு!" என்று முதல் முதல் கேட்டுப்பார்த்தான்.

பாண்டு அபயனின் ராஜலட்சணத்தைப் பெருமிதத்தோடு பார்த்து வியந்துகொண்டிருந்த இளவரசி, பிரயாணத்திற்குக் கொண்டு வந்திருந்த பலகாரங்களில் ஒரு பகுதியை இலையில் வைத்து இளவரசனிடம் கொடுத்தாள். அவள் கைபட்ட மாத்திரத்தில் அந்த இலை ஸ்வர்ணமயமாக மாறியது கண்டு, பாண்டு அபயன் திகைத்துப்போனனும்!

"பாலி! இன்று முதல் நீ ஸ்வர்ணபாலி! இந்நாட்டின் வருங்கால மகாராணி" என்று தன்னையும் மறந்து பாண்டு அபயன் பேசிவிட்டான்.

இளவரசி பாலியின் கைபட்ட இலை ஸ்வர்ண மயமாக மாறியதால் அவளுக்கு ஸ்வர்ண பாலி என்ற பெயர் ஏற்பட்டதாக மகாவம்சம், ராஜவழி முதலான நூல்கள் பிரஸ்தாபிக்கின்றன. (எந்தக் காதலனுக்கும் காதலி தொட்டதெல்லாம் தங்கம் தான். அவள் பொன்னுருவின் மகிமையால்! இது காதல்—மனே தத்துவம்.)

அதற்கு மேல் அவன் யாரென்பதைத் தெரிந்து கொள்ளாமலிருக்கக் கூடாதென்று எண்ணி அவன் பெயரை விசாரிக்கப் பாலிவாய் திறப்பதற்குள், பாண்டு அபயன் அவள் இரு செம்மலர்க்கரங்களையும் துணிவுடன் பற்றிக் கண்களில் ஒத்திக்கொண்டான்.

இளவரசி வெடுக்கென்று கைகளை உதறிக்கொண்டு, "யார் ஐயா நீங்கள்? இது என்ன துணிச்சல்?" என்ருள் கோபத்தை வருவித்துக்கொண்டு.

"என் முறைப்பெண் கையைப் பிடிக்க எவருடைய அனுமதி எனக்குவேண்டும்?"

"முறைப் பெண்ணும், முறைப்பெண்! யாரிடம் இப்படித் தாறு மாருகப் பேசுகிறேமென்பது தெரிந்து தான் பேசுகிறீர்களா?"

"என் மாமன் மகளிடம் என்று தெரிந்துதான் பேசுகிறேன். நான் உன் அத்தை சித்ராவின் மகனை பாண்டு அபயன்; மறைந்து வளர்ந்த மன்னன். இப்பொழுது உறவு முறையைத் தெரிந்து கொண்டாயா?" என்ருன் பாண்டு அபயன்.

"நீங்களா...!" என்று ஆச்சரியத்துடன் கேட்டபாலி அவனை அகலவிழித்துப் பார்த்துவிட்டுத் தலைகுனிந்தாள்.

பாண்டு அபயன் தனது வரலாற்றைப் பாலிக்குச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "உன் தகப்பனர் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பார். இனி நீ போகலாம். என் ஸ்வர்ணமே! சமயம் வரும்பொழுது உரிமையோடு உன்னை அழைத்துப் போவேன்" என்ருன்.

"உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள்" என்று சொல்லிவிட்டுத் தயங்கினுள் பாலி.

"வேண்டுகோளா? உத்தரவு என்று சொல்லு பாலி! உன் உத்தரவை மீறும் துணிச்சல் இந்நாட்டில் இனி எவருக்கும் இருக்காது!" என்று சிரித்துக்கொண்டே சொன்னுன் காதலன்.

"அத்தை மகனைப்பற்றிச் சொல்லப் பட்டிருந்த சோதிடத்தையும்தான் அறிவேன்!" என்று பாலி ஆரம்பிக்கையில், பாண்டுஅபயன் இடைமறித்து, அந்த சோதிடம் பலிப்பதாயிருந்தால் கூட என் மாமனருக்கு என் மூலம் எவ்விதத் தீங்கும் ஏற்படக்கூடாது? அவ்வளவு தானே? இதோ வாக்குறுதி அளிக்கிறேன். போதுமா?" என்ருன்.

அப்பால் பாண்டு அபயன் தன்னுடைய பாசறையை நோக்கிப் போய்விட்டான். இச்சம்பவம் நடைபெற்ற சில தினங்களுக்குப்பின், பாண்டுஅபயன் மாறுவேடத்தில்



கிரீகந்தைப் பட்டினத்திற்குச் சென்று இளவரசி பாலியை அவள் சம்மதத்துடன் அழைத்துக்கொண்டு போய் விட்டான்.

இதை அறிந்த அவள் தகப்பன் கிரிகந்த சிவன் தன் சேனையுடன் எதிர்த்துவர, அதைப் பாண்டு அபயன் சின்னு பின்னப்படுத்தித் தனது முதல் வெற்றியின் ஞாபகார்த்தமாக ஒரு புதிய பட்டணத்தைப் போர் நிகழ்ந்த இடத்தில் நிர்மாணித்தான்.

இதை அடுத்து கிரிகந்த சிவனின் ஐந்து பிள்ளைகளும் படையெடுத்துவந்து, சந்திரனின் வாளுக்குப் பலியானுர்கள். அந்தப் போர்க்களத்தில் வேருெரு புதிய பட்டணம் உதயமாயிற்று.

இதன் பின் பாண்டு அபயன் ஆற்றின் மறு கரையை அடைந்து தோலாமலைப் பிரதேசத்தில், அடுத்த நான்கு வருஷங்களைக் கழித்தான். தலை நகரத்தைத் தாக்கிப் பிடிக்க ஒரு பிரம்மாண்டமான சேனையை இவன் திரட்டி வரும் செய்தி மன்னன் அபயன் காதிற்கு எட்டியது.

சொந்தத் தங்கையின் பிள்ளையோடு சண்டை செய்ய விரும்பாமல், பாண்டு அபயனிடம் சமாதானத் தூது அனுப்பினுன் அபயன். இச் செய்தியை அவனுடைய மற்ற சகோதரர்கள் கேட்டபொழுது சீறியெழுந்தார்கள்.

"அப்பொழுதே சித்ராவைக் கொன்றிருந்தால் நமக்கு இந்தக் கதி நேரிட்டிருக்குமா? அன்று சித்ராவை ஆதரித்தாய்; இன்று நம் உயிரைக் குடிக்கவரும் நமனையும் வரவேற்கப் பார்க்கிருய்! உன்னைப்போன்ற கோழை அரசாளவே தகுதியில்லை!" என்று அவர்கள் முழங்கினுர்கள்.

அரண்மனைக்குள்ளேயே கலகம் உருவாவதை அறிந்ததும், பாண்டு அபயன் போர் தொடுப்பதற்கு முன்பே மன்னன் அபயன் முடிதுறந்து விட்டான். அவனுடைய மற்றச் சகோதரர்கள் போருக்குத் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

அபயன், கிரிகந்த சிவன் ஆகிய இருவரைத் தவிர மற்ற எட்டு இளவரசர்களும், வலுவில் சென்று பாண்டு அபயனைத் தாக்கினார்கள். வெற்றி தோல்வி தெரியாத நிலையில் பல வருட காலம் யுத்தம் நீடித்தது.

பாண்டுலா கிராமத்திலிருந்து கிளம்பிய 17 வருஷங்களுக்குப்பின் பாண்டு அபயன் மாமன்மார்களில் எட்டுப் பேர்களையும் கொன்று இறுதியாக முடி சூட்டிக் கொண்டான்.

ஸ்வர்ண பாலியை ஆடம்பர வைபவங்களுடன் இவன் மணந்து கொண்டதோடு, அவள் தகப்பன் கிரிகந்த சிவனுக்கு அவன் நிர்வாகத்திலிருந்த கிரிகந்தையைத் திருப்பிக் கொடுத்தான். தனது அன்னையை ஆதரித்து வந்த அபயனை நகரப் பாதுகாவலனாக்கிக் கௌரவித்தான்.

பாண்டு அபயன் எழுபத்தியேழு வருடகாலம் இலங்கையில் சிறப்பாக அரசாண்டான். அநுராதபுரத்தைத் தலைநகரமாக்கிக் கொண்டு அவ்விடத்தில் பாண்டு அபயன் விசாலமான சாலைகளையும் தடாகங்களையும் மாளிகைகளையும் நிர்மாணித்தான்.

பாண்டு அபயனுக்குப்பிறகு அவன் மகன் முத்துசிவன் பட்டத்துக்கு வந்தான். தகப்பனைப் பின் பற்றிப் பிரஜைகளின் நலத்தையே தனது லட்சியமாகக் கொண்டு அறுபது வருட காலம் முத்துசிவன் சிறப்பாக ஆட்சி நடத்தினான். இவன் காலத்தில்தான் அநுராதபுரத்துக்குத் தெற்கே 'மஹாமேகவனம்' என்ற ஒரு ரம்யமான பூங்காவனம் அமைக்கப் பெற்றுப் பிற்காலத்தில் சரித்திரப் பெருமை பெறலாயிற்று.

முத்துசிவனுக்குப் பத்துப் பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தனர். இரண்டாவது பிள்ளையான தீசன் என்பவன் தெய்வ பக்தியிலும் தர்மத்திலும் தலை சிறந்து விளங்கியதால் 'தேவா நாம்பிய தீசன்' அதாவது தேவர்களுக்குப் பிரியமானவன் என்று அழைக்கப் பெற்றான்.

தேவா-நம்பிய-தீசன்



இவன் காலத்திலேயே பௌத்த மதம் முதன் முதலாக இலங்கைக்கு வந்தது. இவனுக்கு முன் அரசாண்ட மன்னர்களும் இலங்கைப் பொது மக்களும் இந்து மதத்தையே கடைப் பிடித்து வந்தார்கள். பாரத நாட்டில், மௌரிய சக்கரவர்த்தி அசோகன் அரசாண்டபொழுது இலங்கை, தீசனின் ஆட்சியில் இருந்தது.

தீசனுக்கு முந்திய மன்னர்களையும், அவர்கள் காலத்தில் இலங்கையின் நிலைமையையும் பற்றிய ஆதார பூர்வமான சரித்திரத் தகவல்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். செவிவழி வரலாறுகளை வைத்துக்கொண்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது மகாவம்சம். இது இந்திய இதிகாச பாணியில் அமைந்திருப்பதால் இவ் வரலாறுகளில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிவது மிகக் கடினம்.

பிரதானமான வம்சாவளி மட்டும் சரியானதென்றும் அமானுஷ்யமான வரலாறுகள் கற்பனையென்றும் தற்காலச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகிறார்கள். விஜயன் வரலாற்றையே கற்பனைக் கதையென்றும், ஆரியக் குடியேற்றத்தின் சின்னம் என்றும் கூறுவோர்களும் உண்டு. ஆனால் இலங்கையின் ஆதார பூர்வமான தேச சரித்திரம் தேவா நாம்பிய தீசனிடமிருந்துதான் ஆரம்பமாகிறது என்பதில் அதிகமாக அபிப்பிராய பேதமில்லை.

அசோகனுக்கும் 'தேவாநாம்பியன், பிரியதர்சனி' என்ற பெயர்கள் உண்டு. அசோகனும் இலங்கை மன்னனான தேவாநாம்பியதீசனும் முற்பிறவியில் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களென்றும், அப்பொழுது தேன் வியாபாரிகளாய் இருந்தார்களென்றும் மகா வம்சமும் ராஜவழியும் கூறுகின்றன.

# 5. அசோகன் அளித்த அன்புப் பரிசு.

மூத்துசிவன் காலமாகியதும் அவனுடைய பத்து புதல்வர்களிலே இரண்டாவது பிள்ளையான தீசன் பட்டத்துக்கு வந்தான். அவன் அரியணையேறிய சமயம் நாட்டில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. பூதேவி புளகாங்கிதமடைந்து வைரவைடூரியச் சுரங்கங்கள் வெடித்து விலை மதிக்க முடியாத நவரத்தினங்கள் மேலே வந்தன. கடலில் புதையுண்டிருந்த பொக்கிஷங்கள் கரையில் ஒதுக்கப்பட்டன. முத்துச்சிப்பிகள் ஆயிரம் பதினாயிரம் லட்சமாக மலை மலையாக வந்து குவிந்தன. இந்த அற்புதங்கள் தீசன் ஆட்சியிலே இலங்கை பெருமையடையப் போவதை எடுத்துக் காட்டுவதாயிருந்தன.

வட பாரதத்திலே மௌரியப் பேரரசன் அசோகன் கலிங்கப்போரில் மன அதிர்ச்சியடைந்து அமைதியை நாடி பௌத்த மதத்தைத் தழுவிய காலம் அது. பௌத்த தர்மத்தைத் தான்கடைப்பிடித்ததோடல்லாமல் அதைப் பாரெல்லாம் பரப்ப பெரு முயற்சியும், பிரசாரம் செய்த காலத்தில் இலங்கையிலே தீசன் ஆட்சி ஆரம்பமாகியிருந்தது.

வெறியர்கள் எதிலும் தீவிரமாக ஈடுபடும் தன்மையுடையவர்கள். அப்படிப்பட்ட வேகம்தான் அசோகனுக்கும் இருந்தது. தகப்பன் பிந்துசாரன் காலமாகியதும் பட்டத்துக்குப் போட்டியிட்ட சகோதரர்களையெல்லாம் படுகொலைசெய்து மௌரியப் பேரரசைக் கைப்பற்றினான். அரசு தன்கைக்கு வந்ததும் மண்ணாசையினால் உந்தப்பட்டு நாடு பிடிக்கும் பயங்கர யுத்தங்களில் தீவிரமாக ஈடுபட்டு லட்சக்கணக்கான மக்களைக்கொன்று மாய்த்தான். தோல்வியே கண்டறியாத தமிழகத்தின் எல்லைக்கு வந்ததும் கலிங்கம் அவனுக்குச் சரியானதொரு பாடத்தைக் கற்பித்தது. அங்கு நடந்த போர் அசோகனுடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தையும்பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது.

யுத்தத்தில் சலிப்படைந்து புத்த தர்மத்தை அவன் தழுவியபொழுது அதிலும் ஒரு வெறியனைத் தீவிர ஈடுபாடு கொண்டான். பௌத்தத்தை அரசாங்க மதமாகப் பிரகடனப்படுத்தி பாரெல்லாம் பௌத்த தர்மம் செழிக்க பல தூதர்களை உலகின் பல பகுதிகளுக்கும் அவன் அனுப்பினான். ஒரு சமயம் இலங்கை மன்னன் தீசன் அசோகனின் புகழைக்கேட்டு அவனுடன் தோழமை கொள்ளுவதற்காக விலை மதிக்க முடியாத பரிசுகளுடன் சில தூதுவர்களைப் பாடலீபுரத்துக்கு அனுப்பியிருந்தான். இந்த தூதர்களின் வருகை அண்டையிலுள்ள இங்கையையும் பௌத்த தேசமாக்க வேண்டுமென்ற ஆவலை அசோகனிடம் தூண்டிவிட்டது.

* "தேவனாம்பிய தீசன் சௌக்கியமாயிருக்கிறாரா?" என்று தூதர்களிடம் வினவினான் மௌரிய மன்னன் தீசன்.

"எங்கள் மன்னரின் பெயர் தீசன்" என்றார்கள் தூதர்கள்.

"அவர் தேவர்களுக்குப் பிரியமானவர். ஆகையால் இனி அவரை தேவனாம்பிய தீசன் என்றழைக்க வேண்டும்!" என்று அசோகன் சொல்லியபொழுது இலங்கைத் தூதர்களுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

அசோகன் இலங்கை மன்னனுக்குப் பரிசுகளை அனுப்ப விரும்பி ஒரு மன்னரின் மகுடாபிஷேகத்துக்கு

* தீசனுக்கு தேவனாம்பிய தீசனென்ற பெயர் கொடுத்தது அசோகன் என்பது பலருடைய கருத்து. இந்தப் பெயரே தீசனுக்கு தேச சரித்திரத்தில் நிலைத்துப்போயிற்று. அசோகனுக்கும் தேவனாப்பிய தீசன், பிரியதர்சனி என்ற இரு மறுபெயர்களுண்டு. இதை அசோகனின் சிலாசாசனங்கள் ஊர்ஜிதப் படுத்துகின்றன. அசோகனும் தீசனும் முற்பிறவியில் ஒருதாய் வயிற்றுச் சகோதரர்களாயிருந்து தேன் வியாபாரம் செய்ததாக மகாவம்சம் கூறுகிறது.

வேண்டிய மணிமுடி, செங்கோல், வைரவாள், தங்கப் பாதரட்சை, வெண்குடை, ராஜரீக உடைகள், காதுக் குண்டலங்கள், கணையாழிகள், புண்ணிய தீர்த்தங்கள் ஆகியவைகளை தீசனுக்கு அனுப்புவதென்று அவன் தீர்மானித்தான். அதோடு தீசனுக்கு சாஸ்திரமுறைப்படி மகுடாபிஷேகம் செய்து வைக்க வேத சாஸ்திர விற்பன்னர் களாகிய சில அந்தனர்களையும் அசோகன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான்.

தீசன் பட்டத்துக்கு வந்த மறு வருடம் அசோகன் அனுப்பிய வெகுமதிகளைக் கொண்டு முறையாக மறுபடி யும் ஒரு பட்டாபிஷேகத் திருவிழா இலங்கையில் நடந்தது. இலங்கையில் முறையான முடியாட்சி ஏற்பட்டது தீசன் காலத்தில் தானென்றும், அதை ஏற்படுத்திய பெருமை அசோகனுடையதென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இதையடுத்து வேத சாஸ்திரப் பிரமாணங்களின்படி முடி சூட்டிக் கொள்ளும் வழக்கம் இலங்கையில் பல நூற் றாண்டுகள் வரையில் நீடித்திருந்தது. அதோடு பட்டாபி ஷேகம்செய்துவைக்கும் அரண்மனைப் புரோகிதர் அரசனின் சிறந்த நண்பனாகவும் குருவாகவும் அரசியல் ஆலோசக ராகவும் மிகுந்த செல்வாக்கான பதவியை வகித்து வரலானார். கிட்டத்தட்ட கடைசி சிங்கள மன்னர் காலம் வரையில் அரண்மனைப் புரோகிதர் பதவி நீடித்திருந்த தாகச் சரித்திரம் கூறுகிறது.

நிற்க, படலீபுரத்துக்குத் தூது போய் வந்தவர்கள் வட பாரதத்தில் பௌத்தம் அரசாங்க ஆதரவுடன் செல்வாக்கான நிலைமையிலிருப்பதையும் அந்த சித்தாந்தம் இலங்கையிலும் நிலைபெற வேண்டுமென மௌரியப் பேரரசன் விரும்புவதையும் தீசனிடம் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஒருநாள் தீசன் தனது பரிவாரங்களோடு அநுராத புரத்தையடுத்துள்ள காட்டில் வேட்டையாடச் சென்றான். நீண்ட நேரம் வரையில் வேட்டையாடிவிட்டு ஒரு மரத்தடி யில் அவன் களைப்புற்று உட்கார்ந்த சமயம் அவனெதிரில் அழகான புள்ளிமான் ஒன்று துள்ளிக் குதித்துக்கொண்டு



வந்தது. அதைப் பார்த்த மாத்திரத்தில் மன்னனின் ஆயா சம் எப்படியோ அவனையறியாமல் பறந்து போய்விட்டது. எப்படியும் அந்தப் புள்ளிமானை உயிரோடு பிடிக்க வேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டு அதை விரட்டிக் கொண்டு தனியொருவனாக பின் தொடர்ந்து ஓடினான்.

புள்ளிமான் மன்னனைப் பின்னால் இழுத்துக் கொண்டே ஒரு மலை உச்சியின்மீது ஏறியது. அந்த புள்ளி மான் எங்கு சென்றாலும் அதைக் கைவிட மனமில்லாத மன்னனும் இறைக்கப் பின்னால் ஓடினான். மன்னனும் மானும் போட்டி போட்டுக்கொண்டு ஓட்டப் பந்தயம் பிடித்த மலைச்சிகரம் மஹிந்தலை என்று சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கும் புனிதமான குன்றாகும். மலை உச்சியை அடைந்ததும் அந் மாயமான் திடீரென்று மறைந்துவிட்டது. மான் மறைந்த இடத்தில் ஜகஜோதி யான பிரகாசத்துடன் ஒரு வாலிப் பிட்சு நிற்பதைப் பார்த்து தீசன் சற்று தயங்கினான்.

"தீசா! ஏன் தயங்குகிறாய்? அருகில் வா!" என்றார் அந்த இளம் பிட்சு.

அவர் தன்னுடைய பெயரைச் செல்லியழைத்தது தீசனுக்குப் பெரிய புதுமையாயிருந்தது. தனது கண் களையே அவனால் நம்ப முடியவில்லை. "முன்பின் பார்த்தறி யாத இம் மனிதருக்கு என் பெயர் எப்படித் தெரிந்தது? மலையின் உச்சிக்கு அவர் எப்படி, எங்கிருந்து எதற்காக வந்திருக்கிறார்?" என்று அவன் தன்னைத்தானே பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு பேசும் செயலற்றுப் போய் மௌனமாக நின்றான்.

"என்னைப் பார்த்து பயப்படுகிறாயா? நாடாளும் மன்னா இப்படுக் காஷாயதாரியான ஒரு துறவியிடம் அஞ்சுவது? புத்தர்பிரானின் பொன்னடிகளைப் பின்பற்றும் அடியார்களின் சங்கத்தில் அடியேனும் ஒருவன் அப்பா? உன் அருமை நண்பர் அசோகச் சக்கரவர்த்தியின் குமாரன் நான். சிறுபிராயத்திலே பௌத்த தர்மம் என்னை ஆட்கொண்டது. சேவை புரிய சங்கம் என்னை அழைத்தது

பாராளும் மாமன்னரான *அசோகரின் பிள்ளையான மஹிந்தன் இன்று காஷாயதாரியாக உன் முன்னால் நிற்கும் காரணம் இதுதான். என் தந்தை அனுப்பி இங்கு வந்தேன். புத்தரின் கருணை என்னையும் உனது பிரஜைகளையும் காப்பாற்றட்டும் என்றார் அந்த இளம் துறவி.

தன்னை அசோகரின் பிள்ளையென்று மஹிந்தர் சொல்லியதும் தீசன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. பௌத்த தர்மத்தை இலங்கையில் பிரசாரம் செய்ய மௌரியச் சக்கரவர்த்தி தமது சொந்தப் பிள்ளையையே அனுப்பி வைத்திருப்பதைக் கேட்டு தீசன் புளகாங்கிதமடைந்தான்.

“தயவுசெய்து அரண்மனைக்கு வாருங்கள். அங்கு போய் அமைதியாகப் பேசுவோம், எனது மானசீக நண்பரின் புதல்வரை இப்படியா மலையுச்சியில்தன்னம் தனிமையாக நான் வரவேற்பது?” என்றான் தீசன்.

“கொஞ்சம் பொறு மன்னா. நான் இங்கு தனியாக வரவில்லை. அதோ அப்படி திரும்பிப்பார்” என்றார் மஹிந்தர்.

மன்னன் திரும்பிப் பார்த்தான். மலர்ந்த முகங்களுடன் மஞ்சள் உடை தரித்த அனேகம் பிட்சுக்கள் பின்னால் நின்றுகொண்டிருந்தார்கள்.

“இவர்களெல்லாம் என்னைப் போலவே தர்ம அசோகர் அனுப்பிய தர்ம தூதர்கள். அவர்கள் நடத்தப்

* இலங்கையில் பௌத்த தர்மத்தை முதல் முதலாகப் பரப்பிய மஹிந்தர் அசோகனின் பிள்ளையென்பதை இலங்கை வரலாறுகளில் மட்டுமே காண முடிகிறது. மஹிந்தரையும் அவரது சகோதரி சங்கமித்தையையும் அசோகனின் குழந்தைகளென்று புராதன இலங்கை நூல்கள் ஒருமுகமாக வருணிக்கின்றன. அசோகருக்கு மஹிந்தர் என்ற பெயருடைய ஒரு பிள்ளை இருந்ததாக வேறு எவ்வித ஆதாரமும் இல்லை. மகேந்திரன் என்ற பெயருடைய தமது சகோதரி புதல்வனொருவனை பௌத்தப் பிரசாரத்துக்குத் தூது அனுப்பியதாக சிலா சாஸனம் ஒன்றில் அசோகர் குறிப்பிட்டிருக்கிறார்.



போகும் சன்மார்க்கப் புரட்சியில் உனது நாடு பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பாரெங்கும் புகழ் பெற்று விளங்கப் போகிறது. இலங்கையை பௌத்த தர்மத்துக்கு அற்பணிந்த பெருமையும் உன்னைச் சாரப்போகிறது” என்றார் மஹிந்தர்.

மஹிந்தர், மன்னனை முதன் முதலாகச் சந்தித்த அதே இடத்தில் முதல் உபதேசம் செய்தார். அதைக் கேட்டுப் பரவசம் அடைந்த தேவாநாம்பிய தீசன் உடனே பௌத்த மதத்தைத் தழுவியதுடன் மஹிந்தரையும் மற்ற பிட்சுக்களையும் பக்தி சிரத்தையோடு அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

அரண்மனையில் யானைகள் கட்டும் ஒரு பிரம்மாண்டமான மண்டபம் சுத்தம் செய்யப்பட்டு மஹிந்தரின் உபதேச கூடமாக்கப்பட்டது. தினசரி ஆயிரமாயிரமாகப் பொது மக்கள் திரண்டு வந்து மஹிந்தரின் பொன்மொழிகளைக் கேட்டுப் பௌத்தராயினர்.

மஹிந்தர் உபதேசத்தைக் கேட்கவரும் பிரம்மாண்டமான ஜனசமுத்திரத்துக்கு யானை மண்டபம் போதாமற் போகவே தனது தந்தை அரும்பாடுபட்டு அமைத்த மகாமேகவனப் பூங்காவையே மஹிந்தரின் கோஷ்டிக்கு மன்னன் அளித்து விட்டான். மகான் மஹிந்தரும் ஏற்றுக் கொண்டு பௌத்த தர்மத்தை உபதேசிக்க அதைத் தமது தலைமை ஸ்தானமாக்கிக் கொண்டார்.

இதற்கிடையில் தீசனின் இளைய சகோதரனும் ராஜப் பிரதிநிதியுமான மகாநாகனின் மனைவி ராணிஅனுலா அநேகம் உயர் குலப் பெண்மணிகளுடன் மஹிந்தரின் உபதேசங்களைத் தவறாமல் கேட்டு வந்தாள். இயற்கையிலேயே தெய்வ பக்தியும் நல்ல பண்புகளும் பெற்றுள்ள ராணிஅனுலா பிட்சுணியாகி, பௌத்த தர்மத்துக்குப் பணியாற்ற விரும்பினாள். அவள் விருப்பத்தைத் தீசன் மஹிந்தரிடம் தெரிவித்த பொழுது அவர் ஒரு கணம் யோசித்தார்.

"மன்னா! பிட்சுக்களுக்குக் காஷாயம் கொடுக்கும் உரிமையே எங்களுக்கு உண்டு, பிட்சுணிகளைச் சேர்க்கும் உரிமை எனக்கு இல்லை. பாடலீபுரத்தில் என் தங்கை சங்கமித்தை பிட்சுணியாகப் பணியாற்றி வருகிறாள். அவளை அனுப்பிவைக்கும்படி தர்ம அசோகருக்குத் தூது அனுப்பு. சங்கமித்தை வரும்பொழுது போதிசத்வர் ஞானோதயம் பெற்ற புனித போதி விருட்சத்தின் தென் பாகத்திலிருந்து ஒரு கிளையையும் இங்கே கொண்டு வரட்டும்" என்று மஹிந்தர் ஆலோசனை கூறினார்.

அதன்படி அசோக சக்கரவர்த்திக்குத் தீசன் தூது அனுப்பினான். இதற்கிடையில் மஹிந்தர் உதவியினால் புத்தரின் வலது புறத் தாடை எலும்பைத் தருவித்து அதை பூஜைக்காகப் புனித அடக்கம் செய்தான். அந்த ஸ்தலத்தில்தான் தூபராமா என்ற ஒரு பிரம்மாண்டமான தாது கோபுரம் அமைக்கப்பட்டது.

இதன் பிறகு தேவாநாம்பிய தீசனின்வேண்டுகோளுக் கிணங்க, தர்ம அசோகன் தனது புதல்வி சங்கமித்தை யையும் அவளுடன் மற்றும் அநேக பிக்குணிகளையும் பிட்சுக்களையும், புனித போதி விருட்சத்தின் தென் பக்கத்துக் கிளையையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். புனித போதி விருட்சத்தைத் தீசன் பக்தியுடன் வர வேற்றுப் பிரதிஷ்டை செய்தான். இன்று அநுராதபுரத்தி லிருக்கும் இந்தப் போதி விருட்சம் 2200 வருடம் வாழ்ந்த பழமை வாய்ந்தது. உலகில் இதுவே மிக மிகப் பழமை யான விருட்சமாகும்.

பிக்குணி சங்கமித்தை, ராணி அனுவாவின் உதவி யுடன் ஒரு ஆசிரமத்தை ஸ்தாபித்து, நூற்றுக்கணக்கான பெண்களை பிக்குணியாகச் சேர்த்தாள். இலங்கையில் பௌத்த மதத்தை முதல் முதலாக ஸ்தாபித்து பிட்சுக் களையும் எவ்விதம் மஹிந்தர் சேர்த்தாரோ, அதே போல இலங்கைப் பெண்மணிகளுக்குத் தர்ம உபதேசம் செய்த பெருமையும் பிட்சுணிகளை முதன் முதலாக இலங்கையில் சேர்த்த பெருமையும், புத்த கயாவிலிருந்து புனித போதி



விருக்ஷத்தை இலங்கைக்குக் கொண்டு தந்த பெருமையும் மஹிந்தரின் சகோதரி சங்கமித்தைக்கே உரியது.

தீசன் காலத்தில் பௌத்த ஆலயங்கள் புதிது புதிதாக நிர்மாணிக்கப் பட்டன. தற்கால பொறியியல் வல்லுனர்களும் கண்டு பிரமிக்கும் தடாகங்கள் வெட்டப்பட் டன. சரித்திரப் பிரசித்தி பெற்ற தீசவாவி என்ற தடாக மும் இவர் காலத்தில்தான் அமைக்கப்பட்டது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இதைப் போன்ற ஒரு தடாகத்தை அமைக்கும் பொழுது தான் தேவாநாம்பிய தீசன் குடும்பத்தில் ஒரு மறக்க முடியாத இழிவான செயல் நடைபெற்றது.

மன்னனின் அந்திய காலத்தில் இவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையின் ஆறுவது வயதில் மன்னன் தீசனுக்கு தான் இனி அதிக காலம் ஜீவிக்கப் போவதில்லை என்று தோன்றியது. தனது ஒன்பது சகோதரர்களில் மூத்தவனான மகாநாகன் அண்ணனைப் போலவே உத்தமமான பண்புகளும் தெய்வ பக்தியும் உடையவன். அவன் மனைவி ராணிஅனுவா பெண் குலத்துக்கே திலகமாயிருந்தவள். இப்படிப்பட்ட ஒரு தம்பியும் அவனுடைய தர்மபத்தினி இருக்கும் பொழுது தேவாநாம்பிய தீசன் தனது குழந்தையின் வருங் காலத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

தன்னுடைய காலத்துக்குப் பிறகு தனது குழந்தை தக்க வயதடைந்து ராஜ்ய பாரத்தை வகிக்கும் வரையில் மகாநாதன் பரிபாலிக்க தேவநாம்பியதீசன் பிரகடனப் படுத்தினான். இது வயோதிக மன்னனுக்கு மனஅமைதி யைத் தருவதாயிருந்தது. இவன் மனைவியான மகா ராணிக்கோ இது கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அரசன் எவ்வளவு சொல்லியும் மகாராணிக்கு மனத் தில் சமாதானம் ஏற்படவில்லை. தனது கணவனுக்குப் பின் கொஞ்ச காலமாவது நாடாள வேண்டுமென்ற பேராசை இவள் நெஞ்சில் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

ஒருநாள் தீச மஹாராஜாவின் அருகில் கரச்சவாவி (கரடிக்குளம்) என்ற ஒரு பெரிய புதிய தடாகத்தை வெட்டும் வேலையை மேற் பார்வையிட மகாநாகன் போயிருந்தான். அவனை விட்டுப் பிரியாமலிருந்த பட்டத்து இளவரசனான குழந்தையும் மகாநாகனுடன் போயிருந்தான். மகாராணிக்குத் தன்னுடைய குழந்தை மைத்துனன் மகாநாகனுடன் போயிருப்பது தெரியாது.

மைத்துனன் களைப்புற்றிருக்கையில் அவன் உண்டு மகிழும்படி அன்புடன் அனுப்பியதைப் போல நன்கு பழுத்த ருசியான மாங்கனிகளை மகாநாகனுக்கு மகாராணி அனுப்பினாள். முதலில் மகாநாகனே அதைத் சாப்பிடுவானென்று எதிர்பார்த்து எல்லா மாங்கனிகளுக்கும் மேலே நஞ்சு கலந்த ஒரு பெரிய கனியை அவள் வைத்து அனுப்பியிருந்தாள்.

குளம் வெட்டும் இடத்தில் மகாநாகன் ஓடியாடிக் கொண்டிருந்தாள். கூடாரத்தில் குழந்தை இளவரசன் மாத்திரம் தனியாயிருந்தான். மகாராணி அனுப்பிய மாங்கனிகள் கூடாரத்துக்கு வந்தவுடன் குழந்தைக்கு அதைச் சாப்பிட வேண்டுமென்று ஆசை தோன்றியது. எல்லாவற்றுக்கும் மேலேயிருந்த பெரிய மாங்கனியைக் குழந்தை ஆவலோடு எடுத்துச் சாப்பிட்டான் ; உயிரை விட்டான்.

மகாநாகன் கூடாரத்துக்குத் திரும்பி வந்து பார்த்த பொழுது திடுக்கிட்டான். ஒரு கணத்தில் அவனுக்கு உண்மை புலப்பட்டுவிட்டது. அண்ணனிடம் அவனுக்கு மிகுந்த பக்தியிருந்த போதிலும் பேராசைக்காரியான அண்ணியிருக்கும் வரை அநுராதபுரத்தில் வாழ முடியாதென்றே தோன்றியது.

தனது குடும்பத்துடன் தென்னிலங்கையை நோக்கி மகாநாகன் ஓடி மறைந்து விட்டான். இதை அறிந்த சில தினங்களுக்குள் மன்னன் தீசனும் புத்திர சோகம் தாங்காது உயிர்நீத்தான்.



தீசனும், மஹிந்தரும் சந்தித்த மலைக்கு மஹிந்தர் ஞாபகார்த்தமாக மஹிந்தலை என்ற பெயர் வழங்குகிறது. இலங்கையில் பௌத்த மதம் பிரவேசித்த புனிதமான இந்த இடம் பௌத்தர்களின் புண்ணிய க்ஷேத்திரங்களில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. மலையுச்சியில் மஹிந்தர் இடத்தைக் குறிக்க ஒரு விஹாரை அமைக்கப்பட்டுள்ளது.

ஆனிமாதப் பௌர்ணமியில் மஹிந்தர் இலங்கைக்கு வந்ததாகக் கருதப்படுவதால், போஸன் பண்டிகையென்று கொண்டாடப்படும் அந்தத் தேசீயப் பண்டிகையின் போது பல்லாயிரக்கணக்கான பௌத்தர்கள் மஹிந்தலைக்குப் புனிதயாத்திரை போவார்கள்.

## 6. மாமன்னர் எல்லாளன்

டணர்! டணர்! டணர்!!

அதென்ன சப்தம்? எங்கே யிருந்து வருகிறது? ஒரு வேளை அரண்மனை வாசலில் கட்டியிருக்கும் கிண்டாமணி சப்தமா யிருக்குமோ? இந்த வேளையில் கிண்டாமணியை யார், ஏன் அடிக்கப்போகிறார்கள்?

டணர்! டணர்!! டணர்!!!

சந்தேகமேயில்லை! உருண்டு உருண்டுவரும் அந்தப் பேரொலி கிண்டாமணி சப்தமேதான்! அநுராதபுர அரண்மனை வாசலில் இரண்டு பனைமர உயரத்துக்கு வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் மணிக்கூண்டிலே ஒரு யானையளவு பெரிதாகக் கட்டியிருக்கும் வெண்கல மணியிருந்து நாதவெள்ளம் கிளம்பி நாற்றிசைகளையும் பிய்த்துக்கொண்டு பாய்ந்தது. அது அரண்மனையின் ஒவ்வொரு மூலையிலும் எதிரொலித்துப் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியது. பிரம்மாண்டமான எதிரிப் படைகள் அரண்மனைச் சூழ்ந்துகொண்டுவிட்டால் கூட அரண்மனைக்

குள் இருந்தவர்களிடம் இத்தனை பரபரப்பும் கலக்கமும் ஏற்படமாட்டாது. எதற்கும் அஞ்சாத படைத்தலைவர்களும் பிரதானிகளும் கூட என்ன விபரீதம் ஏற்படப்போகிறதோ என்று பயந்து நடுங்கிக்கொண்டிருந்தார்கள். மணியோசையைக்கேட்டு அவர்கள் ஏன் இப்படிப்பதறிப் போகவேண்டும்? ஆம்! அதற்கு ஒரு பயங்கரமான காரணமிருந்தது. நாட்டு மக்களின் உயிருக்கு உயிராயிருந்த ஒப்பற்ற ஒரு வீரனின் உயிரை, நாட்டின் வருங்காலச் சக்ரவர்த்தியின் உயிரை சில வாரங்களுக்கு முன்னால் குடித்தது அதே மணி யோசைதான்! மங்களத்தை அறிவிக்க வேண்டிய மணியோசை அன்று மரணத்தின் பயங்கர பேய்க்கூச்சலைப்போல ஒலித்தது. இவ்வளவு சீச்கிரத்தில், ஒரு சில வாரங்களுக்குள் அந்த துக்க சம்பவத்தை அரண்மனை வாசிகள் எப்படி மறக்க முடியும்?

மறுபடி எவருடைய உயிரைமாய்க்க அந்த கிண்டா மணி உருண்டு உருண்டு அடிக்கிறது?

மணியோசை பிறப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன்புதான் மன்னர் மன்னன் மத்தியான போஜனம் செய்துவிட்டு இளைப்பாறச் சென்றார். களைப்புடன் படுத்தவர் சட்டென்று கண்ணயர்ந்து விட்டார். கிண்டாமணியின் ஓசையை அவர் கனவில் கேட்டார் கண்கள் உறங்கி கனவு உலகத்திலிருக்கையிலும் அந்த கிண்டாமணி சப்தம் அவரை விரட்டியது. பளிச்சென்று எழுந்து மஞ்சத்தில் உட்கார்ந்தார். காண்பது கனவு அல்ல, உண்மையாகவே மணியின் ஒலிதான் தென்பதை உணர்ந்துகொள்ள அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மன்னர் மன்னன் பறந்து ஓடினார் அரண்மனை வாசலை நோக்கி. கட்டிலில் கிடந்த மேல் துணியைக்கூட அவர் எடுத்துப் போடுக்கொள்ளவில்லை. கட்டிலின் பக்கத்தில் கிடந்த பாதரட்சையை அவர் கவனிக்கவேயில்லை. இடுப்பில் அணிந்திருந்த ஆடையோடு, உறக்கம் கலைந்த முகத்தோடு தலைகால் தெரியாமல் பல மண்டபங்களையும்



தாண்டி அரண்மனை வாசலை நோக்கி தன்னந்தனிமையாக வெறிபிடித்தவரைப் போல ஓடினார். அலங்கோலமாக அவர் ஓடுவதைக்கண்டு மந்திரிகளும், படைத்தலைவர்களும், காவலாளிகளும் பின்னால் ஓடினார்கள். இன்று என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ, எவருடைய தலைநிலத்தில் உருவப் போகிறதோ என்ற பீதி ஒவ்வொருவர் மனதிலும் குடிகொண்டிருந்தது.

அரண்மனை வாசலில் மணியை அடிக்கக் கட்டியிருக்கும் கயிற்றை ஒரு வயோதிக சிங்களக்கிழவி மூச்சைப் பிடித்துக்கொண்டு இழுத்து மணியை உருட்டுவதைக் கண்டார் மன்னர்.

ஆதரவுடன் அவள் அருகே சென்று "தாயே! மணியை ஏன் அடிக்கிறாய்? உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டார் மன்னர் மன்னன்.

"இந்த மணிக்குப் பெயர் என்ன மன்னவா?" என்று கம்பீரமாகக் கேட்டாள் அந்தக்கிழவி.

"தர்மத்தை நிலை நாட்டும் கிண்டாமணிதான் உனக்கு ஏன் இதில் சந்தேகம்?

அப்படியானால் ஏன் மணியடிக்கிறேனென்று என்னிடம் கேட்பானேன்? தர்மத்தை நிலை நிறுத்தவே மணியை அடிக்கிறேன்.'

கிழவி மறுபடியும் கயிற்றைப் பிடித்து இழுத்து மணியை உருட்டினாள்.

"தர்மம் எங்கே தவறியது? அதைச் சொல்லு தாயே! தர்மத்துக்காகவே உங்கள் மன்னன் உயிர் வாழ்கிறான்! அதற்காகவே உயிர்த்தியாகம் செய்யவும் அவன் தயாராயிருக்கிறான். அதர்மம் எங்கே தலைகாட்டி யிருக்கிறது. சொல்லு அம்மா!" என்றார் மன்னர்.

"உங்கள் ஆட்சியில் தர்மம் தழைக்கவில்லை. அதற்கு வானமே சாட்சி!" என்றாள் அந்தக்கிழவி.

மன்னர் ஒருகணம் மௌனமாக நின்றார். பிறகு "தாயே! நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லை. சற்று விளக்கமாகச் சொல்லு. தர்மத்தை மீறியவன் எவனாயிருந்தாலும் தயங்காமல் தண்டிக்கிறேன். என் அருமைக் குழந்தையான பட்டத்து இளவரசனை அன்று தேர்க்காலில் கட்டிப் படுகொலை செய்ய உத்திர விட்டேனே, அதை நீ அறிவாயா? ஆம்! உனக்கு அது எப்படித் தெரியாமலிருக்கும்! மன்னர்மகன் என்ற மமதையில் உல்லாசமாகத் தேரில் சென்ற என் மகன் ஒரு இளங்கன்றின் மீது தேரை ஓட்டிக்கொன்றான். கன்றை இழந்த பசு, உன்னைப் போலத்தான் கிண்டாமணியை உருட்டி என்னிடம் நியாயம் கேட்டது. உயிருக்கு உயிர்கொடுத்து கன்றை இழந்த பசுவிற்கு நியாயம் வழங்கினேன்! சட்டத்தின் முன்னிலையில் உயர்வு தாழ்வு, அரசன் ஆண்டி என்ற வேற்றுமை கிடையாது அம்மா! உனக்குத் தீங்கிழைத்தவன் யார் என்பதை தைரியமாகச் சொல். அவனுக்கு தண்டனை விதிக்கிறேன்!" என்றார் மன்னர்.

கிழவியின் கண்களிலே கண்ணீர் மல்கிவிட்டது. மணியின் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்தவள் பனிச் சென்று கயிற்றைவிட்டு "என்னை மன்னித்து விடுங்கள் மன்னா! நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப்போக முயன்றாள் கிழவி.

மன்னர் அவளைப் போகவிடவில்லை. "என்னிடம் நியாயம் கேட்க வந்தவர்கள் அதைப் பெறாமல் போகக்கூடாது. உன் குறையை என்னிடம் சொல்லித்தான் தீரவேண்டும். உனக்குத் தீங்கிழைத்த கயவன் யார்?" என்று வற்புறுத்திக்கேட்டார். அதற்கு கிழவி ஆகாயத்தைக் காட்டினாள்.

"ஆகாயத்தைக் காட்டினால் என்ன பொருள்?" என்று கேட்டார் மன்னர்.

"எனக்குத் தீங்கிழைத்தவன் வருணன் மன்னவா!" என்றாள் கிழவி.

"வருணனா? நீ என்ன சொல்லுகிறாய்?" என்று ஒன்றும் புரியாமல் வினவினார் மன்னர்.



"ஆம்! நீதி தவறிவிட்டவன் வருணன்தான். தணலாக வெய்யல் காயும் இந்த நேரத்தில் முற்றிலும் எதிர் பாராதவிதமாக திடீரென்று மழை பெய்ய நியாயமேயில்லை. நியாயத்தை மீறி திடீரென்று மழை பெய்து வாசலில் உலர்த்தியிருந்த என் தான்யங்களையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. நாட்டில் தர்மம் தழைத்தால் அகாலத்தில் மழை பெய்யுமா மன்னா?"

மன்னர் மறுபடியும் சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு "தாயே! நீ சொல்லுவது முற்றிலும் உண்மை; தர்மம் தழைக்கும் பூமியில் அகால மழை பொய்யாதென்பது ஆன்றோர்வாக்கு. என்னை அறியாமலே அதர்மம் எங்கோ வளருகிறது. அதைக் கவனித்து வேண்டியதைச் செய்கிறேன் அம்மா! சேதமடைந்த உன் தான்யங்களுக்கு பதில் தான்யம் கொடுக்க உத்தர விடுகிறேன். சந்தோஷமாகப் போய்வா!" என்று சொல்லிவிட்டு மந்திரியின் பக்கம் திரும்பி "இந்த மூதாட்டிக்கு தேவையான அரிசியை அனுப்பிவை! வருணன் செய்த அநீதிக்கு இறைவனிடம் முறையிட இன்று முதல் பத்து தினங்களுக்கு நாட்டிலுள்ள ஆலயங்களி லெல்லாம், பௌத்த விஹாரைகளிலெல்லாம் விசேஷ பூஜைகள் நடைபெறட்டும். துறவிகளையெல்லாம் அழைத்து உபசரித்து கௌரவியுங்கள். நானும் மகாராணியும் பத்து தினங்களுக்கு உபவாச மிருக்கப்போகிறோம். உபவாசம் முடியும் வரையில் அரண்மனையில் எந்தவிதமான விருந்து வைபவங்களும் வேண்டாம்!" என்றார். இப்படிச் சொல்லி விட்டு மன்னர் மன்னன் அரண்மனைக்குள் போய்விட்டார்.

இன்றைக்குச் சரியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது. இந்தச் சம்பவத்தில் பிரதான பாத்திரமாயிருந்த மாமன்னர் ஒரு சிங்களவரல்ல. சிங்களத்தின் மீது படையெடுத்துவந்து, தேவனாம்பிய தீசனின் சந்ததியார்களை வீழ்த்தி அநுராதபுரத்தைக்கைப்பற்றி அரசோச்சிய ஒரு வீரத்தமிழன்தான் இந்த மாமன்னன். இலங்கையின் சரித்திரத்தில் பௌத்த மதத்தை இங்கு நிலைபெறச் செய்த தேவனாம்பியதீசனுக்கு எவ்வளவு உன்னதமான

ஸ்தானம் உண்டோ அதற்குச் சரிசமதையான ஸ்தானம் எல்லாளன் என்ற இந்தச் சோழப் பேரரசனுக்கும் உண்டு. தமிழகத்தில் தர்ம ஆட்சி நடத்தி சரித்திரத்தில் சாசுவதமான இடம் பெற்றுவிட்ட மனுநீதி கண்ட சோழனைப்போன்றவன் இந்த எல்லாளன்.

மனுநீதிச் சோழன் என்பவனும் எல்லாளனும் ஒருவரா அல்லது வெவ்வேறா? வேறு வேறாயிருப்பின் பிள்ளையைத் தேர்க்காலில் கட்டிக்கொன்ற சம்பவம் இவ்விருவருடைய வாழ்க்கையிலும் எப்படி ஒரே மாதிரியாக ஏற்பட்டது? என்ற கேள்விகள் எழலாம். சோழர் வரலாற்றின்படி மனுநீதி கண்ட சோழன் எல்லாளனுக்கு சுமார் 2500 வருடங்களுக்கு முற்பட்டவன். தவிர கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் சோழப் பேரரசர்களில் யாரும் சிங்களத்தின்மீது படையெடுத்து வந்ததற்குச் சோழர் சரித்திர வரலாற்றில் ஆதாரங்களெதையும் காணோம். எனவே, எல்லாளனென்ற பெயருடன் சிங்களத்தை வெற்றிகொண்டு நீதி தவறாமல் ஆட்சிசெய்த * எல்லாளன் ஒரு சோழ இளவரசனாகவோ அல்லது தளபதியாகவோ இருக்க வேண்டுமென்பது அநேகர் கருத்து. இலங்கை எவ்விதம் தமிழர் ஆட்சிக்கு வந்தது? எல்லாளன் எப்படி ஈழத்தின் பேரரசனானான்? இந்த வரலாறு மிகவும் சுவை நிரம்பியது.

எல்லாளன் இலங்கைக்கு வந்ததைக் கூறுவதின் முன்னால் தேவனாம்பிய தீசனுக்குப் பிறகு இலங்கைச் சரித்திரத்தின் போக்கை நாம் சற்று ஆராயவேண்டும்.

---

* எல்லாளன் காலத்தில்தான் தமிழ்இனமும் சிங்கள இனமும் இரு தனி இனங்களாகப் பிரிவினைப்பட்டு இயங்கியதாகத் தெரிகிறது. பாண்டு வாசுதேவன் சந்ததியினர்களும் பௌத்த தர்மத்தைக் கடைப்பிடித்தவர்களும் தங்களது ஆதி முதல்வனான விஜயனின் தகப்பன் சிங்கபாகுவின் பெயரை அனுசரித்து சிங்களவர்களென்று அழைக்கப் படலானார்கள். அவர்கள் பெரும் பகுதியினர்களாக வசித்த பிரதேசங்களுக்கு சிங்களம் என்ற ஒரு பொதுவான காரணப் பெயரும் வழங்கலாயிற்று.



தேவனாம்பிய தீசன் பௌத்த தர்மத்தின் அடிப்படையில் நல்லாட்சி நடத்தியது என்னவோ உண்மைதான். ஆனால் மனிதர்களின் தார்மீகப்பண்புகளில் அதிகமான நம்பிக்கை வைத்த அசோகனுக்குப் பிறகு அவனுடைய ராஜ்யம் என்ன கதியை அடைந்ததோ அதே கதியைத்தான் அடைந்தது தேவனாம்பிய தீசனுக்குப் பிறகு அவன் கட்டியாண்ட ராஜ்யமும்.

வடக்கே இமயத்திலிருந்து தெற்கே நர்மதை நதிக்கரை வரையில் பரந்து வியாபித்திருந்த மௌரியப் பேரரசு சிதைந்து சின்னாபின்னமடைந்ததற்கு அசோகனும் அவனுடைய தார்மீக ஆட்சியும் தான் மூலகாரணமென்று சரித்திரமேதைகள் கூறுவர். இளமையில் தக்ஷசீலத்தின் உபமன்னனாயிருக்கையில் தலைசிறந்த வீரனாகவும் யுத்த வெறியனாகவுமிருந்த அசோகன், பௌத்த மதத்தைத் தழுவியவுடன் யுத்தத்தை அறவே வெறுத்தான். உலகில் இனியுத்தமே நடக்கக்கூடாதென்றும், அன்பே அகிலத்தை ஆளவேண்டுமென்றும் விரும்பினான். ஆசாபாசங்களுக்கு உட்பட்ட சாதாரண மனிதர்களை தேவர்களாக மதித்து அவர்களின் நற்பண்புகளிலே அதிக நம்பிக்கை கொண்டான். அவன் செய்த இந்த மாபெரும் தவறு மகத சாம்ராஜ்யம் நிலைகுலைந்து சீரழிய வித்திட்டது.

அசோகனும் அவன் படைத்தலைவர்களும் யுத்தத்தை மறந்ததால் நாட்டில் ஒரு சிறு குழப்பமேற்பட்டால்கூட அதை அடக்கும் வலிமை சைன்யங்களுக்கு இல்லாமற் போயிற்று. அசோகனின் ஆப்த நண்பனான தேவனாம்பிய தீசன் காலத்தில் ஈழத்தில் ஏற்பட்ட நிலைமையும் இதுவேதான். பௌத்த தர்மத்தை நிலைபெறச் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்த தீசன், கட்டுப்பாடான ஆட்சிக்கு இன்றியமையாத ராணுவத்தை மறந்தான். ராணுவக்கூடங்கள் பௌத்த தர்ம உபதேசம் நடக்கும் மடங்களாக மாறின. யானைப்படைகளை வைத்திருந்த பிரம்மாண்டமான மண்டபம் மஹிந்தர் உபதேசங்களைக் கேட்க ஆயிரமாயிரமாக ஜனங்கள் வந்து அமரும் பர்ணகசாலைக்கு ஒப்பாயிற்று. வில்லும் வேலும் பிடித்த வீரக் கரங்கள் அமைதியாக மேழிப்பிடித்து உழுதுகொண்

டிருந்தன; ஆறு குளங்களை வெட்டுவதிலும் விஹாரைகளைக் கட்டுவதிலும் ஈடுபட்டிருந்தன. இதன் பயனாக மௌரியப் பேரரசுக்கு ஏற்பட்டகதி தேவனம்பிய தீசன் ராஜ்யத்துக்கும் ஏற்பட்டது.

தீசனின் ஒன்பது இளைய சகோதரர்களிலே மூத்தவனான மகாநாகன் ராணியின்சதிக்குப் பயந்து தென்னிலங்கைக்கு ஓடிவிட்ட விவரத்தை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அவனைக்கொல்லுவதற்காக தீசனின் பட்டத்தரசி அனுப்பிய மாங்கனிபட்டத்து இளவரசனையே மாய்த்து விட்டதையும் முந்திய அத்தியாயங்களில் தெரிவித்திருந்தோம். வாரிசு இல்லாமல் தேவனம்பிய தீசன் காலமாகவும் அவன் சகோதரர்களான உதியன், மகாசிவன், சூரதீசன் ஆகியவர்கள் சொற்பகாலம் அரசு செலுத்தினார்கள். சூரதீசன் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு வளர்ந்தன. இந்தக் கலகங்களை அடக்க இலங்கையுடன் கடல் மார்க்கமாக குதிரை வாணிபம் நடத்திவந்த சில தமிழர்களின் உதவியை நாடினான் சூரதீசன். அதன் விளைவாக ஆட்சி தமிழர்களின் வசமாகியது. சூரதீசன் யுத்தத்தில் மாண்டு அவனுடைய கடைசி தம்பியான அசேலன் காட்டுக்குத் தப்பியோடினான்.

தப்பியோடிய அசேலன் சும்மாயிருக்கவில்லை. ரகசியமாக ஒரு பெரும்படையைத் திரட்டிவந்து தமிழர்களை விரட்டி அநுராதபுரத்தில் மீண்டும் தீசன் வம்ச ஆட்சியை ஸ்தாபித்தான். ஆனால் அவன் ஆட்சியும் நிலைக்கவில்லை.

அசோகனுக்குப் பிறகு ஆரியா வர்த்தத்திலும் இப்படித்தான் குழப்பச் சண்டைகள் நடந்தன. அசோகனுக்குப்பின் அவனுடைய பிள்ளைகளென்றும் பேரப்பிள்ளைகளென்றும் சரித்திர ஆசிரியர்கள் பலவாறாக வருணிக்கும் ஜலூகன், திவாரா, குணாளன், சம்பிரதி, தசரதன் முதலானவர்கள் பெயரளவில் மகத சாம்ராஜ்யாதிபதிகளாயிருந்து கடைசியில் சிம்மாசன மேறிய பிரஹத்ரதனை அவனது சேனாபதி புஷ்யமித்திரன் படுகொலைசெய்து அரசைக் கைப்பற்றினான். அவனுடன்



மௌரியவம்சம் அஸ்தமித்து சுங்காவம்சம் அரியாசனத்தில் அமர்ந்தது.*

இதேபோல இலங்கையிலும் தீசன் வம்சத்தின் ஆட்சி மறைந்து சோழர் ஆட்சி மேலோங்கியது. தமிழர்களை விரட்டி அசேலன் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளுக்குள் ஒரு பெரிய சோழப் படையுடன் எல்லாளன் ஈழத்துக்கு வந்து அசேலனை முறியடித்து அநுராதபுரியில் சோழர் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட்டான். தீசனின் மற்ற சகோதரர்களான மகாநாகனும் உதியனும் சோழப் பேரரசின் ஆதிபத்ய அதிகாரத்துக்கு அடிபணிந்து சிற்றரசர்களாக சிறு பகுதிகளில் தனித்தனியே ஆட்சி நடத்திவந்தனர். எல்லாளனை மன்னர் மன்னனாக—மாமன்னனாகப் பல சிற்றரசர்களும் ஏற்று கப்பம்கட்டி வாழ்ந்து வந்தார்கள்.

எல்லாளன் ஆக்ரமிப்பின்மூலம் சிங்களத்தைக் கைப்பற்றியவன்தான். ஆயினும் அன்பினால், அறத்தினால் மக்களின் மதிப்பையும் மரியாதையையும் அவன் அமோகமாகப் பெற்றிருந்தான். நீதிதவறாத அவன் ஆட்சியைப் பற்றி சுலபத்தில் நம்பமுடியாத அனேகம் கதைகள் இலங்கைச் சரித்திரத்திலும் உண்டு. தர்மம் தழைப்பதற்காக தனது ஒரே மகனை அவன் தேர்க்காலில் கட்டிக் கொன்ற வரலாறும் இன்னொரு சமயம் தனது உயிரையே மாய்த்துக் கொள்ள அவன்முன் வந்த வரலாறும் மகாவம்சத்தில் உருக்கமாக வருணிக்கப் பட்டிருப்பதை வாசிக்கும்பொழுது எல்லாளன் மனுநீதிகண்ட சோழனிலும் ஒரு படி உயர்ந்தவனாகவே நமக்குத் தோன்றும்.

---

புஷ்ய மித்திரனும் அவன் மகன் அக்னி மித்திரனும் அசகாய சூரர்களாக விளங்கியவர்கள். அசோகனுக்கே பணியாதிருந்த கலிங்கத்தை புஷ்யமித்திரன் பணியவைத்து ஒரு அசுவமேத யாகம் நடத்தினான். அவன், அக்னி மித்திரன் சாரி சாரியாக வந்த யவனர்களை ஓட ஓட அடித்தான். இந்த மாபெரும் வீரர்களின் ஞாபகச் சின்னமாக மகாகவி காளிதாஸர் இயற்றியதுதான் மாளவிகாக்னிமித்திரம் என்ற நாடகம்

ஒருநாள் எல்லாளன் அலங்காரத் தேரில் வெண்புறவிகளைப் பூட்டி நகர்வலம் வந்து கொண்டிருக்கையில் துரதிர்ஷ்ட வசமாக ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டது. தேவனம்பிய தீசன் கட்டிய தாது கோபுரங்களிலொன்றின் மீது தேர் மோதி, சிறிது சேதம் விளைவித்துவிட்டது. இதைக் கண்டதும் மன்னருடன் வந்த சிங்கள பௌத்த மந்திரிக்குப் பொறுக்கவில்லை. அவர் சட்டென்று தேரை நிறுத்த உத்தரவிட்டார். நடுத் தெருவில் தேரை நிறுத்த மந்திரி உத்தரவிட்டது மன்னனுக்கு ஆச்சரியமாயிருந்தது. காரணம் தெரியாமல் "தேர் ஏன் நிற்கிறது? என்ன காரணம் மந்திரியாரே?" என்று அமைதியாக விசாரித்தார்.

"பிரபு! நீங்கள் ஒரு இந்துவாக இருந்தாலும் உங்கள் பிரஜைகளில் பெரும்பாலோர் பௌத்தர்கள். முடிசூட்டிக் கொண்டபொழுது இந்து மதத்துக்குச் சரி சமானமாக பௌத்த மதத்தையும் கௌரவிப்பதாக நாட்டு மக்களுக்கு வாக்களித்தார்கள். அந்த வாக்குறுதியை இப்பொழுது மீறிவிட்டீர்கள். பல்லாயிரக்கணக்கான பௌத்தர்களின் உள்ளங்களைப் புண்படுத்திவிட்டீர்கள்!" என்றார் சிங்கள பௌத்த மந்திரி.

"பௌத்தர்களின் உள்ளங்களை நானா புண்படுத்திவிட்டேன்? என் வாக்குறுதியை நானா மீறிவிட்டேன்? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே தேரிலிருந்து கீழே குதித்தார் மாமன்னர்.

"ஆமாம் பிரபு! அதோ பாருங்கள். உங்கள் தேர் விளைவித்துவிட்ட நாசத்தைப் பாருங்கள். பல்லாயிரக் கணக்கான பௌத்தர்கள் பக்தி சிரத்தையுடன் வழிபடும் தாது கோபுரத்தைப் இடித்துச் சேதப்படுத்தி விட்ட கோரத்தைப் பாருங்கள் பிரபு! இது பௌத்தர்களுக்குப் பௌத்த மதத்துக்கும் செய்த மகத்தான அவமதிப்பு!" என்றார் மந்திரி.

மன்னர் பார்த்தார். அவர் கண்களில் கண்ணீர் மல்கிவிட்டது. உடைவாளைக் கழட்டிக் கீழே எறிந்தார்



தாது கோபுரத்தின் முன்பு தரையில் வீழ்ந்து வீழந்து வணங்கினார். நடுத்தெருவில் புழுதியிலே இவ்விதம் விழுந்து வணங்கிய மன்னர் தேர்பாகனைப் பெயர் சொல்லிக் கூவியழைத்து "தேரை என் தலைமீது செலுத்து! தேரின் எந்தச் சக்கரங்கள் புனிதமான தாது கோபுரத்தைச் சேதப்படுத்தினவோ அதே சக்கிரங்கள் என் சிரத்தையும் துண்டித்து எரியட்டும். எல்லாளன் ஆட்சியில் மன்னனுக்கு ஒரு சட்டம் மக்களுக்கு ஒரு சட்டமில்லை. சட்டத்தின் முன்னிலையில் எல்லோரும் எல்லாளனுக்குச் சமமானவர்கள். என் குற்றத்துக்கு தண்டனையை ஏற்க நான் தயாராகிவிட்டேன். ஏன் தயங்குகிறாய்? நான் உன் அரசனாயிற்றே என்று பயப்படுகிறாயா? இப்பொழுது நான் அரசனில்லை. மன்னிக்க முடியாத தவறிழைத்து விட்ட குற்றவாளி! குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டே தீரவேண்டும். தேரைத் தைரியமாகச் செலுத்து!" என்று உத்திரவிட்டார்.

தாது கோபுரம் சேதமடைந்துவிட்ட மனவேதனையில் மந்திரி ஏதோ சொல்ல அதன் விளைவாக மாமன்னர் உயிர் துறக்க ஆயத்தமாகி விட்டதைப் பார்த்து தேரைச் சூழ்ந்திருந்த பிரதானிகளும் காவலர்களும் திகைத்துப் போய் நின்றார்கள். மந்திரிக்கோ என்ன சொல்லுவதென்றே புரியாமல் வாய் அடைத்துப் போய்விட்டது. இதற்குள் சாரிசாரியாக மக்கள் அங்கு திரண்டு விட்டனர். ஓம் நமச்சிவாய! ஓம் நமச்சிவாய!! என்று சிவ நாமத்தை ஸ்மரித்த வண்ணம் நிராயுதபாணியாக கட்டாந்தரையில் எல்லாளன் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போன ஜனங்களிடையே பெருத்த பரபரப்பு குடிகொண்டிருந்தது.

சிங்களத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றிய எல்லாளனை சிங்கள பௌத்த மந்திரி ஒழித்துக் கட்ட எண்ணியிருந்தால் இதைவிட ஒரு அருமையான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திருக்க முடியாது. சுலபமாகத் தேரைச் செலுத்தி சோழ மன்னனின் சிரத்தை அவர் துண்டித்திருக்கலாம். தென்னிலங்கையில் கப்பம் கட்டிக்கொண்டு வாழும் தேவனம்பிய தீசனின் சந்ததியார்களை மீண்டும்

அரியணையில் ஏற்றி இருக்கலாம் ஆனால் எல்லாளனின் பிரமிக்கத் தகுந்த தியாக சிந்தையும் தார்மீகப் பண்புகளும் மந்திரியின் இதயத்தைத் தொட்டன.

மன்னரை இரு கரங்களினாலும் தூக்கி "மன்னர் மன்னா! எங்கள் புத்த பகவான் கருணைக் கடல். அன்பின் இருப்பிடம். பகைவனையும் போற்றும் பண்பு மிக்கவர். உயிர்ப்பலி கேட்கும் உன்மத்தரல்ல பகவான் புத்தர்! அவருடைய சந்நிதானத்தில் நீங்கள் உயிர் துறப்பது உங்கள் தவறுக்கு பரிகாரம் செய்வதாகாது. இதற்கு மாறாக பௌத்த தர்மத்தையே அவமதிப்பதாகும்!" என்றார். இதைச் சொல்லுகையில் அவர் கண்ணிலே மல்கி நின்றது.

"ஆமாம் மந்திரி! தர்மத்தை நிலை நிறுத்தும் வெறியிலே புத்த பெருமானின் பெருமைக்கே இழுக்கு ஏற்படுத்தத் துணிந்து விட்டேன். எந்த இடத்தில் அநீதி நடந்தாலும் இப்படித்தான் வெறிகொண்டு விடுகிறது என் மனம். உங்களுக்குத் தெரியும் புத்த பகவானிடமும் பௌத்தர்களிடமும் நான் வைத்திருக்கும் அன்பும் மதிப்பும். என்னையறியாமலே தாது கோபுரத்தைச் சேதப்படுத்திவிட்ட தவறுக்கு எந்த விதத்தில் நான் பரிகாரம் செய்ய முடியும்?" என்று கேட்டார் மாமன்னர்.

"இரு நூறு பொற்காசுகளைக் கொண்டு கோபுரத்தைச் செப்பனிட்டு விடலாம்" என்று யோசனை கூறினார் மந்திரி.

"இருநூறு அல்ல இருபதினாயிரம் பொற்காசுகளை மகாசங்கத்துக்கு காணிக்கையாகச் செலுத்த ஏற்பாடு செய்யுங்கள்! நாட்டிலுள்ள எல்லா தாதுகோபுரங்களும் விஹாரங்களும் செப்பனிட்டு புதுப்பிக்கப்படட்டும்!" என்று சொல்லிவிட்டு மாமன்னர் மறுபடியும் தேரில் ஏறிக் கொண்டார். அவர் உதாரண குணத்தைக் கண்டு மெய் மறந்து நின்றார்கள் அங்கு குழுமியிருந்த பிரஜைகள்.

# 7 துறவியைத் தண்டித்த வேந்தன்

இதென்ன அநியாயம்? கருணை வடிவமான குரு தேவரை எண்ணெய்க் கொப்பரையில் தள்ளுகிறார்களாமே! இது உண்மையாயிருக்குமா? மஞ்சள் உடை தரித்த துறவிகளை எங்கு கண்டாலும் விழுந்து வணங்கும் நம் மன்னரா இப்படிப்பட்ட அநியாயம் செய்ய உத்தரவிட்டிருப்பார்? நம்பமுடியவில்லையே!

"நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, இதற்குள் குருதேவரின் பாதிஉயிர் போயிருக்கும். பாவம், துடித்துத் துடித்துச் செத்துக் கொண்டிருப்பார்!

"கொலை செய்யப்படும் குருதேவர் மன்னரின் குரு அல்லவா? அவரிடம்தானே மன்னர் கல்வி கற்றார்?

"அவர் மட்டுமென்ன? இளவரசன் உதயனும் அவரிடம்தான் கல்வி கற்றார்.

கல்யாண நகரில் பொது மக்கள் சந்திக்குமிடங்களிலெல்லாம் இப்படி தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டார்கள். கல்யாணி விஹாரையின் பிரதம பிட்சுவைக் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் போட்டு துடிதுடித்துச் சாக அடிக்கும்படி மன்னர் ஒரு கொடூரமான உத்தரவிட்டிருந்த செய்தி காட்டுத் தீயைப் போல ராஜ்யமெங்கும் பரவி பெரிய பரபரப்பை உண்டு பண்ணியிருந்தது. முதலில் இந்த பயங்கரச் செய்தியை யாரும் நம்பவில்லை. பௌத்த தர்மத்தில் மிகுந்த பற்றுடன் நல்லாட்சி நடத்திய மன்னன் இவ்வளவு கொடூரமான கட்டளையை பிறப்பித்திருப்பானென்று கனவிலும் எதிர்பார்க்க முடியாமலிருந்தது.

கல்யாண தீசன் அரியணையேறியது முதல் கிட்டத்தட்ட பிட்சுக்களின் ஆட்சியே நாட்டில் நடந்ததென்று கூறலாம். எந்த ஒரு சிறு காரியம் செய்வதாயிருந்தாலும்

பிட்சுக்களைக் கலந்துயோசிக்காமல் தன் சொந்த விருப்பத்தின் படி மன்னன் செய்ததில்லை அனுதினமும். பிட்சுக்களை அரண்மனைக்கு அழைத்துப் போஜனம் செய்வித்து உபசரிக்காமல் அரசன் உணவு கொண்டதில்லை. மன்னன் கல்யாண தீசனும் அவன் தம்பி இளவரசன் உதியனும் கல்யாணி விஹாரையின் பிரதம பிட்சுவிடம் சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்தவர்கள். அந்தக் கல்வி, மன்னனைப் பக்திமான்களிலே தலைசிறந்த பக்திமானுக்கியிருந்தது. அம்மட்டல்ல, சமய வளர்ச்சியில் அவன் கொண்டிருந்த ஆர்வமும் பிட்சுக்களிடம் அவன் வைத்திருந்த பக்தியும் ஒரு வெறியாகவே அவனிடம் மாறியிருந்தன.

புத்தபகவான் விஜயத்தின் ஞாபகார்த்மாக மாணிக்க ரஷ்தன் என்ற நாகர் மன்னன் கல்யாணியில் எழுப்பி இந்ததாகக் கருதப்படும் விஹாரையைச் செப்பனிட்டு விஸ்தரிக்கக் கல்யாண தீசன் ஆயிரம் பதிறையிரமாகப் பொற்காசுகளையும் பொன்ஞன தனது நேரத்தையும் செலவிட்டான். விஹாரையின் பிரதம பிட்சுவும் தனது குருவுமான துறவியைப் புத்தபகவானுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து அவன் வணங்கினன். பௌத்த மதம் கல்யாணி ராஜ்யத்தில் உன்னதமான நிலைமையை அடைந்திருந்தது. மன்னன் எவ்வழியோ குடிகள் அவ்வழி என்பதைப்போல, பொதுமக்களுக்கிடையிலும் பௌத்த சமயம் மறுமலர்ச்சியடைந்து பக்திப் பண்பாடும் தார்மீக உணர்ச்சிகளும் உச்ச நிலைமையை அடைந்திருந்தன.

இப்படி நல்லறத்தின் எடுத்துக் காட்டாகத் தார்மீக ஆட்சி நடத்திய ஒரு மன்னன், தனது குருநாதரை, பல்லாயிரக்கணக்கான பிரஜைகளின் பக்திக்கும் விசுவாசத்துக்கும் உரிய பிரதம பிட்சுவை உயிரோடு எண்ணெய்க் கொப்பரையில் தள்ள உத்தரவிட்டா னென்ருல் யார் நம்புவார்? கற்பனைகளை யெல்லாம் மிஞ்சிய கட்டுக் கதையைப் போலிருந்தது அந்த அதிபயங்கரச் செய்தி. அதைக் கேள்வியுற்ற மாத்திரத்தில் தேசமே ஒன்றும் புரியாமல், உண்மை தெரியாமல் கலங்கிப்போய் நின்றது.

"பிட்சுவின் பிரேதத்தைக் கடலில் வீசும்படி காவலர் உத்தரவிட்டிருக்கிருராம். விஹாரைக்கு முன்னல் பகிரங்கமாக இந்தப் படுபாதகச் செயல் நடக்கிறது. ஆயிரமாயிமாகப் பொதுமக்கள் திரண்டு நின்று கண்ணீர் வடிக்கிருர்கள். இந்தக் கண்ணராவியை நேரில் பார்க்க விஹாரையிலுள்ள எல்லா பிட்சுக்களும் எண்ணெய்க் கொப்பரைக்கு முன்ஞல் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்டிருக்கிருர்கள். அரசர் உத்தரவைக் கண்டு ஆத்திரமடைந்து ஜனங்கள் ஏதாவது கலகம் செய்தால் அவ்வளவு பேர்களையும் கொன்று குவித்தும்படி உத்தரவு பிறந்திருக்கிறதாம். ஆயுதபாணிகளாகப் பலம் பொருந்திய காலாட்படைகளும் குதிரைப்படைகளும் யானைப்படைகளும் விஹாரையை முற்றுகையிட்டுக் கொண்டு நிற்கின்றன."



கல்யாண விஹாரையிலிருந்து வந்தவர்கள் கொண்டு வந்த சோகச் செய்தி இது. மன்னர் ஆணையைப் பற்றிப் பேசினலே தலையைச் சீவியெறிந்து விடும்படி உத்தரவு என்பதைக் கேள்விப்பட்டவுடன் அன்று நடக்கும் படுபாதகத்தைப் பற்றி பேசுவதற்குக்கூட எவருக்கும் துணிச்சலில்லை.

கல்யாணி விஹாரையிலிருந்து இன்ஞெருவன் வந்தான் விவாரை வாசலில் கண்ணில் கண்டதையும் காதால் கேட்டதையும் அவன் ஒவ்வொருவரிடமாகக் காதோடு காதாய்ச் சொல்லிக் கொண்டே போஞன்.

"அவர் புத்தரை ஒத்த மிகப் பெரிய மகான். கொதிக்கும் எண்ணெயில் தூக்கிப் போட்டபொழுதுகூட வழக்கமான புன்முறுவலுடன் சுற்றி நின்ற பிட்சுக்களையும் ஜன சமுத்திரத்தையும் பார்த்து ஆசீர்வதித்தார். ஆஹா! அந்தக் கொடுமையையும், கொதிக்கும் எண்ணெயில் உடல் பொசுங்குவதையும் எத்தனை * பொறுமையோடு அவர் சகித்துக் கொண்டிருந்தார்? உயிர் போய்க் கொண்டியிருக்கையிலும் அவர் மகாஜனங்களுக்குத் தர்மோபதேசம் செய்துகொண்டிருந்தார். மன்னனையும் மன்னிக்க வேண்டுமென்று இறைவனிடம் மன்ருடினர். அவர் இன்னும் என்ன சொன்ஞர். தெரியுமா?"

"என்ன சொன்ஞர்?" என்று ஆவலோடு கேட்டது ஒரு கூட்டம்.

எந்தக் கொடியவன் தன்னை மிலேச்சத்தனமாகத் தண்டித்தானோ, அவனிடம் பிரஜைகள் விசுவாசம் குறையாமலிருக்க வேண்டுமென்றும் அந்த மகான் மன்றாடினார். "உங்கள் அரசன் கொடியவனில்லை. நற்பண்புகளுக்கெல்லாம் அவன் இருப்பிடம். பௌத்த தர்மத்தின் கல்தூண் ஆத்திரத்தில் அவன் அறிவிழந்து விட்டது உண்மையில் அவன் குற்றமல்ல. என்னுடைய பூர்வ ஜன்ம வினைப்பயன் அரசன் மனத்தைச் சற்றுப் பேதலிக்கச் செய்திருக்கிறது. என் கர்மபலனை நான் அனுபவித்தே தீரவேண்டும். அவ்வளவுதான். பௌத்த தர்மத்துக்கு மகத்தான பணிகள் செய்த மன்னன் இன்னும் எண்ணற்ற நல்ல காரியங்களைச் செய்யக் காத்திருக்கிறான். அவனிடம் கோபம் கொள்ளாதீர்கள். என்னிடம் அன்பும் பரிவும் பச்சாத்தாபமும் உங்களுக்கு இருப்பது உண்மையானால் என் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றி வையுங்கள். மன்னனுக்கும் அவன் செய்ய இருக்கும் நற்பணிகளுக்கும் நீங்கள் பக்கபலமா யிருக்கவேண்டும்." இப்படி அந்த மகான் சுற்றி நின்ற ஜனசமுத்திரத்திடம் வாதாடி விட்டுத் தமது கடைசி உபதேசங்களை முகமலர்ச்சியோடு செய்தார்! அதைக் கேட்டுக் கண்ணீர் வடித்துக் கதறுகிறார்கள் ஜனங்கள்."

இப்படிக் கல்லும் கரைந்து உருகும்படி கண்டதையும் கேட்டதையும் கண்ணீர் பெருக அழுதுகொண்டே சொன்னான் விஹாரையி லிருந்துவந்த மனிதன்.

"இந்த அநியாயத்தைப் பிரதம பிட்சு பொறுத்துக் கொண்டாலும் தெய்வம் பொறுக்காது. உலகத்தில் சத்தியமும் தர்மமும் இருப்பது உண்மையானால் பூமி வெடித்து அரண்மனையை அப்படியே விழுங்கவேண்டும். அலைகடல் பொங்கி இந்த அரசையே விழுங்கவேண்டும்" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

"இப்படியெல்லாம் நடக்கவேண்டியதே யில்லை. இன்று இங்கே நடக்கும் அநீதி மாமன்னர் எல்லாளன் காதில் விழுந்தாலே போதும். பிரதம பிட்சுவைப் பொரித்த அதே எண்ணெய்க் கொப்பறையில் நமது



கொடுங்கோல் மன்னன் கல்யாண தீசனையும் அவன் குடும்பத்தைச் சேர்ந்த அவ்வளவு பேர்களையும் பொரித்து எடுத்துவிடுவார்!" என்றான் இன்னொருவன்.

இந்த கல்யாண தீசன் யார்? தேவாநாம்பியதீசன் குலவழியில் வந்தவனா கல்யாணதீசன்? பௌத்த தர்மத்தில் மிகுந்த பற்றுதலும் பிட்சுக்களிடம் மிகுந்த பக்தியும் கொண்டிருந்த கல்யாணதீசனுக்கு திடீரென்று இப்படிக் கொலைவெறி ஏற்படக் காரணமென்ன? கற்பனையையும் மிஞ்சிய இந்தச் சோக வரலாற்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தேவாநாம்பியதீசன் ராணியின் சதிக்குப் பயந்து தென்னிலங்கையை நோக்கி ஓடிய அவன் சகோதரன் மகாநாகனை நாம் பின்பற்றிச் செல்லவேண்டும்.

அநுராதபுரத்தைத் தனிநகரமாகக் கொண்டு மனு நீதிதவறாமல் நல்லாட்சி நடத்திய எல்லாளச் சோழன் இலங்கையின் மாமன்னனாகிய வரலாறு வாசக நேயர்களுக்குத் தெரியும். அவனுடைய தலைநகரமான அநுராதபுரியைவிட்டு அதைவிடப் பல நூற்றாண்டுப் பழமையானதும் விபீஷணாழ்வார் அரசோச்சியதும் சக்கரவர்த்தித் திருமகனின் பாததூளிபட்டு புனிதமடைந்ததோடு அதற்குப்பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு புத்தபகவான் விஜயத்தினால் பவித்ரமாகியதுமான கல்யாணி நகருக்கு வாசக நேயர்களை இப்பொழுது அழைத்துச் செல்ல விரும்புகிறோம்.

புத்தர்பெருமான் அவருடைய ஜீவியத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த தில்லையென்றும் விந்திய மலைக்குத் தெற்கே அவர் வந்ததில்லையென்றும் ஒரு சாரார் கூறுவர். இலங்கையின் புராதன வரலாறுகளிலோ புத்தர் பெருமான் மும்முறை ஈழத்துக்கு விஜயம் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர் விஜயம் செய்ததாகக் கூறும் இடங்களில் வானத்தை முட்டும் தாது கோபுரங்களும் விஹாரைகளும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுப்பப்பட்டு அவை பௌத்தமதத்தின் அரண்களாகவும் அன்பு நெறியை அணையாமல் வளர்த்த சுடர் விளக்குகளாகவும் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இலங்கையில் முதன் முதலாக எழுப்பப்பட்ட மகஷியங்கன தாதுகோபுரமும், ருவான் வெளிசய, கல்யாணி என்ற கழனி ஆகிய இடங்களிலுள்ள மிகமிகப் பழமையான விஹாரைகளும் புத்தர் பெருமான் விஷயம் செய்து அருள் ஒளிபரப்பிய புனிதஸ்தலங்களைக் குறிப்பதாக ஐதீகம். கல்யாணி விஹாரையின் அருகில் ஓடும் * கல்யாணிகங்கை

---

* கல்யாணி நகருக்கு இன்று கழனி அல்லது கழனியா (Kelaniya) என்று பெயர். கல்யாணிகங்கையை இன்று கழனி கங்கையென்பார்கள். இந்த நதி கல்யாணி வழியாக வந்து கொழும்பில் கடலில் சங்கமமாகும் இடத்துக்கு முகத்துவாரம் எனப்பெயர். ஒரு புறம் கடலினால் சூழப்பட்ட கொழும்பு நகரை இந்த நதி ஒரு குட்டித் தீவுபோலாக்குகிறது. கொழும்பு நகரத்தைவிட்டு வெளியிடங்களுக்குப் போக இந்த நதியைத் தாண்டிச் சென்றே ஆகவேண்டும்.

கி. மு. ஆறும் நூற்றாண்டில் கல்யாணியில் அரசோச்சிய மாணிக்க ரக்ஷிதன் என்ற நாகர் மன்னன் விபீஷணாழ்வாரின் வம்சவழியில் வந்தவனென்று தெரிகிறது. அவன் அழைப்பிற்கிணங்கவே புத்தர் பெருமான் கழனிக்கு விஜயம் செய்ததாக ஐதீகம் இந்த சம்பவத்தின் ஞாபகார்த்தமாக கல்யாணியில் ஒரு புத்த விஹாரையை மாணிக்க ரக்ஷிதன் கட்டுவித்தான். அங்கிருக்கும் பிரம்மாண்டமான சயனபுத்தரின் கால் பக்கத்தில் சக்கரக் கடவுளென்று சிங்களவர்கள் வழிபடும் திருமாலின் சன்னதியும் அதன் அருகில் விபீஷண தேவரின் சன்னதியுமிருக்கின்றன. இலங்கையின் காக்கும் தெய்வங்களென்று கருதப்படும் இவ்விரு மூர்த்திகளின் சன்னதிகளும் எப்பொழுதும் திறைபோட்டு மூடிவைக்கப்பட்டிருப்பது வழக்கம். விஹாரையின் பிரதம பிட்சுவின் அனுமதியில்லாமல் இந்த சன்னதிகளை எவரும் பார்க்க முடியாது. கல்யாணி நகரம் பல நூற்றாண்டுகளாக இந்து மதத்துக்கும் பௌத்த மதத்துக்கும் அரசனுக விளங்கிவந்ததற்கு அடையாளமாக கழனி விஹாரையில் அனேகம் இந்துக் கடவுள்களின் உருவச் சிலைகளைப் பார்க்கலாம். படிகளைத்தாண்டி விஹாரையில் நுழைந்தவுடன் சுற்றுப் பிரகாரத்தில் முதன் முதலாகத் தென்படுவது விக்னேஸ்வரர் சன்னதிதான். அதையடுத்து கங்காதேவி, விபீஷணதேவர், முருகன் முதலானவர்களின் சன்னதிகளெல்லாம் இருக்கின்றன. திருமாலின் சன்னதி இல்லாத பௌத்த விஹாரைகளே இலங்கையில் கிடையாது.



K. M. M. A. CADE

யில் புத்தர் ஸ்னானம் செய்ததாகக் கூறும் இடத்தைக் கூட விஹாரையிலுள்ள பெரியவர்கள் இன்றைக்கும் சுட்டிக் காட்டுவர்கள்.

புத்தரின் இலங்கை விஜயம் மெய்யா அல்லது பொய்யா, என்ற சர்ச்சையை விட்டுக்கதையைத் தொடருவோம். இராமாயண காலத்தில் விபீஷணருக்கு சக்ரவர்த்தித் திருமகன் தனது திருக்கரங்களினால் மகுடாபிஷேகம் செய்ததிலிருந்து கி. மு. அறுவது நூற்றாண்டில் மாணிக்க ரக்ஷிதன் புத்தர் பெருமானை அழைத்தது வரையில் உள்ள இடைக்காலத்தில் கல்யாணி நகரத்தைப்பற்றி எவ்விதமான தகவலும் தெரியவில்லை. ஆயினும் மாணிக்க ரக்ஷிதன் காலத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் அளவிற்கு கல்யாணி ராஜ்யம் நாகரிகத்தின் உச்சியிலிருந்ததை மகாவம்சமும், ராஜவழி, குலவம்சம் முதலான இதர பலபுராதன நூல்களும் வேண்டா வெறுப்புடன் மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. மாணிக்க ரக்ஷிதனுக்குப் பிறகு சுமார் 250 ஆண்டுகள் வரையில் கல்யாணியைப்பற்றிய செய்தியே இல்லை.

வடக்கே நாகத்வீபத்தில் மாதோட்டம் எவ்விதம் உலகப் பிரசித்திபெற்ற துறைமுகப் பட்டினமாகவும் செல்வம் கொழிக்கும் சொர்க்கபூமியாகவும், மணிமேகலை காலமுதற்கொண்டு மணிவல்லபத்தின் தலைவாசலாகவும் விளங்கியதோ அதற்குச் சமமான சர்வதேசப்புகழுடன் தென்னிலங்கையிலே கல்யாணி நகரம் விளங்கியது. ஆயினும் மாணிக்க ரக்ஷிதன் காலத்துக்குப் பிறகு நசித்து வலுவிழந்துபோன நாகர் வம்சம் இருந்த இடம் தெரியாது போய்விட்டதாலோ அல்லது வேறு என்ன காரணத்தினாலோ அடுத்த இரண்டரை நூற்றாண்டுக்காலம் வரையில் கல்யாணியைப்பற்றி ஒன்றும் தெரியாமற் போய்விட்டது.

தேவனம்பிய திசன் சகோதரர்களில் ஒருவனை மகாநாகன் ராணியின் சதிக்குப் பயந்து தென்னிலங்கைக்கு ஓடி வந்தானல்லவா? அவன் ரோஹுண ராஜ்யத்தின் அதிபனாக மஹாகமையைத் தலைநகரமாகக்கொண்டு அரசிருந்தான். அவனுடைய மற்றொரு சகோதரன்

உதியன் கல்யாணியில் அரசிருந்தான். இவ்விருவரும் தேவனம்பிய தீசன் காலத்தில் அவனுடைய உபமன்னர்களாகவும், அநுராபுரத்தில் பிறகு தமிழர்களின் ஆதி பத்திய அதிகாரம் மேலோக்கியபொழுது அந்த ஆதி பத்திய அதிகாரத்துக்குத் தலை வணங்கி கப்பம்செலுத்தும் சிற்றரசர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

ராஜரத, மலையரத, ரொஹுணரத என்று தெளிவான மூன்று பகுதிகளாகச் சிங்களம் பிரிந்திருந்த காலம் அது. ராஜரதாவில் அநுராதபுரத்தைத் தலைநகரமாகக்கொண்டு சோழமன்னர் எல்லாளன் அரசோச்சியபொழுது தெற்கே மலையரதாவில் * கல்யாணியை தலைநகரமாகக் கொண்டு கழனிதீசன் என்ற கல்யாணதீசனும் மஹாகமையைத் தலை நகரமாகக்கொண்டு ரொஹுணரதாவில் காகவர்ண தீசன் (காக்கை நிறமுடையவன்) என்ற கவந்தீசனும் உபமன்னர்களாக ஆட்சி நடத்தி வந்தனர். இவ்விருவரும் தேவனம்பிய தீசன் சகோதரர்களான மகாநாகன், உதியன் ஆகியவர்களின் பேரப்பிள்ளைகள்.

கழனிதீசன் என்ற கல்யாணதீசன் அவனுடைய முன்னோர்களைப் போலவே மதப்பற்றுடையவன். பௌத்த தர்மத்திலும் பிட்சுக்களிடமும் அவன் பிரமாதமான மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான். மாணிக்க ரக்ஷிதன் காலத்தில் சிறிய தோரணையில் அமைக்கப்பட்டிருந்த கல்யாணி விஹாரையைப் பெரும் பொருட்செலவில் பிரம்மாண்டமாகப் புதுப்பித்து நிறுவினன். பௌத்த சங்கத்தின் க்ஷேமத்துக்காக அல்லும் பகலும் அனவரதமும்

* கல்யாணி நகரம் இவ்வளவு பழம் பெருமையுடையதாயிருந்தும் மகாநாகன் பிள்ளையான யதலதீசன் கல்யாணி நகரை நிர்மாணித்ததாக மகாவம்சமும் ராஜவழியும் கூறுகிறது. இது உண்மையானல் யதல தீசனுக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் கல்யாணியில் மாணிக்கரக்ஷிதன் அரசாண்டதாகவே இதே நூல்கள் வேறொரு இடத்தில் கூறுவது எங்ஙனம்? கழனி விஹாரையில் மாணிக்க ரக்ஷிதனுக்கு ஒரு உன்னதமான இடம் ஏற்பட்டது எங்ஙனம்?



அவன் அரும்பாடு பட்டான். அனுதினமும் நூற்றுக்கணக்கான பிட்சுக்களை அரண்மனைக்கு அழைத்து போஜனம் செய்வித்து உபசரித்தான். கல்யாணி விஹாரையைச் சேர்ந்த சகல பிட்சுக்களும் அரண்மனையில்தான் சாப்பிடுவது வழக்கம். அவர்களுக்குப் போஜனம் செய்வித்த பிறகுதான் அரண்மனையில் மன்னரும் மற்றவர்களும் சாப்பிடுவது என்ற ஒரு நியதி ஏற்பட்டிருந்தது.

கல்யாணதீசன் இவ்வளவு பெரிய பக்திமானக விளங்க கல்யாணி விஹாரையின் பிரதம பிட்சுவே காரணமென்று சொன்னல் மிகையாகாது. கல்யாண தீசனும் அவன் தம்பி உதியனும் சிறுவயது முதற்கொண்டு இந்த பிட்சுவிடமே கல்வி பயின்றார்கள். சகல சாஸ்திரங்களையும் அவர்களுக்கு பிரதம பிட்சு போதித்தார். இதன் பலனக கல்யாணதீசன் தலை சிறந்த பக்திமானக விளங்கினன். அவன் தம்பி உதியன் மெத்தப்படித்த முட்டாளாகவும் முரடனகவுமிருந்தான்.

சகல சௌபாக்கியங்களும் சேர்ந்து பெயரும் புகழுமாக விளங்கும் எல்லோருக்கும் அவர்களுடைய குடும்பம் சந்தோஷத்தை யளிப்பதாக இருந்து விடுவதில்லை. அசோகனுக்கு இணையாக தர்ம ஆட்சி நடத்திய தேவனம்பிய தீசனுக்கு மமதையும் மண்ணாசையும்கொண்ட ஒரு மனைவி வாய்த்தாள். அவள் செய்த சதி அவள் பெற்ற குழந்தையையே பலி வாங்கியது. அதேபோல கல்யாண தீசனுக்கும் ஒரு பட்டுப் பூச்சி மனைவியாக வந்து வாய்த்தது. அரசபோகத்தின் ஆடம்பரங்களை நன்கு ரசித்து வாழ விரும்பிய அவளுக்கு அவளுடைய மைத்துடன் உதியன் சரியான ஜோடியாக அமைந்தான். இளமையையும் வாழ்வைச் சுவைத்து ரசிக்கும் மனப்பான்மையும் காட்டி மோகவலை வீசிய ராணியின் போக்கில் உதியன் கெட்டழிந்து போனனே? அல்லது அவளது பதி பக்தியை உதியனே நிலைகுலையச் செய்தானே? என்பதை யாரும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனல் மகாராணி கட்டிய கணவனுக்கு துரோகம்செய்து உதியனுடன் உல்லாசமாக பொழுது போக்கியது என்னவோ சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட உண்மை.

அரண்மனைக்குள் அந்தரங்கமாக இவர்கள் காதல் உறவாடியது எப்படியோ மன்னன் கல்யாண தீசனுக்குத் தெரிந்துவிட்டது. ராணியையும் தம்பியையும் பல தடவை மன்னன் கடுமையாகக் கண்டித்தான்; எச்சரித்தான்; பயறுத்தியும் பார்த்தான். அவன் முயற்சிகளொன்றும் உதியனிடம் பலிக்கவில்லை. சினம்கொண்ட கல்யாண தீசன் உதியனைத் தண்டிப்பதைத் தவிர வேறுவழியில்லையென்ற முடிவிற்கு வந்திருந்தபொழுது உதியன் அரண்மனையிலிருந்து தப்பியோடிவிட்டான். இந்த விவகாரத்தை கல்யாணதீசன் மேற்கொண்டு தொடர விரும்பவில்லை. சொந்த மனைவியின் விவகாரமென்பதோடு வயது வந்த பெண் குழந்தையொன்றும் இருந்தபடியினால் உதியன் தொலைந்துபோனதுடன் ராணியின் நடத்தையை மன்னன் மன்னித்து மறந்துவிட முயற்சித்தான். அரண்மனையில் அனுதினமும் போஜனம் செய்யவரும் பிரதம பிட்சு மன்னனைத் தேற்றி ஆறுதல் கூறிவந்தார்.

விதி எவரை எளிதில்விட்டது? காட்டுக்கு ஓடிப்போன உதியன் அங்கே சும்மா யிருக்கவில்லை. தனது கள்ளக்காதலியான மகாராணியை எப்படியாவது கடத்தி வந்துவிட வேண்டுமென்பதற்காக திட்டத்துக்குமேல் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தான். அதோடு ஒரு சிறு படையையும் அவன் திரட்டிக் கொண்டிருந்தான். முதலில் ராணியைக் கடத்தி வரவேண்டும். பிறகு கல்யாணியைத் தாக்கிப் பிடித்து அரசைக் கைப்பற்றவேண்டும். இந்த இருமுனைத் திட்டத்தில் இரவு பகலாக தனது சகாக்களுடன் அவன் மந்திராலோசனை நடத்திக்கொண்டிருந்தான். அரண்மனையில் பலமான கட்டுக்காவல் இருக்கும் பொழுது ராணியை எவ்விதம் கடத்திவருவது? காவலை மீறிக்கொண்டு சாதுர்யமாக அரண்மனைக்குள் நுழைந்து விட்டாலும் மகாராணி என்ன களிமண் பொம்மையா ஓசைப்படாமல் தூக்கிக்கொண்டு வருவதற்கு? நாடாளும் மன்னனைவிட்டு காடாளும் காதலனை நம்பி அவள் வருவாளென்பது என்ன நிச்சயம்? இப்படி உதியனின் சகாக்கள் சொன்னார்கள்.



"இந்த சந்தேகம் உங்களுக்கு வேண்டவே வேண்டாம். உங்கள் எல்லோரையும் விட ராணியின் மன நிலைமையை நான் நன்கறிவேன். எனது திட்டத்துக்கு அவள் உதவி புரிவாளென்ற நம்பிக்கையும் எனக்கு உறுதியாயிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஏதாவது ஒரு சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு விஹாரைக்கு வரும்படி அவளுக்குச் செய்தியனுப்பினால் விஹாரையிலிருந்து சுலபமாக அவளை இங்கு அழைத்து வந்துவிடலாம். என்னிடமிருந்து செய்தி கிடைத்தால் அவள் கண்டிப்பாக விஹாரைக்கு வருவாள். உண்மையைச் சொல்லப்போனால் என்னிடமிருந்து இது மாதிரியான ஒரு செய்தியை அவள் அனுதினமும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். நான் கொடுக்கும் செய்தியை எப்படி ராணியிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது? யார் அதைக் கொண்டுபோவது? கட்டுக்காவலைமீறி அந்தப்புரத்துக்கு எப்படி என் செய்திபோக முடியும்? இதுதான் நாம் தீர்மானிக்க வேண்டிய முக்கியமான பிரச்னை என்றான் உதியன்.

இதைப்பற்றி அவர்கள் ஒரு முடிவில்லாமல் பல தினங்கள் வரையில் தீவிரமாக மந்திராலோசனை செய்தார்கள். கடைசியில் ஒருநாள் ஒரு அருமையான வழி கண்டு பிடித்துவிட்டேன் என்று சொல்லிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான் உதியன்.

## 8. ஓலை விளைத்த விபரீதம்

ராணிக்கு ரகசியமாகச் செய்தியனுப்ப ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்து விட்டதாக உதியன் கொக்கரித்த பொழுது அவன் சகாக்கள் என்ன உபாயம் என்று ஆவலோடு கேட்டார்கள்.

"நானும் என் அண்ணனும் விஹாரையின் பிரதம குருவிடம் பத்து வருட காலம் கல்வி பயின்றோமல்லவா?

அவர் எப்படி எழுதுவாரோ அதேமாதிரி எழுத எனக்குத் தெரியும்!" என்றான் உதியன்.

"அப்படியென்றால் ?"

"அவர் எழுத்தைப் போலவே கனகச்சிதமாக நான் எழுதுவேன். அவர் கையெழுத்தில் ராணிக்கு நான் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். அந்தக் கடிதத்தை ராணியிடம் சேர்ப்பித்து விட்டால் போதும். கடிதம் பிரதம பிட்சுவின் கையெழுத்திருந்தாலும் அதை எழுதியவர் யார் என்பதை ராணி புரிந்துகொள்ளுவாள். அவள் புரிந்து கொள்ளும் முறையில் எனக்கும் அவளுக்கும் மட்டும் தெரிந்த ஓரிரண்டு விஷயங்களைச் கடிதத்தில் குறிப்பிடுகிறேன் !" என்றான் உதியன்.

"இதெல்லாம் சரி இளவரசே! அந்தக் கடிதத்தை ராணியிடம் யார் எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது? அதுதானே கடினமான பிரச்னை!" என்றார்கள் அவன் சகாக்கள்.

"இல்லை! இதற்கும் ஒரு சுபலமான வழி கண்டு பிடிக்கிறேன். தினந்தோறும் மத்தியான வேளையில் விஹாரையிலிருந்து நூற்றுக் கணக்கான பிட்சுக்கள் போஜனம் செய்ய அரண்மனைக்குப் போகிறார்களல்லவா? அவர்களில் ஒருவராக நம்மில் ஒருவனும் காஷாயம் தரித்து பிட்சுவைப் போலச் செல்லவேண்டும். பிட்சுக்களுக்கு போஜனமளிக்கையில் மன்னனோடு மகாராணியும் கூடவே இருப்பாள். மன்னனுக்குத் தெரியாமல் மகாராணி பார்க்கும்படி நான் கொடுக்கும் ஓலையைக் குறிப்பாக ஒரு இடத்தில் போட்டு வந்தால் அதை அவள் எடுத்துக் கொள்ளுவாள்!" என்றான் உதியன்.

இதை, அருமையான யோசனையென்று எல்லோரும் ஒரு முகமாக ஆதரித்தார்கள். உதியன் உடனே ஒரு ஓலையை பிரதம பிட்சுவின் கையெழுத்தில் ராணிக்கு எழுதி முடித்தான். தனது சகாக்களில் ஒருவனையும் அவனே தேர்ந்தெடுத்து காஷாய உடையில் பிட்சுவைப் போல ஓலையுடன் அரண்மனைக்கு அனுப்பி வைத்தான்.



அன்று மத்தியானம் விஹாரையிலிருந்து சென்ற ஐநூறு பிட்சுக்களில் ஒருவனாக உதியனின் ஒற்றனும் ஓலையுடன் அரண்மனைக்குச் சென்றான். அன்னதான மண்டபத்தில் இரண்டு வரிசைகளில் அமர்ந்து பிட்சுக்கள் போஜனம் செய்கையில் மன்னன் கல்யாண தீசனும் மகாராணியும் விசிறி கைங்கர்யம் செய்து கொண்டு வந்தார்கள். ராணிக்கு சமிக்ஞை கொடுக்க ஒற்றன் எவ்வளவு முயன்றும் அவன் செய்கையை அவள் புரிந்து கொள்ளவேயில்லை. இதனால் ஒற்றனுக்கு மிகுந்த ஏமாற்றமேற்பட்டது.

துறவிகளின் உணவு முடிந்து பிட்சுக்களெல்லோரும் புறப்பட்டுச் செல்லுகையில் அவர்களை வழியனுப்ப மன்னரும் ராணியும் அரண்மனை முகப்பிற்கு வந்தார்கள். பிட்சுக்களின் கோஷ்டியில் கடைசியாக வந்த ஒற்றன் ராணிக்கு ஒரு கண் ஜாடை காட்டி, உதியன் கொடுத்த ஓலையை ஒரு மூலையில் வீசிவிட்டு வேகமாக நடந்தான். ஓலை விழுந்ததை ராணி மட்டுமல்ல, கல்யாண தீசனும் கவனித்து விட்டான். காவிஉடையணிந்த பிட்சுவிடம் எப்பொழுதுமே மரியாதை கொண்ட மன்னன் அப்பொழுது கூட விபரீதமாக ஏதும் நினைக்கவில்லை. பிட்சுவின் கையிலிருந்து அந்த ஓலை தவறி விழுந்திருக்க வேண்டுமென்ற எண்ணமே அவனுக்கு உண்டாயிற்று. ராணியிடம் ஏற்பட்ட ஒரு சிறு பரப்பரப்பே மன்னர் மனதில் சந்தேகத்தைக் கிளப்பி சதியைக் காட்டிக் கொடுத்து விட்டதென்று கூறவேண்டும்.

பல முறை தன்னையே உற்றுப் பார்த்த ஒற்றனை ராணியும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். பிட்சு அப்படி வெறித்துப் பார்க்கக் காரணமென்னவென்று அவளுக்கு விளங்காமலிருந்தது. கடைசியில் அரண்மனையை விட்டுப் போகும்பொழுது அதே பிட்சு மீண்டும் ஒரு மாதிரியாகத் தன்னைப் பார்த்துவிட்டு ஒரு ஓலையைப் போடவே அப்பொழுதுதான் உதியன் ஞாபகம் அவளுக்கு பளிச்சென்று ஏற்பட்டது. அந்த ஓலையை மன்னரும் கவனித்ததைப் பார்த்ததும் அவள் அசாதாரணமான பரபரப்பு அடைந்து என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோ

மென்கிற சுய நினைவு இல்லாமல் அந்த ஓலையை எடுக்க அவள் ஓடினாள். ராணியின் இந்தப் போக்குதான் மன்னனுக்குச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. இல்லாதபட்சத்தில் அந்த ஓலையை அரசன் எடுத்து அதைப் படித்துப் பார்க்காமலே கல்யாண விஹாரைக்கு அனுப்பியிருப்பான். கல்யாணி ராஜ்யத்தின் பெரும் பகுதியும் காப்பாற்றப்பட்டிருக்கும். இலங்கையின் சரித்திரம் கூட வேறுவிதமாக மாறிப் போய்யிருக்கலாம்.

சந்தேகக் கண்களுடன் கல்யாண தீசன் ஓலையை எடுத்து வாசித்தான். விஹாரையின் பிரதம பிட்சுவின் கையெழுத்து உதியனுக்கு எவ்வளவு நன்றாகத் தெரியுமோ அவ்வளவு நன்றாக மன்னனுக்கும் தெரியும். இருவரும் அதே பிட்சுவிடம் பல வருட காலம் கல்வி பயின்றவர்களில்லையா? ஓலை, பிரதம பிட்சுவின் கையெழுத்திலிருப்பதைக் கண்டு திகைத்த கல்யாண தீசன், கீழே அவருடைய ஒப்பமிருக்கிறதா என்று பார்த்தான். ஒப்பத்துக்குப் பதில் உன் ஆசைக் காதலன் என்று எழுதியிருந்தது. நடுங்கும் விரல்களுடன் ஓலையை இடுப்பில் செருகிக் கொண்டு திரும்பினான். சற்று முன்பு வரையில் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ராணியை அங்கு காணோம். தீயில் எண்ணெய் வார்த்ததைப் போல கலவரத்துடன் ராணி போய்விட்டது அரசனின் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வதைப் போலாகிவிட்டது.

ஒரு விநாடியில் கல்யாண தீசனுக்கு உலகமே இருண்டு போய் விட்டதைப் போலிருந்தது. தனக்கு திடீரென்று ஐம்பது வயது கூடிவிட்டதைப் போலவும் அவன் உணர்ந்தான். தாங்க முடியாத சுமையைத் தூக்கிக் கொண்டு போகிறவனைப் போல அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டு அந்தப்புரத்தை யடைந்து இடுப்பில் செருகிக் கொண்டிருந்த ஓலையை எடுத்துப் படித்தான். பிரதம பிட்சுவின் கையெழுத்தில் உதியன் எழுதியிருந்த காதல் கடிதம் மன்னனை கிறு கிறுகிறுப்படையச் செய்தது. முறை கேடாக ராணி நடந்துகொண்ட சில சந்தர்ப்பங்களை அந்த ஓலை வருணித்திருந்ததையும் அரசன் வாசித்தான். அவ்வளவுதான் உதியன் தொலைந்த பிறகு பிரதம



பிட்சு ராணியின் புதிய காதலனாகியிருக்கிறான் என்று திடமாக முடிவு செய்ய என்னென்ன ஆதாரங்கள் வேண்டுமோ அவ்வளவும் அந்த ஓலையிலிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

புனிதமான விஹாரையின் பிரதம பிட்சு இவ்வளவு கேவலமாக நடந்து கொள்ளுவாரா? அன்னமிட்ட வீட்டுக்கே துரோகம் செய்வாரா? என்பதைப் பற்றி கல்யாண தீசன் எண்ணிப் பார்க்கவில்லை. பிட்சிவின் சீலத்தையும் வயதையும் அவரது குண விஷயங்களையும் கூட அவன் நினைத்துப் பார்க்கவில்லை. உதியன் அனுப்பி இருக்கக்கூடுமா என நினைத்துப் பார்க்கவில்லை. உதியன் அனுப்பிய ஓலை சந்தேகத்துக்கு இடமில்லாதபடி பிட்சுவின் கையெழுத்திலிருப்பது ஒன்றுதான் அவன் மனக் கண்களின் முன்பு நின்றது. சந்தேகாஸ்பதமான சூழ்நிலைமையில் ஓரிரண்டு சமயங்களில் விஹாரைக்கு ராணி போய் வந்ததும் இப்பொழுது அவன் நினைவில் நிழலாடின. ராணியிடம் பிரதம பிட்சு அளவுமீறிய அன்பும் பிரிவும் இரக்கமும் காட்டிய வேறு சில சம்பவங்களும் மன்னன் மனதில் நஞ்சிட்டன. குமுறும் எரிமலையென கல்யாண தீசன் மனிதப் பண்புகளை யெல்லாம் துறந்து பேயாக மாறினான். படைத் தலைவர்களை அழைத்து மளமளவென்று உத்திரவு பிறப்பித்தான்.

“இவ்வளவு காலமும் பக்தி சிரத்தையோடு நான் பூஜித்து வந்த பிரதம பிட்சு உண்மையில் தர்மத்திலே தழைத்த துறவியில்லை. கபடவேடதாரி. ராணியின் உதவியுடன் ராஜ்யத்தைக் கைப்பற்ற சதிசெய்து வரும் பயங்கரமான தேசத் துரோகி. அவனைக் கைது செய்து விஹாரை வாசலில் இரும்புச் சங்கிலிகளினால் கட்டி வையுங்கள். கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தள்ளி பிரேதத்தைச் கடலில் வீசி விடுங்கள். அவனுக்கு விதிக்கும் தண்டனை மற்ற பிட்சுக்களுக்கும், பொது ஜனங்களுக்கும் ஒரு கடுமையான எச்சரிக்கையா யிருக்க வேண்டும். தண்டனை பகிரங்கமாக விஹாரை வாசலில் எல்லோருடைய முன்னிலையிலும் நிறைவேற்றப்படட்டும். என் ஆணையை மீறி எவர் குழப்பம் செய்தாலும் அவர்கள்

தலைகள் நிலத்தில் உருளட்டும். விஹாரையைச் சுற்றி சேனைகள் எதற்கும் ஆயத்தமாயிருக்கட்டும்.” என்று கல்யாண தீசன் அடுக்கடுக்காக உத்திரவுகளைப் பிறப் பித்து படைத்தவர்களுக்கும் பிரதமபிட்சுகளின் கையெழுத் திலிருந்த ஒலியையும் காட்டினன்.

அந்த ஒலியைப் பார்த்தவுடன் படைத்தலைவர் களுக்கும் அறிவு மங்கிவிட்டது. மன்னனைப் போலவே அவர்களும் பிட்சுவைப் போலி வேடதாரி என்று கணித்து உத்தரவை நிறைவேற்ற விரைந்தனர். பிரதம பிட்சுவைப் சுட்டெறிக்க எண்ணெய் கொப்பரை விஹாரை வாசலில் வைத்துக் காய்ச்சப்படும் விஷயம் காட்டுத் தீயைப்போலப் பரவவே, ஆயிரமாயிரமாக ஜனங்கள் அங்கே திரண்டனர். விஹாரையைச் சுற்றி பலம்பொருந்திய படைகளிருப்பதைக் கண்டதும் அவர்கள் கோபதாபங்களையெல்லாம் மனத்தில் புதைத்து விட்டு பேசாமடந்தைகளாகக் கண்ணீர் வடித்த வண்ணம் கண்ணராவியான காட்சியைப் பார்த்துக்கொண் டிக்க நேரிட்டது. அவர்கள் வேறு ஏதும் செய்வதற் கில்லையே!

கொப்பரையில் தூக்கிப் போடப்பட்ட *பிரதம பிட்சு கோபமும் துக்கமும் கொள்வதற்கு மாருக மலர்ந்த முகத்துடன் மன்னனுக்காக வாதாடியதும் உயிர் பிரியும் நேரம் வரையில் பௌத்த தர்மத்தை அவர் உபதேசித் ததும் பொது மக்களின் இதயத்தைத் தொட்டது.

கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் பிட்சுவைத் தூக்கிப்போட்ட கொலைஞர்கள் பிட்சுவின் உயிர் பிரிந்து விட்டதையறிந்ததும் பிரேதத்தை எடுத்து கீழே போட் டார்கள். ஒரு கம்பில் பிரேதத்தைக் கட்டி தெருத் தெரு வாகத் தூக்கிக்கொண்டு போய் கடைசியில் கடலில் வீசி யெறிந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அலங்

* பிரதம பிக்ஷுவின் இந்தக் கடைசி உபதேசம் ஓலைச் சுவடியில் எழுதிவைக்கப்பட்டு இன்னமும் பவித்திரமானதாக விஹாரையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.



காரப் பல்லக்கில் நகர்வலம் வருவதைப் போல ராணியும் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டாள். அவளையும் இடுப்பில் ஒரு பெரிய பாறையைக் கட்டி நடுக்கடலில் கொண்டு போய் வீசியெறியப்பட்டாள்.

இந்த பயங்கரமான கொடூர சம்பவம் நடந்த சிறிது நேரத்துக்கெல்லாம் நாட்டுக்கே சர்வநாசத்தை விளை விக்கும் ஒரு கோரமான சம்பவம் நடைபெற்றது. அமைதி யுடனிருந்த சமுத்திரம் பிட்சுவின் புனித உடலைத் தாங்கிக் கொண்டு குமுறியெழுந்தது. இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் இராவணன் கொடுமை தாங்கா மல் சமுத்திர ராஜன் எவ்விதம் பொங்கி யெழுந்து இலங்கையின் பெரும் பகுதியை விழுங்கினனோ அதைவிடப் பன்மடங்கு ஆவேசத்துடன் எஞ்சியிருந்த இலங்காத் வீபத்தையும் ஜலக்காடாக்கி அழித்துவிட சீறிக் கொண்டு புறப்பட்டான்.

கல்யாண தீசன் காலத்தில் ஏற்பட்ட பிரளயத்தை மகாப் பிரளயமென்பார்கள். அதில் இலங்கையின் பெரும் பகுதியைக் கடல் கொண்டு போய் விட்டதாகக் கூறுவார் கள். இதை இரண்டாவது மகாப்பிரளய மென்றும் முதல் பிரளயம் இராவணன் அரசிருந்த காலத்தில் ஏற்பட்ட தாயும் ராஜவழி என்ற பாலி நூல் கூறுகிறது. இராவணன் காலத்தில் வடக்கே மன்னருக்கும் தூத்துக்குடிக்குமிடை யிலிருந்த 25 கோட்டைகளையும் பல பெரிய அரண்மனை களும் மாளிகைகளுமிருந்த நான்கு லட்சம் வீதிகளையும் கடல் விழுங்கிவிட்டதாக வருணிக்கும் இந்த நூல், கல்யாண தீசன் காலத்தில் ஏற்பட்ட இரண்டாவது பிரளயத்தில் இலங்கையின் பன்னிரண்டு பாகத்திலே பதினேருபாகம் மூழ்கிவிட்ட தென்றும் கூறுகிறது.

பல நூற்றுண்டுகள் வரையில் சர்வதேசப் புகழ்பெற்ற துறைமுகங்களாயிருந்தமாதோட்டமும், கோணேஸ்வரமும் இந்த இரண்டாவது பிரளயத்திலேயே அழிந்திருக்க வேண்டும். பல ஆயிரம் யோஜனை தூரம் உள்ளதாக வால்மீகி ராமாயணம் வருணிக்கும் இலங்கை, இன்று

சின்னஞ் சிறு தீவாக இருப்பதற்கு ராஜவழி கூறும் சமாதானம் இதுதான்.

அநீதிகள் மலிந்து காணும் பொழுதெல்லாம் ஆண்டவன் கோபத்துக்கு அறிகுறியாக சப்த சமுத்திரங்களும் பொங்கியெழு மென்பார்கள். அதைப் போல கல்யாண தீசனின் கொடுமை பொறுக்காமல் கடல் பொங்கியெழுந்து நாடு நகரங்களை யெல்லாம் நாசமாக்கத்தலைப்படவே மக்கள் கிலிபிடித்து ஓடினார்கள். அரசனுக்கும் அவனுடைய தவறுபுலப்பட்டது. அவசரமாக மந்திரிமார்களையும் சோதிடர்களையும் அழைத்து சமுத்திர தேவனைச் சாந்தப்படுத்த என்ன உபாயமென்று விசாரித்தான்.

“சாமுத்ரிகா லட்சனங்களுடன் சகல சற்குணங்களும் பொருந்திய ஒரு கன்னிப் பெண்ணை அர்ப்பணித்தால் சமுத்திர ராஜன் சாந்தமடைவான்! அப்பெண் நிர்ப்பந்தமின்றி தன்னைத்தானே அர்ப்பணிக்க முன்வரவேண்டும்” என்று சோதிடர்கள் கூறினார்கள்.

“நாட்டைப் பாதுகாக்க ஒரு கன்னிப் பெண்ணையல்ல, ஓராயிரம் பெண்களை வேண்டுமானாலும் தியாகம் செய்யலாம். ஆனால் நிர்ப்பந்தமின்றி சாவைத் தழுவக் கூடியவளாகவும் சாமுத்ரிகா லட்சணங்களுடன், குணவதியாகவும் இருக்க வேண்டுமே!” என்று அங்கலாய்த்தான் கல்யாண தீசன்.

“நான் இருக்கும் பொழுது உங்களுக்கு ஏன் இந்தக் கவலை?” என்றது ஒரு பெண்மணியின் இனிமையான குரல். அதைக் கேட்டு அவ்வளவு பேர்களும் ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தார்கள்.

அரசன் ஒரு கணம் தன் கண்களையே நம்பமுடியாமல் மலைத்துப்போய் நின்றான். பிறகு “தேவி! இப்பொழுது நீயா பேசினாய்? நீயா உன்னைப் பலியாக அர்ப்பணிக்கிறேன் என்றாய்?” என்றான் அவன்.

“ஆமாம், அப்பா! நான்தான் சொல்லுகிறேன். பிறந்த பொன்னாட்டைப் பாதுகாக்கவும், பெற்ற தகப்ப



னுக்குச் சாந்தியளிக்கவும் இல்லாத உயிர் வேறு எதற்கு? நமது தாய்த் திருநாட்டிற்காக எவ்விதமான தியாகத்தையும் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். இதைப்போலொத்த சந்தோஷமான மரணம் மனிதர்களில் யாருக்குமே கிடைக்க முடியாது. ஆயிரமாயிர மாண்டுகளுக்குச் சிறப்பு தரக்கூடிய இந்த மரணத்தைவிட மிகச் சிறந்த முடிவை மனதினாலும் கற்பனை செய்து பார்க்க முடியுமா? கொஞ்சம் கூட யோசிக்காதீர்கள். பெற்ற மகளைப் பலியிடுகிறோமே யென்று நீங்கள் வருந்த வேண்டிய அவசியமேயில்லை. என்னை உண்மையில் நீங்கள் பலியிடவில்லையப்பா மனிதர்களில் எவருக்கும் சுலபமாகக் கிடைக்க முடியாத ஒரு பெரும் பாக்கியத்தையே நீங்கள் அளிக்கிறீர்கள். நமது ராஜ குடும்பத்தில் தன்னலத்தியாகம் செய்யக் கூடியவர்களுக்குப் பஞ்சமில்லை யென்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டும் ஒரு அருமையான சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள் அப்பா!”

இப்படி கல்யாண தீசனிடம் உருக்கமாக மன்றாடினாள் அவனுடைய ஒரே மகள் தேவி. நத்தை வயிற்றில் முத்துப் பிறந்ததைப் போல, கெட்டழிந்து போன ராணியின் வயிற்றிலே குணக் குன்றாகப் பிறந்தவள் தேவி. வீரமும் தியாகமும் நிறைந்த அவள் நாத ஒலி மழை கொட்டிவிட்டு ஓய்ந்ததைப் போலிருந்தது சபாமண்டபத்திலிருந்தவர்களுக்கு. இதை முற்றிலும் எதிர்பார்க்காத அவ்வளவு பேர்களும் கற்சிலை போல நின்றார்கள். இந்த வீராங்கனையின் வயிற்றில் ஒரு மாவீரன்பிறந்து அடுத்த பல நூற்றாண்டுகள் வரையில் மாபெரும் தேசபக்தனாக மக்கள் மனதில் இடம் பெறப்போவதை அப்பொழுது அவர்களில் யாரும் அறிந்திருக்கவில்லை. அந்த மாவீரனை நாட்டின் வேறொரு பகுதியில் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிவிடவே தன்னைப் பலிகொடுக்க இளவரசி முன் வந்தாளென்பதையும் விதியே அவளைக் கடலுக்கு இழுத்துப் போகிற தென்பதையும் யாரும் உணர்ந்திருக்கவில்லை.

கண்ணின் மணியாக போற்றி வளர்த்து வந்த அருமைச் செல்வத்தை அரசன் எவ்விதம் பலியிடச்

சம்மதிப்பான்? தகப்பனின் வேதனையைக் கண்டு தாங்காமல் தேவி ஏதோ உளறுகிறுளென்று முதலில் அவன் அலட்சியம் செய்தான். பிறகு நாடு அழிந்து அத்துடன் தானும் அழிந்து போனுல்கூட தனது கைகளினுல் தனது பெண்ணைப் பலி கொடுக்க முடியாதென்று அவன் கண்டிப்பாக மறுத்தான். ஆயினும் கடைசியில் தேவியின் வாதமே வென்றது. அலங்கரித்த தங்கப்படகு ஒன்றில் வைத்து தேவியைச் சமுத்திர ராஜனுக்கு அர்ப்பணித்து விடுவதென்று ராஜசபை முடிவு செய்தது.

மறுநாட்காலை சாஸ்திர விதிகளின்படி சமுத்திர ராஜனுக்கு பூஜைகள் நடந்தன. தேவியை அனுப்ப விருந்த தங்கப்படகு முத்துக்களினுலும், நவரத்தினங்களினுலும் ஜகஜோதியாக அலங்கரிக்கப்பட்டு கடலோரத்தில் நின்றது. அதில், படகு தாங்கக் கூடிய அளவு உணவு பொருள்களை வைத்து தேவியை ஏற்றிவிட்டவுடன் ஒரு பெரிய அலை கிளம்பி கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கப்பால் – அடிவானத்துக்கப்பால் படகை இழுத்துக் கொண்டு போய் விட்டது. ஆச்சரியகரமாகச் சிறிது நேரத்துக்கெல்லாம் கடலின் சீற்றமும் தணிந்து விட்டது. மன்னனும் மக்களும் நீண்ட நேரம் வரையில் கடற்கரையில் நின்று இளவரசியின் உயிர்த்தியாகத்தை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கப் படகில் சமுத்திரத்திலே தனித்து மிதக்க விடப்பட்ட இளவரசி தேவி திக்குத் திசை தெரியாத திரைக் கடலில் கடவுளை மட்டும் வழித் துணையாகக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். சாவு எந்த நேரத்திலும் தன்னை அழைத்துவிடும் மென்று எண்ணி, புத்த பகவானின் திருநாமத்தை இடைவிடாமல் அவன் தியானித்துக் கொண்டிருந்தாள். அந்தி மயங்கும் நேரம் வரையில் அவள் ஆகாரம் உட்கொள்ளவேயில்லை. இப்பொழுதோ இன்னும் சற்று நேரத்திலோ உயிர் விடப் போகிறவளுக்கு உணவு எதற்கு? சாப்பிடும் நேரத்தை தியானத்தில் செலவிட்டாலாவது மறு பிறவியில் பலன் கிடைக்குமே என்று அவள் நினைத்தாள். மரணத்தின்



தலைவாசலை மிதித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்த பொழுதுகூட அவள் மனம் நிறைந்திருந்தது. நாட்டுக்காகவும் இறைவனுக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கும் தந்தைக்காகவும் ஒரு தியாகம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி யெண்ணி அவள் பெருமிதமடைந்து கொண்டிருந்தாள்.

கடலை இருள் கவ்விக்கொண்டது. அன்றிரவு வானத்தில் விண் மீண்களைக்கூடக் காணேம். மேகமண்டலம் இரவின் இயற்கையான இருட்டை மேலும் கனக்கச் செய்திருந்தது. படகில் சற்று சாய்ந்து படுத்த தேவி சிறிது நேரத்தில் சுய நினைவை இழந்து அயர்ந்து நித்திரையிலாழ்ந்து விட்டாள். விதி தனது வேலையைச் செய்வதில் உறங்குமா? தேவியின் மணிவயிற்றில் ஒரு மாவீரன் பிறக்க வேண்டிய புண்ணிய ஸ்தலத்துக்கு தங்கப்படகைச் ஒதுக்கித் தள்ளிக் கொண்டுபோய் கரை யோரத்தில் தள்ளியது. மரணத்தை எதிர் நோக்கிக்கொண்டிருந்த தேவி, மகான் புத்தரின் அருளினுல் கடலுக்குப் பலியாகாமல் தப்பி பிழைத்துவிட்டதைக் காண அப்பொழுது விழித்துக் கொண்டிருக்கவில்லை. தனிமையின் பயங்கரத்தை அவள் உணரக்கூடாது என்பதற்காக கருணையுள்ளம் படைத்த நித்திரா தேவி இளவரசியைத் தன் வசத்தில் கண்வளரச் செய்து கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்தது. பலர் பேசும் குரல் கேட்டபொழுதுதான் தேவியின் துயில் கலைந்தது. கண்களை விழித்துப் பார்த்தாள். எதிரில் கண்ட காட்சியை அவளால் நம்பவே முடியவில்லை. கண்களை இரண்டு மூன்று தடவை நன்ருகக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தாள். அப்பொழுதும் முன்பு பார்த்த காட்சி அப்படியேயிருந்தது. மணிமுடி தரித்த ஒரு மன்னனும் மந்திரி பிரதானிகளைப் போல மதிப்பிற்குரிய வேறுபலரும் நூற்றுக்கணக்கான செம்படவர்களும் படகைச் சூழ்ந்து நின்று இமை கொட்டாமல் தன்னையே கூர்ந்து கவனிப்பதைக் கண்டதும். இளவரசி தேவி தன்னை மறந்து "நான் கனவு காண்கிறேனு?" என்று கேட்டாள் முடிதரித்த இளைஞனை நோக்கி.

"இல்லை தேவி! எனக்குதான் இது கனவு போலிருக்கிறது. இது வெறும் பகற்கனவாகி விடுமோ என்று அஞ்சுகிறேன்" என்றான் அந்த இளைஞன்.

"என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள் இளவரசி.

"பூர்வஜன்ம ஞாபகம்!" என்று புன்முறுவலுடன் பதிலளித்தான் அவன்.

"கடலின் கோபத்திலிருந்து என் நாடு தப்பி விட்டதா அய்யா?" என்று அவள் கேட்டாள்.

"காப்பாற்றுவதற்குத்தானே தெய்வம் என்னை இங்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது. இன்னும் ஏன் படகிலிருக்கிறாய். இறங்கிவரலாமே!" என்று சொல்லிய வண்ணம் கையை நீட்டினான் வாலிபன்.

முதலில் சற்று தயங்கிய இளவரசி பிறகு தைரியத்துடன் அவன் கையைப் பற்றிக்கொண்டு கரையில் இறங்கினாள். அன்று தேவி இறங்கிய ஸ்தலம் இன்று கிரிந்த என்ற பெயருடன் விளங்குகிறது. தேவி இறங்கிய இடத்தில் மன்னன் கவந்தீசன் ஒரு பிரம்மாண்டமான விஹாரையைக் கட்டினான். அன்று முதல் தேவிக்கு விஹார மகாதேவி என்ற பெயர் ஏற்பட்டது. கால வெள்ளத்தால் இந்த விஹாரை காடு மண்டி அழிந்து போயிற்று. சரித்திரப் பெருமைபெற்ற விஹாரையைச் செப்பனிட தீவிரமான முயற்சிகள் சமீபத்தில் ஆரம்பமாகியிருக்கின்றன. பழைய விஹாரை இருந்த இடத்தில் அழகானதொரு புதிய விஹாரையைக்கட்டி அதில் வெள்ளிக் கலசத்தைப் பொருத்தும் விழா சென்ற 1956ம் வருடம் டிஸம்பர் மாதம் நடைபெற்றது.

தேவியைக் கைகொடுத்து கரையில் இறக்கிய இளைஞன்யார்? அவன் அந்த சமயத்தில் கடற்கரைக்கு ஏன், எப்படி வந்தான்? என்பதைச் சொல்லிவிட்டே கதையை மேலே தொடர வேண்டியிருக்கிறது. ராஜரட,

K. M. M. A CADER.



மலையரட, ரொஷுணரட என்று மூன்று தெளிவான பகுதிகளாக இலங்கை பிரிந்திருந்த தென்பதையும் ராஜரடாவில் தேவனம்பியதீசனும் அவனுக்குப் பிறகு அவனுடைய சகோதரர்களும் தமிழர்களும் மாறிமாறியும் ஆதிபத்திய அதிகாரம் செலுத்தியதாக ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். தேவனம்பியதீசனின் சகோதரர்கள் வழிவந்தவர்களுடைய ஆளுகையின்கீழ் இலங்கையின் மற்றிரு பகுதிகளும் ராஜடாவுக்கு கப்பம் செலுத்தும் உபராஜ்யங்களாயிருந்து வந்ததையும் வாசக நேயர்களறிவார்கள்.

மலையரடாவின் தலைநகரம்தான் கல்யாணி. அங்கு கப்பலேற்றி கடலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கல்யாண தீசனின் புதல்வி தேவி, கண்விழித்த பொழுது வந்து சேர்ந்தது மலயரடாவிற்குத் தென் கிழக்கிலுள்ள ரொஹுணரடாவின் தலைநகரமான மஹாகமையினருகில் தான். அன்று விடியற்காலை மீன் பிடிப்பதற்கு கட்டு மரங்களைத் தேடிக்கொண்டு கடற்கரைக்கு வந்த சில செம்படவர்கள் விலையுயர்ந்த முத்துக்களினாலும் மணிகளினாலும் அலங்கரித்த ஒரு தங்கப்படகு கரையில் ஒதுங்கியிருப்பதையும் அதில் அழகே உருவான ஒரு இளமங்கை அயர்ந்து நித்திரை செய்வதையும் கண்டார்கள். படகின் அமைப்பையும் ஆடம்பரத்தையும் அதில் படுத்திருந்த பெண்ணின் எழிலுருவத்தையும் பார்த்த மாத்திரத்தில் செம்படவர்களுக்கு பயமும் குழப்பமும்தான் ஏற்பட்டது. நள்ளிரவில் நடமாடும் மோகினிகளையும் நாக கன்னிகைகளையும் கதைகளில் கேட்டுள்ள செம்படவர்கள் படகில் படுத்திருப்பவளும் ஒரு அமானுஷ்யமான பெண்ணாயிருக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அவர்களில் ஒருவன் அரண்மனைக்கு ஓடி மன்னன் காகவந்தீசனுக்குத் தகவல் தெரிவித்தான்.

காகவர்ணதீசன் என்ற காகவந்தீசன் இளைஞன். அவன் பட்டத்துக்கு வந்து சில மாதங்கள் தானாகியிருந்தன. திருமண மாகாததால் முறைப்படி அவனுக்கு பட்டாபிஷேகமும் நடக்கவில்லை. அதிகாலையில் செம்படவர்கள் கொண்டுவந்த செய்தியைக் கேட்டதும் கடவுளருளாகப் பார்த்து சகல குணவிசேஷங்களும் பொருந்திய

ஒரு பட்டமகிஷியை கருணையுடன் அனுப்பியிருக்கிறார் என்றே அவன் நினைத்தான். மந்திரிகளையும் படைத் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு அவன் கடற்கரைக்கு விரைந்தான். படகில் படுத்துறங்கும் தேவியின் நித்திரை அழகை அவன் கலைக்க விரும்பவில்லை. அவள் துயில் கலைந்து எழுந்திருக்கும் வரையில் பொறுமையோடு காத்திருந்தான்.

இதற்கிடையில் படகில் பார்த்த சில அடையாளங்களைக் கொண்டு அந்தப் பெண் மலையரட ராஜ்யத்தைச் சேர்ந்த மானிடப் பெண்தானென்பதை மன்னனும் அவன் பிரதானிகளும் தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்டே இளவரசி துயில் கலைந்து எழுந்தாள்.

அவளைக் கரம் பற்றி கரையில் இறக்கிவிட்ட கவந்தீசன் "நீ யார் அம்மா? எப்படி அங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

"முதலில் நான் எங்கிருக்கிறேனென்பதைச் சொல்லுங்கள் அய்யா'" என்றாள் தேவி.

"பத்திரமாகவும் நல்லவர்களிடமும்தான் இருக்கிறாய் தேவி! இது ரொஹூண ராஜ்யம். அதன் அரசன் கவந்தீசனுடன் இப்பொழுது நீ பேசிக்கொண்டிருக்கிறாய். நீ மலையாடாவைச் சேர்ந்தவளென்று உன் படகு சொல்லுகிறது!" என்றான் கவந்தீசன். அவன் கேட்டதற்கிணங்க இளவரசி தேவி தன்வரலாற்றைச் சுருக்கமாகச்சொன்னாள்.

"என் வம்சத்திலேயே பிறந்த ஒரு இளவசியைப் பட்டமகிஷியாக கடவுள் அனுப்புவாரென்ற என் நம்பிக்கை கைகூடிவிட்டது. இந்த நிமிடம் முதல் நீ இந்நாட்டின் மகாராணி. உன் மூலம் மலையரடாவும் ரொஹூண ரடாவும் ஒன்றுபடப் போகிறது. பழமையான இரு ராஜ குடும்பங்கள் ஐக்கியப்படும் இந்த மங்கள தினத்தை நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடட்டும். புத்தர் கருணையினால் அபாயமின்றி நீ வந்திறங்கிய இந்தப்



புண்ணிய ஸ்தலத்தில் ஒரு பிரம்மாண்டமான விஹாரையைக் கட்டி முடிக்கிறேன். அந்த விஹாரையின் ஞாபகார்த்தமாக உன் பெயர் இன்று முதல் விஹார மகாதேவியென்று வழங்கட்டும்!" என்றான் கவந்தீசன்.

அவர்களைச் சூழ்ந்திருந்த மந்திரிகளும் மற்றவர்களும் "மன்னர் வாழ்க! விஹார மகாதேவி வாழ்க! ரொஹூண ரடாவின் மகாராணி வாழ்க." என்று ஜயகோஷம் செய்து ஆர்ப்பரித்தார்கள்.

# 9. மாவீரன் பிறந்தான்

விஹார மகாதேவியை கவந்தீசன் முறைபடி மணந்து அவளைப் பட்ட மகிஷியாக ஏற்று மகுடாபிஷேகம் செய்து கொண்டான். ரொஹூணரடா மக்கள் தங்களது அரசியை தெய்வம் அளித்த அருளாகவே மதித்து அன்பும் மரியாதையும் செலுத்தினர். அவள் அடியெடுத்து வைத்த நாள் முதல் வானம் மும்மாறி பொழிந்து, நிலம் செழித்து; வளம் கொழித்தது. செல்வம் விளைந்த அந்த சொர்க்க பூமியில் கலை கலாசார மதக் கோட்பாடுகளெல்லாம் ஒரு புதிய மறுமலர்ச்சியடைந்தன. மக்கள் விசுவாசத்தினாலும், அன்புக் கணவனின் அரவணைப்பினாலும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தாள் விஹார மகாதேவி.

ஆனால், அவள் மனதின் மூலையில் ஒரே ஒரு குறை உறுத்தியது; மணமாகி இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் குழந்தைச் செல்வமில்லாதது. சகல சௌபாக்கியங்களும் இருந்தும் அவள் மனதுக்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கவில்லை. அவள் துயரத்தையறிந்த மன்னன் ஒரு நாள் விஹாரையின் பிரதம குருவிடம் தங்கள் குறையைச் சொல்லி முறையிட்டான்.

"உன்மனைவி விஹாரமகாதேவி சாதாரணமாக எல்லாப்பெண்களையும் போன்றவளில்லை. தேவாம்சம் பொருந்

தியவள். அவள் வயிற்றில் உலகப் பிரசித்தி பெறும் ஒரு மாவீரன் பிறக்கப் போகிறான். அவனுடைய ஆட்சியில் இந்த நாடு என்றுமில்லாத மகோன்னதமான நிலைமையை அடையப்போகிறது. அவன் பெயரும் புகழும் ஈழத்திருநாட்டில் என்றென்றும் நிலைத்து நிற்கப்போகின்றன. புத்த பெருமான் அருளினால் அந்நிய ஆட்சி ஒழிந்து ஒரு குடையின் கீழ் தேசம் ஐக்கியப்படப் போகிறது!'' என்று பிரதம குரு சோதிடம் பார்த்துச் சொன்னார்.

இந்த சோதிடத்துக்குப் பொருத்தமாக ராணி விஹாரமகாதேவி விசித்திரமான கனவுகளெல்லாம் கண்டாள். சோழமன்னன் எல்லாளன் தலையைத் துண்டித்த ஒரு கத்தியிலிருந்து ரத்தம் கொட்டுவதையும் அந்தக் கத்தியைக் கழுவிய தடாகத்தில் தான் ஸ்னானம் செய்வதாகவும் ஒரு நாள் அவள் கனவுகண்டாள். இன்னொரு நாள் அநுராதபுரத்திலுள்ள தடாகத்திலிருந்து பறித்துவந்த அழகு மிக்க தாமரை மலர்களை தனது கூந்தலில் அணிந்திருப்பதைப் போல அவள் கனவு கண்டாள். இந்தக் கனவுகள் ஒரு மாவீரன் அவள் வயிற்றில் பிறக்கப் போவதின் அறிகுறிகளென்று சோதிடர்கள் கூறினார்கள்.

வேறொரு நாள் இரவு பெரிய தேன் கூட்டிலிருந்து தேனை எடுத்து பத்தாயிரம் பிட்சுக்களுக்கு தானம் கொடுப்பதைப்போல மகாராணி கனவு கண்டாள். காலக் கிரமத்தில் விஹார மகாதேவி கர்ப்பமாகி ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்த பொழுது மலையரடாவிலும் ரொஹுணரடாவிலும் பல சுப சகுனங்கள் தென்பட்டன. தேவனாம்பிய தீசன் பட்டத்துக்கு வந்தபொழுது என்னென்ன அதிசயங்களெல்லாம் நாட்டில் தோன்றினவோ அதே போன்ற பல அற்புதங்கள் பல இடங்களிலும் தென்பட்டதாகப் பொது ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். அந்த அதிசயக் குழந்தைக்கு கமுனு என்று பெயரிட்டார்கள். பட்டத்து இளவரசன் பிறந்த வைபவத்தை நாட்டுமக்கள் ஒரு பெரிய தேசியத் திருவிழாவைப்போலக் கொண்டாடினார்கள். மன்னன் கவந்தீசன் பிட்சுக்களுக்கும் ஏழை எளிய ஜனங்களுக்கும் ஏராளமாக தானம் வழங்கி போதிமாதவனின்



கருணைக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். மலையரடாவிலிருந்து கல்யாணதீசனும் வந்திருந்து தனது பேரக்குழந்தையைக் கண்டு உள்ளம் பூரித்தான்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு விஹாரமகாதேவி இன்னொரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு தீசன் என்று பெயரிட்டார்கள். இரு குழந்தைகளும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகச் செல்வமாய் வளர்ந்து வந்தார்கள். வளரும் பயிர் முளையில் தெரியு மென்பதைப்போல மூத்தவனான கமுனு இளமையிலேயே யுத்தத்தில் பற்றுடையவனாகவும் வீரமும் மனோதிடமும் துணிச்சலும் மிக்கவனாகவும் தென்பட்டான். எந்த நெருக்கடியையும் அஞ்சாமல் எதிர்த்து நின்று சமாளிக்கும் திறமையும் துணிவும் அவன் வயதொடு கூடவே சேர்ந்து வளர்ந்தது. அத்துடன் அநுராதபுரத்தின் சிறப்பையும் தற்சமயம் அந்நியர்களிடத்தில் அந்தப் புனித நகரம் அடிமைப் பட்டிருப்பதையும் பற்றிய விவரங்களைக் கேட்பதில் அவன் மிகுந்த ஆவல் காட்டினான்.

''ஒரு நாள் நம் நாட்டின் உண்மையான தலைநகரமாகிய அநுராதபுரத்தை வென்று அதை என் அன்புக் காணிக்கையாக உனக்குக் கொடுப்பேன் அம்மா!'' என்று கமுனு தனது தாயிடம் சொல்லிய பொழுது விஹாரமகாதேவி உள்ளம்பூரித்துப் போனாள். '' ஆமாம் மகனே! நான் மட்டுமல்ல, இந்த நாடே உன்னிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்கிறது. என் மகன் சோழ ஆட்சிக்கு முடிவு கட்டி இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் நல்லாட்சி நடத்தும் பெருமையை நான் பார்த்து மகிழ வேண்டும். அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்கவேண்டுமென்றுதான் அல்லும் பகலும் அன்பு வடிவமான போதி ஜோதியை நான் பிரார்த்திக்கிறேன்'' என்றாள்.

''உன் எண்ணம் நிச்சயம் நிறைவேறும் அம்மா!'' என்று உறுதி கூறினான் கமுனு. இந்த சமயத்தில் இளவரசன் தீசன் அங்கு ஓடிவந்து அண்ணனையும் அம்மாவையும் அவசரமாக அப்பா அழைக்கிறார் என்றான்.

மன்னர் அழைப்பதைக் கேட்டு விஹார மகாதேவியும் கமுனுவும் தீசனை அழைத்துக்கொண்டு கல்யாண மண்டபத்துக்கு வந்தார்கள். அங்கு மன்னருடன் மந்திரிகளும் ராஜகுருவும் இருப்பதைக் கண்டதுமே, ஏதோ ஒரு அதி முக்கியமான காரியத்திற்காகத்தான் அரசர் தங்களை அழைத்திருக்க வேண்டுமென்று மகாராணி கருதினாள்.

மன்னருக்கு முன்னால் ஒரு தங்கத் தட்டில் பாற்சோறு மூன்று சமபாகங்களாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. மந்திராலோசனை நடக்குமிடத்தில் பாற் சோற்றைப் பார்த்ததும் ராணிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"தேவி! மந்திரிசபை முன்னிலையில் நம் குழந்தைகள் புனிதமான மூன்று பிரதிக்ஞைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர்களை அழைத்தேன். நாட்டின் வருங்காலமும் நம் குலத்தின் வருங்காலமும் அவர்கள் கையில் இருக்கின்றன. அவர்களுடைய அறிவுத் திறனும் மனோபாவமும் இந்தப் பொறுப்பை உணர்ந்த முறையில் வளரவேண்டும். இன்று முதல் ராஜ குருவிடமும் பிரதம மந்திரியிடமும் நம் குழந்தைகள் ராஜீய விவகாரங்களில் பயிற்சிபெறப் போகிறார்கள். இதற்கு முன் தாம் உண்ணும் அன்னத்தின்மீது ஆணையிட்டு மூன்று பிரதிக்ஞைகளை அவர்கள் தூயமனத்துடன் மேற்கொள்ளவேண்டும்!" என்றான் மன்னன் கவந்தீசன்.

இப்படிச் சொல்லிவிட்டு, தங்கத்தட்டில் மூன்று சமபாகங்களாகப் பிரித்து வைத்திருந்த பாற்சோற்றில் ஒரு பாகத்தை எடுத்து இரு குழந்தைகளுக்குப் பிரித்துக் கொடுத்து "எந்தக் காலத்திலும் பௌத்த பிட்சுக்களுக்கு எவ்விதமான தீமையும் செய்யமாட்டோம் என்றும், அவர்களை எப்பொழுதும் ஆதரிப்போம் என்றும் சொல்லிக்கொண்டு பால் சோற்றைச் சாப்பிடுங்கள்" என்றான் கவந்தீசன். அப்படியே இளவரசர்கள் இருவரும் சந்தோஷமாகப் பிரதிக்ஞைசெய்து பால் சோற்றைச் சாப்பிட்டார்கள்.

"இரண்டாவதாக நீங்கள் இருவரும் ஒற்றுமையுடன் இருப்பதென்றும், ஒருவரோடொருவர் சண்டை செய்வ



தில்லையென்றும் சத்தியம் செய்யுங்கள்" என்றான் மன்னன். குழந்தைகள் அவ்விதமே செய்தனர்.

மூன்றாவதாக, "நம்நாடு சமாதானத்தைத்தான் விரும்புகிறது, சண்டையையல்ல. ஆகையால் தமிழர்களைப் பகைத்துக்கொண்டு அவர்களுடன் போர் தொடுப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்யுங்கள்" என்றான் மன்னன்.

மூன்றாவது பிரதிக்ஞையைக் கேட்டதும் தீசன் தனது கையிலிருந்த பால்சோற்றைக் கீழே நழுவவிட்டான். கமுனுவோ ஆத்திரத்தோடு சோற்றை வீசியெறிந்துவிட்டு "இப்படிப் பிரமாணம் செய்யமுடியாது" என்றான்.

"ஏன்? தமிழர்களுடன் போர் தொடுக்க நீ விரும்புகிறாயா?" என்று கேட்டான் மன்னன்.

"போர் தொடுக்க மட்டுமல்ல, அவர்களை இந்நாட்டிலிருந்து அடியோடு விரட்டவும் விரும்புகிறேன்" என்று கிணீரென்று சொன்னான் கமுனு.

"இளங்கன்று பயமறியாது என்பதைப்போலப் பேசுகிறது இந்த அசட்டுப் பிள்ளை. நம்முடைய பலமெங்கே? எல்லாளப் பேரரசனின் படைபலமும் பராக்கிரமமும் எங்கே? அவன் ஆதிபத்தியத்தை ஏற்றதால்தான் இன்று நாம் உயிர் வாழமுடிகிறது. பெயரளவில் அவன் சக்ரவர்த்தியாயிருப்பினும் நமது மத கலாசாரப் பண்பாடுகளை எப்பொழுதும் பாதுகாத்து கௌரவிக்கிறான். அவன் ஆட்சியில் மக்களின் சந்தோஷத்துக்கும் சுபீட்சத்துக்கும் ஒரு குறைவுமில்லை. அவனை எதிர்த்து வெற்றி கொள்ள நினைப்பது முட்டாள்தனம் கமுனு. மலைமீது முட்டிக் கொண்டால் என்ன நடக்கும் தெரியுமா? மண்டைதான் உடையும்; மலைக்குச் சேதம் ஏற்படாது. உன் சிறு பிள்ளைத்தனமான பேச்சும் வீரமுழக்கமும் இப்படித் தானிருக்கிறது!" என்றான் கவந்தீசன்.

"இருக்கட்டுமே! அதற்காக பயங்கொள்ளித் தனத்தை மறைக்க ஒரு பிரதிக்ஞையா? இதற்கு உடன்பட என்னால் முடியாது அப்பா! என்றைக்காவது ஒரு நாள் அநுராதபுரத்திலிருந்து சோழர் ஆதிக்கத்தை நான்

விரட்டிவிட்டு நாட்டை விடுதலை செய்யாவிட்டால் என் பெயர் கமுனு இல்லை! இது சத்தியம்! என்று மளமள வென்று பேசிவிட்டு அவ்விடத்திலிருந்து அவன் போய் விட்டான்.

கமுனு பேசிமுடித்துவிட்டுப் போனபொழுது மந்திரி களின் முன்னிலையில் சின்னஞ் சிறுபிள்ளை இப்படிப் பேசிவிட்டானே என்பதில் மன்னன் கவந்தீசன் உள்ளூர வெதும்பினன். ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஒரு அசட்டுச்சிரிப்பு சிரித்துக்கொண்டு "குழந்தையின் வீராவேசமான பேச்சைக் கேட்டீர்களா?" என்றான்.

"மகாராணியின் வயிற்றில் பிறந்த குழந்தை வேறு எப்படியிருக்கும் மகாராஜா? ஒரு காலத்தில் இளவரசர் இன்று சொல்லியபடியே செய்துவிட்டாலும் நாங்கள் ஆச்சரியப்பட மாட்டோம்" என்றான் மந்திரிகளில் ஒருவன்.

"கமுனு ஆளப்பிறந்தவன். இலங்கை முழுவதையும் ஒரு குடையின்கீழ் அவன் ஆளத்தான் போகிறான். அதை ஒருநாள் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்றார் பிரதம பிட்சு.

ராஜசபையிலிருந்து விஹார மகாதேவி அந்தப்புரத் துக்குச் சென்று பார்த்தபொழுது இளவரசன் கமுனு கட்டிலில் கை கால்களை இறுக்கி மடக்கிக்கொண்டு படுத் திருந்தான்.

"ஏன் இப்படி ஒடுங்கிக்கொண்டிருக்கிறாய்?" என்று பரிவுடன் கேட்டாள் விஹார மகாதேவி.

"நீட்டிப் படுக்க எங்கே இடமிருக்கிறது தாயே? வடக்கிலிருந்து தமிழர்கள் நெருக்குகிறார்கள். தெற்கி லிருந்து கடல் நெருங்குகிறது. இப்படி இருபுறமும் நெருக்கும்பொழுது தாராளமாக எப்படிப்படுப்பது?" என்று அர்த்த புஷ்டியுடன் அவன் சொன்னான்.



"உன் ஆவல் நிறைவேற புத்தபகவான் நிச்சயம் அருள் புரிவார் கமுனு. ஆனால் இதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். இலங்கை முழுவதையும் நீ வெற்றி பெரும்பொழுது புத்த தர்மம் இங்கு செழித்து வளரவேண் டும். பௌத்த தர்மத்தைப் போற்றி வளர்த்த பெருமை ஆயிரமாயிர மாண்டுகளுக்கு இந்நாட்டைச் சேரவேண்டும். நம்நாடு தர்மத்துவீபமமென்று உலகெங்கும் புகழப்பட வேண்டும்" என்றாள் ராணி.

"அப்படியே செய்வேன் அம்மா! என் கடைசி மூச்சு இருக்கும் வரையில் பௌத்த தர்மத்துக்கு இயன்ற வரையில் சேவை புரிவேன்!" என்று வீர இளைஞனைப் போலத் தனது தாய்க்கு உறுதிமொழி யளித்தான் பன்னிரண்டு வயதுப் பாலகன்.

இதை மகாராணி மன்னனிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டபொழுது, "தேவி! கமுனுவின் அசட்டுத்துணிச்சலுக்கு கொஞ்சமும் ஆதரவு காட்டாதே! அவன் இப்படி அறிவிழந்து பேசுவது எல்லாளன் காதில் விழுந்தாலே நம் கதி அதோகதியாகிவிடும்." என்று எச்சரித்தான் கவந்தீசன்.

கமுனுவும் தீசனும் வளர்ந்து இளம் வாலிபரா னார்கள். கமுனுவிற்கு 16 வயதாகும்பொழுது அவன் தம்பி தீசனுக்கு 14 வயது. கமுனு பிறந்த அதே நேரத்தில் பிறந்த ஒரு யானைக்குட்டியும் அரண்மனையில் செல்லமாக வளர்ந்து வந்தது. கந்துலா என்று பெயரிட் டிருந்த அந்த யானை, கமுனு பட்டத்துக்கு வரும்பொழுது அவனுடைய பட்டத்து யானையாக யிருக்கவேண்டு மென் பதுமன்னன் விருப்பம்.

சோழ மன்னன் எல்லாளன் தனது ராஜ்யத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றின் நிர்வாகத்தை மந்திரி களிடம் ஒப்படைத்திருந்தான். நாட்டு நிர்வாகத்தில் தமிழர்களைப்போலவே சிங்களவர்களுக்கும் சம பங்கு இருக்க வேண்டுமென்பதற்காகப் பாதி இடங்களில் சிங்கள மந்திரிகளை அவன் நியமித்திருந்தான். எல்லாளன் எவ்வளவுதான் நீதி தவறாமல் ஆட்சி நடத்தியபொழுதி

லும், அவன் அந்நியன் என்ற உணர்ச்சி சிங்களவர்களிடம் இல்லாமலில்லை. எல்லாளன் ஆட்சியைக் கவிழ்க்க ஒரு கூட்டம் எப்பொழுதும் ரகசியமாகச் சதிசெய்து கொண்டு தான் இருந்தது. அந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த வன் சிங்கள மந்திரிகளில் ஒருவனுடைய பிள்ளையான நந்திமித்திரன் என்பவன்.

வாள் வீச்சில் அவன் தீரன். சுத்தவீரனென்று பெயரெடுத்தவன். ஆயினும் தமிழர்களை நேருக்கு நேராகத் தாக்கும் துணிச்சலில்லாமல் நள்ளிரவில் திருடனைப்போல தனது சகாக்களுடன்சென்று தமிழ்க் குடும்பங்களைத் திடீர் திடீரெனத்தாக்கி அட்டூழியம் செய்து வந்தான். இது மாமன்னன் எல்லாளன்காதுக்கு எட்டவே, தண்டனைக்குப் பயந்து தென் திசையை நோக்கி ஓடிய நந்திமித்திரன் மகா கமையை அடைந்து கவந்தீசன் படையில் சேர்ந்து கொண்டான்.

நந்திமித்திரனைப் போல சூரநிமலன், கதயிம்பரா, பரணு, கஞ்சதேவா முதலான மற்றும் ஒன்பது வீரர்களும் இவ்விதமே கவந்தீசன் சேனையில் வந்து சேர்ந்தார்கள். இந்தப் பத்து விரர்களையும் இளவரசன் கமுனுவின் மெய்ப் காதுகாப்பாளனுகை மன்னன் நியமித்திருந்தான். கமுனு வின் யோசனைப்படி இந்த வீரர்கள் ஆளுக்குப் பத்து பேர்களைப் பொறுக்கியெடுத்து அவ்விதம் பொறுக்கிய நூறு பேர்களுக்கும் யுத்த முறைகளைப் பயிற்றுவித்தார்கள். இந்த நூறு பேர்களும் மறுபடி ஆளுக்குப் பத்து இளைஞர் களை அழைத்து வந்து ஆயிரம் பேர்கள் கொண்ட ஒரு படையைத் திரட்டினார்கள். அந்த ஆயிரம் பேர்களும் பத்தாயிரம் இளைஞர்களடங்கிய ஒரு பிரம்மாண்டமான சேனையைத் தயார் செய்தனர். யுத்தத்தை வெறுத்து அமைதியாக இருந்த ரொஹுணராஜ்யம் இவ்விதம் ஒரு பாசறையைப் போல வெகு விரைவில் மாறியது.

மஹாகமையில் நடப்பது ஒன்றும் கமுனுவின் தம்பி தீசனுக்குத் தெரியாது. அவன் வடக்கே மகாகவி கங்கைப் பிரதேசத்தில் எல்லைப்புறப் பாதுகாப்பை மேற்



கொண்டிருந்தான். அவனிடமும் ஒரு பலம் பொருந்திய வீரர் படை எதற்கும் தயாராயிருந்தது.

தமிழர்கள் தெற்குநோக்கிமேற்கொண்டு ஆக்ரமிக்காமலிருப்பதைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு தீசனிடமிருந்தது. கமுனுவோ சோழப் பேரரசை வீழ்த்துவதற்கே இரவும் பகலும் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். படையெடுப்பை ஆரம்பிக்கத் தன்னிடம் போதிய பலம் ஏற்பட்டவுடன் அநுராதபுரத்தின்மீது தாக்குதல் நடத்தத் தனது தகப்பனரின் அனுமதியைக் கேட்டு இளவரசன் கமுனு தூது அனுப்பினன்.

மும்முறை இவ்விதம் தூது அனுப்பியும் மன்னன் கவந்தீசன் படையெடுப்பை நடத்த அனுமதிப்பதாயில்லை. எல்லாளனுடன் போர் தொடுத்து நிச்சயம் வெற்றி காண முடியாதென்று நம்பிய கவந்தீசன் தனது பாதுகாப்பையும் தன் சந்ததியின் பாதுகாப்பையும் உத்தேசித்து கமுனுவின் ஆர்வத்துக்குத் தடை போட்டுக் கொண்டிருந்தான். நான்காவது தடவையாக கமுனு அனுப்பிய தூதனையும் மன்னன் விரட்டியடித்து விடவே இயற்கையிலேயே முன்கோபக்காரனை கமுனு பெண்கள் அணியும் கங்கணங்களை தகப்பனுருக்குப் பரிசாக அனுப்பி வைத்து "உங்கள் மகன் அனுப்பும் பொருத்தமான பரிசு இது" என்று ஒரு ஓலையும் கொடுத்தனுப்பினன்.

அவற்றைக் கண்டதும் * "அந்தத் துஷ்டனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கிறேன். யார் அங்கே? சேனுதிபதியை உடனே இங்கு அழைத்து வா!" என்று உத்தரவிட்டான் கவந்தீசன்.

அப்பொழுது அங்கு வந்த விஹார மகாதேவி மன்னன் கையில் புடவையையும் கங்கணத்தையும்

* கமுனுவை அன்று துஷ்டன் என்று கவந்தீசன் வருணித்ததால் துஷ்ட கமுனு என்ற பெயர் சரித்திரத்தில் நிலைத்துப் போயிற்று. துட்ட கமுனு என்று பொதுவாகச் சொல்லுவது துஷ்ட கமுனு என்ற காரணப் பெயரின் திரிபு ஆகும்.

பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் "இவைகளெல்லாம் என்ன? யாரை துஷ்டனென்கிறீர்கள்?" என்றாள்.

"வேறு யாரைச் சொல்லுவேன்? உன் மகன் துஷ்ட கமுனுவைத்தான் சொல்லுகிறேன். தகப்பனுக்கு உன் மகன் அனுப்பியிருக்கும் வெகுமதிகளைப் பார் தேவி!

மலைமீது மோதிக் கொண்டால் மண்டை உடையுமென்று நான் கூறுவது பயங் கொள்ளித்தனமாம். என்னைப் போன்றவர்கள் அணியப் பொருத்தமானவைகளென்று புடவையையும் கங்கணங்களையும் அனுப்பியிருக்கிறான் மூடன். எல்லாளன் பகையைக் கட்டிக் கொண்டு சிங்களவம்சத்தையே சர்வநாசம் செய்யத் திட்டம் தீட்டுகிறான் உன் மகன்!" என்று சீறினான் மன்னன்.

இதற்குள் சேனாதிபதி அங்கு வரவும் "கமுனு எங்கிருந்தாலும் சரி, அவனைக் கைது செய்து கையிலும் கால்களிலும் விலங்கிட்டுச் சிறைப்படுத்திவை. அவன் எப்படியும் கண்டு பிடித்துப் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும். பைத்தியக்காரனை ஒரு பிள்ளையினால் நமது வம்சமே அழிந்து ஒழிந்து போய்விடக் கூடாது" என்று கவந்தீசன் கட்டளையிட்டான்.

ஆனால் கமுனுவா அகப்படுகிறவன்? விஷயம் தெரிந்ததும் அவன் காட்டில் மறைந்து விட்டான். அன்று முதல் எல்லாளன் மீது படையெடுத்து அநுராதபுரியைக் கைப்பற்ற இரவுபகலாக அவன் திட்டம் தீட்டத் தொடங்கினான்.

இதற்கிடையில் கவந்தீசன் காலம் முடிந்துவிட்டது. செய்தி கிடைத்ததும் திகவாபியிலிருந்த இளைய ராஜகுமாரன் தீசன் மகாகமைக்கு விரைந்து தகப்பனின் கிரியைகளைச் செய்து முடித்ததோடல்லாமல் தன்னை அரசனாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டான். மூத்தவன் இருக்கையில் இளையவன் சிம்மாசனமேறியதைப் பௌத்த பிட்சுக்கள் பலர் எதிர்த்தார்கள். விஹார மகாதேயும் இதை ஆதரிக்கவில்லை. இவற்றையெல்லாம் தீசன்



பொருட்படுத்தவுமில்லை. அதேசமயம் முறையில்லாத வழியில் கைப்பற்றிய அரசு நிலைக்குமா என்ற சந்தேகம் அவனுக்கு இல்லாமலுமில்லை. எந்த நேரமும் பெரும் படையுடனும் பௌத்த பிட்சுக்களின் பக்கபலத்துடனும் கமுனு வருவானென்று அஞ்சிய தீசன், தனது சொந்தப் பாசறையான திகவாபிக்குச் சென்று அங்கிருந்து ஆட்சி நடத்தத் தொடங்கினான்.

துஷ்ட கமுனுவுக்குப் பல தினங்களுக்குப் பிறகுதான் விஷயம் தெரிந்தது. தீசன்மீது முதலில் அவன் ஆத்திரப்பட்டாலும் சகோதரர்களுக்கிடையில் சண்டை பிடிப்பதில்லையென்று தகப்பனுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு சற்று சாந்தமடைந்தான். தமிழர் விஷயமாக மாத்திரம் தகப்பனுடன் அவன் தகராறு செய்து கொண்டானே தவிர மற்ற விஷயங்களை அவன் மீறவில்லை. உண்மையிலேயே அவன் பெற்றோர்களிடம் மிகுந்த பக்தி விசுவாசம் கொண்டிருந்தான். இது அவனைப் பண்புமிக்க பூரணமனிதனாக்கியதோடு வீரம் செறிந்த தேச பக்தனாகவும் செய்திருந்தது.

தகப்பனுக்குச் செய்து கொடுத்த பிரதிக்ஞையை உத்தேசித்து துஷ்ட கமுனுவும் மும்முறை தீசனுக்குச் சமாதானத் தூது அனுப்பினான். தலைநகரான மகாகமையை அடைந்து யானை கந்துலாவையும் உடனே அனுப்பிவைத்து விடுமாறு தீசனுக்கு மீண்டும் மீண்டும் துஷ்ட கமுனு சமரசத் தூது அனுப்பிப் பார்த்தான். தீசனின் மௌனம் துஷ்ட கமுனுவின் வீரத்துக்கே சவால் விடுப்பதைப்போலாகிவிட்டது. அதோடு தனது தாயை விடுவிப்பதற்காகவேனும் தகப்பனுக்கு அளித்த வாக்குறுதியை மீறி உடன்பிறந்த சகோதரனுடன் போர் தொடுத்து தனது உரிமையை நிலை நிறுத்திக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லையென்ற நிலைமையும் துஷ்ட கமுனுவிற்கு ஏற்பட்டுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் துஷ்டகமுனுவிற்கு இன்னொரு பெரிய பிரச்னை ஏற்பட்டது. தலைநகரிலிருந்த சேனைகள் துஷ்டகமுனுவை ஆதரித்து போருக்குக் கிளம்பத்

தயாராயில்லை. இரண்டு சகோதரர்களுக்கிடையில் நடக்கும் சண்டையில் கலந்து கொள்ளுவதில்லை யென்று போர் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரிடம் காலஞ் சென்ற மன்னன் கவந்தீசன் புத்த விஹாரையின் முன்னிலையில் புனிதப் பிரமாணம் வாங்கிக் கொண்டிருந்தான். தனக்குப் பிறகு தனது பிள்ளைகள் யுத்தம் செய்து சீரழி வதைத் தடுக்கக் கவந்தீசன் புத்திசாலித்தனமாக இப்படிப் பல காரியங்களைச் செய்திருந்த பொழுதிலும், விதியைத் தடுக்க முடியவில்லை.

தலைநகரிலுள்ள படைகள் சண்டைக்குத் தயாரில்லை யென்பதை யறிந்ததும் துஷ்டகமுனு மனம் தளர்ந்து விட வில்லை காட்டில் ரகசியமாகத் திரட்டி வைத்திருந்த படை யுடன் புதிதாகச் சிலரையும் சேர்த்துக் கொண்டு தீசனை அவனுடைய இடத்திலேயே முறியடிப்பதற்காக திக வாபியை நோக்கி படைகளைத் திரட்டிக் கொண்டு விரைந்தான்.

இந்த யுத்தத்தில் துஷ்டகமுனுவைவிட தீசன் நிலைமை வசதியானதாயிருந்தது. நன்கு பயிற்றப்பட்ட ஒரு பெரிய சேனை தீசனிடமிருந்து போரை நடத்தியபடி யினால் துஷ்டகமுனுவைச் சுலபமாக முறியடித்து விரட்ட முடிந்தது. தப்பியொடிய கமுனுவை தீசன் வெகு தூரம் வரையில் துரத்திக்கொண்டு ஓடினான். நூற்றுக்கணக் கான பௌத்த பிட்சுக்கள் திரண்டு வந்து தீசனைச் சமா தானப்படுத்தி திகவாபிக்குத் திருப்பியனுப்பினார்கள்.

மஹாகமைக்குத் திரும்பிய துஷ்டகமுனு இன்னொரு பிரம்மாண்டமான சைனியத்தை முழுமூச்சுடன் திரட்ட ஆரம்பித்தான். யுத்தத்தில் அடைந்த தோல்வி அவனைக் கிட்டதட்ட ஒரு வெறியனாக்கியிருந்தது. உயிர் போவதா யிருந்தாலும் மறுபடி புறமுதுகு காட்டிப் போர் முனை யிலிருந்து ஓடி வருவதில்லை யென்ற வைராக்கியத்துடன் திகவாபியின் மீது இரண்டாது தடவையாக அவன் படை யெடுத்தான்.

இந்த யுத்தம் அதிபயங்கரமாக நடந்தது இருதரப் பிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் மடிந்தார்கள்.



குதிரைப் படைகளுக்குத் தலைமை வகித்து முன்னணியில் போர் செய்த துஷ்டகமுனு பட்டத்து யானைமீது அமர்ந்து வந்த தீசனைக் கடுமையாகத் தாக்கவே அந்த நேரடித் தாக்குதலைச் சமாளிக்கமாட்டாமல் யானையை விரட்டிக் கொண்டு தப்பியோட முயன்றான் தீசன். மனிதர்களைக் காட்டிலும் யானைகள் அதிகப் பகுத்தறிவும் தன்மானமும் உள்ளபிராணிகளென்பார்கள். நெஞ்சு உரமில்லாத ஒரு கோழை தன் மீது உட்கார்ந்திருப்பதை அறிந்த பட்டத்து யானை கந்துலா, தீசனைக் கீழே தள்ளிவிட்டு கமுனுவிடம் போய்ச் சேர்ந்தது.

போர் முனையிலிருந்து தப்பியோடிய தீசன் ஒரு விஹாரையினுள் தஞ்சம் புகுந்து விடவும் துஷ்டகமுனு வினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிட்சுக்களிடம் மிகுந்த மரியாதை வைத்திருந்த கமுனு விஹாரையை ஆக்ரமிக்காமல் அதைக் சுற்றிப்பலமான கட்டுக்காவலை ஏற்படுத்திவிட்டு தலைநகர் திரும்பினான்.

சில தினங்களுக்குப் பின்னர் கருணை உள்ளம் படைத்த பிட்சுக்கள் தீசனுக்கு காவி உடை கொடுத்து அவனை ஒரு கட்டிலில் படுக்க வைத்து, எழுந்திருக்க லாம் என்று சொல்லும் வரையில் பேச்சு மூச்சு இல்லாமல் செத்தவனைப் போலக் கட்டிலில் படுத்துக் கிடக்க வேண்டும் என்று கூறி, இறந்த பிட்சுவைத் தகனத்துக்கு எடுத்துச் செல்லுவதைப் போல விஹாரைக்கு வெளியே தூக்கிக் கொண்டு வந்தார்கள். இந்தத் தகவல் துஷ்ட கமுனுவிற்கு எட்டியதும் அவன் வெண்புரவியில் பறந் தோடி வந்து தனது தம்பி தப்பிச் செல்லும் கோலத்தை நேரில் கண்டான்.

பிட்சுக்களை வழிமறித்து நிறுத்திப் பிரேதத்தைப் போலக் கட்டிலில் படுத்திருந்த தீசனைப் பார்த்து, "தீசா! பிட்சுக்களின் பாதுகாப்பிலிருக்கும் வரையில் உனக்கு ஒரு தீமையும் செய்யமாட்டேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்லுகிறேன். இன்று உன்னுடைய உயிர் தப்புவது பிட்சுக்களின் தயவினால்தான். இதை மாத்திரம் மறக் காதே!" என்று சொல்லிவிட்டு அந்த இடத்திலிருந்து

துஷ்டகமுனு வேகமாகப் போய்விட்டான். கமுனுவின் இந்த வார்த்தைகள் தீசனை வெட்கிக் குன்றிப் போகச் செய்து விட்டன.

அண்ணனுக்கு உரிய அரசைக் கைப்பற்ற முயன்றது எவ்வளவு கொடிய பாபமென்பதையும் தீசன் படிப்படியாக உணர ஆரம்பித்தான். திகவாபிக்குத் திரும்பி வந்து சேருவதற்குள் அவன் தாய் விஹாரமாகா தேவி முத்த பிள்ளையை நாடி, மகாகமைக்குப் போய்விட்டது தீசன் மனத்தை வேதனைக்கு உட்படுத்தியது. .

எல்லோருமே தன்னம் தனியாக தன்னை கைவிட்டு விட்டுப் போய்விட்டதைப்போல அவனுக்குத் தோன்றியது. தானும் துஷ்டகமுனுவிடம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்றும், கமுனுவிற்கு பக்கபலமாகயிருந்தது சேவை செய்து தனது பாபங்களைக் கழுவிக் கொள்ளவேண்டுமென்றும், தீசன் நினைக்க ஆரம்பித்தான்.

ஆனல் தன்னைப்போன்றதொரு தேசத் துரோகியை துஷ்டகமுனு மன்னிப்பானு? தம்பியென்ற பாசம் துஷ்ட கமுனுவிடம் இனியும் இருக்குமா? இப்படி நினைத்துப் பார்த்தபொழுது தீசனின் மனம் சொல்லொணு வேதனையும் துன்பமும் அடைந்தது.

தனது தவறுகளை நினைத்து நினைத்துக் கழிவிறக்கம் கொண்ட தீசன் கடைசியாகத் துஷ்ட கமுனுவிடம் புத்த பிட்சுகளையே சமரசத்தூது அனுப்புவதென்று தீர்மானித்தான்.

"என் அண்ணனிடம் நான் எதையும் யாசிக்கவில்லை. நான் செய்த குற்றங்களுக்கு அவனுடைய மனப்பூர்வமான மன்னிப்பு ஒன்றையே நாடுகிறேன். அண்ணன் பக்கத்திலிருந்துகொண்டு அவனுக்குச் சேவைபுரிய சந்தர்ப்பமளித்தால் அதையே எனது கிடைத்தற்கரிய பெரும் பாக்கியமாகக் கருதுவேன்." என்று பிட்சுக்களிடம் தீசன் மனம் கசிந்து முறையிட்டான்.

"கமுனுவின் மேலான குணங்களை நீ அறிய மாட்டாய் ஆனல் நாங்கள் அறிவோம். பௌத்த தர்மத்தில் திளைத்த



கமுனு உடன் பிறந்த சகோதரன் செய்த பிழைகளுக்குக் கழிவிரக்கப் படும்பொழுது நிச்சயம் மன்னித்து ஆட்கொள்ள மறுக்கமாட்டான். அஞ்சாமல் எங்களுடன் புறப்பட்டு வா!" என்று சொல்லி தீசனைத் தங்களுடன் வருமாறு பிட்சுக்கள் அழைத்தனர்.

பிட்சுக்களுடன் இருக்கையில் தனக்கு எவ்விதமான தீங்கும் ஏற்படமாட்டாதென்பதை ஏற்கனவே அனுபவத்தில் அறிந்த தீசன், அவர்களுடன் மகாகமைக்கு தைரியமாகப் புறப்பட்டான்.

துஷ்ட கமுனுவின் அரண்மனையை அடைந்தவுடன் பௌத்த பிட்சுக்கள் தீசனை வெளியே நிறுத்திவிட்டு தாங்கள் மாத்திரம் உள்ளே நுழைந்தார்கள். அவர்களை துஷ்ட கமுனு வழக்கமான மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்துவிட்டு வந்த காரியத்தை விசாரித்தான்.

"கமுனு! அந்நிய ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கவும் பௌத்த தர்மத்தை இந்நாடு முழுவதிலும் நிலைபெறச்செய்யவும் நீ சங்கற்பம் செய்துகொண்டிருக்கிருயல்லவா?" என்று கேட்டார் பிட்சுக்களில் ஒருவர்.

"ஆமாம்! அதில் என்ன சந்தேகம்? புத்தர் பெருமானின் அருளினல் என் இலட்சியம் ஈடேறும் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை! இந்நாடு முழுவதிலும் பௌத்த தர்மம் தழைத்து ஓங்கும் காலம் வெகு சமீபத்திலிருப்பதாகவே நான் நம்புகிறேன் என்ருன் துஷ்ட கமுனு.

"புத்தர் பெருமானின் போதனைகளில் மிகமிக முக்கியமான போதனை என்னவென்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் அதே பிட்சு.

"கருணை!" என்று தயங்காமல் பதிலளித்தான் துஷ்ட கமுனு.

"அந்தக் கருணையை நாடியே நாங்கள் வந்திருக்கிருேம்" என்று அந்த பிட்சு சொல்லியபொழுது அவர்க

ளுடைய விஜயத்தின் நோக்கம் துஷ்ட கமுனுவிற்கு பளிச்சென்று புரிந்துவிட்டது.

"கருணை! தீசனுக்காக கருணை? சோழப் பேரரசை வீழ்த்துவதற்காகப் பயன்படவேண்டிய எனது சைன்யங்களில் பல ஆயிரம் பேர்கள் மடிவதற்குக் காரணமாயிருந்த அந்த தேசத்துரோகியிடமா கருணை காட்ட வேண்டுமென்கிறீர்கள். எனக்கு அவன் இழைத்த அநீதிகள் ஒன்றா இரண்டா? பெற்ற தகப்பனுக்குச் செய்யவேண்டிய அந்திமக் கிரியைகளை நான் செய்ய முடியாமல் தடுத்தான். எனக்குரிய ராஜ்யத்தைக் கைப்பற்றி என்னை நாடோடியாக்கினான். தாயைச் சிறைப்பிடித்து வைத்துக் கொண்டான். நான் பிறந்தபொழுது பிறந்து என்னுடன் சேர்ந்து வளர்ந்த பட்டத்துயானையை அபகரித்தான். இவ்வளவும் போதா தென்று உரிமையைக் கேட்ட அண்ணனைப் போரில் கொன்று நிரந்திரமாக அரசாள விரும்பினான்! பிட்சுவின் உடையில் ஒளிந்துகொண்டு பேடியைப்போல அன்று அவன் தப்பியோடிய பொழுதே நான் கொன்று போட்டிருக்கவேண்டும். புனிதமான மஞ்சள் உடைக்கு மதிப்புக்கொடுத்து அவனுக்கு உயிர்ப்பிச்சை யளித்தேன். இப்பொழுது ராஜ்யத்தில் பங்கு கேட்க உங்களைத் தூது அனுப்பியிருக்கிறான் போலிருக்கிறது. அவனுக்கு ஒரு கிராமத்தைக்கூட நான் தரப்போவதில்லை. கருணை காட்டுவதற்கு அவன் உரிய பாத்திரமுமில்லை! இதுதான் என் முடிவானபதில்?" என்று வார்த்தைகளை மளமளவென்று சிந்தினான் துஷ்டகமுனு.

"உன் தம்பியை நீ தவறாக மதிப்பிடுகிறாய் கமுனு! அவனுக்கு ஒரு கிராமத்தைக்கூட கொடுக்க முடியாது என்றல்லவா நீ சொன்னாய்? ஒரு சிறு குடிசையைக்கூட உன்னிடம் அவன் யாசிக்கவில்லை. செய்த தவறுகளுக்கு மனப்பூர்வமாக வருந்தி உன் கால்களில் விழுந்து மன்னிப்புக்கேட்க நிராயுத பாணியாக தீசன் வந்திருக்கிறான். உன்னிடம் அவன் யாசிப்ப தெல்லாம் கருணையுள்ளத்துடன் நீ மன்னிக்க வேண்டுமென்பது ஒன்றைத்தான். கருணைக்கடலான புத்த பகவானின் பெயரினால் உன்



மன்னிப்பை அவன் நாடுகிறான். இன்னொன்றும் சொல்லுகிறேன் கேள். மனிதர்களில் யாரும் துஷ்டர்களாகவும் பாபிகளாகவும் பிறப்பதில்லை. பிறவியில் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள். சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளே மனிதர்களின் குண விசேஷங்களை மாற்றியமைக்கிறது. தவறு செய்வது மனித இயற்கை. செய்த தவறுக்கு கழிவிரக்கப் படுபவன் பாபத்திலிருந்து விடுதலை பெற்று புது மனிதனாகி விடுகிறான். உலகத்தில் தவறு இழைப்பவர்கள் எவருமே யில்லையென்றால் கருணை என்ற வார்த்தைக்கே மதிப்பில்லை. அதிகத் தவறு இழைத்தவர்களைக்கூட மன்னிப்பதில்தான் கருணையின் பெருமையும் சிறப்பும் அடங்கியிருக்கிறது. உன் தம்பி தீசன் சுபாவத்தில் கொடியவனில்லை.ஆசை அவன் கண்களைச் சிறிது மறைத்துவிட்டது. மனப்பூர்வமாக மன்னிப்பை நாடிவந்திருக்கும் சகோதரனை உதறித்தள்ளுவது தர்மமில்லை கமுனு!"

இப்படி புத்தபிட்சு வாதிக்கவே துஷ்டகமுனுவின் மனம் இளகிவிட்டது. "தீசன் உங்களுடன் வந்திருக்கிறானா? என் தம்பி உங்களோடு வந்திருக்கிறானா?" என்று விசாரித்தான். தீசன் வெளியே நிற்பதாக பிட்சுக்கள் சொல்லவும் துஷ்ட கமுனு ஓடோடியும் சென்று தீசனை மார்புறத் தழுவிக்கொண்டு "தம்பி! வா! உள்ளே வா!" என்று ஆதரவுடன் உள்ளே அழைத்து வந்தான். இந்தக் காட்சியைப் பார்த்து விஹார மகாதேவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். பௌத்த பிட்சுக்கள் அவ்விரு சகோதரர்களையும் அன்பு நிறைய வாழ்த்தினர்.

# 10. விஜிதபுரம் வீழ்ந்தது

தம்பி தீசன் திரும்பி வந்து விட்டது துஷ்டகமுனுவுக்கு உண்மையாகவே பெருமையை அளித்தது. தீசன் திரும்பிய சம்பவத்தைக் கோலாகலமாக நாடெங்கும் கொண்டாட உத்தரவிட்டான்.

"என் அருமைத் தம்பி என்னிடம் திரும்பிவிட்டான். இனி என்னைப் போன்ற பாக்கியசாலி வேறு யார்? இந்த ராஜ்யம் எங்கள் இருவருக்குமே சொந்தம். நான் வேறு என் தம்பி வேறு இல்லை. சகல ராஜ மரியாதைகளும் அவனுக்கும் செய்யப்படவேண்டும். தம்பியின் பக்கபலத்துடன் தமிழர்களை இந்நாட்டிலிருந்து விரட்டி பழம் பெருமை வாய்ந்த சிங்கள சிம்மாதனத்தை மீட்பேன். இன்று முதல் படை திரளட்டும். கிராமத்துக்கு கிராமம், வீட்டுக்கு வீடு படைக்கு ஆள் சேருங்கள்." என்றான் துஷ்டகமுனு.

தமிழர்களுடன் நடத்தப் போகும் போராட்டத்தை பௌத்த தர்மத்துக்காக நடத்தும் புனிதப் போராட்டமாக அவன் வருணித்தது நல்ல பலனை அளித்தது. மக்கள் ஆயிரமாயிரமாகப் படையில் வந்து திரண்டார்கள். இவ்வளவுக்கும் மேலாக துஷ்டகமுனுவுக்கு அவனுடைய தாயின் ஆதரவு பக்கபலமாயிருந்தது. பழந்தமிழ் நாட்டு வீராங்கனைகளைப் போல விஹாரமகாதேவி துஷ்டகமுனுவை மேலும் மேலும் ஊக்குவித்துக் கொண்டிருந்தாள். பிள்ளைப் பிராயம் முதற்கொண்டு சோழப்பேரரசை வீழ்த்த வேண்டுமென்ற எண்ணத்தை துஷ்டகமுனுவின் மனதில் விதைத்தவளும், பிறகு அதை வளர்த்து வெறியாக்கியவளும் விஹாரமாகதேவியேதான். இக்காரணத்தை முன்னிட்டே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் சிங்கள சமூகம் விஹார மகாதேவியை



"விடுதலைப் போரின் சிப்பி"யென்றும் வீராங்கனையென்றும் தலைவணங்கி போற்றிப் புகழ்ந்து வருகிறது.

நிற்க படைதிரண்டவுடன் துஷ்டகமுனு பட்டத்து யானை கந்துலாமீதேறி போருக்குப் புறப்பட்டான். அவனுக்கு யுத்த தந்திரங்களில் அவ்வப்பொழுது யோசனைகள் கூற யுத்தமந்திரியின் ஸ்தானத்தில் விஹாரமகாதேவியும் உடன்சென்றாள். தர்மம், தங்கள் கட்சியிலிருப்பதாகச் சொல்லிக்கொள்ளவும் மதத்தைக்காட்டி வீரர்களின் உற்சாகத்தை அவ்வப்பொழுது தட்டியெழுப்பவும் ஏராளமான * பௌத்த பிட்சுக்களையும் துஷ்ட கமுனு தன்னுடன் அழைத்துச் சென்றான். வழிநெடுக ஜனங்கள்

---

*இந்தச் சம்பவத்தைப்பற்றி பௌத்த நூலாகிய மகாவம்சத்தில் பிரஸ்தாபமேயில்லை. ஆயினும் புராதன சிங்கள கவிதைகளில் இதைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கதிரையம்பதியில் மாணிக்க கங்காநதி தீரத்தில் துட்ட கமுனு பல தினங்கள் வரையில் கடும் விரதத்துடன் தவமிருந்து முருகப்பெருமானின் அருளை வேண்டியதாயும் கனவில் முருகன் தோன்றி அருள்புரிந்த பிறகே துட்ட கமுனு யுத்தத்தில் தைரியமாக இறங்கினனென்றும் பழைய சிங்கள கவிதைகளில் உணர்ச்சியோடு வருணிக்கப்பட்டிருப்பதை காலஞ் சென்ற தமிழ்ப்பெரியார் ஸர். பொன்னம்பலம் அருணசலம் "கதிர்காமத்தில்கந்தன் வழிபாடு" என்ற பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். வெற்றியுடன் திரும்பிய துட்ட கமுனு கதிரையம்பதியில் கல் திருப்பணிகள் செய்து ஆலயத்தைப் புதுப்பித்ததுடன் கோயிலுக்கு ஏராளமான நிலங்களையும் மான்யமாக விட்டான். இதைத் தொடர்ந்து பிற்காலச் சிங்கள மன்னர்களில் பலரும் கதிர் காமத்துக்கு விசேஷ மான்யங்கள் வழங்கியிருப்பதோடு போர்க் கடவுளாக முருகனைக் கருதி வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

இந்த சம்பவம் இன்னொரு முக்கியமான உண்மையையும் அறிவுறுத்துகின்றன. செப்பனிட்டு புதுப்பிப்பதாக துட்ட கமுனு நேர்ந்துகொள்ளும் அளவிற்கு அவன் காலத்தில் கதிர்காமக்கோயில் பழமையான நிலைமையிலிருந்த தென்பதையும் இந்த விவரம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. முருகனின்

ஆரவாரம்செய்து 'விடுதலை சைன்யத்தை' உற்சாகப் படுத்தி வழியனுப்பி வைத்தார்கள். அந்தக் காலத்தில் மன்னர்கள் பௌத்தர்களாயிருப்பினும் சில இந்து மதத் தெய்வங்களை வழிபடும் வழக்கமும் அவர்களிடையில் இருந்துவந்தது. மகாவிஷ்ணு, கதிர்காமத்தில் கோயில் கொண்டிருக்கும் கார்த்திகேயன் ஆகிய இரு தெய்வங்களையும் இலங்கையைக் காத்து ரட்சிக்கும் தெய்வங்களாக பண்டைச் சிங்களவர்கள் கருதினர். சிங்கள மன்னர்கள் யுத்தமுனைக்குப் போவதாயின் வெற்றிக்காக இவ்விரு தெய்வங்களையும் வழிபட்டு வரம்பெற்றுக் கொண்ட பிறகே புறப்படுவார்கள். இந்த வழக்கம் சிங்கள மன்னர்களிடம் பல நூற்றாண்டுகள் வரையிலிருந்தது. இதை அனுசரித்து துஷ்ட கமுனுவும் சோழப் பேரரசின் படைகளைத் தகர்க்கக் கிளம்பியபொழுது கதிரையம்பதியில் முகாமிட்டு தமிழர்களை முறியடிக்க தமிழ்க் கடவுளான முருகனிடமே வரம் கேட்டுக்கொண்டு போனான். வெற்றி வாகையுடன் திரும்பினால் கதிர் காமக்கோயிலில் திருப்பணிகள் செய்து புதுப்பிப்பதாகவும் அவன் நேர்ந்து கொண்டான்.*

கச்ச ஆதித்தன் கோட்டையைத் தாக்கிப்பிடிக்க நான்கு மாதகாலம் கடும் பிரயத்தனங்கள் செய்த துஷ்ட கமுனுவின் படைகள் வெற்றியின் அறிகுறியைக்காணாமல் ஆய்ந்து ஓய்ந்துபோய்விட்டன. இதற்கிடையில் உணவுப் பஞ்சம் அவர்களை கடுமையாக வாட்ட ஆரம்பித்தது. வயிறு காயத்தொடங்கவும் படையில் சிறுசிறு கலவரங்

---

ஆறுபடை வீடுகளில் ஒன்றும் வள்ளியை மணந்த புனித க்ஷேத்திரமும் பாடல்பெற்ற புண்ணிய ஸ்தலமுமான கதிர் காமத்தின் பழமையும், சிங்களவர்களும் பௌத்த மதமும் இலங்கையில் தலையெடுப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே சைவம் உன்னதமான நிலைமையில் இங்கு தழைத்து வந்ததும் சந்தேகத்துக்கு இடமின்றி ருசுவாகின்றன. மாதோட்டத்திலிருந்த திருக்கேதீச்வரம், கடல் கொண்டுவிட்ட கோணேஸ்வரம் ஆகியவை புராதன இலங்கையின் மற்று மிரு சைவக் கோட்டைகள்.*



களும் அமைதியின்மையும் தலைகாட்டின. இந்த நிலைமை நீடித்தால் எவ்வளவு பெரிய அபாயம் ஏற்படுமென்பதை துஷ்ட கமுனு நன்கு உணர்ந்திருந்தான். எக்காரணத்தை முன்னிட்டும் அவன் முன்வைத்த காலைப் பின் வாங்குவதற்கில்லை. யுத்தத்தை நிறுத்திக்கொண்டு ரோஹணரடாவிற்கு அவன் பின் வாங்கினாலும் சோழப்பேரரசு இனிச் சும்மாயிருக்காதென்பது அவனுக்குத்தெரியும். ஆதிபத்திய அதிகாரத்தை எதிர்க்கத் தலைப்பட்ட சிங்கள ராஜ்யங்களை அடியோடு அழிக்க சோழப்பேரரசு வலுத்தாக்குதலை நடத்தாமல் விடப்போவதில்லை. தகப்பன் பேச்சை மீறி ஆரம்பித்த யுத்தத்தின் முடிவைப் பாராமல் திரும்புவதில் பனில்லையென்பதும் வெற்றி அல்லது வீரமரணம் இவ்விரண்டைத் தவிர தனக்கு வேறு வழியேயில்லை யென்பதையும் துஷ்டகமுனு திட்டவட்டமாக அறிந்திருந்தான். இதோடு அவனுக்கு இன்னொரு உண்மையும் உதயமாகியிருந்தது. கச்ச ஆதித்தன் கோட்டையைத் தாக்கிப் பிடிப்பதற்கு நடக்கும் யுத்தத்தில் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாகிக் களைத்துப்போயிருக்கும் தனது சேனைகளின் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால் துரிதமாக வெற்றி காணவேண்டும். இல்லாவிடில் படுதோல்வியடைந்து ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த நெருக்கடியான கட்டத்தில் துஷ்டகமுனுவின் மூளை அதி தீவிரமாக வேலை செய்தது.

கடைசியாக அவன் ஒரு முடிவிற்கு வந்தான். தனது அந்தரங்க நண்பர்களில் ஒருவனிடம் ரகசியமாகச் சில யோசனைகளைச் சொல்லி அவனை கோட்டைக்குத் தூது அனுப்பினான். அவ்வளவுதான். சிலநாழிகைநேரத்துக்கெல்லாம் கோட்டையின் கதவுக்ள் திறந்தன. தமிழ்த் தளபதி ஒரு சிறு தற்பாதுகாப்புப் படையுடன் துஷ்ட கமுனுவைச் சந்திக்க வெளியே வந்தான். இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த துஷ்ட கமுனு சங்கநாதம் செய்து சமிக்ஞை கொடுக்கவே, சிங்களப் படைகள் மளமள வென்று கோட்டைக்குள் நுழைந்துவிட்டன. யுத்தம் நின்றுவிட்டதாக எண்ணி அயர்ந்திருந்த தமிழ்ப்படைகள் இம்மாதிரியான திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.

சொற்ப நேரத்துக்குள் கச்ச ஆதித்தன் கோட்டை துஷ்ட கமுனுவின் வசமாகியது. அதன் தளபதியும் வஞ்சகத்துக்குப் பலியாகி உயிர் துறந்தான்.

உறுதியுடன் போராடிய தமிழ்ப்படைகளை முறியடிக்க துஷ்ட கமுனு கையாண்ட உபாயம் என்ன? கோட்டைக்கு அனுப்பிய சமாதானத் தூதனிடம் அவன் என்ன சொல்லியனுப்பினான்? இந்த ரகசியம் இன்று வரையில் தெளிவாக யாருக்கும் தெரியாது. தனது தாய் விஹார மகாதேவியின் பேரெழிலை அவன் பயன் படுத்தினான் என்று மட்டும் மகாவம்சம் மர்மமாகச் சொல்லுகிறது. இந்த மர்மத்தை மகாநாமன் என்ற பௌத்த பிட்சுவினால் திருத்தியெழுதப்பட்ட மகாவம்ச தீபிகை என்ற நூல் மேலும் சிறிது விளக்கி எழுதியிருக்கிறது. துஷ்டகமுனு தனது தாய் விஹார மகாதேவியைத் தமிழ்த் தளபதிக்கு மறுமணம் செய்விப்பதாக அவன் நம்பும்படி உறுதிகூறினானென்றும், இதை நம்பியே தமிழ்த்தளபதி போரைநிறுத்தி துஷ்ட கமுனுவைச் சந்திக்க கோட்டைக்கு வெளியில் வந்தானென்றும் மகாவம்ச தீபிகை கூறுகிறது. இது எப்படியாயினும் தமிழர் கோட்டையை வஞ்சமாகக் கைப்பற்றி தனது தாயின் பெயரை மிகமிக இழிவான முறையில் துஷ்ட கமுனு பயன்படுத்தினானென்பதிலும் இதற்கு விஹாரமகாதேவியும் உடந்தையாயிருந்தாளென்பதிலும் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கிடையில் அபிப்பிராய பேதமில்லை. இம்மாதிரியானதொரு வஞ்சகத்திட்டத்தை துஷ்ட கமுனு கடைப்பிடித்திராவிடில் அவன் காலத்திய தேசசரித்திரத்தின் போக்கே வேறு விதமாகியிருக்கும்.

கச்ச ஆதித்தன் கோட்டையை அடுத்து ஒவ்வொரு தமிழர் அரண்களையும் கைப்பற்ற சிங்களப்படைகளுக்கு மாதக் கணக்கிலாயிற்று, ஆயினும் செல்வம் கொழிக்கும் தமிழ் ராஜ்யத்தில் நுழைந்தவுடன் அவர்களுக்குச் சாப்பாட்டுக் கவலையில்லை. காலம் தவறாமல் வயிறார உண்டும் கொள்ளையிட்டும் ஏராளமான பொருள்களைத் திரட்டிச் சேமித்துக் கொண்டிருந்தது. உறுதி தளராமலிருந்த சிங்களப்படைகள் கடைசியாக விஜிதபுரம் கோட்டையை



நெருங்கியபொழுதுதான் ஒரு கொடுமையான சோதனை காத்திருந்தது. அநுராதபுரத்திற்குத் தெற்கே கலலுயா என்ற கோணநதி தீரத்தில் வானத்தை முட்டிக்கொண்டு நின்ற விஜிதபுரக்கோட்டை சிங்களப்படைகளுக்கு முன்னால் இமயத்தைப்போல நின்றது. சோழப்பேரரசின் முக்கியப் பாதுகாப்பு அரணாக விளங்கியது விஜிதபுரம். சிங்களப் படைகள் கோட்டையை நெருங்கியதுதான் தாமதம், கோட்டையின் மேலிருந்து அதி பயங்கரமான ஆயுதங்கள் எய்பவர் யாரெனத் தெரியாமலே பாய்ந்துவந்து கோரமாகத் தாக்கின. பழுக்கக்காய்ச்சி உருக்கிய இரும்பும் ஈயமும் மழை பொழிவதைப்போலப் பொழிந்தன. விசைகளினால் இயக்கப்பட்டு மலை போன்ற பாறைகள் வானத்திலிருந்து விழுவதைப் போல உருண்டு வந்து சிங்களப் படைகளைச் சின்னா பின்னப்படுத்தி தலை தெரிக்க ஓடச் செய்தன. இதுவரையில் சோழர் சைன்யத்தின் ஆள் பலத்தை மட்டுமே பார்த்த சிங்களவர்களுக்கு, மலைப்பாறைகளையும் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தையும் சரமாரியாக அம்பு, ஈட்டி, வேல் முதலான ஆயுதங்களையும் தூக்கி வீசும் நவீன இயந்திர சாதனங்களை விஜீதபுரத்தில் கண்டது பயங்கரமான அதிர்ச்சியைக் கொடுத்தது.

பயந்து ஒடுங்கிச் சிதைந்துபோன வீரர்களை உற்சாகப் படுத்தி மீண்டும் ஒன்று திரட்ட துஷ்ட கமுனுவும் அவன் தாய் விஹாரமகாதேவியும் பெரும் பிரயத்தனப்பட்டார்கள்.

ஒருநாள் துஷ்டகமுனு முகாமில் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருக்கையில் படுகாயங்களுடன் ஒரு வீரன் ஓடோடி வந்தான். முகாமில் நுழைந்தவன் வழக்கமான மரியாதைகளையெல்லாம் மறந்து "ஆபத்து! ஆபத்து! மகாராஜா ஆபத்து!" என்று கூக்குரலிட்டான்.

சோழர் சேனைகள் அநுராத புரத்திலிருந்து திரண்டு வந்திருக்க வேண்டுமென்று துஷ்ட கமுனு நினைத்திருக்க வேண்டும். வந்த வீரனைவிடப் பன் மடங்கு அதிகப் பதட்

டத்துடன் எழுந்த துஷ்ட கமுனு" என்ன நடந்தது? போர் முனையிலிருந்து என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறாய்? சீக்கிரம் சொல்லு!" என்று அவசரப் படுத்தினான்.

அந்தவீரன் காயங்களின் வலி பொறுக்க மாட்டாமல் முக்கி முனகியவாறு ஒரு துக்ககரமான செய்தியைச் சொன்னான்.

"விஜிதபுரம் கோட்டையின் தென்புற மதில்களை நந்திமித்திரன் தலைமையில் யானைப்படை அகோரமாகத் தாக்கிக் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் மதில் தகர்ந்து விடுமென்று எதிர்பார்த்து பின்னணியில் காலாட் படைகள் ஆயத்தமாகத் திரண்டு நின்றன. மதில் தகர்ந்து விழுந்தவுடன் காலாட்படைகள் கோட்டைக்குள் நுழைந்து தாக்கவேண்டு மென்பது தளபதி நந்திமித்திரர் உத்திரவு. வெற்றி கிட்டிவிட்டதாக எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கையில் எதிர்பாரத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. முன்னணியில் நின்ற பட்டத்துயானை கந்துலாவும் மற்ற யானைகளும் திடீரென்று மதம் பிடித்துத் திரும்பிவந்து நம் காலாட் படைகளையே தாக்க வாரம்பித்தன. மதம் பிடித்த யானைகளுக்குமுன் மனிதர்கள் எம்மாத்திரம்? காலாட்படைகள் சிதறி ஓடத் தலைப்பட்டு விட்டன. நூற்றுக் கணக்கானவர்கள் யானைகளின் காலடியில் மிதிபட்டு நசுங்கிச் செத்து விட்டார்கள். கோட்டைக்கு மேலிருந்து தமிழ் வீரர்கள் வெற்றி முழக்கம் செய்கின்றனர்.

இதுதான் போர்முனையி லிருந்துவந்த தூதன் சுருக்கமாகச் சொல்லிய விவரம். அவன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் தளபதி நந்திமித்திரனே அங்கு வந்து விட்டான்.

"போர் முனையில் என்ன நடந்தது. நந்திமித்திரா? யானைகளுக்குத் திடீரென்று மதம் பிடிப்பானேன்? கந்துலாவிற்குமா மதம்பிடித்து விட்டது?" என்று கேட்டான் கமுனு.

"ஒரு யானைக்கும் மதம் பிடிக்கவில்லை மகாராஜா! நடந்ததுவேறு! தென் பக்கத்து மதில் சுவறை யானைப்



படைகள் தகர்க்க முயற்சித்த பொழுது கோட்டைக்கு மேலிருந்து பழுக்கக் காய்ச்சிய ஈயத்தைக் கொட்டியிருக்கிறார்கள். எரி புண்களினால் அவஸ்தைப்பட்ட யானைகள் வேதனை தாங்கமாட்டாமல் ஓட்டம் பிடித்திருக்கின்றன. இப்பொழுது கந்துலாவும் மற்ற யானைகளும் குளத்தில் விழுந்து எரிகாயங்களின் வெம்மையைச் சாந்தி செய்து கொள்ளுகின்றன. யானைகள் வேதனையோடு ஓடியதால் மிதிபட்டு சிலருக்கு பலமான காயம். கொஞ்சம்பேர் இறந்திருக்கச் கூடுமென்று தெரிகிறது. சூரநிமலன் பின் வாங்கி ஓடிய நம் ஆட்களுக்கு தைரிய மூட்டி திருப்ப முகாம்களில் திரட்டிக் கொண்டிருக்கிறான்!" என்று நடந்ததைச் சொன்னான் நந்திமித்திரன்.

துஷ்ட கமனு ஒரு கணம் அயர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான். பிறகு "கந்துலாவிற்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படக்கூடாது. பட்டத்துயானை இறந்தால் பெரிய அபசகுணமென்பார்கள். தவிர நான் பிறக்கும் போது பிறந்து, என்னைப்போல செல்வமாக வளர்ந்த கந்துலாவிற்கு ஏதாவது விபரீதம் நடந்து விட்டால் அதை என்னால் சகித்துக்கொள்ளவே முடியாது! கைதேர்ந்த ரணசிகிச்சை நிபுணர்களைக் கொண்டு காயமடைந்த கந்துலாவையும் மற்ற யானைகளையும் கவனிக்கச் சொல்லு. மற்றவைகளைப் பிறகு யோசிப்போம்" என்று துஷ்ட கமுனு சொல்லியனுப்பினான்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு உளவாளிகளிடமிருந்து உபயோகமான பல தகவல்கள் துஷ்ட கமுனுவிற்குக் கிடைத்தன. விஜிதபுரக் கோட்டையின் தெற்கு மேற்கு, கிழக்கு பக்கங்களில் மட்டும்தான் இயந்திர சாதனப் படைகளிருப்பதாயும் வட பகுதியில் நவீன படைக்கலன்கள் ஏது மில்லையென்றும், வடபுறத்திலிருந்து தாக்குதல் நடத்தினால் கோட்டை சுலபமாக வீழ்ச்சியடைவதுடன் கோட்டைக்குள் இருப்பவர்கள் வடக்கு நோக்கித் தப்பிச் செல்லவும் முடியாதென்றும் உளவாளிகள் புலன் விசாரித்துக் கொண்டுவந்தார்கள். துஷ்ட கமுனு தனது தாயுடனும் படைத்தலைவர்களுடனும்

மந்திராலோசனை செய்து ஒரு அருமையான திட்டத்தைத் தயாரித்தான்

இரவோடு இரவாக பத்தாயிரம் பேர்கள் கொண்ட ஒருபடை தோணிகளிலும் கட்டு மரங்களிலும் ஏறி கோணி நதியை எதிர்த்துச் சென்று விஜிதபுரத்துக்கு வடக்கே இறங்கி காடுகளில் மறைந்திருக்க வேண்டும். பாக்கிப் படைகள் இரவில் கிழக்கு நோக்கிச் சென்று பிறகு வடக்கே திரும்பிக் காத்திருக்க வேண்டும். சமிக்ஞை கிடைத்தவுடன் கோட்டையின் வடபுறத்தை இரண்டு பக்கத்துப்படைகளும் எதிர் பாராமல் தாக்கவேண்டும். இதுதான் துஷ்ட கமுனு தயாரித்த திட்டம்.

இந்த ஏற்பாட்டின்படி படைகள் முகாம்களைக் காலி செய்துகொண்டு பின்வாங்கி விட்டதைப்போல கொஞ்ச தூரம் தெற்கே சென்று அங்கிருந்து திட்டப்படி இரண்டு கிளைகளாகப் பிரிந்து சென்றன. கோட்டையிலிருந்து பார்ப்பவர்களுக்கு சிங்களப் படைகள் பின்வாங்கித் தென்னிலங்கைக்குத் திரும்பி விட்டதைப் போலவே தோன்றியது. துஷ்ட கமுனுவின் சாணக்கியத் தந்திரங்களை எதிர்பாராமல் விஜிதபுரக் கோட்டை வாண வேடிக்கைகளுடன் வெற்றி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் சிங்களப் படைகள் கோட்டையின் வடபுறத்தை திடீரென்று பயங்கரமாகத் தாக்கின. வட புறம் முழுவதிலும் தமிழர் ஆட்சி ஸ்திரமாயிருந்தபடியினால் அந்தத் திசையிலிருந்து தாக்குதல் வருமென்பதை விஜிதபுரக் கோட்டைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. ஆயினும் கடைசிவரையில் கோட்டைப் படைகள் வீரமுடன் நின்று எதிர்த்து இனிச் சமாளிக்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டவுடன் எதிர்ப்பை நிறுத்தின. சில நாழிகைக்குப் பிறகு கோட்டையின் கொடி மரத்தில் சிங்களக் கொடி பறக்க வாரம்பித்தது.

மஹாகமையிலிருந்து திசமஹாராமாவிற்குச் சென்ற துஷ்டகமுனுவின் சேனைகள் அங்கிருந்து வடக்குநோக்கிப் பிரயாணப்பட்டது. பெரிய சைன்யங்கள் செல்லத்தகுந்த முறையான பாதைகள் அப்போழுதில்லாத படியினால்



அவர்கள் பல இடங்களிலும் தங்கி காட்டை வெட்டிப் பாதைகளை அமைத்துக் கொண்டுபோக வேண்டிய தாயிற்று. இன்று புத்தள என்று வழங்கப்படும் குத்த ஹலகா என்னு மிடத்தைத் தாண்டி பிந்தென்னை (அல்லது அலுத்னுவாரை) பகுதியில் மகாவலி கங்கையின் தென் கரையில் உள்ள மஹியங்கனை என்னு மிடத்தை நெருங்கும் வரையில் துஷ்ட கமுனுவைத் தட்டிக் கேட்பவர்கள் யாருமில்லை. மகாவலி கங்கைக்குத் தெற்கில் சிங்களவர்களின் அரசு நடப்பதைச் சோழப் பேரரசு அனுமதித்திருந்தபடியினால் அந்த பிரதேசங்களை அடையும் வரையில் துஷ்ட கமுனுவிற்குச் சிரமமேயில்லை.

மகாவலி கங்கையின் மறுகரையில் அதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து சங்கம ஸ்தானம் வரையில் எல்லைப் பாதுகாப்பிற்காக அடுத்தடுத்து பல கோட்டைகளை ஏற்படுத்தியிருந்தான் எல்லாளன். இந்த முன்னணிப் பாதுகாப்புக்குப் பின்னால் அடுத்தடுத்து பல அரண்களும் அவைகளில் பலம் பொருந்திய படைகளும் இருந்தன. இந்தக் கோட்டை கொத்தளங்களுக் கெல்லாம் முன்னணியிலிருந்தது மஹியங்கனைக் கோட்டை. அதையே துஷ்ட கமுனு முதலில் தாக்கவேண்டிய தாயிற்று. மஹியங்கனையிலிருந்து தமிழர் படைகள் திடீரென்று தாக்கிய சிங்களவர்களின் படையெடுப்பைச் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. ஆதலால் கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் சோழப் படைகள் கோட்டையைக் கைவிட்டு வட திசையை நோக்கிப் பின் வாங்கின.

ஆரம்ப வெற்றியில் பெருமித மடைந்த சிங்கள சேனைகள், அதே போல சுலபமாக வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று சோழப் பேரரசை வெட்டிச் சாய்த்து விடலாமென்ற அமித நம்பிக்கையுடன் பிந்தன்னைக்கு அருகிலுள்ள கச்சஆதித்தன் (இப்பொழுது மஹநகோட்டை எனப்படும் இடம்) கோட்டையை முற்றுகையிட்டன. இந்த இடத்தில்தான் சிங்களப் படைகளுக்கு முதன்முதலாக பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. நான்கு மாத காலம் வரையில் இந்த உக்கிரமான போராட்டம் நடந்

தும் இரு தரப்பிற்கும் வெற்றி தோல்வி தெரிவதாயில்லை. சோழர் படைகளை வெற்றி கொள்வது எவ்வளவு கடுமையானதென்பதை கச்சஆதித்தன் கோட்டை ஒவ்வொரு விநாடியும் துஷ்ட கமுனுவிற்கு உணர்த்திக் காட்டிக் கொண்டிருந்தது. கோட்டையைப் போர் செய்து பிடிப்பது அசாத்தியமென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட துஷ்டகமுனு, ராஜ தந்திரமென்ற பெயரில் நயவஞ்சகமாக ஒரு காரியத்தைச் செய்யத் திட்டமிட்டான். எந்தத் தாயை தெய்வமென அவன் பூஜித்து வந்தானோ, எவருடைய உபதேசங்கள் அவனைத் சிறந்த தேச பக்தனாகவும் வீரனாகவும் விளங்கச் செய்ததோ அதே தாயை மிகமிக ஈனமான, கீழ்தரமான ஒரு வஞ்சகச் சதியில் துஷ்ட கமுனு சம்பந்தப்படுத்தினான். சோழப் பேரரசின் ஆதிக்கத்தை நிலைகுலையச் செய்யவேண்டுமென்ற வெறி, தாயின் மானத்தையே விலை கூறும் அளவிற்கு அவனிடம் மிதமிஞ்சிப் போயிருந்தது. துஷ்டகமுனுவின் வீரஞ் செறிந்த வாழ்க்கையில் இது ஒரு மாறாத களங்கமென்பதை சரித்திர ஆசிரியர்கள் மறுப்பதற்கில்லை.

# 11. தோல்வியிலும் வெற்றி

தமிழர்களின் பலம்பொருந்திய முன்னணிக் கோட்டையான விஜிதபுரம் வீழ்ச்சியடைந்துவிட்டதென்ற தகவல் எட்டியதும் தென்னிலங்கை திருவிழாக் கொண்டாடியது. துஷ்ட கமுனுவின் திறமையிலும் துணிச்சலிலும் அவநம்பிக்கை கொண்டிருந்தவர்கள்கூட இப்பொழுது அவனை ஒரு பெருவீரனாகப் புகழ ஆரம்பித்தனர். ஆள் உதவியும் பொருள் உதவியும் தென்னிலங்கையிலிருந்து அமோகமாக வந்து சேர்ந்தது. சோழப் பேரரசை வீழ்த்த கிட்டத்தட்ட தென்னிலங்கை முழுவதுமே திரண்டு வந்துவிட்டதைப் போலிருந்தது.

இதற்கிடையில் மாமன்னன் எல்லாளனுக்கும் யுத்தத்தின் போக்கைப் பற்றி அவ்வப்பொழுது தகவல்



கிடைத்துக்கொண்டுதானிருந்தது. இந்தியாவில் அசோகனும் இலங்கையில் அவனது நண்பன் தேவனம்பிய தீசனும் ஜன சமுதாயத்தின் தார்மீகப் பண்புகளில் எவ்விதம் வெகுவாக நம்பிக்கை வைத்து ராணுவ பலத்தை அலட்சியப்படுத்தினார்களோ அதே நிலைமையில்தானிருந்தான் எல்லாளனும். ஆக்கிரமித்த நாட்டிலே தர்மத்தின் அடிப்படையில் நல்லாட்சியை ஸ்தாபித்து விட்டோமென்ற பெருமிதத்தில் கொஞ்ச காலமாகப் படைப் பலத்தில் அவன் அதிக அக்கறை கொள்ளவில்லை. தவிர, வயோதிகமும் அவன் மனப்போக்கில் மாறுதலைச் செய்திருந்தது. தமிழர், சிங்களவர், இந்துக்கள், பௌத்தர்கள் என்று பேதமின்றி சகலரையும் சரிசமமாக நடத்தி தர்மத்துக்காகத் தலையையும் கொடுக்கத் தயாராயிருந்த தனது ஆட்சிக்கு எதிர்ப்பு ஏற்படுமென்றும், தென்னிலங்கையிலிருந்து படையெடுப்பு நடக்குமென்றும் எல்லாளன் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை.

அவன் வசம் இருந்த பலம் பொருந்திய மூலப் படை விஜிதபுரக் கோட்டையில்தானிருந்தது. அந்தப் படையே முறியடிக்கப் பட்டுவிட்டதென்ற செய்தியைக் கேட்டதும் எல்லாளன் அதிர்ச்சியடைந்து போனான். விஜிதபுரத்திலிருந்து அடிக்கடி வந்த உளவாளிகள் பரபரப்பான செய்திகளைக் கொண்டு வந்தார்கள். முன்னேறி வரும் பிரம்மாண்டமான சிங்கள சைனியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காண முடியுமென்ற நம்பிக்கையை எல்லாளன் படிப்படியாக இழந்து கொண்டு வந்தான்.

ஆயினும் உதவிப் படைகளைத் தருவிக்க சோழ நாட்டுக்குத் தூதுவர்களை அனுப்பிவிட்டு உதவி வரும் வரையில் எப்படியாவது நின்று தாக்கு பிடிப்பதென்று அவன் முடிவு செய்தான். நகரிலிருந்த பொதுஜனங்களை அவசரம் அவசரமாக நாகதவிபத்துக்கு வெளியேற்றி விட்டுச் சிங்களப் படைகளின் வருகைக்காக அவன் காத்திருந்தான். எல்லாளனின் வெற்றி தோல்வி தென் பாரதத்திலிருந்து உதவிப் யடைகள் வருவதையும் அது வரையில் சிங்களப் படைகளை நின்று பிடிப்பதையுமே பொருத்திருந்தது.

ஆனல் சிங்கள சைனியங்கள் விஜிதபுரத்திலிருந்து இரண்டு கிளைகளாகப் பிரிந்து அநுராதபுரத்தின்மீது இடுக்கித் தாக்குதல் நடத்த அதிவேகமாக வந்தன. புற்றீசல்களைப் போல ஆயிரமாயிரமாக, லட்சம் லட்சமாக சிங்களவர்கள் அநுராதபுரத்தில் பிரவேசித்தார்கள். நகரை சர்வ நாசம் செய்துவிட்டு கோட்டையைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டார்கள். விஜிதபுரக் கோட்டை டைக் காட்டிலும் பன்மடங்கு அதிக உறுதியான அநுராத புரக் கோட்டையைக் கைப்பற்றுவது சுலபமான காரிய மல்ல என்பதைத் துஷ்டகமுனு உணர்ந்திருந்தான். ஆயினும் வெற்றிப் போதையில் மெய்மறந்திருந்த தனது சைனியங்களை ஏவி கோட்டையைப் பயங்கரமாக அவன் தாக்கினன். கோட்டைக்குள்ளிருந்தவர்கள் எந்த நிமிஷ மும் உதவிப் படைகள் வந்துவிடுமென்று எதிர்பார்த்தபடி யினல் கடைசிவரையில் கோட்டையைப் பாதுகாக்க உக்ர மாகப் போராடினர்கள்.

கோட்டை முற்றுகை பல மாதங்கள் வரையில் நீடித்தது. உதவிப் படைகளுக்காக சோழநாட்டுக்குப் போன தூதுவனைப் பற்றி எவ்விதமான தகவலையும் காணேம். இதற்கிடையில் கோட்டைக்குள் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டு தற்காப்பு யுத்தம் தொடர்ந்து நடைபெற முடியாதபடி ஒரு புதிய நெருக்கடியை உண்டு பண்ணியது. எல்லாளனுக்கு எஞ்சி இருந்த நம்பிக்கை யும் சிதைந்து போய்விட்டது. ஒரு நாள் மாமன்னன் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தான். உடனே ஒரு ஓலையை எழுதி அதைத் துஷ்ட கமுனுவிற்கு அனுப்பி விட்டு யுத்தத்தை நிறுத்திவிடுமாறு தனது படைகளுக்கு எல்லாளன் உத்திரவிட்டான். அவன் உத்திரவின் பொருள் விளங்காமல் தளபதிகள் திகைத்துப்போனர்கள். ஆயினும் மன்னர் உத்திரவை மதித்து யுத்தத்தை அவர்கள் நிறுத்தினர்கள்.

தமிழ்ப் படைகள் இவ்விதம் திடீரென்று போரை நிறுத்தியது துஷ்ட கமுனுவிற்கும் ஆச்சரியமாகத்தா னிருந்தது. இதில் ஏதோ ஒரு பெரிய சூழ்ச்சியிருக்க வேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டிருக்கையில், எல்லாளன் அனுப்பிய ஓலையை ஒரு தூதன் கொண்டு வந்து கொடுத்தான். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஓலையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.



துட்டகமுனுவுக்கு எல்லாளன் எழுதுவது :—

உன் தகப்பனிடமும் உன் முன்னேர்களிடமும் நான் அளவுக்கதிகமாகநம்பிக்கைவைத்தேன்.அவர்கள் தென்னி லங்கையைச் சுதந்திரமாக ஆட்சிபுரிவதற்கு அனுமதித் தேன். பௌத்த தர்மத்தில் திளைத்த சிங்களவர்களின் தார்மீகப் பண்புகளில் அளவு மீறிய நம்பிக்கை கொண் டிருந்தேன். அதன் விபரீதமான விளைவுதான் இப்பொழுது நடக்கும் யுத்தம்.

இலங்கையில் சிங்களவர்களுக்கு எவ்வளவு உரிமையும் பாத்தியதையும் உண்டோ அதைவிட அதிகமான உரிமை யும் பாத்தியதையும் தமிழர்களுக்கு உண்டு. சிங்கள வம்சம் தோன்றுவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன் பிருந்தே தமிழர்கள் மகோன்னதமான நாகரிகத்துடன் இந்நாட்டிலிருந்து வருவதை நீ அறிவாய். அப்படியிருந் தும் சிங்கள வம்சத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பண்புமிக்க தமிழர்கள் தடுக்கவில்லை. பௌத்த மதத்தை நசுக்குவதற்குப் பதில் அதைத் தமிழர்கள் போற்றி ஆதரித்து வந்திருக்கிருர்கள். சரித்திர உண்மை இப்படி யிருக்கும்போது கேவலம் மண்ணசையில் உந்தப்பட்டு ஜாதி வெறியையும் மதவெறியையும் நீ தூண்டிவிடுவது வேதனையைத் தருகிறது.

தமிழர்களும் சிங்களவர்களும் ஆயிரமாயிரமாண்டு களுக்கு ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களைப்போல வாழ வேண்டியவர்கள். நம் இருவருடைய ஆதிக்கப் போட்டி வருங்காலச் சந்ததியின் சகோதர பாவத்தையும் அந் நியோன்னியத்தையும் பாதிக்க வேண்டாம். நம் பதவி ஆசைக்குப் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் இருதரப் பிலும் பலியாகவும் வேண்டாம். யுத்தத்துக்கு சுலபமாகவும் கண்ணியமாகவும் ஒரு முடிவு கட்ட ஒரு யோசனை சொல்லு கிறேன். யுத்தத்தை நிறுத்திவிட்டு நாம் இருவர் மட்டும்

தனியாக பலப் பரிசோதனை நடத்துவோம். அந்தச் சண்டையில் நான் தோற்றால் வீரசொர்க்கம் எனக்குக் கிடைக்கட்டும் ராஜரதா உன்வசமாகட்டும். நீ தோற்றால் வீரசொர்க்கமடையும் பாக்கியத்தை நீ பெற்றுக்கொள். நீ ஒரு சுத்த வீரனாயிருந்தால் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

என் சம்பந்தப்பட்ட வரையில் என் படைகளுக்கு யுத்த நிறுத்த உத்தரவு பிறப்பித்துவிட்டேன். சிறிது நேரத்தில் தன்னந்தனிமையாக நான் கோட்டைக்கு வெளியே வருகிறேன். நெஞ்சில் உறுதியும் புஜபலத்தில் நம்பிக்கையும் இருந்தால் என்னைச் சந்திக்க வா. கபடமாக என்னைக் கைது செய்து கொண்டுபோக நீ திட்டமிட்டால் கோழை என்ற கௌரவப்பட்டம் உலகம் உள்ள அளவும் உனக்கு நீடிக்கும். நீ ஒரு வீரனாயிருப்பாய் என்ற எண்ணத்துடனேயே வெற்றி அல்லது வீரசொர்க்கம் என்ற இரண்டில் ஒன்றை உன் கையினாலேயே தீர்மானிக்க வரும்படிச் சவால் விடுகிறேன்.

எல்லாளன்.

எல்லாளன் அனுப்பிய ஓலையைப் படித்துப் பார்த்த துஷ்ட கமுனு தனது மந்திரிகளையும்படைத்தலைவர்களையும் அழைத்து மந்திராலோசனை நடத்தினான்.

“இதில் ஏதோ பெரிய சூது இருக்கிறது” என்றான் ஒருவன்.

“எல்லாளன் ஓலையை நம்பக்கூடாது. தோல்வி நிச்சயமென்பது தெரிந்ததும் தந்திரத்தைக் கையாளுகிறான். தனியாக உங்களை அழைத்துச் சிறைப் பிடிக்க இது ஒரு சதித்திட்டம்” என்றான் இன்னொருவன்.

“இல்லை! நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு எல்லாளன் ஆக்ரமிப்பாளனாக இருந்தாலும், சொன்ன சொல் தவறாதவன். தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் கட்டுப்பட்டவன். அவன் வார்த்தையைப் பரிபூரணமாக நான் நம்புகிறேன். என் வீரத்தைச் சுட்டிக் காட்டி அவன்



சவால் விடுத்த பிறகு, அந்தச் சவாலை ஏற்க மறுப்பது பயங்கொள்ளித்தனம். ‘எல்லாளனுடன் தனிமையில் போர் செய்யத் துஷ்ட கமுனு அஞ்சினான்’ என்ற பெயர் எனக்கு ஏற்பட வேண்டாம். தவிர, ஆட்சி உரிமையைப் பற்றித் தகராறு எங்கள் இருவருக்கிடையில் தானே? அதற்காக எல்லாளன் சொல்லுவதைப்போல பல்லாயிரக் கணக்கானவர்கள் ஏன் பலியாக வேண்டும்? எங்கள் இருவருக்கும் இடையில் நடக்கும் யுத்தம், வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கட்டும். இரு சுத்த வீரர்கள் நடத்திய யுத்தமாக இந்நாட்டின் சரித்திரத்தில் இன்றையச் சம்பவம் இடம் பெறட்டும்?” என்றான் துஷ்டகமுனு.

இவ்வாறு உணர்ச்சியுடன் மளமளவென்று பேசிய துஷ்ட கமுனு, பட்டத்து யானை ‘கந்துலா’ மீது ஏறிக் கொண்டு, மாமன்னன் எல்லாளனைத் தனிமையில் போரிலே சந்திக்கக் கோட்டையை நோக்கிச் சென்றான். கோட்டையை நெருங்கும் சமயத்தில், கோட்டைக் கதவுகள் பளிச்சென்று திறந்து கொண்டன. பட்டத்து யானையின் மீது கம்பீரமாக அமர்ந்து, மாமன்னன் எல்லாளன் வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து, அவனுடைய படைத் தலைவர்களும் மந்திரிகளும் குதிரைகளில் வந்தார்கள்.

எல்லாளன் தனியாகச் சமர் செய்ய வருவானென்று எதிர்பார்த்த துஷ்ட கமுனு, எல்லாளனுக்குப் பின்னால் அவனது படைத் தலைவர்களும் ஆயுதபாணிகளாக வருவதைக் கண்டான். கண்டதும், அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டன. கண்களில் கோபக் கனல் பறக்க, “மனுநீதி தவறாத மன்னரே! வருக! தனியொரு மனிதனைச் சிறைப்படுத்த படை திரட்டிக்கொண்டு வரும் மாவீரரே! வருக, வருக!” என்று நையாண்டியாகச் சொன்னான்.

எல்லாளன் பதில் சொல்லாமல் புன்னகை புரிந்தான்.

மாமன்னன் எல்லாளன் புன்னகை செய்வதைப் பார்த்தபொழுது துஷ்ட கமுனுவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

எல்லாளனே ஒரு விஷமச் சிரிப்புடன், "துஷ்டகமுனு மகாராஜரே! கச்ச ஆதித்தன் கோட்டையை நீங்கள் எப்படிக் கைப்பற்றினீர்கள் என்பது ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டான். துஷ்ட கமுனுவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவன் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

எல்லாளன் மேலும் சொன்னான்: "உங்கள் செய்கைக்கு நீங்கள் இப்படி வெட்கப்பட வேண்டியதில்லை. வெட்கப்பட வேண்டியவன் பேராசைக்காரனான ஒருவனைக் கச்ச ஆதித்தன் கோட்டையில் காவற் படைத் தலைவனாக அமர்த்திய நான்தான்! யுத்தத்தில் இப்படியெல்லாம் சூழ்ச்சிகளும் சதிகளும் குள்ளநரித் தந்திரங்களும் கையாளப்படுவது சர்வ சகஜம். ஆனால் சோழன் கீழ்த்தரமான இந்த நடவடிக்கைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டவன். தர்மத்துக்காகத் தமது பிள்ளையை மட்டுமல்ல, தமது தலையையே கொடுப்பவர்கள் சோழகுல மன்னர்கள். என்னோடு தனிச் சமர்புரிய வருவாய் என்று நான் எதிர் பார்த்தேன். உன் வீரத்தில் நான் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. இந்த ராஜ்யத்தின் உரிமையை நிர்ணயிக்க, பிரம்மாண்டமான சேனைகளைத் துறந்து என்னுடன் தனிச் சமர்புரிய வந்திருக்கிறாய். இது ஒன்றே இந்நாட்டின் சரித்திரத்தில் உனக்கு இடத்தைச் சம்பாதித்துக்கொடுத்து விட்டது.

"சரித்திர முக்கியத்துவம் பெறப்போகும் நமது தனிப்போரைக் கண்குளிரக் கண்டு களிக்கவே என் படைத்தலைவர்கள் கூட வந்திருக்கறார்கள். நீ நினைப்பதைப்போல நயவஞ்சகமாக உன்னைச் சிறைப் பிடித்துப் போவதற்கல்ல. போரில் யார் வெற்றிபெறப் போகிறார்கள் என்ற கவலையே எனக்குக் கிடையாது. அதோ திரும்பிப் பார்! நம் யுத்தத்தைப் பார்க்க உன் படைத் தலைவர்களும் திரண்டு வருகிறார்கள்!"

இவ்விதம் எல்லாளன் அமைதியாகவும், விருப்பு வெறுப்பைக் காட்டாமலும் சொன்ன பொழுது, துஷ்ட கமுனு பளிச்சென்று திரும்பிப் பார்த்தான். என்ன



நினைத்துக் கொண்டானே, மறுகணமே அவன் எல்லாளன் பக்கம் திரும்பிய பொழுது, "நீ பின் பக்கம் பார்க்கும் பொழுது எல்லாளன் ஈட்டியை வீசி விடுவானோ என்று பயந்து விட்டாய் போலிருக்கிறது. எல்லாளனுக்கு முதுகில் ஈட்டி பாய்ச்சிப் பழக்கமில்லை கமுனு! உன் படைத் தலைவர்கள் வருவதைப் பார்த்தாயல்லவா?" என்று கேட்டான். துஷ்டகமுனுவை முதலில் பன்மையிலும் பிறகு ஒருமையிலும் எல்லாளன் அழைத்தது தங்கள் இருவருக்கு மிடையிலுள்ள வயது வேற்றுமையைத் துஷ்ட கமுனுவுக்கு எல்லாளன் சுட்டிக் காட்டுவதைப் போலிருந்தது. கிழவனோடு போர் புரிய வந்திருக்கும் துஷ்ட கமுனுவைக் கேலி செய்வதைப் போலவும், "தாடி நரைத்துப் போனாலும் நெஞ்சு உறுதி தளராமல் போராட வந்திருக்கும் கிழவனைப்பார்!" என்று இடித்துக் காட்டுவதைப் போலவும் தொனித்தது.

அவன் ஏதோ சொல்ல வாய் திறப்பதற்குள் "ஈட்டியை எடுத்துக்கொள்!" என்று சொல்லி விட்டுப் போருக்கு ஆயத்தமானான், மாமன்னன் எல்லாளன். இருவருடைய யானைகளும் ஒன்றை யொன்று பயங்கரமாகத்தாக்க, யுத்தம் ஆரம்பித்து அகோரமாக நடந்தது. இருதரப்புப் படைத்தலைவர்களும் வளைந்து நின்று கொண்டு அந்த அதிசய யுத்தத்தை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் எல்லாளனுடைய யானைபடுகாய மடைந்து விழுந்து விடவே, அவன் தரையிலிருந்தும் துஷ்ட கமுனு யானையின் மீதிருந்தும் சிறிது நேரம் வரையில் போர் செய்ய வேண்டியதாயிற்று. முதுமையடைந்த எல்லாளன் துஷ்ட கமுனுவின் புஜபலத்தைக் கடுமையாகச் சோதித்து விட்டுக் கடைசியில் அவன் ஈட்டிக்குப் பலியாகிப் படுகாயம் அடைந்து விழுந்தான்.

இரத்தப் பெருக்கினிடையே விழுந்து கிடந்த எல்லாளனுக்கு அருகில் துஷ்ட கமுனு மண்டியிட்டு மரியாதையாக உட்கார்ந்து கொண்டான். "மாமன்னரே! உங்கள் வீரத்துக்கு நான் தலை வணங்குகிறேன். நீங்கள் செய்த

தர்ம யுத்தத்துக்கும் தலை வணங்குகிறேன்!" என்று கம்மிய குரலில் சொன்னான்.

"கமுனு! யுத்தத்தில் நாம் இருவருமே தோற்க வில்லை. நீ இந்த ராஜ்யத்துக்கு அதிபன் ஆகிறாய். நான் மோட்ச சாம் ராஜ்யத்துக்குப் போகிறேன். இந்த யுத்தம் இருவருக்குமே வெற்றிதான்!" என்றான் எல்லாளன்.

"உங்கள் கடைசி விருப்பம் ஏதாவது இருந்தால் தெரிவியுங்கள். அதை நிறைவேற்றி வைத்த பெருமை எனக்குக் கிடைக்கட்டும்" என்றான் துஷ்ட கமுனு.

"ஆமாம்! என் கடைசி விருப்பம் ஒன்று இருக்கிறது. சொல்லுகிறேன் கேள். இந்நாட்டில் சிங்களவர்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அதே போன்ற உரிமை தமிழர்களுக்கும் உண்டு. தமிழர்கள் முன்பு வந்தவர்கள்; சிங்களவர்கள் பின்பு வந்தவர்கள். அவ்வளவுதான் வித்தி யாசம். தமிழர்களும் சிங்களவர்களும் இந்நாட்டின் இரு கண்கள். சைவமும் பௌத்தமும் இப்படித்தான். இந்த நிலைமை நீடிக்குமாறு நீ ஆட்சி நடத்தினால் சகல வகுப்பு ஜனங்களின் ஆதரவும் உனக்கு அமோகமாயிருக்கும். இம்மாதிரியான நல்லாட்சியே உன் லட்சியமா யிருக்க வேண்டும். இதுதான் என் கடைசி விருப்பம். இதை நிறைவேற்றுவாயா?" என்றான் எல்லாளன்.

"நிச்சயமாக நிறைவேற்றுவேன். தோல்வியையும் வெற்றியாக்கிக் கொண்டு வீரசொர்க்கம் அடையும் உங்கள் பெயரும் உங்களுடைய நல்லாட்சி நினைவும் நாட்டில் என்றென்றும் நீடித்திருக்கும். இதை நீங்கள் உறுதியாக நம்பலாம். எதிரியிடமும் அன்பு செலுத்தி அறத்தைப் போதித்த உங்களை இந்நாட்டு மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்!"

இவ்விதம் துஷ்ட கமுனு சொல்லிக் கொண்டிருக்கை யிலேயே மாமன்னன் எல்லாளனின் ஆவிபிரிந்தது. துஷ்ட கமுனுவும், போர்க்களத்தில் திரண்டிருந்த இருதரப்புப் படைத் தலைவர்களும் மௌனமாக மண்டியிட்டு அமர்ந்து



மாமன்னன் எல்லாளனுக்குத் தங்கள் கடைசி மரியாதை யைச் செலுத்தினார்கள்.

உணர்ச்சி வசப்பட்டிருந்த துஷ்டகமுனு முதலில் எழுந்து, "மாமன்னர் எல்லாளன் எந்த இடத்தில் விழுந்து கிடக்கிறாரோ அதே இடத்தில் சகல ராஜாங்க மரியாதைகளுடனும் அவருடைய இறுதிச் சடங்குகள் நடைபெறவேண்டும். இந்த இடத்தில் ஒரு பிரமாண்ட மான ஆலயத்தையும் இவருடைய ஞாபகார்த்தமாகக் கட்டவேண்டும். இன்று முதல் இந்த இடத்துக்கு வருகிறவர்கள் எவரும் வாகனங்களில் போகக்கூடாது. பாதரட்சை இல்லாமல் கால் நடையாகவே செல்லவேண் டும். மாமன்னரின் நினைவுக்கு மரியாதை செய்ய இந்த ஸ்தலத்தைப் புனித ஸ்தலமாகப் பிரகடனம் செய்கிறேன். எல்லாளன் தெரிவித்த கடைசி விருப்பத்தை கடைப்பிடித்து இந்த வினாடியிலிருந்து தமிழர்களும் சிங்களவர்களும் பகைமை பாராட்டுவதை விட்டு, ஒரு தாய் வயிற்று சகோ தரர்களைப் போல அன்பு பாராட்டவேண்டும். இரு வகுப்பாரும் இந்நாட்டுப் பிரஜைகள். பாஷையும் மதமும் அவர்களுடைய அந்தஸ்தில் பேதம் கற்பிக்கக் கூடாது. இது ராஜாங்க உத்தரவு. இந்த உத்தரவு நாடு முழு வதும் பறை சாற்றப்படட்டும். எல்லாளன் மறைவிற்குத் தேசம் முழுவதும் துக்கம் கொண்டாடட்டும்" என்று தெரிவித்தான்.

அவன் விருப்பத்தை அனுசரித்து எல்லாளனுக்கு ராஜாங்க மரியாதைகளுடன் அவன் விழுந்த ஸ்தலத்தி லேயே இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

அங்கு நிறுவிய கல்லறையின் முன்னால் அதற்கு வணக் கம் தெரிவித்துக் கால் நடையாகவே எல்லாரும் செல்ல வேண்டுமென்ற ராஜ கட்டளை சிலாசாசனமாகக் கல்லறை யின் முன்னால் வைக்கப்பட்டது.

**து**ஷ்ட கமுனுவுக்குப் பிறகு அடுத்தடுத்து ஆட்சி நடத்திய பல சிங்கள மன்னர்களும் இந்த ராஜகட்டளையை மதித்து நடந்து வந்தனர். இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியின்

கீழ்வரும் அளவும் எல்லாளன் கல்லறைக்கு வணக்கம் செலுத்தும் வழக்கம் இந்நாட்டில் இருந்துவந்தது.

வெற்றிவீரனை அநுராதபுரத்தில் பிரவேசித்த துஷ்ட கமுனுவைச் சிங்களவர்கள் மட்டுமல்ல, தமிழர்களும் உற்சாகமாக வரவேற்றார்கள். எப்பொழுதுமே வீரனை யும் வீரத்தையும் போற்றும் பண்புடையவர்களல்லவா பழந் தமிழர்கள் ?

தமிழர்களைத் திருப்திபடுத்தி அவர்களுடைய நம்பிக் கையைப் பெற துஷ்ட கமுனு பல காரியங்களைச் செய் தான். தனக்கு வெற்றி யளித்த கதிர்காமக் கந்தன் கோயிலைச் செப்பனிட்டுத் திருப்பணிகள் செய்ததுடன், ஏராளமான நிலங்களையும் கதிர்காமத்துக்கு மானியமாக விட்டான்.

பௌத்தத்தில் அவன் எவ்வளவு அக்கறையும் ஆதர வும் காட்டினனே, அதே போலச் சைவத்தின் வளர்ச் சிக்கும் ஆதரவு காட்டினன். இலங்கையின் இரு பெரு வகுப்பினர்களான தமிழர் சிங்களவர் ஆகிய இரு வகுப் பினர் நம்பிக்கையும் பெற்றதால் அவன் ஆட்சி சிறந்தது! நாடு செழித்தது! மக்களுக்கு நல்லாட்சி நலம் செய்தது.

அவன் ஆட்சியில் இலங்கையின் தேச சரித்திரத்தி லேயே ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

# 12. காதலுக்காக முடிதுறந்தவன்

பாரதத்தின் நீண்ட வரலாற்றில் தர்ம அசோகன் ஆட்சி எப்படியோ, அதேபோல ஈழத்தின் சரித்திரத்திலும் அடுத்த பல நூற்றண்டுகளுக்கு துஷ்ட கமுனுவின் ஆட்சி யைப்பற்றி மக்கள் எண்ணியெண்ணிப் பெருமை பட்டார்கள். இளமையில் துஷ்டனுக இருந்தாலும் அரசப் பதவி ஏற்ற நாள் முதல் அவன் தலை சிறந்த பக்திமானுக வும் அறத்தின் வழி நடப்பவனுகவும் இருந்தான். அவன் பெயரில் இன்று இயங்கும் துஷ்ட கமுனு சங்கம் தமிழர் களை ஒழித்துக்கட்ட துஷ்ட கமுனுவின் வாழ்க்கையை ஒரு உதாரணமாகச் சுட்டிக்காட்டி வருகிறது. தமிழர்களை முற்றிலும் அழித்து நாசம் செய்வதையே துஷ்ட கமுனு தனது வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருந்தா னென்றும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இவ்விதப் பிரசாரங்கள் சரித்திரத்தைக் கேலிசெய்வதா யிருப்பதுடன் ஈழத்தின் பெருமை மிக்க ஒரு மாமன்னனின் நல்லாட்சிக்கு மாசு கற்பிப்பதாகவுமிருப்பது வருந்தத்தக்கது.

உண்மையில் துஷ்ட கமுனு தமிழர்களை வெறுக்கவு மில்லை; அவர்களை விரட்ட நினைக்கவுமில்லை. இதற்கு மாருக ஆக்ரமிப்பின்மூலம் இலங்கையைக் கைப்பற்றிய அந்நியர்களை விரட்டி நாட்டை விடுவிக்க அவன் போராடி னன். அவன் போராடியது உண்மையில் சோழப்பேரரச னுமல்ல. துஷ்ட கமுனுவின் காலத்தில் சோழ மன்னர் களில் எவரும் இலங்கையை ஆக்ரமித்ததாகவோ, சோழர் வம்ச பரம்பரையில் எல்லாளன் என்ற ஒரு அரசன் இருந்ததாகவோ சரித்திரத்தில் ஆதாரமில்லை.

அன்று கடல் வாணிபத்தில் தமிழர்கள் முன்னணியி லிருந்தார்கள். அரபு நாட்டுக் குதிரைகளை ஆயிரமாயிர மாகத் தருவித்து பிறநாட்டு மன்னர்களுக்கு விற்பது ஒரு கூட்டத்தின் செழிப்பான தொழிலாயிருந்தது. ராஜசபை

களில் அவர்களுக்கிருந்த மதிப்பும் செல்வாக்கும் வேறு ஒருவருக்குமில்லை அப்படிப்பட்ட வியாபாரிகளில் ஒருவன் ஒற்றுமையின்றி இலங்கை சீரழிந்து கிடப்பதைக்கண்டு, ஒரு சிறு கூலிப்படையுடன் வந்து அரசைக்கைப்பற்றினான். எல்லாளன் என்ற பெயருடைய அந்தக் குதிரை வியாபாரியே எல்லாளச் சோழனாக சரித்திரத்தில் இடம்பெற்று விட்டதாக சமீபகால ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

எனவே, புகழ்பெற்ற சிங்கள அரசு அந்நிய நாட்டிலிருந்து வந்த சில தமிழர்களின் ஆதிக்கத்திலிருப்பதை எதிர்த்தே துஷ்ட கமுனு போராடினான் என்பது தெளிவானது. அரசை மீட்டதும் தமிழ் சிங்களப் பிரஜைகளை அவன் பேதப்படுத்திப் பார்க்கவில்லை. அவர்களிடம் வேற்றுமை காட்டவுமில்லை. இதற்கு மாறாக அவர்களையும் அவர்களது சமயங்களையும் சம நீதியுடன் நடத்தி இரு வகுப்பினது விசுவாசத்துக்கும் தன்னைப் பாத்திரமாக்கிக் கொண்டான். அநுராதபுரத்துக்கு வடக்கிலிருந்த தமிழர் ராஜ்யத்தை அவன் பகைத்துக்கொள்ளவில்லை. இந்துக்களின் புண்ணிய க்ஷேத்திரமான கதிர்காமத்தில் கந்தனுக்கு ஒரு புதிய கோயிலெடுத்து முருக வழிபாட்டை பௌத்தர்களிடையிலும் பரப்பியவன் துஷ்ட கமுனு மன்னனேயாகும். வகுப்பு சமரசத்துக்கு முன் மாதிரியாக வாழ்ந்த ஒரு மன்னனை வகுப்பு வெறிக்கு சில விஷமிகள் உதாரணமாக எடுத்துக்காட்டுவது சரித்திரத்தைக் கேலி செய்வதைப்போலிருக்கிறது.

வையம் போற்றும் சிறப்புடன் அரசாண்ட ஒரு பேரரசனுக்குப் பின்னர் குடும்பப் பெயரை நிலை நிறுத்தச் சரியான சந்ததியில்லாமல் அரசு சிதைவதும், சிதைவுகளைச் செப்பனிட சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வேறொரு மாவீரன் தோன்றுவதும் சரித்திரம் கண்ட உண்மை. அதேபோல ஸீஸருக்குப்பின் உரோம சாம்ராஜ்யமும், அலெக்ஜாண்டருக்குப் பின் கிரேக்க ராஜ்யமும், அசோகனுக்குப் பின் மௌரிய சாம்ராஜ்யமும், ஔரங்கசீப்பிற்குப் பின் மொகலாய சாம்ராஜ்யமும் அஸ்தமித்தன. துஷ்ட கமுனுவுக்குப் பின் சிங்களப் பேரரசின் புகழ் சற்று மங்க



நேரிட்டது இந்தச் சரித்திர நியதியைப் பின்பற்றியதே யாகும்.

துஷ்டகமுனுவுக்கு சாலி என்று ஒரே பிள்ளை. இளமையில் தகப்பனைப்போலவே அவன் ராஜதந்திரத்திலும் தோள்வலிமையிலும் நிகரற்றவனாக விளங்கினான். இப்படிப்பட்ட ஒருபிள்ளை இருக்கும்பொழுது நமக்கு என்ன குறை என்று துஷ்ட கமுனு இறுமாந்திருக்கையில் விதி வேறு விதமாக நினைத்தது. ஒருநாள் இளவரசன் சாலி காட்டில் வேட்டையாடச் சென்றிருந்தான். நடுக் காட்டில் காற்றில் தவழ்ந்து வந்த ஒரு தேவகானம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. பயங்கரமான கடும்புலிகள் வாழும் கானகத்தில் அவ்வளவு இனிமை ததும்பப் பாடும் பெண்மணி யாரா யிருக்குமென்பதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. நாதம் பிறந்து வரும் திசையை நோக்கி அவன் நடந்தான்.

காட்டின் ஒரு பகுதியில் ஒரு அழகான பூஞ்சோலையில் செடிகளுக்கு தண்ணீர் வார்த்த வண்ணம் ஒரு கட்டழகி தன்னையே மறந்து இன்னிசைக் கீதம் இசைத்துக்கொண்டிருந்தாள். அவள்மீது வைத்த விழி வாங்காமல் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தான் இளவரசன் சாலி. பாட்டு முடியும் வரையில் சாலிக்குச் சுய நினைவே இல்லை. பாட்டுமுடிந்து அப்பெண்மணி நகர ஆரம்பித்த பொழுது தான் தன் நிலையடைந்தான்.

அன்னநடை நடந்துசெல்லும் அந்த அழகு மங்கையை என்ன பெயர் சொல்லி அழைப்பது ?

சாலி இவ்விதம் தடுமாறுகையில் அப்பெண்மணி அழகாகத் தொடுத்து ஒரு மரக்கிளையில் மாட்டி வைத்திருந்த அசோக மலர் மாலையை எடுத்து கழுத்தில் அணிந்துகொண்டு நடந்தாள்.

“ஏ பொண்ணு ? கொஞ்சம் நில்லு !” என்றான் சாலி.

அவள் திரும்பிப் பார்த்தாள். மரத்தின் பின்னால் மறைந்திருந்த இளவரசன் அவளது கண்களில் படவில்லை.

யாரையும் காணமல் அவள் மறுபடியும் நடக்கவே, இளவரசன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து "அசோக மாலா ?" என்று பெயர் சொல்லி அழைத்தான்.

அந்தப் பெண் தயங்கி நின்று திரும்பிப் பார்த்தாள். கம்பீரத் தோற்றமுடைய ஒரு இளைஞன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு அவள் மலைத்துப்போய் நின்ருள்.

"அசோக மாலா !" என்று அருகில் வந்து மீண்டும் அழைத்தான் சாலி.

"யாரைத் தேடுகிறீர்கள் ? என்னையா? என் பெயர் நீங்கள் அழைத்த பெயரில்லையே !"

"யார் அப்படிச் சொன்னது ?"

"என் பெயர் எனக்குத் தெரியாதா ? அசோக மாலா அல்ல என் பெயர் !"

"இதுவரையில் அது உன் பெயராக இல்லாவிட்டாலும் இனி அதுதான் உன் பெயர் ! அசோக மலர் மாலை அணிந்திருப்பவளுக்கு வேறு என்ன பெயர் பொருத்தமா யிருக்கும் ?"

"நன்ரு யிருக்கிறதே !"

"என்ன, நான் கொடுத்த பெயரா ?"

"இல்லை, உங்கள் பேச்சு !"

"பெயர் ?"

அவள் ஒரு கணம் மௌனம் சாதித்துவிட்டு "பெயர் அழகாகத்தானிருக்கிறது. ஆனல்...!" என்று இழுத்தாள்.

"என்ன ஆனல் ?"

"உயர்ந்த ஜாதிக்காரர்கள் வைத்துக்கொண்டால் அது அழகாயிருக்கும் !"



"அப்படியானல் நீ ?"

"நாங்கள் வேடர்கள் !"

"அப்படியானல் உலகத்தில் மிகவும் உயர்ந்த ஜாதி வேடர் ஜாதிதான். கதிர்காமக் கடவுளை உனக்குத் தெரியுமா ?"

"அவர் எங்கள் குலதெய்வம் !"

"அவர் மணந்தது ஒரு வேடுவப் பெண்ணையென்பதும் உனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே !"

"கடவுளுக்கு உயர்ந்த ஜாதியேது ? தாழ்ந்த ஜாதி ஏது ?"

"கடவுளுக்கு ஜாதி பேதமில்லையென்ருல் அவர் படைத்த மனிதர்களுக்கு மட்டும் அது எங்கே யிருந்து வந்தது ?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அவள் தனது குடிசையை நோக்கி நடந்துகொண்டுமிருந்தாள். சாலியும் அவளைத் தொடர்ந்தான்.

"நீங்கள் பேசுவது வேடிக்கையா யிருக்கிறது" என்ருள் அவள்.

"என்னிடம் பேச்சுமட்டும்தான் அழகாயிருக்கிறது. உன்னிடமோ பேச்சு, நடை, தோற்றம் எல்லாமே அழகா யிருக்கிறது" என்ருன் சாலி.

இதற்குள் அவர்கள் குடிசையை நெருங்கிவிட்டார்கள். "அதுதான் உன் வீடா ?" என்று கேட்டான் சாலி.

"ஆமாம். வெளியே படுத்திருப்பவர் என் அப்பா" என்று சொல்லிவிட்டு அவ்வளவு நேரமும் மெதுவாக நடந்து வந்தவள் குடிசையைக்கண்டதும் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தாள். அவளைப் பின் தொடர்ந்து வந்ததாகக் காட்டிக்கொள்ள விரும்பாமல் சிறிது நேரம் கழித்து இளவரசன் குடிசைக்கு வந்தான்.

கட்டிலில் படுத்திருந்த ஒரு கிழவன் பளிச்சென்று எழுந்து கை கட்டி, வாய் புதைத்து, நின்ற வண்ணம் "நீங்கள் யார்?" என்று மரியாதையாகக் கேட்டான்.

"நான் அநுராதபுரியிலிருந்து வருகிறேன். பசியாயிருக்கிறது" என்ருன் சாலி.

"அய்யய்யோ! எங்கள் குடிசையில் சாப்பிடவா? உங்களுக்கு உணவு கொடுத்தது வெளியே தெரிந்தால் என் தலை போய்விடும். தயவு செய்து இந்த இடத்தை விட்டு உடனே போய்விடுங்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு. நான் தாழ்ந்த ஜாதி. இந்தக் குடிசையின் அருகில்கூட நீங்கள் வரக்கூடாது" என்று மன்ருடினன் அம் மனிதன்.

ஆனல் இளவரசன் போவதற்கா அங்கு வரவில்லை வேடனுடன் அவன் வாதம் செய்தான். கடைசியில் வேடன் வேறு வழியில்லாமல் தனது மகளை அழைத்து கனிகளைக் கொண்டு வந்து சாலிக்குக் கொடுக்கச் செய்தான்.

"உங்களுக்குப் பிள்ளை கிடையாதா?" என்று இளவரசன் விசாரித்தபொழுது இல்லையென்று வேடன் சொல்லவே "எனக்கு சுற்றத்தார்கள் யாருமில்லை. நானும் உங்களுடன் இங்கேயே இருந்து விடுகிறேனே!" என்ருன் சாலி. இந்த யோசனையை வேடன் முதலில் ஏற்கவில்லை யென்ருலும், சாலியின் சாதுரியமான பேச்சு முடிவில் வெற்றி பெற்றது. சாலி அந்தக் குடிசையிலே தங்கிவிட்டான்.

இளவரசனுடன் வேட்டைக்குப் போனவர்கள் இளவரசனைக் கண்டுபிடிக்க முடியாமல் அரண்மனைக்குத் தனியாகத் திரும்பினர்கள். பட்டத்து இளவரசனைக் காணுமென்றவுடன் மன்னன் துஷ்ட கமுனுவின் ஆட்கள் நாற்றிசையிலும் சல்லடை போட்டுச் சலிக்கக் கிளம்பினர்கள். பல தினங்களாகியும் இளவரசனைக் கண்டு பிடிக்க முடியாததால் மன்னன் தனது மந்திரியையே தேடுவதற்கு அனுப்பி வைத்தான்.



காட்டில் தேடாத இடமெல்லாம் தேடிப் பார்த்த மந்திரி கடைசியில் ஒருநாள் இளவரசனும் அவன் வேடுவக் காதலி அசோக மாலாவும் ஒரு ஓடையினருகில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

அன்று முழுவதும் பிரயாசைப்பட்டு சாலியை இருட்டிய பிறகு சந்தித்த மந்திரி "அங்கே சிம்மாசனம் காத்திருக்கிறது, இங்கே ஊர் பெயர் தெரியாத தாழ்ந்த ஜாதிப் பெண்ணுடன் காதலா? உங்கள் காதல் விளையாட்டு போதும். புறப்பட்டு வாருங்கள்!" என்ருன்.

"என் அரண்மனையும் அரியாசனமும் அநுராதபுரியிலில்லை. இந்தக் காட்டில்தானிருக்கிறது. அப்பாவிடம் போய்ச் சொல்லுங்கள்." என்று கூறி மந்திரியை விரட்டியடித்துவிட்டான் இளவரசன்.

மறுநாட் காலை வேடனும் அசோக மாலாவும் சாலியும் குடிசை வாசலில் நின்றுகொண்டிருக்கையில் மந்திரிகளும் படை வீரர்களும் புடை சூழ மன்னன் துஷ்ட கமுனு திடீரென்று அங்கு வந்து சேர்ந்தான்.

அரசனைக் கண்டதும் நடுநடுங்கிப் போன வேடன் தரையில் விழுந்து வணங்கினன்.

அசோக மலாவிற்கு ஒன்றும் புரியவில்லை. அவள் திகைத்துப் போய் பயந்து நின்ருள்.

துஷ்ட கமுனு மன்னன் சாலியைச் சுட்டிக் காட்டி "இவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும். என் புருஷன்!" என்று அமைதியாகப் பதில் சொன்னுள் அசோகமாலா.

"என் மகன் உன் புருஷனுக முடியாதென்பது உனக்குத் தெரியுமா?" என்று துஷ்ட கமுனு மீண்டும் கேட்டான்.

"நான் உங்கள் மகனைச் சொல்லவில்லை, மகாராஜா இவரைச் சொன்னேன்" என்று சாலியைச் சுட்டிக்

காட்டி அவன் பக்கத்தில் போய் நின்று கொண்டாள் அசோகமாலா.

"அவள் சொல்லுவது உண்மைதான் மகாராஜா! அசோகமாலா என் மனைவி!" என்று சிறிதுகூடப் பதட்டமில்லாமல் கூறினன் இளவரசன் சாலி.

துஷ்ட கமுனு தனது மகனைச் சுட்டெறித்து விடுவதைப் போல முறைத்துப் பார்த்தான். பிறகு வேடனைப் பார்த்து "டேய் வேடா! அவள் உன் பெண்ணு?" என்று கேட்டான்.

"ஆமாம் மகாராஜா!"

"அவள் அந்த இளைஞனை மணந்து கொண்டால் உன் தலையும் உன் மகள் தலையும் தரையில் உருள வேண்டியிருக்கும். தெரிந்து கொள்!"

"தரையில் அவர்கள் தலையுடன் என்னுடைய தலையும் சேர்ந்து உருள வேண்டியிருக்குமென்பது மகாராஜாவுக்கும் தெரிந்திருந்தால் நல்லது?" என்று இடையில் கூறினன் சாலி.

"சாலி! நீ என் மகன். இந்நாட்டின் வருங்கால மன்னன். இதை மறந்து விடாதே!" என்று துஷ்ட கமுனு சொல்லிய பொழுது அசோகமாலாவும் அவள் தகப்பனும் உண்மையை உணர்ந்துகொண்டு நடுங்கிப் போனர்கள்.

"அப்பா! நான் வருங்கால மன்னனயிருக்கலாம். ஆயினும் நான் ஒரு மனிதன். என் மனம் விரும்பியவளை மணக்க விரும்புவது ஒரு குற்றமா?" என்றான் சாலி.

"உன்னுடன் எனக்குப் பேச்சில்லை. ஆனல் ஒன்று சொல்லுகிறேன். தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த இவள் விஜயன் காலத்திலிருந்து வழிவழியாக வந்த புகழ்பெற்ற சிம்மாசனத்தில் அமர முடியாது. அவளைத் திருமணம் செய்து கொண்டால் உனக்கு என் அரியாசனம் இடமளிக்காது!" என்றான் துஷ்ட கமுனு.



"அசோகமாலாவிற்கு இடமளிக்காத சிம்மாசனம் எனக்குத் தேவையில்லை. அசோகமாலாவை மணப்பதென்று தீர்மானித்தபொழுதே இதை நான் தீர்மானித்துக் கொண்டு விட்டேன்!" என்றான் சாலி.

"டேய் வேடா! என் மகனை இப்படி வசியப்படுத்த நீ எவ்வளவு காலமாகத் திட்டம் போட்டுச் சதி செய்தாய். உன்னை இவ்வளவு நேரம் வரையில் உயிரோடு விட்டு வைத்ததே என் தவறு!" என்று சொல்லியவாறு வாளை உருவியெடுத்துக் கொண்டு வந்தான் துஷ்ட கமுனு.

இவ்வளவு நேரமும் திகைப்பில் சமைந்துபோயிருந்த அசோகமாலா தகப்பனுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கண்டதும் பதறிக்கொண்டு ஓடிப்போய் தகப்பனுக்கும் மன்னனுக்கு மிடையில் நின்று கொண்டு "அரசே! கொஞ்சம் நில்லுங்கள். ரத்தவெறி பிடித்த உங்கள் வாளுக்கு இந்த எளிய மனிதரைப் பலியாக்கி பாவமூட்டையைச் சுமந்து கொள்ளாதீர்கள். ருவான்வெளிசயாவைப் போல இன்னும் எவ்வளவு தாது கோபுரங்களை நீங்கள் கட்டுவதற்குத் திட்டம் போட்டாலும் அநியாயமாக ஒரு உயிரைமாய்த்த பாபத்தைக் கழுவிக்கொள்ளமுடியாது. உங்கள் மகனை இங்கு யாரும் மயக்கவில்லை. சில விநாடிக்கு முன்புவரை அவர் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. மனிதர்களை மிருகங்களாக மதிக்கும் பண்புகெட்ட, இரக்கமற்ற ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் அவர் என்பது தெரிந்திருந்தால் இந்தக் குடிசைக்குள் வர அனுமதித்திருக்க மாட்டோம். தயவு செய்து எங்களை அமைதியாக வாழ விட்டு உங்கள் பிள்ளையை அரண்மனைக்கு அழைத்துப் போங்கள்!" என்றாள்.

இப்படிப் பேசியது மென்மையை இனிமையாகப் பெற்ற அசோகமாலாதான் என்பதை சாலியினல் நம்பவே முடியவில்லை. பொறுமையின் இருப்பிடமான பெண்கள் பொங்கி எழுந்தால் எப்படி யிருப்பார்களென்பதைக் காண்பது சாலிக்கு அதுவே முதல் அனுபவம்.

"மாலா! நீயா இப்படிச் சொல்லுகிறாய்? நீயா என்னைப் போகச் சொல்லுகிறாய்?" என்று கேட்டான் இளவரசன்.

"ஆமாம் இளவரசே! கடமை உங்களை அங்கே அழைக்கிறது. நீங்கள் நாட்டு மக்களின் சொத்து. சுயமாக இஷ்டம்போல் நடக்க எல்லோருக்கும் இருப்பதைப் போன்ற உரிமை உங்களுக்குக்கிடையாது. வருங்கால மன்னருக்கு காதலைவிடக் கடமையே பெரிது. நீங்கள் யார் என்பது முன்பே தெரிந்திருந்தால் இதைதான் அப்பொழுதும் சொல்லி யிருப்பேன். தயவுசெய்து இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள். மகாராஜா, அறியாத்தனத்தினால் செய்த எங்கள் பிழையை மன்னித்து விடுங்கள்!" என்று துஷ்ட கமுனுவைப் பார்த்து வேண்டினாள் அசோக மாலா. இதைச் சொல்லுகையில் ஏமாற்றம் கண்ணீராக அவள் கண்களிலிருந்து பெருகி ஓடிக்கொண்டிருந்தது.

அவ்விருவரையும் பார்த்தான் துஷ்ட கமுனு. காதலுக்காக ஒருவர் கனகாசனத்தையும் இன்னொருவர் தனது இன்ப வாழ்க்கையையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்தது அவன் உள்ளத்தைத் தொட்டது. ஆயினும் அரசனென்ற கடமை அவனுடைய மனிதப்பண்புகளை மறைத்துக் கொண்டு நின்றது.

அன்பு ஒழுக "அசோக மாலா! நீ ஒரு சாதாரண வேடுவப் பெண்ணாயிருந்தாலும் அறிவில் சிறந்தவளாகவும் அழகில் நிகரற்றவளாகவுமிருக்கிறாய். உண்மையில் உன்னைப்போலொத்த ஒரு அறிவாளி என் மகனுக்கு வாழ்க்கைத்துணைவி யாவதை மனப்பூர்வமாக நான் வரவேற்பேன். ஆயினும் கடமையும், நாட்டின் சட்டமும் குறுக்கே நிற்கின்றன. என் மகன் நாட்டு மக்களின் சொத்து என்று நீயே சொன்னாய், அந்த நாட்டு மக்களிடம் அவனை ஒப்படைப்பது உன் பொறுப்பு. இதற்கு தேசம் மிகவும் உனக்குக் கடமைப்பட்டிருக்கும்" என்றான் மன்னன்.



"எனக்கு யாரும் கடமைப்படத் தேவையில்லை மன்னவா! உங்களுடைய புகழ்ச்சியையும் நான் எதிர்பார்க்கவில்லை. வாழ்க்கையில் ஒரு பெண் ஒருவரைத்தான் மனதார நேசிக்க முடியும். இளவரசர் யார் என்று தெரியாமலே அவரிடம் என் உள்ளத்தை நான் அர்ப்பணித்தேன். இப்பொழுது அவர் இளவரசர் என்று தெரிந்தவுடன் அந்தஸ்து பேதம் உங்கள் உருவத்தில் வந்து எச்சரிப்பதையும் எள்ளி நகையாடுவதையும் நான் உணருகிறேன். ஏமாற்றமும் ஏக்கமும் எங்களைப் போன்ற எளியவர்களுக்கு பரம்பரைச் சொத்து. கணவனென்று கருதியவரை விட்டுப்பிரியும், துயரத்தைத் தாங்க என் மனதைக் கல்லாக்கிக்கொண்டுவிட்டேன். உங்கள் மகனை இனி நீங்கள் அழைத்துப் போகலாம்!" என்றாள் அசோக மாலா.

துஷ்ட கமுனுவின் கண்களில் கண்ணீர் மல்கிவிட்டது. ஒரு விநாடி தியாகச் சின்னமாக விளங்கிய அசோக மாலாவை நீர் நிறைந்த கண்களுடன் அவர் பார்த்துக் கொண்டு நின்றார். பிறகு "மகளே! இப்படி என் அருகில்வா!" என்றார்.

வேடுவப்பெண்ணை மன்னன் மகளே என்றழைத்ததும், கூப்பிடு தூரத்தில் நிற்க வேண்டிய தாழ்த்தப்பட்ட ஜாதிப்பெண்ணை அருகில் வரச்சொல்லியதும் மன்னனோடு வந்திருந்த மந்திரிப் பிரதானிகளுக்கு அதிர்ச்சியையும் ஆச்சர்யத்தையும் கொடுத்தது.

அசோக மாலாவிற்கே அவளுடைய செவிகளை அவளால் நம்ப முடியவில்லை. நின்ற இடத்திலேயே அவள் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

"உன்னைத்தான் அழைக்கிறேன் அசோக மாலா. உன் மாமன் அழைக்கிறேன். இப்படி என் அருகில் வா அம்மா!" என்று குழைவுடன் துஷ்ட கமுனு அழைத்த பொழுதுதான் அரசனாக இதுவரையில் பேசிக்கொண்டிருந்த துஷ்ட கமுனு ஒரு சாதாரண மனிதனாக, இளகிய உள்ளம் படைத்த தகப்பனாக எதிரில் நிற்பதை அவள்

நிமிர்ந்து பார்த்துத் தெரிந்துகொண்டாள். தயக்கத்துடன் அவள் அரசனை நெருங்கி வணங்கி நின்றாள்.

துஷ்ட கமுனு அவள் கையைப்பற்றி இளவரசன் சாலியின் கையில் கொடுத்து "சாலி! இவள் விலைமதிக்க முடியாத மாணிக்கம். அரியாசனத்துக்குமேல் அதிக மதிப்புள்ளவளாக இவளை நீ தேர்ந்தெடுத்ததை நான் பாராட்டுகிறேன். கருணை வள்ளலான புத்தபகவான் உங்களை ஆசீர்வதிக்கட்டும். உங்கள் திருமணத்தை விரைவில் நானே சிறப்பாக நடத்திவைக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

அரசன் விருப்பப்படி சகல ராஜாங்க மரியாதைகளுடனும் அந்தக் காட்டிலேயே சாலிக்கும் அசோகமாலாவிற்கும் திருமணம் நடைபெற்றது. கானகத்திற்குள் அவர்களுக்காக ஒரு அழகிய அரண்மனையைக் காட்டினுள் கட்டிக்கொடுத்தான் துஷ்ட கமுனு. அதே சமயம் நாட்டின் சட்டத்தையும் சம்பிரதாயத்தையும் தழுவி தனது அடுத்த வாரிசாக தனது சகோதரன் சத்ததிசனை இளவரசனாகவும் பிரகடனப்படுத்தினான்.

மொகலாய மன்னன் அக்பருடைய பிள்ளை சலீம் அனார்க்கலியைக் காதலித்த கதையைப்போலவே சாலி இளவரசன் கதையும் அமைந்திருப்பது கவனிக்கத் தகுந்தது. அக்பருடைய விஷயத்தில் கடமை உணர்ச்சி அவருடைய நெஞ்சைக் கல்லாக்கி மனிதப் பண்புகளை மாய்த்துவிட்டது. பௌத்த தர்மத்தில் திளைத்த துஷ்ட கமுனுவின் விஷயத்திலோ புத்திர பாசமும் கடமையுணர்ச்சியும் நாசப்போட்டியில் ஈடுபடாமல் ஒரு நல்ல முடிவைக்கண்டது.

# 13. பட்டத்து யானை அழைத்தது

துஷ்ட கமுனுவின் மிகுதி வாழ்க்கையாவும் பௌத்த மத சேவையிலேயே கழிந்தது. நூற்றுக் கணக்கான சிற்பிகளையும் தொழிலாளர்களையும் இரவு பகலாக வேலையில் ஈடுபடச்செய்து அமர்த்தி ருவான்வெளிசயா தாது கோபுரத்தைக் கட்டி முடிப்பதில் அவன் அக்கரை காட்டினான். அந்தத் தாது கோபுரத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக நாகர்மன்னன் வசமிருந்த புத்த பகவானின் வலது தாடை எலும்பைப் பெற்றதாக மகாவம்சம் கூறுவது துஷ்ட கமுனுவின் காலத்திலும் சுதந்திர தமிழ் ராஜ்யம் அநுராதபுரிக்கு வடக்கே இருந்ததை நமக்கு அறிவுறுத்துகின்றது.

ருவான்வெளிசயா தாது கோபுரம் கட்டி முடிவதற்குள்ளாகவே துஷ்ட கமுனு மரணப்படுக்கையில் படுத்துவிட்டான். கோபுரம் பூர்த்தியாகா விட்டால் மரணத்திலும் அவனுக்கு நிம்மதியிருக்காதென்பதை உணர்ந்த சத்ததிசன் மூங்கில் கழிகளினால் தற்காலிகமாகக் கோபுரம் கட்டி அதற்குச் சுண்ணம்பு பூசினான். துஷ்ட கமுனுவைப் பல்லக்கில் ஏற்றிவந்து தூரத்திலிருந்து காட்டி தாது கோபுரம் முடிந்து விட்டதாக அறிவிக்கவே துஷ்ட கமுனு தனது வாழ்வின் இலட்சியம் நிறைவேறி விட்டதென்ற மனச்சாந்தியுடன் உயிர் நீத்தான். அவன் விருப்பப்படி சத்ததிசன் இலங்கை மன்னனாக முடி சூட்டிக் கொண்டான்.

சத்ததிசன் அண்ணனைப் போல பெரிய வீரனாக விளங்காவிட்டாலும் ருவான்வெளிசயா தாது கோபுரத்தையும் ஆயிரக்கால் மண்டபத்தையும் கட்டி முடித்து பௌத்த சங்கத்தின் நல்லாசியுடன் ஆட்சி நடத்தினான். அவன் காலத்திலும் துஷ்டகமுனுவின் காலத்திலும் ராணுவம் கவனிப்பாரற்றிருந்ததால் நாட்டில் கட்டுப்பாடு சீர்குலைந்துபோயிருந்தது. அரண்மனைகூட ஒரு சதிக்

கூடமாக மாறியிருந்தது. சத்ததீசன் காலமாகியதும் அவனுடைய மூன்று பிள்ளைகளில் மூத்தவனே நியாயமாக பட்டத்துக்கு வந்திருக்கவேண்டும். பௌத்த பிட்சுக்கள் தங்களுக்குப் பிரியமான இரண்டாவது இளவரசனைத் தந்திரமாக முடி சூட்டினார்கள். இது மூத்தவனுக்குப் பொறுக்கவில்லை. ராணுவத்தைக் கையில் போட்டுக் கொண்டு அண்ணனைப் படுகொலை செய்து தம்பி அரசைக் கைப்பற்றினான். ரத்தம் சிந்திக் கைப்பற்றிய அரசு அவனுக்கும் நிலைக்கவில்லை. சில ஆண்டுகளுக்குள் சந்ததியில்லாமல் அவனும் இறக்கவே சத்ததீசனின் கடைசிப் பிள்ளையான கலூனன் அரியணை ஏறினான்.

கலூனன் வலுவில் தனக்கு ராஜ்யம் கிடைக்குமென்று கனவிலும் எண்ணியிருக்க வில்லை. அரசியலில் அவனுக்கு அதிகப் பழக்கமும் கிடையாது. பெயருக்கு அவன் அரசனாக இருந்தானே தவிர ஆட்சிப்பொறுப்பு முழுவதும் பிரதம மந்திரியின் பொறுப்பில் இருந்தது. 'பொறுப்பை வகிப்பது நாம் சிம்மாசனத்தி லிருப்பவன் இன்னொருவனா?' என்று நினைக்க ஆரம்பித்தான் பிரதம மந்திரி. இந்த நினைப்பு விரைவில் ஒரு பயங்கரமான சதியாக உருவெடுத்தது. அதன் பலன் மன்னன் படுகொலை செய்யப்பட்டான். பிரதமமந்திரி அரசைக் கைப்பற்றினான். அவன், பௌத்த சங்கத்தின் ஆதரவில்லாமல் தனது ஆட்சி நிலைக்காதென்பதை உணர்ந்து தான தர்மங்களை ஏராளமாகச் செய்த பொழுதிலும் பொது ஜனங்களுக்கு அவனிடம் நம்பிக்கையில்லை. சமயம் பார்த்து அவனை வீழ்த்துவதற்கு அவர்கள் பழைய மந்திரிகள் சிலருடன் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.

"ஆனால் அடுத்த வாரிசாக யார் சிம்மாசனம் ஏறுவது? அரச பரம்பரையில் வந்தவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்ற சர்ச்சை ஏற்பட்டது.

"வாரிசு இல்லாவிட்டால் என்ன செய்ய வேண்டுமென்பது நியதியோ அப்படிச் செய்வோம். பட்டத்து யானையைக் களவாடி அதன் கையில் பூமாலையைக் கொடுத்தனுப்புவது. யாருடைய கழுத்தில் யானை பூமாலை



யைப் போடுகிறதோ அவரையே அரசராக ஏற்றுக் கொள்ளுவது!" என்று அவர்கள் தீர்மானித்தார்கள். பட்டத்து யானையின் புத்திசாலித் தனத்தில் பொதுவாக எல்லோருக்கும் ஒரு நம்பிக்கையிருந்ததினால் இந்த திட்டத்தை அவர்கள் சில தினங்களுக்குள் செயலுக்குக் கொண்டுவந்தார்கள். பட்டத்து யானை களவாடப்பட்டு மலர் மாலையுடன் அனுப்பப்பட்டது. அதைப் பின் தொடர்ந்து விசுவாசமிக்க மந்திரிகளும் பொதுஜனப் பிரதிநிதிகளும் சென்றார்கள்.

பட்டத்துயானை நாடு நகரங்களையெல்லாம் தாண்டி காட்டுக்குள் வேகமாக நுழைந்தது. மந்திரிகளும் பொதுஜனப் பிரதிநிதிகளும் யானையின் விசித்திரமான போக்கைப் புரிந்துகொள்ள முடியாமல் அதன் பின்னால் ஓடினார்கள்.

கானகத்தின் நடுவிலே ஒரு சிறிய கிராமம். அதன் எல்லையிலே ஒரு பிரம்மாண்டமான அரசமரம். அந்த மர நிழலில் கந்தல் துணியணிந்து ஒரு ஆண்டிச் சிறுவன் பட்டினியோடு படுத்திருந்தான். தூரத்தில் மலர் மாலையுடன் ஒரு யானையும் அவன் பின்னால் ஒரு பெருங் கூட்டமும் வருவதைக் கண்டதும் அவன் ஆச்சரியத்தோடு எழுந்து நின்றான். வேகமாக வந்த யானை அவன் கழுத்தில் மாலையைப் போட்டு அவன் எதிரில் மண்டியிட்டு வணங்கியது.

ஒரு ஆண்டியின் கழுத்தில் பட்டத்து யானை மாலையைப் போட்டு விட்டதைக்கண்டு மந்திரிகளும் மக்களும் ஒரு கணம் திகைத்துப்போய் நின்றார்கள். மாலையிடப்பட்ட இளைஞனே ஆண்டியாயிருந்தாலும் நல்ல உறம் பெற்றவனாயிருந்தான். கட்டுப்படுத்துவாரில்லாமல் அவன் காட்டில் யதேச்சையாகத் திரிபவனல்லவா? மண்டியிட்டுக்கொண்டிருந்த யானையின்மீது அவன் லாவகமாக ஏறி கம்பீரமாக உட்கார்ந்து கொண்டான். மகா புத்திசாலியான அந்த பட்டத்துயானை வருங்கால மன்னன் ஏறிக்கொண்டதும் பெருமிதத்துடன் எழுந்தது. "ஏன்

இடிந்துபோய் நிற்கிறீர்கள்? மன்னர் மன்னனுக்கு ஜய கோஷம் செய்யுங்கள்!" என்று இடித்துக் காட்டுவதைப் போல அந்தக் கானகமே அதிர்ந்து போகும்படிப் பிளறியது. அதைத் தொடர்ந்து "மன்னர் மன்னன் வாழ்க!" என்று மந்திரிகளும் பிரதானிகளும் ஐயகோஷம் எழுப்பினர்கள்.

அப்பொழுதுதான் யானையின் மீது ஏறி உட்கார்ந்த இளைஞனுக்கு உண்மை ஓரளவு விளங்கியது. விளையாட்டாக யானையின்மீது ஏறிக்கொள்ளப் போக தன்னை மன்னர் மன்னனென்று எல்லோரும் வாழ்த்துவதைக் கண்டு அவன் மிரள மிரள விழித்தான்.

"இந்த ராஜ்யத்தின் மன்னர் இனி நீங்கள்தான் அய்யா? பட்டத்து யானை, எங்கள் அரசராக உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. தயவு செய்து தாங்கள் யார், தாய் தகப்பன் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்பதைச் சொல்லவேண்டும்?" என்று மந்திரிகள் கேட்டார்கள்.

"எனக்குத் தகப்பனர் இல்லை. தகப்பனர் யார் என்பதே எனக்குத் தெரியாது. தாயார் அதோ அந்த கிராமத்தில் கிராமாதிகாரி வீட்டிலிருக்கிறாள்" என்றான் இளைஞன்.

இதற்குள் கிராமத்து இளைஞன் ஒருவன் கழுத்தில் பட்டத்து யானை மாலையிட்ட பரபரப்பான செய்தி கிராமம் முழுவதிலும் பரவிவிட்டது. இளைஞனின் தாயார் ஒருத்தியைத்தவிர கிராமஜனங்கள் அவ்வளவு பேர்களும் அங்கு திரண்டு விட்டார்கள். எந்த ஒரு இளைஞனை தரித்திரம் பிடித்தவனென்று அந்த கிராமம் முழுவதும் ஒதுக்கி வைத்திருந்ததோ, அதே இளைஞன் மாலையணிந்து பட்டத்து யானையின் மீது அமர்ந்திருப்பதைக் கண்டபோது கிராம மக்கள் வியப்படைந்து வாயடைத்துப் போய் விட்டார்கள். மந்திரிகள் பின் தொடர யானையை கிராமத்தை நோக்கிப் போகுமாறு தட்டிக்கொடுத்தான் இளைஞன்.

கிராமாதிகாரியின் வீட்டு வாசலில் நெல் இடித்துக் கொண்டிருந்த ஒரு நடுத்தர வயது பெண்மணி யானை



வருவதைக்கண்டு நெல்மூட்டையை அவசரம் அவசரமாக உள்ளே கொண்டுபோகத் தூக்கினாள். 'அம்மா!' என்று தன் அருமை மகன் அழைப்பதைக் கேட்டு அவள் திரும்பிப்பார்க்கவே பட்டத்து யானை மீது கம்பீரமாக தன்மகன் வீற்றிருப்பதையும் முன்னால் மந்திரிகள் ஆனந்த பரவசத்துடன் ஆர்ப்பரித்துக்கொண்டு நிற்பதையும் அவள் கண்டாள்.

கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பெருக, "உன் தகப்பனரின் அரசுரிமை உன்னை வந்தடைந்து விட்டது. இப்பொழுதுதான் என் மனம் சாந்தியடைந்ததடா என் கண்ணே! கணவனைப் பறிகொடுத்து கைம் பெண்ணாக இவ்வளவு வருஷகாலம் கூலி வேலை செய்து நான் உயிர் வைத்துக் கொண்டிருந்தது, என்றைக்காவது ஒரு நாள் நியாயமாக உன்னைச் சேர வேண்டிய சிம்மாசனத்தில் உன்னைக் காணலாம் என்ற நம்பிக்கையினால்தான். உன்னை ஆளாக்கி விடுவதாக உன் தகப்பனருக்குக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றி அவருடைய இறுதி விருப்பத்தையும் பூர்த்தி செய்துவிட்டேன். புத்த பகவானின் கருணையே கருணை!" என்று சொல்லிக்கொண்டு ஓடிவந்தாள்.

இதற்குள் யானையிலிருந்து கீழே இறங்கி தாயின் பாதங்களில் வணங்கி எழுந்த இளைஞன் "நீ என்ன சொல்லுகிறாய் அம்மா! அரசுரிமை நியாயமாக என்னைச் சேரவேண்டியதென்று சொன்னாய்? நான் உண்மையில் ஒரு அரசகுமாரனா அம்மா? இவ்வளவு காலம் ஏன் அந்த உண்மையை என்னிடம் சொல்லாது மறைத்து வைத்திருந்தாய்? என் அப்பா யார்என்று கேட்டபொழுதெல்லாம் நீ கண்ணீர் வடித்ததின் பயங்கர ரகசியம் இப்பொழுதுதான் புரிகிறது" என்றான் இளைஞன்.

இதற்குள் அவனுடைய தாயை அருகில் வந்து பார்த்த மந்திரிகள் "என்ன ஆச்சர்யம்! நீசத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட நமது மன்னரின் மகாராணியாரல்லவா இவர்கள்? அய்யய்யோ இதென்ன கோலம் தாயே! எங்கள் இளவரசரா இவர்?" என்று திகைத்துப் போய்க் கேட்டார்கள்.

"துரதிர்ஷ்ட சாலியான மகாராணிதான் நான். இவன் என் மகன். உங்கள் இளவரசன்!" என்ருள் அம்மாதரசி.

"உங்களேயும் கைக்குழந்தையையும் பிரதம மந்திரி கொலே செய்து விட்டதாக அல்லவா கேள்விப்பட்டோம்?" என்ருர் மந்திரிகளில் ஒருவர்.

"இல்லே அய்யா! மன்னரைக் கொலே செய்துவிட்டு எங்களேக் காவலில் வைத்திருந்தான் அந்த மகாபாவி. காவலாளிகளின் உதவியினுல் கைக்குழந்தையுடன் காட்டுக்குத் தப்பியோடி வந்தேன். எப்படியும் குழந்தையை ஆளாக்கி விட்டு அவன் அரசுரிமையைப் பெற இயன்றதையெல்லாம் செய்ய வேண்டுமென்று மகாராஜா என்னிடம் பிரமாணம் வாங்கிக்கொண்டு உயிர் நீத்தார். அன்று முதல் காட்டில் ஒரு கிராமாதிகாரியின் வீட்டில் கூலி வேலேசெய்து என் குழந்தையை வளர்த்து வந்தேன். உங்கள் மன்னருக்குக் கொடுத்த வாக்குறுதியை நான் நிறைவேற்றிவிட்டேன். என் பொறுப்பு தீர்ந்துவிட்டது. இனி உங்கள் பொறுப்பு' என்ருள் மகாராணி.

"யார் பொறுப்பு அம்மா? என் அருமைத் தந்தையைப் படுகொலேசெய்த நீசனே இந்த நிமிடமே வெட்டி வீழ்த்துவதுதான் என் பொறுப்பு. இதை முன்பே எனக்கு நீ சொல்லியிருந்தால் அந்தப் பாதகனேப் புதைத்த இடத்தில் இதற்குள் புல்முளேத்துப்போயிருக்கும்!" என்று வீர முழக்கம் செய்துகொண்டு அருகில் நின்ற மந்திரிகளில் ஒருவரின் உடைவாளே உருவியெடுத்துக் கொண்டு கிளம்பினுன் இளவரசன்.

மந்திரிகள் அவனேத் தடுத்து நிறுத்தி "இளவரசே! ஆத்திரத்தில் காரியத்தைக் கெடுத்துவிடாதீர்கள். சிம்மாசனத்தின் சரியான வாரிசை இறைவன் அருளினுல் கண்டு பிடித்துவிட்ட எங்களிடம் அந்த வேலேயை விட்டு விடுங்கள். தலேநகரின்மீது படையெடுக்க ஒரு ரகசிய சேனே தயாராயிருக்கிறது. நீங்கள் தனியாகப் போனுல் உங்கள் அருமைத் தந்தையின் மனேரதம் நிறைவேறுவதற்குப் பதில் உங்களேச் சிறையில்தான் நாங்கள் காணவேண்டியிருக்கும். எங்கள் பேச்சைக் கேளுங்கள்" என்று கூறி சமாதானப் படுத்தினுர்கள்.



இவ்வளவு நேரமும் வீட்டைவிட்டு வெளியே வராமலிருந்த கிராமாதிகாரிக்கும் அவன் மனேவிக்கும் தகவல் எட்டியது. தங்கள் வீட்டு வேலேக்காரியே மகாராணியென்றும் அவள் மகனும் கிராமத்தில் முதல் நம்பர் துஷ்டன் என்று பெயரெடுத்திருந்தவனும் தான் இலங்கையின் வருங்கால அரசனென்றும் கேள்விப்பட்டதும் கிராமாதிகாரியின் மனேவி நடுநடுங்கிப் போனுள். மகாராணியை அவள் கொடுமைப்படுத்தியது ஒரு விதத்திலா இரண்டு விதத்திலா? அன்று காலேயில் நடந்த ஒரு நீசத்தனமான சம்பவம் அவள் ஞாபகத்துக்கு வந்தது.

"பள்ளிக்கூடம் போயிருக்கும் குழந்தை 'களேத்துப் போய் வருவான். அவனுக்கு கஞ்சி வார்த்துக்கொடுப்பதற்குக்கூட ஒரு மணி அரிசியும் இல்லே. கொஞ்சம் அரிசி கொடுங்கள்" என்று கிராமாதிகாரி மனேவியிடம் கெஞ்சி மன்ருடினுள் அவளுடைய வேலேக்காரி.

கிராமாதிகாரியின் வீட்டில் சென்ற பதினேந்து வருடங்களுக்கதிகமாக ஊழியம் புரிந்துவரும் அந்த வேலேக்காரிக்கு அவர்கள் கொடுக்கும் சம்பளம் தங்குவதற்கு ஒரு சிறு கொட்டில் அளித்திருப்பதுதான். பசியைத் தணித்துக் கொள்ள அவள் வெளியே வேலேசெய்து சம்பாதித்தாக வேண்டும். வெளியில் வேலே கிடைக்காத நாட்களில் பட்டினி. தான் பட்டினி கிடந்தாலும் தன் குழந்தைக்கு பிச்சை வாங்கியேனும் சோறு போட்டு வந்தாள் அவள்.

ஆனுல், அன்றய தினம் வெளியே வேலேயும் கிடைக்கவில்லே; தர்மமும் கிடைக்கவில்லே. பசியோடு வரும் மகனுக்கு கால்வயிற்றுக் கஞ்சியாவது வார்க்க வேண்டுமென்ற ஆவலில் கிராமாதிகாரியின் மனேவியிடம் கொஞ்சம் அரிசி இரவல் கேட்டாள்.

கடின சித்தம் படைத்த எஜமானி இரவலாக அரிசி கொடுப்பதற்குப் பதில் தாறுமாருக ஏசினுள். "வளர்ந்க

பிள்ளை வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பதற்கென்ன? சண்டியாக பிள்ளையை வளர்த்துவிட்டு பிச்சை கேட்க வெட்கமாயில்லை. கணவன் பெயர் தெரியாத கழிசடைக்கு வீட்டில் தங்க இடம் கொடுத்ததே என் தவறு! நீங்கள் இரண்டு பேரும் பட்டினி கிடந்து சாவுங்கள். அதனால் உலகத்துக்கு நஷ்ட மேற்பட்டு விடாது!" என்று சீறினாள்.

ஆயினும் வேலைக்காரியின் ஒப்பாரி எஜமானியின் கல் மனதையும் கொஞ்சம் கரைத்தது. வேலைக்காரியை அவமானப்படுத்த எண்ணி அவளைச் சுவர் ஓரமாக நிற்க வைத்து அவளுடைய தோட்களின்மீது கால்களை வைத்து ஏறி மச்சியிலிருந்து கொஞ்சம் நெல் எடுத்துக் கொடுத்தாள்.

மாமன்னனின் பட்டமகிஷியா யிருந்த தன்னுடைய தோட்களின்மீது கேவலம் ஒரு கிராமப் பெண் கால் வைத்து ஏற நேரிட்டு விட்டதே யென்றெண்ணி குமுறிக் குமுறி அழுதாள் வேலைக்காரி. பிள்ளையின் பசியை ஆற்ற வேண்டுமென்ற ஆவல் தன்னைப் பிச்சைக்காரியின் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டதை எண்ணியபொழுது அவள் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. அழுது கொண்டே நெல்லைக்குத்தி அரிசியாக்கி அவள் கஞ்சி காச்சி வைத்திருந்தாள்.

கிராமப் பள்ளிக் கூடத்தில் படிக்கப்போயிருந்த அவள் மகன் வழக்கம்போல அன்றும் சண்டை பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் தாயின்முகம் அழுது வீங்கிப் போயிருப்பதைப் பார்த்து திடுக்கிட்டுப்போனான். அவன் வற்புறுத்திக் காரணம் கேட்டதின்பேரில் நடந்ததை அவள் சொன்னாள். தாய்க்கு ஏற்பட்ட அவமானம் அவன் ஆத்திரத்தைத் தூண்டியது. கஞ்சிக் கலயத்தைத் தள்ளி விட்டு "இனி என் கையினால் சம்பாதிக்காமல் சாப்பிட மாட்டேன். இது சத்தியம். இப்பொழுதே ஒரு வேலை தேடிக்கொள்ளுகிறேன் பார்!" என்று சபதம் செய்து கொண்டு அவன் வீட்டைவிட்டுக் கிளம்பினான். பல இடங்களில் தேடியும் வேலை கிடைக்காமல் பசியோடு ஒரு மரத்தடியில் சுருண்டுபோய் அவன் படுத்துக்கிடந்த



பொழுதுதான் கூலி வேலைக்குப் பதில் அந்த ராஜ்யத்தையே கட்டியாளும் வேலை அவனைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தது.

தன் வீட்டு வேலைக்காரியே மகாராணி யென்பதைக் கேள்விப் பட்டவுடன் அன்று அந்த மகாராணியை அவமானப்படுத்திய சம்பவம் தான் கிராமாதிகாரி மனைவியின் நினைவுக்கு வந்தது. அவள் மட்டுமல்ல, வேலைக்காரியா யிருந்தபொழுது மனிதப் பண்பு கொஞ்சம்கூட இல்லாமல் அவளைக் கொடுமைப்படுத்திய கிராமவாசிகளில் பலரும் தங்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

சில வாரங்களுக்குள் இளவரசன் தலைமையில் பொது ஜன ரகசியப்படை அநுராதபுரியைத் தாக்கிப் பிடித்தது. ஆட்சி பீடத்தை வஞ்சகமாக அபகரித்துக் கொண்டிருந்த பிரதம மந்திரி போரில் உயிர் துறந்தான். விஜயன் சந்ததியில் வந்த இளவரசன் வட்ட காமினி (அல்லது வலகம்பா) என்ற பெயருடன் அரியணை ஏறினான். அரச பதவியை அடைந்ததும் தன்னையும் தனது தாயையும் கொடுமைப் படுத்தியவர்கள்மீது வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று அவன் வாலிபரத்தம் துடிதுடித்தது. எந்த கிராமம் பதினைந்து வருடகாலம் தலைமறைவா யிருக்க அவனுக்கு உதவியதோ அந்த கிராமத்தை நிர்மூலமாக்கி விட்டே அவன் மறு வேலைபார்த்தான்.

"என்ன காரியம் செய்து விட்டாய் மகனே! தஞ்சமளித்தவர்களை அழித்து செய் நன்றி கொன்று விட்டாயே! அதர்மத்தின் அஸ்திவாரத்தோடு ஆரம்பிக்கும் உன் ஆட்சிக்கு ஆண்டவன் அருள் எங்கிருந்து கிடைக்கும்?" என்று பிரலாபித்தாள் மகாராணி.

காரியம் நடந்து முடிந்த பிறகு கண்ணீர் சிந்தி என்ன பயன்? செய் நன்றி கொன்ற பாபத்தின் பலனை வட்ட காமினி அடுத்த சில மாதங்களுக்குள்ளாகவே மிக மிக பயங்கரமாக அனுபவிக்க வேண்டியதாகிவிட்டது. விதியை மாற்றியமைக்க மனிதர்களுக்குச் சக்தியேது?

# 14. இரு துருவங்கள்

வட்ட காமினி பட்டத்துக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. சத்ததீசன் காலத்திலிருந்தே ராணுவத்தை முறையாகப் பெருக்கிப் பாதுகாக்க முயற்சி செய்யப்படவில்லையென்பதோடு வட்ட காமினியும் ராணுவ பலத்தின் அவசியத்தை உணராமல் சுகபோகங்களில் ஈடுபட்டிருந்தான். காட்டில் யதேச்சையாகத் திரிந்த அவனுக்கு அரசியல் அனுபவமில்லையென்பது ஒருபுறமிருக்க வறுமையில் வாடியவனுக்கு அரசபோகம் கிடைத்தவுடன் தலைகால் புரியவில்லை. தன்னையும் தன் தாயையும் கொடுமைப்படுத்தியவர்களையெல்லாம் கடுமையாகத் தண்டித்தான். அரச பதவி ஆனந்தமாக வாழ்வதற்காகவே ஏற்பட்டதென்ற நினைப்புடன் உல்லாசமாகப் பொழுது போக்கி வந்தான்.

எதிரிகளுக்கு இதைவிட சரியான சந்தர்ப்பம் வேறு என்ன இருக்கமுடியும்? சோழநாட்டிலிருந்து ஏழு தளபதிகள் கூட்டாக ஒரு பெரும்படையைத் திரட்டிக் கொண்டு அநுராதபுரியைக் கைப்பற்ற விரைந்து வந்தார்கள். அவர்களை எதிர்த்து நிற்க வட்ட காமினியிடம் படை பலம் இல்லாததால் தப்பியோடுவதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. தனது பட்ட மகிஷி சோமதேவியையும் கைக்குழந்தை மகாநாகனையும் பெரிய தந்தையின் மனைவி அனுலாதேவி, அவளுடைய குழந்தை ஆகிய நால்வரையும் ரதத்தில் ஏற்றிக்கொண்டு தலைநகரிலிருந்து தலைதெறிக்க அவன் ஓடிவிட்டான்.

அநுராதபுரியைத் தாண்டி சிறிது தூரம்தான் அவர்கள் சென்றிருப்பார்கள். சோழத் தளபதிகளின் படைகள் தலைநகரில் நுழைந்துவிட்டதாகவும் ஒரு சிறிய படை தங்களைத் துரத்திக்கொண்டு வருவதாகவும் வட்ட



காமினிக்கு ஒற்றர்கள்மூலம் தகவல் கிடைத்தது. இரண்டு பேர்களுக்குமேல் போக முடியாத ரதத்தில் ஐவர் இருந்ததால் ரதத்தை வேகமாக ஓட்டமுடியவில்லை. ரதத்திலிருந்து யாராவது ஒருவர் இறங்கிக் கொண்டாலொழிய எதிரிகளிடம் எல்லோரும் அகப்பட்டுக்கொள்ள வேண்டியிருக்குமென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால் யார் அந்த மகத்தான தியாகத்தைச்செய்வது? ரதத்தைச் செலுத்த வட்ட காமினி இருந்தாகவேண்டும். ஆகையால் தியாகம் செய்யும் பொறுப்பு பட்ட மகிஷி சோமதேவியிடமும் அனுலாதேவியிடமும்தான் இருந்தது.

“நம் குலம் தழைக்க எப்படியும் நம்குழந்தை மகாநாகனைக் காப்பாற்றியாகவேண்டும். கொஞ்சகாலம் நான் தலைமறைவா யிருக்கிறேன். குழந்தையைப் பத்திரமான இடத்துக்கு அழைத்துப் போங்கள்” என்று சொல்லிவிட்டு சோமதேவி ரதத்திலிருந்து கீழே குதித்துவிட்டாள். அவளை விட்டுப் பிரிய மனமில்லாமலும் வேறு வழியில்லாமலும் வட்ட காமினி மின்னல் வேகத்துடன் ரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் விட்டான். பின்னால் விரட்டிக் கொண்டு வந்த சோழத்தளபதிகளில் ஒருவன் பிரமை பிடித்து நின்ற சோமதேவியின் பேரெழிலைக் கண்டு மோகித்து அவளைச் சிறை பிடித்துக்கொண்டுபோனான். சில தினங்கள் வரையில் அநுராதபுரி ராஜ்யம் அல்லோலகலப்பட்டது. படையெடுத்துவந்த ஏழு தளபதிகளில் இருவர் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு தமிழகத்துக்குத்திரும்பினர். அவ்விருவரில் ஒருவன் பட்டமகிஷி சோமதேவியைக் கடத்திக்கொண்டு போனான். மற்றொருவன் அநுராதபுரி அரண்மனையிலிருந்த ஐசுவரியங்களையும் புத்த பகவான் அவரது ஜீவியகாலத்தில் உபயோகித்ததாக நம்பப்படும் பிக்ஷா பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு திரும்பினான். வைர வைடூரியங்கள் வைத்து இழைத்த அந்த பிக்ஷா பாத்திரம் அரண்மனையில் எவ்வளவோ பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தும்கூட எப்படியோ சோழத் தளபதியின் கையில் அது சிக்கிவிட்டது.

இலங்கையில் தங்கிய பாக்கி ஐந்து சோழத் தளபதிகளும் ராஜ்யத்தைத் தங்களுக்குள் கூறு போட்டுக்

கொண்டு ஆளத் தலைப்பட்டார்கள். அடுத்த பதினைந்து ஆண்டுகள் வரையில் அவர்களுடைய ஆட்சி அநுராதபுரியில் நீடித்தது. இதற்கிடையில் பரஸ்பர சந்தேகமும் பதவி ஆசையும் கொண்டு நான்கு தளபதிகள் தங்களுடைய சதிகளுக்குத் தாங்களே பலியாயினர். ஐந்தாவது தளபதி பிறகு போட்டியில்லாமல் அமைதியாக ஆட்சி நடத்திவரத் தொடங்கினான்.

இந்தப் பதினைந்து வருடங்களுக் கிடையில் சிங்கள மன்னன் வட்ட காமினி காடுமலைகளிலெல்லாம் சுற்றித் திரிந்து கடைசியில் தம்புல மலைக்குகையில் தஞ்சமடைந்தான். மனிதர்கள் நடமாட அஞ்சும் அடர்ந்த காட்டின் மத்தியிலிருந்த தம்புல மலைக்குகை வட்ட காமினிக்கு நல்ல பாதுகாப்பாக அமைந்தது. அஜந்தாவையும், சிகிரியாவையும் போல வண்ண ஓவியங்களுடன் வருங்காலத்தில் தம்புலகுகை அகில உலகப் பிரசித்தி பெறும் வாய்ப்பை அடைந்த காரணம் தப்பியோடிவந்த மன்னனுக்கு தஞ்சமளிக்கும் பெருமையைப் பெற்றிருந்ததினால்தான்.

தலைமறைவாயிருந்த வட்ட காமினி வாளாயிருக்கவில்லை. மாறு வேடத்தில் அடிக்கடி அருகிலுள்ள கிராமங்களுக்கும் பட்டினங்களுக்கும் போய் பொது ஜனங்களின் மனோநிலைமை எப்படியிருக்கிறதென்பதை அறிந்து வந்தான். சூறையாடுவதைத்தவிர வேறு எண்ணமில்லாத சோழத்தளபதிகளுக் கிடையிலிருந்த பரஸ்பர பொறாமையும் அசூயையும் நாட்டை அலங்கோல நிலைமைக்கு உட்படுத்தியிருந்ததையும் அந்நிய ஆட்சியைக் கவிழ்க்கவும் சிங்கள ஆட்சியை பழையபடி ஏற்படுத்தவும் பொது ஜனங்கள் துடித்துக் கொண்டிருப்பதையும் வட்டகாமினி கண்டான். சில நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்கள் உதவியினால் காட்டுக்குள் ஒரு பிரம்மாண்டமான சேனையை அவன் ரகசியமாகத் திரட்டினான். இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டு போருக்கு ஆயத்தமாக அவனுக்குப் பதினைந்து ஆண்டுகள் பிடித்தன. இதற்கிடையில் சோழத் தளபதிகளில் நால்வர் கொலையுண்டு ஒருவன் மட்டுமே எஞ்சி இருந்ததால் வட்ட காமினியின் வேலை எதிர்பார்த்ததைவிடச் சுலபமாகவே



முடிந்து விட்டது. போரில் சோழத்தளபதி கொலையுண்டு அநுராதபுரியில் சிங்கள அரசு மீண்டும் ஏற்பட்டது.

வட்டகாமினி இளமையில் பொறுப்பின்றி நடந்து அரசை இழந்து அவதிப்பட்டவனாதலால் பழைய தவறுகளை மீண்டும் செய்யாமல் பக்திமானாகவும் அதே சமயம் படை பலத்தில் அக்கரை காட்டிக்கொண்டும் நல்லாட்சி நடத்திவரலானான்.

அரசைத் திரும்பக் கைப்பற்றிய சில வாரங்களுக்குள்ளாகவே பட்ட மகிஷி சோமதேவியை ஒரு துளிரத்தமும் சிந்தாமல் சமரச முறையில் வட்ட காமினி மீட்டுக் கொண்டான். சோமதேவி இலங்கையிலேயே சிறை வைக்கப்பட்டிருந்ததாயும் சோழர் ஆட்சியை வீழ்த்தியவுடன் சிறையிலிருந்து மனைவியை மன்னன் மீட்டானென்றும் சிலர் கூறுவர். ஆனால் சரித்திரத்தின் போக்கிற்கு இக்கூற்று பொருத்தமாகத் தென்படவில்லை. மகாராணியைத் தமிழகத்துக்குக் கடத்திக்கொண்டு போன சோழத் தளபதி, அநுராதபுரியில் வட்ட காமினி வீரமுடன் போராடி அரசைத் திரும்பப் பெற்ற செய்தியைக் கேட்டவுடன் உரிய மரியாதைகளுடன் சோமதேவியை ஈழத்துக்கு அனுப்பிவைத்தானென்று மகாவம்சம், ராஜவழி முதலான புராதன நூல்கள் கூறுவது இதற்குப் பொருத்தமாயிருக்கிறது. அநுராதபுரியில் அற்புதமான கலைக்கோயிலாகக் காட்சியளிக்கும் ஸுவனராமா என்ற பௌத்த ஆலயத்தின் புராதன வரலாறு. நாட்டு நலனுக்காகவும் வருகால சிங்கள ராஜவம்சத்தின் நலனுக்காகவும் தன்னையே தியாகம் செய்த உத்தமி சோமதேவி ஈழத்துக்குத் திரும்பி வந்ததின் ஞாபகார்த்தமாக இந்த பௌத்த ஆலயத்தை வட்டகாமினி கட்டுவித்தான். அதோடு சோமதேவியின் மகத்தான தியாகம் என்றென்றும் நாட்டுமக்களின் நினைவிலிருக்க அந்த ஆலயத்தில் சிலாசாசனங்களையும் அவன் எழுதிவைத்தான். தனது கற்பைக்கூட நாட்டுக்காகத் துறக்கத் தயாராயிருந்த சோம தேவியின் அரும் பெரும் தியாகத்துக்கு இலங்கையின் நீண்ட வரலாற்றில் வேறு முன்மாதிரியே கிடையாது. வீரப் பெண்மணிக்கு, துஷ்ட கமுனுவை

ஊக்குவித்த விஹாரமகா தேவியை எவ்விதம் ஒப்பற்ற உதாரணமாக ஈழநாடு கருதுகின்றதோ அதேபோல தியாகத்தின் சிகரமாக சோமதேவியையும் போற்றுகிறது.

அடுத்தடுத்த பல யுத்தங்களினாலும் அமைதியற்ற வாழ்க்கையினாலும் நாடு வறுமையில் வாடிக்கொண்டிருந்தது. அரண்மனை கஜானா காலியாயிருந்தது. அப்படியிருந்தும் மன்னன் வட்ட காமினியின் மனதில் புதிய புதிய தாது கோபுரங்களைக் கட்டியெழுப்பி பௌத்தமத வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்ற ஆசை ஒரு வெறியாக ஏற்படிருந்தது. பதினைந்து வருடகாலம் தனக்குத் தஞ்சமளித்த தம்புலை மலைக்குகையில் வியக்கத்தக்க ஆலயமொன்றை அவன் சமைத்தான். அஜந்தாவிலும் சிகிரியாவிலும் பிற்காலத்தில் தோன்றிய அற்புதமான சிற்ப சித்திரக்கலைக் கோயிலுக்கு தம்புலை குகைக்கோயிலே முன்மாதிரியாயிருந்தது. பல்லாயிரக் கணக்கான சிற்ப மேதைகளை அமர்த்தி அடுத்த பல ஆயிர மாண்டுகளுக்கு அழியாத அற்புதமான புத்தர் சிலைகளையும், வண்ண ஓவியங்களையும் தம்புலக்குகையில் அவன் சிருஷ்டித்தான். விஜயனும் அவன் கோஷ்டியாரும் இலங்கையில் வந்திறங்கிய வரலாறு, துட்ட கமுனுவிற்கும் எல்லாளச் சோழனுக்கும் நடந்த தனிச்சமர், முதலான பல சரித்திர நிகழ்ச்சிகளை வண்ண ஓவியங்களாக இக்கோயிலின் சுவர்களிலெங்கும் வரைவித்தான் அவன். சிங்கள வம்சத்தின் ஆதிபிதா விஜயனென்ற ஒரு இந்திய இளவரசனென்பதைச் சந்தேகிப்பவர்களுக்கு சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் வட்டகாமினி சித்திரங்களில் வடித்த சரித்திர நிகழ்ச்சிகள் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த நிரந்திர சாட்சியங்களாக இன்றும் காட்சிதருகின்றன. இலங்கைக்கு வரும் தேச யாத்ரீகர்கள் கொழும்பிலிருந்து 93 மைல்களுக்கப்பாலும் சிகிரியாவிலிருந்து 10 மைல்களுக்கப்பாலுமிருக்கும் தம்புலை கலைக்கோயிலைப் பார்க்கப் போகாமலிருப்பதில்லை. அன்று முதல் இன்றுவரை கோயிலாகப் புனிதத்தன்மை கெடாமலிருக்கும் குகைக் கோயில் இது ஒன்றுதான்.



இக்கோயிலைப்பற்றி ஒரு ரசமான கதையுண்டு. இதைக் கட்டி முடித்தவுடன் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க கஜானாவில் ஒரு செப்புக்காசு மில்லாததினால் மன்னன் வட்ட காமினி மீண்டும் தலைமறைவாகி நாட்டைவிட்டு ஓட வேண்டியிருந்ததாம். காட்டில் அவன் தலைமறைவாயிருக்கையில் தேவர்கள் தோன்றி வெள்ளிச் சுரங்கம் இருக்குமிடத்தைக் காட்டியதாயும் அதிலிருந்து ஏராளமான வெள்ளியை வெட்டியெடுத்து மன்னன் தனது கடனைத் தீர்த்துக்கொண்டதாகவும் ஒரு கதை வழங்கப் பட்டு வருகிறது. வட்ட காமினி மன்னன் காலத்தில் இலங்கையில் வெள்ளிச் சுரங்கம் கண்டுபிடிக்கப் பட்டதை இக்கதை குறிப்பிடுவதாகவும் சிலர் கருதுவதுண்டு.

வட்ட காமினியை சத்ததீசனின் நான்காவது பிள்ளையென்றும் கொலை செய்யப்பட்ட தனது அண்ணன் மனைவி அனுலா தேவியை வட்டகாமினி மறுமணம் செய்துகொண்டு சோமாதேவியை இரண்டாவது மனைவியாக அவன் மணந்தானென்றும் இன்னொரு வரலாறும் உண்டு. மகாவம்சம் இந்த இரண்டாவது வரலாற்றையே ஆதரிக்கின்றது. இதற்கு அநுசரணையாக வட்ட காமினி உயிர் நீத்ததும் அடுத்த வாரிசாகப் பட்டத்துக்கு வந்தவன் அநுலாதேவியின் பிள்ளையான மகாசூலன் என்பவன் தான்.

வட்டகாமினியின் காலத்தில் இன்னொரு விசேஷமும் நடந்தது. அபயகிரி விஹாரை என்ற ஒரு பிரம்மாண்டமான விஹாரையை அவன் கட்டினான். அந்த விஹாரை வழக்கமான பௌத்த தத்துவங்களுக்கு மாறுபட்டு காஷ்மீர பௌத்த தர்மத்தைப் போதிக்க ஆரம்பித்ததினால் பௌத்தச் சங்கத்தில் முதன் முதலாக ஒரு பெரிய பிளவு ஏற்பட்டது.

அரண்மனைக்குள் பளிங்குக் கற்களினால் அமைத்த அழகிய செயற்கைத் தடாகத்தில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தாள் ஒரு இளம்பெண். அவளுக்கு வயது சுமார் பதினெட்டுக்கு மேலிருக்குமென்று மதிப்பிட

முடியாது. உருக்கி வார்த்த தங்கச்சிலை உயிர்பெற்று எழுந்து அசைந்தாடுவதைப் போலிருந்தது அவள் எழில் அங்கம். அழகிய இரு செம்மலர்க்கரங்களினால் தெள்ளிய நீரை வேகமாக தள்ளி விலக்கிக்கொண்டு அவள் தடாகத்தைப் பன்முறை சுற்றிச்சுற்றி நீந்திக்கொண்டு வந்தாள்.

நீந்திக்கொண்டிருந்தவள் திடீரென்று என்ன நினைத்துக்கொண்டாளோ தெரியவில்லை, நீச்சலடிப்பதை நிறுத்திக்கொண்டு மார்பளவு ஆழத்தில் நின்று கொண்டு "பிரபா! பிரபா!!" என்று தோழியைக் குரல்கொடுத்து அழைத்தாள். அருகில் நின்ற தோழியை அவள் உரக்க அழைத்ததைக் கவனித்தால் அவளுடைய சிந்தை அப்பொழுது அந்த இடத்திலில்லை என்பதை எடுத்துக் காட்டுவதைப் போலிருந்தது.

"மகாராணி! நான் இங்குதானே இருக்கிறேன்." என்றாள் தடாகத்தின் விளிம்பில் நின்ற தோழி.

"ஏனடி பிரபா! தங்கப் பதுமையைப்போல சொந்த மனைவியிருக்கும் பொழுது தறுதலையாக ஊர் சுற்றிப் பெண்வேட்டையாடும் முட்டாளைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் பிரபா?" என்று கேட்டாள் மகாராணி என்று அழைக்கப்பட்ட இளம் பெண்.

"முட்டாளென்று நீங்கள் தான் சொல்லிவிட்டீர்களே மகாராணி? காமி, கயவன், குருடன் என்றெல்லாம் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் தோழி.

"இந்த முட்டாள்களின் பட்டாளத்துக்கு உன்னுடைய மகாராஜா பிரதம தளகர்த்தரென்று நான் சொல்லுகிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள் மகாராணி.

"உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லப் போகிறேன் மகாராணி?" என்று மழுப்பினாள் பிரபா.





மகாராணி அனாயாசமாக தடாகத்தை ஒரு முறை சுற்றிவந்து "ஏனடி பிரபா, நாட்டிலே என்ன பேசிக் கொள்ளுகிறார்கள்?" என்று கேட்டாள்.

"நீங்கள் சொல்லிய மாதிரிதான் பேசிக்கொள்ளுகிறார்கள் மகாராணி!"

"இப்பொழுது நான் என்ன சொன்னேன், நான் சொல்லிய மாதிரி ஊரில் பேசிக்கொள்ள?"

"அரண்மனையில் அழகு அழுகிறது. குப்பை மேடுகளில் அவலட்சணம் சிரிக்கிறது என்று நையாண்டியாகப் பேசிக் கொள்ளுகிறார்கள்," என்றாள் பிரபா.

"என்னைப்பற்றி என்ன சொல்லிக் கொள்ளுகிறார்கள் பிரபா?"

"என்ன சொல்லுவார்கள் மகாராணி! அழகுச் செல்வம், வண்ண ஓவியம், தங்கச்சிலை, மாயனின் அற்புத சிருஷ்டி என்றெல்லாம் வர்ணித்துவிட்டு இப்படிப்பட்ட ஒரு அப்ஸரஸ் அரண்மனையிலிருக்கும் பொழுது மகாராஜா கெட்டலைகிறார் என்று துக்கப்படுகிறார்கள். மகாராஜாவுக்கு ஊரில் என்ன பெயர் தெரியுமல்லவா? ராஜாதிராஜ, ராஜ கம்பீர, ராஜமார்த்தாண்ட சிங்கள மகா தேசாதிபதி மகாநாகன் என்பதற்குப் பதில் சோரநாகன் என்றழைக்கிறார்கள்.

"பொதுஜனங்கள் எப்பொழுதுமே புத்திசாலிகள். மன்னருக்குப் பொருத்தமான பெயர் வைத்திருக்கிறார்கள்!" என்று சொல்லிவிட்டு வெள்ளி மணியோசையைப் போல கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள் மகாராணி.

"என்ன மகாராணி?" கொஞ்சம் நேரங் கழித்து பிரபா! நான் ஒன்று கேட்கிறேன், ஒளியாமல் பதில் சொல்லுவாயா?" என்று கேட்டாள் மகாராணி.

"நீ சிவனை நன்றாகப் பார்த்திருக்கிறாயா?"

"யார் மகாராணி, சிவனா? அந்தப்புரக் காவலாளியையா சொல்லுகிறீர்கள்?

"ஆமாம், அவனையேதான் !"

"அவனுக்கு என்ன மகாராணி !"

"அவனைப்போன்ற ஆணழகன் இந்த ராஜ்யத்தில் வேறுயாராவது இருக்கிறார்களா என்று கேட்டேன் ?"

பிரபா பதிலே சொல்லவில்லை.

"ஏன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறாய் பிரபா ? அழகா யிருப்பவனை ஆணழகன் என்று வர்ணித்தால் அது தவறா ?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே மகாராணி ?"

"அவன் ஈட்டியை வைத்துக்கொண்டு ஆடாமல் அசை யாமல் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பொழுது அவன் உண்மையில் மனிதனா அல்லது கைதேர்ந்த சிற்பி செதுக் கிய அற்புதச் சிற்பமா என்று நான் மலைத்துப்போயிருக் கிறேன். அரண்மனையில் அழகு அழுகிறது என்று சற்று முன் சொன்னாயே, அது எவ்வளவு உண்மை பார்த் தாயா ?"

"நான் உங்களைத்தான் சொன்னேன் மகாராணி, காவல்காரனாயிருக்கும் சிவனையில்லை."

"யாரைச் சொன்னாலென்ன ? அரண்மனையில் அழகு அழுவது என்னவோ உண்மை! பிரபா, நீ போய் சிவனை இங்கே வரச்சொல்லு ?"

"சிவனை இங்கே வரச்சொல்லுவதா ? நீங்கள் ஜலக் கிரீடை செய்யு மிடத்துக்கு காவல்காரனை வரச்சொல்லு வதா ?"

"கேள்வி கேட்க வேண்டாம். சொன்னதைச் செய் போ !"

"பயந்துகொண்டு அவன் வர மறுத்தால் ?"

"மகாராணி அனுலாதேவியின் உத்தரவை மீறினால் தலை காணமற் போய்விடு மென்பதை அவனுக்கு ஞாபகப் படுத்து. மயன் சிருஷ்டித்த அந்த ஆணழகன் வாழப் பிறந்தவன் ; சாகப் பிறந்தவனில்லை. இதையும் அவனிடம் சொல்லு, போ !"



மகாராணி அனுலா தேவியின் விபரீதமான உத்தர வைக் கேட்டுக்கொண்டு காவற்காரன் சிவனைத் தேடிக் கொண்டு போனாள் பிரபா. அந்தப்புர வாசலில் சற்று முன் மகாராணி வர்ணித்ததைப் போலவே ஒரு அற்புதச் சிற்பத்தைப்போல அவன் நிற்பதைக்கண்டு, "சிவா இன்று காலை அரண்மனைக்குப் புறப்பட்டு வரும் பொழுது நீ யாருடைய கண்களில் விழித்தாய் ?" என்று கேட்டாள்.

"நரியின் முகத்தில்தான். ஏன் ?" என்று விசாரித் தான் சிவன்.

"அப்படியானால் சகுனம் பார்ப்பதெல்லாம் சுத்தப் பொய். நரியின் முகத்தில் விழித்தால் நல்லதிர்ஷ்டம் வரும் என்பார்கள். உனக்கோ."

"எனக்கு என்ன ? எனக்கு கடவுள் கிருபையால் ஒரு குறைவு மில்லை !"

"கடவுள் கிருபை உனக்கு ரொம்ப ரொம்ப அதிக மாகக் கிடைக்கப்போகிறது. மகாராணி அனுலா தேவி யாரின் கிருபா கடாக்ஷம் திடீரென்று உன் மீது திரும்பி யிருக்கிறது, தலையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். போ !" என்றாள் பிரபா.

"நீ என்ன சொல்லுகிறாய் பிரபா ? என்னை எங்கே போகச் சொல்லுகிறாய் ?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் சிவன்.

"ஜலக்ரீடா மண்டபத்தில் பத்தரை மாற்றும் பசும் பொன் மேனியுடன் உனக்கு தரிசனம் கொடுக்க அனுலா தேவியார் காத்திருக்கிறார்கள் போ என்றாள்."

"பிரபா, என்னிடம் விளையாடுகிறாயா ?

"நான் இல்லை, உன்னை விளையாடக் கூப்பிடுவது சிங்கள சாம் ராஜ்யத்தின் மகாராணி அனுலாதேவியார் !"

மகாராணி ஜலக்ரீடையில் இருப்பதையும் சிவனின் கம்பீரத் தோற்றத்தில் அவள் மனதைப் பறி கொடுத்திருப்பதையும் பிரபா ஒரு மாதிரியாகச் சொல்லிவிட்டு "ராணியின் அழைப்பை ஏற்க மறுத்தால் உன் தலை உடனே போய்விடும். ஏற்றுக்கொண்டால் கொஞ்சநாள் கழித்துப்போகும். இந்த இரண்டில் எது நல்லதென்று நீயே யோசித்து முடிவு கட்டிக்கொள்" என்றாள் பிரபா.

மகாராணியின் முன் கோபத்தை அனுபவத்தில் அறிந்த சிவன் தடுமாறிக்கொண்டே ஜலக்ரீடா மண்டபத்தை யடைந்து" மகாராணி அழைத்தீர்களாமே" என்றான்.

திரும்பிப் பார்த்த அனுலாதேவி "ஏன் கண்களை மூடிக்கொண்டு நிற்கிறாய் சிவா! உலகத்தையும் அதிலிருக்கும் என்னையும் பார்த்துப் பார்த்துச் சலிப்படைந்து விட்டாயா? கண்கள் இருப்பது உனக்குக் கஷ்டமாயிருந்தால் என்னிடம் சொல்லு. வேண்டாத அந்தக் கண்களை நான் பிடுங்கியெறியச் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

சிவன் பாதிக் கண்களைத் திறந்துகொண்டு வெடவெடவென்று உடல் நடுங்க "மகாராணி! நான் பரம ஏழை! என்னைச் சோதிக்காதீர்கள் தாயே!" என்று மன்றாடினான்.

"உனக்குத் தாயார் இருக்கிறாளா?" என்றுகேட்டாள் அனுலா.

"இருக்கிறாள்?"

"அவளுக்கு என்ன வயதிருக்கும்?"

"அறுபது இருக்கும்?"

"நான் உன் தாயாரைப் போலவா இருக்கிறேன்?"

"நான் அப்படிச் சொல்லவில்லை தாயே!"

"மறுபடியும் தாயே என்கிறாயே!"

காவற்காரன் தடுமாறிப்போனான்.



"நீ பரம ஏழையென்று சொன்னாய்?"

"ஆமாம் தா...மகாராணி!"

"ஏழ்மை உன்னைவிட்டுப் போய்விட்டது சிவா. நீ இந்த மண்டலத்துக்கே மன்னனாகப் போகிறாய். ஏன், உனக்கு இஷ்டமில்லையா?"

"எனக்கு இப்பொழுதிருக்கும் உத்தியோகம் நிலைத்திருந்தாலே போதும்!"

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன் சிவா. இப்பொழுது உனக்கு என்ன உத்தியோகம்?"

"தங்களுக்குத் தெரியாதா மகாராணி அந்தப்புரக் காவலாளி!"

"இங்குதான் நீ பெரும் தவறு செய்கிறாய் சிவா! இப்பொழுது நீ செய்யும் உத்தியோகம் என்னை இமை கொட்டாமல் அரைக் கண்களால் பார்த்துக்கொண்டிருப்பது. இந்த உத்தியோகத்தில் நீ நிலைத்திருக்கப் போகிறாய்! முழுக்கண்களினல் பார்க்கும் அளவுக்கு உனக்கு உத்தியோக உயர்வு அளிக்கவும் இந்நாட்டின் மகாராணி தீர்மானித்திருக்கிறாள். புரிந்ததா? கையை இப்படி நீட்டு!" என்றாள் அனுலா தேவி.

சிவன் சிலையைப் போலச் சமைந்து நிற்கவே "அழகான அந்தக் கையிடம் உனக்கு விருப்பமில்லையா சிவா?" என்றாள் அனுலா.

அவள் இவ்விதம் சொல்லியதின் பொருளை உணர்ந்துகொண்ட சிவன் கையை நீட்டினான். குளிர் காய்ச்சல் கண்டதைப்போல நடுங்கிக்கொண்டிருந்த அவன் கைகளைப்பற்றிக்கொண்டு நீச்சல் தடாகத்திலிருந்து கரையேறி வந்த அனுலாதேவி "மகாராஜா வேட்டைக்குப் போயிருப்பது உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டாள் சிவனிடம்.

"தெரியும் மகாராணி"

"மகாராஜா வேட்டைக்குப் போனால் திரும்புவதற்கு ஒரு வாரமாகுமென்பதும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?"

"தெரியும் மகாராணி!"

"நல்லது. சிறிது நேரத்தில் உன்னை என் அந்தப்புரத்தில் எதிர்பார்க்கிறேன். இது மகாராணி அனுலா தேவியின் உத்தரவு" என்று சொல்லிவிட்டு அனுலா தேவி சமைந்து நின்ற சிவனைக் குறுமையாகப் பன்முறை திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள். மகாராணியின் அழைப்பை ஏற்க மனமில்லாமலும் நிராகரிக்கத் துணிவில்லாமலும் சிறிதுநேரம் கழித்து அந்தப்புரக் காவலாளி சிவன் அந்தப்புரத் தெய்வத்தின் விளையாட்டுப் பொம்மையானான். சிலந்திக் கூட்டுக்குள் தப்ப வழியின்றி சிக்கிய பூச்சியைப்போல விதி அவனை ஒரு புதிய வழியில் விரைவாக இட்டுச்செல்ல ஆரம்பித்தது.

இலங்கையின் சரித்திரத்தில் தனியரசு செலுத்திய முதலாவது ராணியான அனுலா தேவியின் வரலாற்றை மேலே எழுதுவதற்குமுன் அவளுடைய பூர்வோத்திரங்களைக் கூறுவது அவசியமாகிறது வட்ட காமினி காலகதியடைந்து அவனுடைய முதல் மனைவியென்றும் பெரியப்பாவின் மனைவியென்றும் கருதப்படும் அனுலாதேவியின் (இவள் வேறு அனுலா தேவி) மகன் மகாசூலன் பட்டத்துக்கு வந்தான். ஆறு வருடகாலம்தான் அவன் ஆட்சி நிலைத்தது. அவன் அகால மரணமடையவும் வட்டகாமினியின் இரண்டாவது மனைவி சோமதேவியின் மகன் மகாநாகன் அரியணை ஏறினான். இளமை முதற்கொண்டு அவன் ஒருவருக்கும் கட்டுப்படாமல் தான்தோன்றியாகவும் பெண் பித்தனாகவும், கெட்டழிந்துகொண்டிருந்தான். உலகத்திலுள்ள அழகிய பெண்களும், பொருள்களும் அனுபவிக்கத் தெரிந்தவர்களுக்கே உரிமையாயிருக்க வேண்டுமென்பது அவன் சித்தாந்தம். மகாசூலன் அரசு செலுத்துகையில் மகாநாகன் மக்களைப் பலவிதங்களிலும் கொள்ளையடித்து வந்தான். ஆனால் அப்பொழுது அவனுடைய அக்கிரமங்கள் சற்று ரகசியமாயிருந்தன. மகா



சூலன் காலமாகி சிம்மாசனம் தனக்குக் கிடைத்ததும் மகாநாகனின் அக்கிரமங்கள் வரைகடந்து விட்டன. இதனால் அவனுக்கு சோரநாகன் என்ற பெயரும் வழங்கலாயிற்று. அவனுடைய ராணிதான் அனுலா தேவி. கணவனுக்கு அவள் எந்த விதத்திலும் சளைத்தவளில்லை. உண்மையைச் சொல்லப்போனால் அவளுடைய அட்டூழியங்கள் சோரநாகனையும் மிஞ்சி இலங்கையின் வரலாற்றில் என்றும் மறைக்கமுடியாத ஒரு பெரும் களங்கத்தை ஏற்படுத்திவிட்டனவென்றே கூறவேண்டும்.

# 15. தேர்ப்பாகன் பெற்ற அரச பதவி

சிங்கள ராஜ்யத்தின் தலைநகரான அநுராதபுரியிலிருந்து அரபுநாட்டுக் குதிரைகள் பூட்டிய அழகான ரதம் ஒன்று தெற்கு நோக்கி ராஜபாட்டையில் அதிவேகமாகப் பறந்து சென்றுகொண்டிருந்தது. அதில் மூவர் உட்கார்ந்திருந்தார்கள். அம் மூவரில் ஒருவர் மன்னர் என்பதையும் மற்றொருவர் மந்திரி யென்பதையும் சுலபமாக ஊகிக்கும்படியாயிருந்தது. மூன்றாவது ஆசாமி சாரதி என்பதை யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. பிரயாணத்தின் ஆயாசம் தெரியாமலிருப்பதற்காக அவர்கள் பல விஷயங்களைப்பற்றியும் பேசிக்கொண்டு போனார்கள்.

"கல்யாணி நகர ராஜகுமாரியை இதற்குமுன் நீங்கள் பார்த்ததேயில்லையா!" என்று மன்னரிடம் கேட்டார் மந்திரி.

"இல்லை!" என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னார் மன்னர்.

"அவள் அழகில் அப்ஸரஸ்; அறிவில் சரஸ்வதி; அன்பில் சங்கமித்தை...!" என்று மந்திரி வர்ணிக்க ஆரம்பித்தார்.

ரதத்தை ஓட்டிக்கொண்டிருந்த சாரதி 'களுக்'கென்று சிரித்தான். அவனைக் சுட்டுப் பொசுக்கிவிடுவதைப்போல

முறைத்துப் பார்த்த மந்திரி "எதற்காகச் சிரிக்கிருய்?" என்று அதட்டிக் கேட்டார்.

மந்திரியை அவன் கொஞ்சமும் பொருட்படுத்திய தாகத் தெரியவில்லே. "நீங்கள் ராஜ குமாரியை வர்ணிக்கும் வர்ணிப்பைப் பார்த்தால் பெண் பார்க்கப் போவது நமது மகாராஜவா அல்லது மகாமந்திரியா என்று சந்தேகமாக யிருந்தது. ஆகையால்தான் சிரித்தேன்!" என்ருன் அவன்.

"நீ யாரிடம் பேசுகிறுயென்பது தெரியுமா? அதிகப் பிரசங்கி!" என்று ஆரம்பித்தார் மந்திரி.

சாரதி இடைமறித்து "கொஞ்சம் இருங்கள். ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டால்தான் என்னல் பதில் சொல்ல முடியும். சிங்கள சாம்ராஜ்யத்தின் மகா மந்திரி யாருடன் பேசுகிறேன். அனுராத புரத்தில் பிறந்து வளர்ந்து அரண்மனைச் சேவகத்திலிருக்கும் எனக்கு நீங்கள் யார் என்பதுகூடத் தெரியாதா?" என்ருன். பிறகு "ஓடுடா ராஜா! இருட்டுக்கு முன்னல் ராஜகுமாரியை மகா மந்திரிக்குக் காட்ட பறந்து ஓடுடா ராஜா!" என்று குதிரைகளை விரட்டினன் அவன்.

மகா மந்திரி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "மகாராஜா! குதிரைக்காரன் திமிர்பிடித்துப் பேசுவதைப் பார்த்தீர்களா? உங்கள் முன்னிலேயிலேயே இப்படிப் பேச அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்?" என்று மன்னரிடம் புகார் செய்தார்.

"மகாராஜா! நான் சொல்லியதில் தவது ஏதாவது இருந்தால் நீங்களே சொல்லுங்கள். மகா மந்திரியார் ராஜகுமாரியை வர்ணிப்பதைப் பார்த்தால் பெண்பார்க்கப் போவது யார் என்ற சந்தேகம் ஏற்படுவது சகஜம் தானே?" என்ருன் சாரதி.

"சுபா! நீ சற்றுநேரம் சும்மா யிருக்கமாட்டாய்? நீ உன் வேலையைப் பார்!" என்ருர் மன்னர்.



மன்னரின் பேச்சு சாரதியின் அதிகப் பிரசங்கித்தனத்துக்கு ஊக்கமளிப்பதைப் போலிருந்ததே தவிர அவனை எச்சரிப்பதாக இல்லாதது மந்திரிக்கு பெரும் ஏமாற்றமாகவும் துக்கமாகவும் இருந்தது.

"என்னை மன்னிக்கவேண்டும் மகாராஜா! சுபா தன்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிருனென்று தெரியவில்லே. எடுபிடி வேலேசெய்யும் காவலாளியை அலங்கார ரகத்தில் உட்காரவைத்து குதிரை லகான்களையும் கையில் கொடுத்தவுடன் அவனுக்குத் தலைகால் புரியவில்லே. எந்த மனிதனையும் அவன் அவனுக்குரிய இடத்தில் வைத்தால்தான் மரியாதை" என்று மந்திரி துயரத்துடன் கூறவும் "ஆமாம் மகாராஜா எவரையும் அவர் அவருடைய இடத்தில் வைத்தால்தான் மரியாதை. இடம் மாறினல் மரியாதை கெட்டுவிடும்! எனக்கு ஏன் சம்பந்தமில்லாத பெரிய ராஜீய விஷயங்கள்!" என்று நையாண்டியாகப் பேசிய சாரதி சுபா குதிரைகளை விரட்டுவதில் ஈடுபட்டான்.

வழிநெடுக இடையிடையில் அவன் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசியதும் அவைகளையெல்லாம் மன்னர் பொருத்துக்கொண்டும் சில சமயங்களில் ரசித்துக் கொண்டும் வந்தது மகா மந்திரிக்கு எரிச்சலாகமட்டுமல்ல விளங்காத புதிராகவுமிருந்தது.

சுபா அரண்மனையிலே ஒரு வேலேக்காரன். எப்பொழுதும் மன்னரோடு கூடவே இருப்பவன். அவன் பேச்சுக்கு மன்னரிடம் ஒரு மதிப்பு உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனல் தன்னையே அவமதிக்கும் அளவிற்கு அவன் பேச்சுக்கு மன்னர் மதிப்புக் கொடுப்பாரென்பதை மகா மந்திரி அப்பொழுதுதான் அறிந்துகொண்டார். ஆகையால் அவர் குருரமாக அதிர்ச்சியடைந்ததில் ஆச்சர்யமில்லே யல்லவா? சுபாவின் போக்கிலிருந்து அவனுக்கும் மன்னருக்கும் ஏதோ ஒரு ரகசியத் தொடர்பு இருக்க வேண்டுமென்பதை மகாமந்திரி ஊகிக்கமுடிந்தது. அந்த ரகசியத்தை அவர் கண்டுபிடிப்பதற்குள் நாட்டில் எவ்வளவோ விபரீதங்கள் நடக்கவிருப்பதை அவர் எப்படி அறிவார்?

சுபா சொல்லியதைப்போல அந்தி மயங்கும் நேரத்தில் அவர்களுடைய அலங்கார ரதம் கல்யாணபுரியில் பிரவேசித்தது. அநுராதபுரத்து மாமன்னன் வருகையை முன்னதாகவே அறிந்திருந்த கல்யாணபுரி சிற்றரசன் மாமன்னரை வரவேற்கப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருந்தான். கல்யாணி நகரமே அன்று திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. அழகு அழகான மாதர்கள் உப்பரிகைகளில் நின்று நறுமலர்களைப் பொழிந்து கீதம் இசைக்க அநுராதபுர மாமன்னன் அலங்கார ரதத்தில் நகரப்பிரவேசம் செய்தார். அன்றிரவு விருந்துகளும் களியாட்டங்களும் வெகு ஆடம்பரமாக இருந்தன. இளவரசி கல்யாணி லேசாக ஓரிரண்டு சந்தர்ப்பங்களில் மன்னரின் திருஷ்டியில் பட்டாளே தவிர, அவளை மன்னர் சரியாகப் பார்க்கவில்லை. சரியாகப் பார்க்க வேண்டுமென்ற ஆவலையும் அவர் காட்டவில்லை.

வரவேற்பு வைபவங்கள் முடிந்து மன்னர் படுக்கச் சென்றபொழுது "மந்திரி! நம் சுபா எங்கே? அவன் என் கண்களில் படவேயில்லையே!" என்று கேட்டார் மன்னர்.

"ராஜ சபையில் அவன் எப்படி உங்கள் கண்களில் படுவான்? குதிரைக்காரன் குதிரை லாயத்திலிருப்பான்!" என்றார் மந்திரி.

"குதிரை லாயத்திலா? நம் சுபா குதிரை லாயத்திலா இரவைக் கழிக்கவேண்டும்? கூடாது மந்திரி கூடாது!" என்று மன்னர் சொல்லிக்கொண்டிருக்கையில் தற்செயலாக அங்கு வந்த கல்யாணி சிற்றரசர் "என்ன கூடாது மகாராஜா!" என்றார்.

"ஒன்றுமில்லை, என்னுடைய சாரதி எப்பொழுதும் என்னோடிருந்து பழகியவன். அவனைக் காணோமேயென்று பார்த்தேன்" என்றார் மன்னர்.

"அவனை உடனே தேடிப்பிடித்து இங்கு அனுப்புகிறேன்!" என்று சொல்லிவிட்டுப்போன சிற்றரசர் சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பிவந்து "அவனுக்கு லாயத்தி



லிருப்பதே சௌகர்யமா யிருக்கிறதாம் மகாராஜா!" என்றார்.

"அப்படியா? சரி!" என்று மனக்குறையோடு சொல்லிவிட்டு மன்னர் படுக்கப்போனது மந்திரிக்கு எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியதைப்போலிருந்தது. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டே அவர் படுக்கப் போனார். போகும்பொழுது கல்யாணி சிற்றரசனிடம் "மகாராஜாவின் குதிரைக்காரனை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். அவன் உடம்பில் கொசுக் கடித்தால் மகாராஜாவுக்கும் கொசுக் கடித்தமாதிரியிருக்கும். குதிரைக் கொட்டகையில் அவன் தூங்கவில்லையென்றால் இங்கே மகாராஜாவும் தூங்கமாட்டார். அவர்கள் இருவரும் ஒரு உயிரும் இரு உடலும் போன்றவர்கள்" என்று கிண்டலாகச் சொல்லிவிட்டுப்போனார்.

மந்திரி இவ்விதம் நையாண்டி செய்ததை கல்யாணி சிற்றரசர் உண்மையென்றே நம்பியிருக்கவேண்டும். ஏனெனில் அவர் அங்கிருந்து தம் இடத்துக்குப் போகாமல் இளவரசியைப் பூங்காவிற்கு அழைத்து வரும்படி ஆள் அனுப்பிவிட்டு சுபாவைப் பார்க்க குதிரை லாயத்துக்குப் போனார். சுபா மற்ற குதிரைக்காரர்களுடன் தெம்மாங்கு பாடிக்கொண்டு உல்லாசமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தான். அந்தரங்கமாகப் பேச வேண்டுமென்று சொல்லி அவனைப் பூங்காவனத்துக்கு அவர் அழைத்து வரவும் இளவரசி அங்கு வரவும் சரியாயிருந்தது.

"கல்யாணி! இவன் யார் தெரியுமா? மகாராஜாவின் குதிரைக்காரன் சுபா" என்றார் அவள் தகப்பனாரான சிற்றரசர். ஒரு குதிரைக்காரனை அறிமுகப்படுத்துவதற்காக நள்ளிரவில் பூங்காவனத்துக்கு வருமாறு தன்னை அரசர் அழைத்தது கல்யாணி இளவரசிக்கு வியப்பாயிருந்தது. ஆயினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் "அப்படியா?" என்றாள்.

"இவனை சாதாரண குதிரைக்காரனாக நினைத்துவிடாதே கல்யாணி! மகாராஜாவுக்கு மிகவும் ஆத்

மார்த்த மானவன். இவனுக்குத் தலைவலியென்றால் மகாராஜாவுக்கும் தலைவலிக்கும். இவன் சாப்பிடாவிட்டால் மகாராஜவும் சாப்பிட மாட்டாராம். என் குதிரைக்காரனை லாயத்தில் படுக்க வைத்து விட்டீர்களென்று மகாராஜா உருகிப்போய் விட்டார்?" என்று கல்யாணியிடம் சொன்னார் அவள் தகப்பனார்.

"உங்களுக்கு யார் அய்யா இப்படிக் கதை சொல்லியது?" என்று கேட்டான் சுபா.

"யார் சொல்லவேண்டும்? எப்பொழுதும் நீ மகாராஜாவுடன் கூட இருப்பாயென்பதை அவரே சொன்னார். நீ குதிரை லாயத்திலிருக்கிறாயென்பதைக் கேட்டவுடன் அவர் முகம் வாடிப்போயிற்று!" என்றார் சிற்றரசர்.

"பாக்கியை மகாமந்திரி சொன்னார் போலிருக்கிறது? இல்லையா?" என்று கேட்டான் சுபா. ஆமாம் என்று உண்மையை ஒப்புக்கொண்டார் கல்யாணி மன்னர்.

பிறகு அவர் சொன்னார், "சுபா! உன்னை இங்கு அழைத்துவந்த காரணத்தைச் சொல்லுகிறேன் கேள். என் வம்சம் மிகமிகப் புராதனமான சிங்கள ராஜ வம்சங்களில் ஒன்று. கல்யாணிதீசனின் வம்சவழியில் வந்தவர்கள் நாங்கள். மகாராஜாவுக்கும் பெண் கொடுத்து சம்பந்தம் செய்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் அதைவிடப் பெரிய பாக்கியம் எங்களுக்கு வேறு ஒன்றுமில்லை. என் மகள் சாம்ராஜ்ய சிம்மாசனத்தில் அமரவேண்டுமென்ற பேராசையினால் நான் இப்படிச் சொல்லுகிறேனென்று நீ நினைக்கக்கூடாது. இரு புராதன ராஜ வம்சங்கள் கல்யாண பந்தத்தினால் நெருங்கிச் சம்பந்தப் படவேண்டுமென்ற ஆசையினால் தான் இப்படிச் சொல்லுகிறேன். மன்னரிடம் உண்மையாகவே உனக்குச் செல்வாக்கிருந்து, இவ்விஷயத்தில் எனக்கு உதவி புரிந்தால் கல்யாணி ராஜ்யம் உனக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கும் சுபா!" என்றார் அரசர்.

"கேவலம் ஒரு குதிரைக் காரனுக்கு மாமன்னரிடம் இவ்வளவு தூரத்துக்குச் செல்வாக்கு இருக்க முடியுமா



அய்யா? மந்திரி ஏதோ உளறுகிறாரென்று அவரை நம்புகிறீர்களே?" என்று மழுப்பினான் சுபா. பிறகு "ராஜகுமாரியின் அடக்கத்துக்கும் அழகிற்கும் அவர்கள் மனைவியாக வாய்த்தால் அது எங்கள் மன்னரின் பாக்கியமில்லையா? கரும்பு தின்ன யாராவது கூலி கேட்பார்களா?" என்றான் சுபா.

"நீ நினைப்பதைப்போல் மாமன்னரும் நினைக்க வேண்டுமே சுபா? சில தினங்கள் விருந்தாளியாயிருக்க வருமாறு அவரை நான் எந்த நோக்கத்தோடு அழைத்தேனோ அதை அவர் புரிந்துகொண்டதாகவே தெரியவில்லையே!" என்றார் கல்யாணி மன்னர்.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சுபா கேட்டபொழுது சபாமண்டபத்தில் இளவரசியை மாமன்னர் ஏறெடுத்தும் பார்க்கவில்லையென்பதை கல்யாணி மன்னர் துயரத்தோடு தெரிவித்துக் கொண்டார்.

"நீங்கள் கவனித்தது அவ்வளவுதான். இளவரசியை இமை கொட்டாமல் மன்னர் பார்த்ததை நான் கவனித்தேன். இளவரசியின் மாந்தளிர் மேனிக்கு கழுத்தில் கட்டியிருந்த கஜமணிமாலையும் அதில் பதித்திருந்த கருநீலக கற்களும் எவ்வளவு அழகாயிருக்கிறது பார்த்தாயா என்று என்னிடம் சொன்னார்" என்றான் சுபா.

"ஆமாம், சுபா மண்டபத்துக்கு வந்தபொழுது நான் கஜமணி மாலை போட்டுக் கொண்டிருந்தேன் அப்பா. ஆனால்......!"

இளவரசி இவ்விதம் சொல்லிவிட்டுச் சிறிது தயங்கவே "ஆனால் மாமன்னர் அதைக்கூடக் கவனித்தாரா என்று ஆச்சரியப்படுகிறீர்களா இளவரசி. அவர் இங்கு வந்திருக்கும் நோக்கமே அது தானே! நாங்கள் வரும்பொழுதெல்லாம் மகாராஜாவுக்கு இளவரசியாரின் நினைப்புதான்." என்றான் சுபா.

"இது நிஜம் தானா சுபா?" என்று ஆவலோடு கேட்டார் கல்யாணி மன்னர்.

"பின்னே பொய்யா? மகாராஜாவைப்பற்றி அந்த ரங்கமாக இளவரசியிடம் இரண்டொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதைக் கேட்ட பிறகும் மகாராஜாவை மணந்துகொள்ள இளவரசி சம்மதித்தால் கல்யாணத்தை நடத்திவைப்பது என்னுடைய பொறுப்பு" என்றான் சுபா.

"நல்லது சுபா! நான் போகிறேன். நான் இருந்தால் கல்யாணியும் பேசுவதற்கு சங்கோஜப் படுவாள். பேசிய பிறகு பத்திரமாக அவளை அரண்மனைக்கு அழைத்து வந்துவிடு" என்று சொல்லிவிட்டு கல்யாணி மன்னர் அங்கிருந்து சென்றார்.

இதற்கிடையில் படுக்கப் போன மாமன்னரின் மந்திரிக்குச் சரியாக உறக்கம் வரவேயில்லை. அன்று சுபா நடந்துகொண்ட முறையும் அவனிடம் மன்னர் காண்பித்த அக்கறையும் மந்திரிக்கு வேதனையைக் கொடுத்து வந்தன. வெகுநேரம் வரையில் படுக்கையில் படுத்துப் புரண்டு விட்டு காற்றோட்டமாக பூங்காவில் சற்று உலவி விட்டு வரலாமென்று அவர் புறப்பட்டார்.

பூங்காவில் சுற்றிக்கொண்டு வருகையில் ஒரு இடத்தில் குதிரைக்காரன் சுபாவும் ஒரு பெண்ணும் சிரித்துப் பேசும் சப்தத்தைக் கேட்டு மந்திரி திடுக்கிட்டுப் போனார். குதிரை லாயத்தில் படுக்கப்போன சுபா பூந்தோட்டத்துக்கு எப்படி வந்தான்? ஏன் வந்தான்? அதுவும் இந்த நேரத்தில் ஒரு அந்நிய நாட்டு அரசனின் பூந்தோட்டத்தில் ஒழுங்கு மீறி நடக்க அவனுக்கு எவ்வளவு துணிச்சல்? என்றெண்ணிக்கொண்டே ஒரு மரத்தின் மறைவில் நின்றுகொண்டு சப்தம் வந்த திசையில் அவர் கவனித்தார். அங்கு கண்ட காட்சி மந்திரிக்கு அவருடைய ஒவ்வொரு நரம்புகளையும் உலுக்கி விட்டதைப் போல குரூரமான அதிர்ச்சியைக் கொடுத்தது. பண்பு கெட்ட குதிரைக்காரன் இளவரசியின் கன்னங்களை வருடிவிட்ட வண்ணம் "மாமன்னரின் மனைவியானவுடன் இந்தக் குதிரைக்காரனை மறந்துவிடமாட்டாயே கல்யாணி!" என்று கேட்டதையும், "உங்களை மறப்பதா? உயிரை உடல் மறக்குமா? மணத்தை மலர் மறக்குமா?" என்று இளவரசி கொஞ்சும் மொழியில் சரசமாடியதையும் மாமந்திரி கவனித்தார்.



அவருக்கு இந்த உலகமே பிரளயத்தில் தூள் தூளாகச் சிதறிவிட்டதைப் போலிருந்தது. எதிரில் காணும் காட்சி உண்மையா அல்லது கனவா என்பதையே அவரால் நம்ப முடியவில்லை. "நீ காண்பது கனவல்ல முட்டாளே! உங்கள் நாட்டு குதிரைக்காரன் என் காதலுக்கு முதல் பாத்திரமாகி விட்டான். ஏன் பொறுமைப் படுகிறாயா? உன் பொறுமையும் கோபதாபங்களும் என் சுபாவை நெருங்க முடியாது. ஓடிப் போய் மாமன்னரிடம் கோள் சொல்லு. இல்லாவிட்டால் உன் தலை வெடித்து விடப் போகிறது!" என்று கேலி செய்வதைப் போல இளவரசி கல்யாணி முத்துப்பல் வரிசைகளைக் காட்டி மோகனச் சிரிப்பு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் சுபாவிடம்.

"அப்படியா? இந்த நிமிடமே மன்னரை இங்கு அழைத்து வந்து குதிரைக்காரனைக் கண்ட துண்டமாக வெட்டிப் போடச் செய்யாவிட்டால் நான் சிங்கள சாம்ராஜ்யத்தின் மந்திரியில்லை. மாமன்னர் தேடி வந்த இளவரசிக்கு கேவலம் ஒரு குதிரைக்காரனிடம் காதல் செய்ய எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும்? அவளையும் அவள் அப்பனையும் என்ன செய்கிறேன் பார்" என்று மனதிற்குள் சபதம் செய்துகொண்டே மாமன்னரை அழைத்து வந்து பூங்காவில் நடக்கும் 'அக்கிரமத்தை நிதர்சனமாகக் காட்ட ஆவேசம் வந்தவரைப் போல அரண்மனைக்குள் ஓடினார் மகாமந்திரி.

அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த மன்னரை மந்திரி அவசரம் அவசரமாக எழுப்பி, "மன்னவா! மானம் போச்சு, மரியாதை போச்சு, எல்லாம் போச்சு! நடக்கக் கூடாத அக்கிரமம் நடக்கிறது மகாராஜா பூங்காவனத்தில்! கல்யாணி மன்னனுக்குத் தெரிந்தால் நம்முடைய கௌரவமும் பரம்பரைப் பெருமையும் என்ன ஆகும்? அந்த அநியாயத்தை நினைத்தாலே என் இதயம் நின்றுவிடும் போலிருக்கிறது மகாராஜா!" என்று பெரிய பூர்வ பீடிகை போட்டுக்கொண்டு புலம்பினார்.

"இதயம் நின்றுவிடப் போகிறது மந்திரியாரே! வந்த இடத்தில் உயிரை விட்டு வைக்காமல் பேசாமல்

போய்ப் படுத்துக்கொள்ளும். பாவம், சாப்பாடு பலம் போலிருக்கிறது. அதிகம் சாப்பிட்டால் கெட்ட கனவுகள் வருமென்பது உமக்குத் தெரியாதா?'' என்று அமைதியாகவும் அலட்சியமாகவும் மன்னர் கூறவே மந்திரிக்குப் பெரிய ஏமாற்றமாகப் போய்விட்டது.

"நான் கனவு காணவில்லை மன்னவா? நேரில் கண்டதைத்தான் சொல்லுகிறேன். பூங்காவனத்தில் நம்முடைய குதிரைக்காரன் சுபா இளவரசியுடன் கொஞ்சிப் பேசிக் கொண்டிருப்பதை என் இரு கண்களினாலும் பார்த்தேன் மகாராஜா'' என்றார் மந்திரி.

"அட சட்! வாயை மூடிக்கொண்டு பேசாமல் போய்ப் படுத்துக்கொள்ளும். கனவு கண்டுவிட்டு உளருவது யார் காதிலேனும் விழுந்தால் நம் மரியாதையே போய் விடும்!" என்று சொல்லிவிட்டு தோட்டத்தின் பக்கம் போகப் புறப்பட்டார் மன்னர்! "இல்லை மகாராஜா, நான் கண்டது சத்தியமாகக் கனவில்லை. அவர்களை கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொடுப்பதற்கு உங்களை அழைத்துப்போகவே நான் வந்தேன்''என்று சொல்லிக்கொண்டு மந்திரி பின் தொடரவும் "நான் சொல்லியது உமது காதில் விழவில்லையா? பேசாமல் போய்ப் படுத்துக் கொள்ளும். பூங்காவனத்துக்குப் போக எனக்கு வழி தெரியும்!'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

"நான் கனவா காண்கிறேன்? தோட்டத்துக்குப் போய்ப் பாருங்கள். உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான குதிரைக்காரனின் யோக்கியதையைக் கண் குளரப் பார்த்துவிட்டு வாருங்கள்!'' என்று முணு முணுத்துக் கொண்டே மந்திரி படுக்கப் போனார்.

மறுநாட் காலை மன்னரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டு மந்திரி போனபொழுது மன்னரும் குதிரைக்காரன் சுபாவும் மலர்ந்த முகங்களுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்து போனார்.



மந்திரியைப் பார்த்தவுடன் "கேட்டாயா கதையை சுபா? நேற்று அர்த்தராத்திரிக்கு மேல் மகாமந்திரி அவசரமாக என்னை எழுப்பி தோட்டத்தில் செய்யத் தகாத ஒரு காரியத்தை நீ செய்து கொண்டிருப்பதாகப் பெரிய புகார் செய்தார்!'' என்றார் மன்னர்.

"அந்த நேரத்தில் மகாமந்திரி தோட்டத்துக்கு எதற்காக வந்தாராம்? படுக்கப் போனவருக்கு தோட்டத்தில், அதிலும் அந்நியர்களுடைய நந்தவனத்தில் என்ன வேலை? இதை மகாமந்திரியிடம் நீங்கள் கேட்கவில்லையா மகாராஜா?'' என்றான் சுபா.

"அவர் தான் செய்யாத ஒரு குற்றத்துக்காக உன் மீது பழி சுமத்துகிறாரென்றால் நானுமா அப்படிச் செய்ய வேண்டும்? அவர் கனவு கண்டு உளறுகிறாரென்பது தான் அவரைப் பார்த்தவுடனேயே எனக்குத் தெரிந்து விட்டதே? நமது மந்திரியாருக்கு ராஜ்யத்தைவிட உன் நினைவுதான் அதிகம் சுபா!'' என்றார் மந்திரியையும் குதிரைக்காரனையும் கிண்டலாகப் பார்த்துக்கொண்டே மன்னர்.

"ஆஹா! என் முன்னோர்கள் செய்த தவப் பயன் தான் இந்த பாக்கியம். ஒரு சாம்ராஜ்யத்தின் மகாமந்திரி அல்லும் பகலும் அனவரதமும் என்னை நினைத்துக் கொண்டிருப்பதென்றால் அது சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பாக்கியமா மகாராஜா!'' என்றான் சுபா.

அவமானம் தாங்க முடியாத மந்திரியின் மனம் குமுறிற்று. பதில் ஒன்றும் பேசாமல் அவர் அங்கிருந்து போகத் தலைப்படவே, "மந்திரி, சற்று நில்லும். கல்யாணி இளவரசியை எனக்குப் பிடித்திருக்கிறதென்று அவள் தகப்பனிடம் நீங்கள் சொல்லிவிடலாம். அவர் விரும்பினால் இன்றே நிச்சயதார்த்தத்தையும் வைத்துக் கொண்டு விடுவோம்!'' என்று சொல்லியனுப்பினார் மன்னர்.

"மகாராஜா......!"

"என்ன?"

"இளவரசி கல்யாணிதேவியை விட்டால் உங்களுக்கு வேறு பெண் கிடைக்காதா? நான் கண்களினால் கண்டதையும் காதினால் கேட்டதையும் சொல்லிய பிறகு கூடவா நீங்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்? என் பேச்சைக் கொஞ்சம் கேளுங்கள்!" என்று புலம்பினார் மந்திரி.

"இதோ பாரும் மந்திரியாரே! இது என்னுடைய சொந்த விஷயம்! அதில் உங்களுடைய யோசனையும் புத்திமதிகளும் எனக்குத் தேவையில்லை. அரசியலைத் தான் உம்மிடம் ஒப்படைத்திருக்கிறேனே தவிர என்னுடைய அந்தரங்க வாழ்க்கையை இல்லை. சொன்ன வேலையைச் செய்யும். இன்று மாலையே நிச்சயதார்த்தத்தை முடித்துக்கொண்டு நாளைக் காலை நாம் தலைநகருக்குத் திரும்புகிறோம். அடுத்த மாதம் திருமணம் தலைநகரில் கோலாகலமாக நடைபெற வேண்டும். இனி நீர் போகலாம்!"

மன்னர் இப்படிக் கண்டிப்பாகச் சொல்லவே மகா மந்திரி சுபாவை முறைத்துப் பார்த்துவிட்டுப் பதில் பேசாமல் போய்விட்டார். மன்னர் விருப்பத்தின்படி அன்று மாலையே நிச்சயதார்த்தம் நடந்தது. அடுத்த மாதம் அனுராதபுரியில் பிரமாதமான வைபவங்களுடன் மன்னரின் திருமணமும் நடந்து விட்டது. மேற்பார்வைக்கு எல்லோரையும் போல மந்திரியும் உற்சாகமாகவே காணப்பட்டார். அவருடைய மனது மட்டும் அமைதியாயில்லை. புதிய மகாராணியின் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் கல்யாணி நகர அரண்மனைப் பூங்காவில் கண்ட அசம்பாவிதமான காட்சியே அவருடைய மனக் கண்களின் முன்னால் வந்து நின்று அருவருப்பைக் கொடுத்தது. "இவ்வளவு நிஷ்களங்கமாகத் தோன்றும் இளவரசி கல்யாணிதேவி... இல்லையில்லை......மகாராணி கல்யாணி தேவி நாம் நினைப்பதைப் போல நீசத்தனமாக நடந்து கொண்டிருப்பாளா? பார்த்தால் மகா உத்தமியைப்போலல்லவா இருக்கிறாள்? கற்பரசிக்குஅநியாயமாக நான் களங்கம் கற்பிக்கிறேனா? மாமன்னர் கூறியதைப் போல அன்று பூங்காவில் பார்த்ததாக நான் எண்ணிக்



கொண்டிருப்பது உண்மையில் கனவுதானா?" என்று மகா மந்திரி ஒரு சமயம் நினைப்பார்.

மறுகணம் "கனவா? எது கனவு? இல்லை. அது கனவில்லை! கல்யாணிதேவி கைதேர்ந்த நாடகக்காரி. அவளும் சுபாவும் சேர்ந்து ஏதோ சதித் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதில் கல்யாணி அரசனுக்கும் நிச்சயம் பங்கிருக்கவேண்டும். அவன் முன்னோர்களான மகா நாகனும் உதியனும் தேவனம்பிய தீசன் தம்பிகளல்லவா? தலைநகரைக் கைப்பற்றி சிங்கள சாம்ராஜ்யாதிபதியாக கல்யாணி சிற்றரசன் நடத்தும் கபட நாடகம்தான் இது. இருக்கட்டும் ஒரு கை பார்க்கிறேன். அவர்களுடைய சதியைப் பொடிப் பொடியாகச் சிதறடித்து மாமன்னரைக் காப்பாற்றுகிறேன். கல்யாணிதேவி! உன்னுடைய மோகனப் புன்னகையினால் மன்னரை வஞ்சித்து சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றி விடலாமென்று மனப் பால் குடிக்காதே. நான் உயிரோடு இருக்கும் வரையில் உங்கள் மனோரதம் ஒரு போதும் நிறைவேறாது. நிறைவேற விடவும் மாட்டேன்" என்று தனக்குள் சபதம் செய்து கொண்டார் மகா மந்திரி.

கதையை மேலே தொடருவதற்கு முன்னால் இந்த மாமன்னர் யார் என்பதை வாசக நேயர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். லம்பகர்ண வகுப்பினரின் ஆதிக்கத்திலிருந்து ராஜ்யத்தை விடுவித்து சிறப்பாக அரசு செலுத்திய ஈழநாகன் காலமாகியவுடன் அவனுடைய மகன் சந்தமுக சிவன் பட்டத்திற்கு வந்தான். அவன் தாய் சைவத்தில் திளைத்த தமிழ்ப் பெண்மணி. தகப்பன் ஈழநாகன் பௌத்தனாக இருந்தபொழுதிலும் பௌத்த விஹாரைகளையும் தாது கோபுரங்களையும் கட்டுவித்ததைப் போலவே சைவ ஆலயங்களுக்கும் பல திருப்பணிகள் செய்து வைத்தான். தனது மகனை பட்டத்து இளவரசனுக்கும் சந்தமுக சிவன் என்ற சைவப் பெயரை வைத்து சைவத்தையும் பௌத்தத்தையும் இரு கண்களைப் போலப் போற்றி வளர்த்து வந்தான். இதற்கு அடையாளமாக தனது இரண்டாவது பிள்ளைக்கு

யசலாளக தீசன் என்ற பரம்பரைச் சிங்களப் பெயரை வைத்தான். ஈழநாகனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த சந்தமுகசிவன் தகப்பனைப் போலச் சிறந்த பண்புகளுடையவன். அவனும் ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்துகொண்டதோடு ஆலயத் திருப்பணிகளில் விசேஷமான அக்கரை காண்பித்தான். அவன் பிரம்மாண்டமான ஆலயத் தடாகமொன்றைக் கட்டி அதில் 'தண்ணீர் விளையாட்டு விழா' நடத்துகையில் அவனை அவன் தம்பி யசலாளக தீசன் நீரில் மூழ்கடித்துக் கொன்று அரசைக் கைப்பற்றினன். இப்படி அண்ணனைப் படுகொலை செய்து அரியாசனம் ஏறிய யசாலளக தீசன் தான் கல்யாணி தேவியை மணந்த மாமன்னன். இனிக் கதையை மேலே தொடருவோம்.

யசாலளக தீசன் விளையாட்டுப் பிரியன். உல்லாசமாகப் பொழுது போக்குவதில் பற்றுடையவன். ராஜ்ய நிர்வாகத்தை மந்திரியிடம் ஒப்படைத்துவிட்டு அவன் யதேச்சையாகச் சுக வாழ்வு நடத்தி வந்தான். ராஜ்ய நிர்வாகத்தில் அவன் தலையிடாத வரையில் அவனுடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி மந்திரி கவலைப்படவேயில்லை. மன்னர் கல்யாணி தேவியை மணந்துகொண்ட நாள் முதலாகவே மந்திரியின் அமைதி குலைந்தது. மன்னரின் விளையாட்டுப்புத்தி சாம்ராஜ்யத்துக்கே பேராபத்தை உண்டுப் பண்ணிக்கொண்டிருப்பதாக அவர் கனவு கண்டார். அந்த பயங்கரக் கனவை அவரால் நிருபணம் செய்ய முடியவில்லை. குதிரைக்காரனும் காவற்காரனுமான சுபாவின் அதிகாரமும் செல்வாக்கும்தான் அரண்மனையில் ஓங்கியிருந்தது. அதே சமயம் அவன் மீது குற்றம் சாட்டித் தண்டிக்கவும் வழியில்லாமலிருந்தது. இப்படியே சுமார் ஏழு ஆண்டுகள் கழிந்தன. கல்யாணி மன்னன் சதி செய்வதாக எண்ணியதை மந்திரி காலக்கிரமத்தில் மறந்துவிட்டார். அரசைக் கைப்பற்ற சதி செய்பவர்கள் இவ்வளவுகாலம் காத்திருப்பார்களா? மன்னர் சொல்லியதைப் போல எல்லாம் மனப் பிராந்திதானென்று மந்திரி முடிவு செய்து கொண்டிருக்கையில் ஒரு நாள் மன்னரிடமிருந்து அதிர்ச்சிகரமான செய்தி அவருக்குக் கிடைத்தது.



அன்று காலை தர்பார் கூடுவதற்கு மன்னர் ஏற்பாடு செய்திருந்தார். ஒரு அதி முக்கியமான அறிவிப்பை வெளியிடப்போவதாக மன்னர் தெரிவித்திருந்ததால் அரண்மனை அதிகாரிகள் எல்லோரும் சபா மண்டபத்தில் திரண்டிருந்தார்கள். சபை கூடுவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னல் மகா மந்திரியை அந்தப் புரத்துக்கு அழைத்தார் மன்னர்.

மந்திரி வந்ததும், "மகா மந்திரி? உமது எச்சரிக்கைகளை இவ்வளவு காலமும் அலட்சியம் செய்ததற்கு என்னை மன்னித்துவிடும். காவற்காரன் சுபா எப்படிப் பட்டவனென்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது மகாராணியின் மீதே அவன் தனது கவனத்தைத் திருப்ப ஆரம்பித்துவிட்டான்" என்றூர் மன்னர்.

"இபொழுதில்லை மகாராஜா. ஏழு ஆண்டுகளாகவே நடக்கிறது இந்த நாடகம்." என்று இடை மறித்துச் சொன்னர் மந்திரி.

"இல்லை? அங்குதான் நீர் பெருந்தவறு செய்கிறீர் மந்திரியாரே..? அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்ளுவோம். இன்று சுபாவின் தலையை வாங்கப் போகிறேன். உமக்குத் திருப்திதானே?" என்றூர் மன்னர்.

"அவன் ஒழிந்தால்தான் இந்த ராஜ்யத்துக்கே நல்லது!" என்றூர் மந்திரி.

"ஒரு விஷயம். அவன் சபையில் ஏதும் உளறிக் கொட்டி நமது கௌரவத்துக்கும் மகாராணியின் பெயருக்கும் இழுக்கு ஏற்படாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். தெரிகிறதா? அவனை சபைக்குக் கொண்டு வரும்படி நான் உத்தரவிடும்பொழுது அவன் கைகால்களையும் வாயையும் கட்டிக்கொண்டு வரவேண்டும். மரண தண்டனை பிறப்பித்தவுடன் மறு கணமே அவன் தலை தரையில் உருளவேண்டும். தெரிந்ததா? சரி நீர் இனிச் சபா மண்டபத்துக்குப் போகலாம்!" என்றூர் மன்னர்.

"சிறிதுநேரத்துக்கெல்லாம் சபைகூடியது-மன்னர்சிம்மாதனத்தில் அமர்ந்ததும் வாயிற்காப்பாளருக்கு சுபாவைக்

கைதுசெய்து கொண்டுவரும்படி கட்டளை பிறந்தது. மந்திரி முன்னேற்பாட்டின்படி சுபா கையும் காலும் வாயும் கட்டப் பட்டு ராஜ சபைக்கு அழைத்துவரப்பட்டான். அவன் ஏதோ சொல்லுவதற்காக வாயிலிருந்த கட்டை அவிழ்த்து விடுமாறு மன்ருடினன். துள்ளினன். மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தான்.

"மந்திரி, அவனுடைய சட்டைப் பையில் என்ன இருக்கிறதென்று பாருங்கள். அதை எடுத்து இச்சபை யோருக்குக் காட்டுங்கள்" என்று மந்திரிக்கு உத்தர விட்டார் மன்னர்.

சுபாவின் சட்டைப் பையிலிருந்து முத்திரை மோதிரம், கஜானவின் சாவிக்கொத்து ஆகியவைகளை மந்திரி வெளியி லெடுத்துக் காட்டவும் சபையிலிருந்தவர்கள் ஆச்சரியப் பட்டுப்போனர்கள். அரசனின் உயிர்த் தோழன் போலிருந்த சுபா இவ்வளவு நீசத்தனமான காரியத்தைச் செய்வானென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

"இன்று அதிகாலை மகாராணி அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருக்கையில் அவளைத் தீண்டி அவள் கழுத்துச் சங்கிலியிலிருந்த பேழையின் சாவியை எடுத்துப் போய் முத்திரை மோதிரத்தையும் கஜான சாவியையும் இந்தக் கயவன் களவாடியிருக்கிருன். கல்யாணிதேவியை இவன் தீண்டியது முதல் குற்றம். அந்தப்புரத்தில் கள வாடியது மற்ெருரு குற்றம். இவ்விரண்டையும்விட இன்ெனுரு பயங்கரமான இந்த ராஜ்யத்துக்கே பேராபத் தான சதிக் குற்றம் புரியவும் இவன் திட்டமிட்டிருந்தான். மகாமந்திரி பல முறை இவனைப்பற்றி என்னிடம் எச்சரித் திருந்தும் நான் அலட்சியமாயிருந்துவிட்டேன். இன்று அதிகாலையில்தான் அவன் திட்டங்கள் எனக்கு வெளி யாயின. மந்திரியாரே! இந்த தேசத் துரோகியின் தலை தரையில் உருளட்டும். அவன் மரணம் சதிகாரர்களுக்கு ஒரு படிப்பினையாயிருக்கட்டும்!" என்ருர் மன்னர்.

மன்னரிடமிருந்து இந்த உத்தரவை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்த மந்திரி கொலையாளிகளுக்கு



சமிக்ஞை காண்பிக்க அவர்கள் சுபாவைத் தரதரவென்று இழுத்துப் போனர்கள். சில நிமிடங்களுக்கெல்லாம் ரத்தம் தோய்ந்த வாளுடன் அவர்கள் சபைக்கு வந்து உத்தரவு நிறைவேறி விட்டதை அறிவித்தார்கள்.

அன்றுதான் மகா மந்திரி மனத் திருப்தியுடன் அரண் மனையிலிருந்து வீடு திரும்பினர். ஆயினும் அவர் பூரணத் திருப்தியடைந்திருந்தாரென்று கூறிவிட முடியாது. "ஒரு துரோகி ஒழிந்தான். அந்த நச்சுபாம்பு கல்யாணி தேவி யையும் தீர்த்துக்கட்டும் வரையில் நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்து நீங்கியதாகாது" என்று நினைத்துக் கொண்டே மகா மந்திரி வீட்டுக்குத் திரும்பியபொழுது மகாராணி கல்யாணிதேவி மாறு வேடத்துடன் மந்திரியை எதிர் பார்த்துக்கொண்டு அங்கு காத்திருந்தாள்.

மந்திரியைக் கண்டவுடன் "மகா மந்திரி! உயிரிடம் ஆசையிருந்தால் உடனே இந்த இடத்தைவிட்டு ஓடி விடுங்கள். உங்களைக் குடும்பத்தோடு இவ்வீட்டில் வைத்து எரித்துச் சாம்பலாக்கத் திட்டம் தீட்டியிருக்கிருர்கள். ஓடுங்கள், ஓடுங்கள், குடும்பத்தோடு ஓடுங்கள்!" என்று அலறினள் மகாராணி.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் மகாராணி? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்று தடுமாறினர் மந்திரி.

"பிறகு எல்லாம் நன்ருகப்புரியும். முதலில் மகாராணி சொல்லுகிறபடி செய்யுங்கள். மாறுவேடத்தில்நகரத்தை விட்டு வெளியே போய் மற்றதைப் பேசிக்கொள்ளுவோம். எனக்கு எல்லாம் தெரியும், அப்பா. பதில் பேசாமல் கிளம்புங்கள்?" என்று மந்திரியை அவருடைய மகனும் துரிதப்படுத்தினன்.

"நானும் இனி உங்களுடன்தானிருக்கப் போகிறேன் கவலைப்படாமல் வாருங்கள் என்று சொல்லி மகாராணி கல்யாணிதேவி முன் செல்ல மகா மந்திரியும் அவருடைய குடும்பத்தினரும் எளிய விவசாயிகளைப்போல

வெளியேறினார்கள். அவர்கள் தெருக் கோடியில் சென்று திரும்பிப் பார்த்தபொழுது குதிரைகளில் அதிவேகமாக வந்த சிலர் மந்திரியின் வீட்டின் முன்னால் இறங்கி வீட்டுக்குள்ளிருப்பவர்கள் யாரும் வெளியே வரமுடியாதபடி வெளிக் கதவைத் தாழிட்டுப் பூட்டினர். பிறகு தீப் பந்தங்களை வீட்டின் கூறைமீது வீசியெறிந்து விட்டு வந்தது தெரியாமல் பறந்தோடி போய்விட்டார்கள்.

"நான் எச்சரித்தபடியே ஆயிற்று பார்த்தீர்களா? இந்நேரம் நீங்கள் வீட்டுக்குள் இருந்தால் உங்கள் கதி என்ன ஆகியிருக்கும்? மன்னரைப் பின்பற்றி நீங்களும் பரலோகத்துக்கும் போய்ச் சேர்ந்திருப்பீர்கள்?" என்றாள் மகாராணி கல்யாணி தேவி.

"மன்னரைத் தொடர்ந்து பரலோகம் போய்ச் சேர்ந்திருப்பேனா? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் மகாராணி நான் இப்பொழுது தானே தர்பார் மண்டபத்திலிருந்து வருகிறேன்?" என்றார் மந்திரி.

"இன்று தர்பார் நடத்தியது மன்னர் இல்லை, அப்பா, மன்னர் இல்லை. அவரைத்தான் கொலையாளிகளிடம் ஒப்படைத்து சிரச் சேதம் செய்ய உத்தரவிட்டு விட்டீர்களே! தர்பார் நடத்தியவன் காவற்காரன் சுபா. மன்னனின் அற்ப சினேகிதம் அவருக்கே மரணத்தைத் தேடி வைத்துவிட்டது. அதிலும் உங்களைத் தனது முதல் எதிரியாக நினைத்த சுபா உங்களை உடந்தையாக்கிக் கொண்டே மன்னரைத் தீர்த்துக் கட்டி அரசைக் கைப்பற்றிக் கொண்டு விட்டான். விஜயனின் புகழ்பெற்ற சிம்மாசனத்தில் இன்று ஒரு வேலைக்காரன் வீற்றிருக்க உங்களை அறியாமலே நீங்களும் உடந்தையாயிருந்திருக்கிறீர்கள்" என்றான் மந்திரியின் புதல்வன். பிறகு "இங்கு தாமதிக்கும் ஒவ்வொருவினாடியும் உயிருக்கு ஆபத்தானது. ராஜ்யத்துக்கு வெளியே தப்பிச் செல்லுவதில் முதலில் கவனம் செலுத்துவோம். வேகமாக வாருங்கள்" என்று சொல்லிவிட்டு அவன் நடக்க மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.



கொலை செய்யப்பட்டது உண்மையில் மன்னரே தவிர காவற்காரன் சுபா இல்லையென்று கேள்விப்பட்டவுடன் மந்திரிக்கு 'கிர்'ரென்று தலை சுற்றுவதைப் போலிருந்தது. "உண்மைதானா கல்யாணி தேவி? மன்னர் இறந்து விட்டாரென்பது உண்மைதானா? அட கடவுளே, யாரிடமிருந்து அரசரைக் காப்பாற்றுவதற்கு நான் படாதபாடு பட்டேனோ, அவனே அரசரை மாய்ப்பதற்கு நான் உடந்தையாயிருந்து விட்டேனே! நீங்கள் சொல்லுவதை என்னால் நம்ப முடியவில்லையே! இதெல்லாம் குரூரமான கனவா? தெய்வமே, இது கனவாகி விடக்கூடாதா? மாமன்னரின் ஸ்தானத்தில் கேவலம் ஒரு வேலைக்காரன் அமருவதற்கு நானும் உடந்தையாயிருப்பதா?" என்று புலம்ப ஆரம்பித்தார் மந்திரி.

அவரை மகாராணியும் மந்திரி குமாரனும் சமாதானப்படுத்தி நகருக்கு வெளியே அழைத்துச் சென்றார்கள். காட்டில் ஒரு பத்திரமான இடத்தை அடைந்தவுடன் மகாராணி கல்யாணி தேவி மந்திரியிடம் "மகாராஜாவுக்கும் சுபாவிற்குமிடையில் ஏதாவது அதிசயத்தை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"இருவரும் உருவத்தில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியிருப்பார்கள். உயரம், பருமன், முகச் சாயல் எல்லாம் ஒரே அச்சில் வார்த்தெடுத்த இரட்டைக் குழந்தைகளைப் போலிருப்பார்கள். இதனால்தான் சுபாவிடம் மன்னர் அளவு மீறிய பிரியம் வைத்திருப்பதாகவும் நாங்கள் பேசிக் கொள்ளுவதுண்டு. அதற்கு இப்பொழுது என்ன?" என்று கேட்டார் மந்திரி.

"இந்த உருவ ஒற்றுமை விளைவித்த விபரீதம் மன்னரை மாய்த்த துரதிர்ஷ்ட வசமான சம்பவம். மன்னர் பொறுப்பற்ற விளையாட்டுப் பிள்ளை என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. அனேக சந்தர்ப்பங்களில் அவர் சுபாவிற்கு ராஜா வேஷம் போட்டு உட்கார வைத்துவிட்டு காவற்காரன் வேஷத்தில் நாட்டிலே நடமாடுவது வழக்கமாம். என்னை மணந்துகொள்ள கல்யாணி ராஜ்யத்துக்கு வந்தபொழுது கூட அவர்கள்

இப்படித்தான் வேஷம் மாற்றிக் கொண்டிருந்தார்கள். பூங்காவனத்தில் மன்னரைப் பற்றி விசாரிப்பதற்காக சுபாவைச் சந்திக்க நான் வந்தபொழுது சுபா வேஷத்திலிருந்தது உண்மையில் மன்னரென்பதை அறிந்து ஆச்சரியப்பட்டேன்."

கல்யாணி தேவி இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கையில் "அப்படியா? உண்மை தெரியாமலல்லவா அன்றிரவு நான் பிரமாதப்படுத்தி விட்டேன்! மன்னர் வேஷத்திலிருந்த சுபா என் பேச்சைக் கேட்டு என்னையே கேலி செய்ததின் அர்த்தம் இப்பொழுதுதான் புரிகிறது. கல்யாணி தேவி என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுக்கு அபாண்டமாக களங்கம் கற்பித்ததோடல்லாமல் அன்று முதல் இன்று வரையில் உங்களை சந்தேகக் கண்களோடு பார்த்து வந்தேன். இன்று காலையில்கூட சுபா தொலைந்து விட்டான் அடுத்தபடியாக உங்களைத் தீர்த்துக்கட்ட வழிதேடவேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். பழியோரிடம் பாவம் ஓரிடம் என்பது சரியாகப்போய் விட்டது. நீங்களும் சுபாவும் சேர்ந்து ராஜ்யத்தைக் கைப்பற்றச் சதி செய்வதாக எண்ணியது எவ்வளவு பெரிய முட்டாள்தனமென்பதை இப்பொழுதுதான் உணருகிறேன்'' என்றார் மந்திரி.

"அப்பாவிற்கு எப்பொழுது பார்த்தாலும் இதே பயப் பிராந்திதான் மகாராணி! உங்களுடைய அந்தப்புரத்தின் மெய்ப் பாதுகாவலனை எனக்கு அப்பா உத்தியோகம் வாங்கிக் கொடுத்தது எதற்காகத் தெரியுமா? உங்களிடமிருந்து மன்னரைக் காப்பாற்றத்தான்?" என்றான் மந்திரி குமாரன்.

"நீ அந்தப்புரக் காவலாளியாயிருந்ததினால்தான் மன்னரைக் காப்பாற்ற நாம் கடைசிவரையில் முயற்சி செய்து பார்க்கவாவது முடிந்தது. இல்லாவிட்டால் அந்த திருப்திகூட நமக்கு இருக்காது" என்று சொல்லிய கல்யாணி தேவி மந்திரியிடம் மேலும் சொன்னாள் :

"கல்யாணமாகி நான் அரண்மனைக்கு வந்தவுடன் வேஷம் மாறும் விபரீத விளையாட்டு வேண்டாமென்று



மன்னரை நான் பலமாக எச்சரித்தேன். என்றைக்காவது ஒரு நாள் இந்த விளையாட்டு உயிராபத்தில் முடிந்துவிடுமென்று நான் படித்துப் படித்துச் சொல்லியதை மன்னர் கேட்கவில்லை. பிரஜைகளின் மனதை உளவறிந்து தெரிந்து கொள்ள இந்த உபாயம் உபயோகமாயிருப்பதாக அவர் சாக்குப்போக்குச் சொல்லி வந்தார். பல சந்தர்ப்பங்களில் தர்பாரில்கூட சுபா மன்னராக நடித்திருக்கிறான்.

"நேற்றிரவு மன்னர் அந்தப் புரத்துக்கு வரவில்லை. பல இரவுகளில் அவர் வெளியே தங்குவதுண்டாகையினால் நான் சந்தேகப் படவுமில்லை. இன்று காலை கண் விழித்தெழுந்த பொழுது ஜன்னல் வழியாக அறைக்குள் யாரோ குதிக்கும் சப்தம் எனக்குக் கேட்டது. திரும்பிப் பார்த்த பொழுது திருட்டுத் தனமாக அறைக்குள் நுழைந்தவன் உங்கள் பிள்ளை யென்பதையறிந்து திகைப்பும் திகிலும் அடைந்தேன். நான் சப்தம் போட்டு விடுவேனோ என்று பயந்து முன் ஜாக்கிரதையாக மகாராணி, மன்னருக்கு ஆபத்து, சப்தம் செய்யாதீர்கள் என்று எச்சரித்துக் கொண்டே அவன் என் அருகில் வந்தான்."

இந்த இடத்தில் மந்திரி குமாரன் குறுக்கிட்டு "பாக்கியை நான் சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்துப் பின் வருமாறு சொன்னான்.

"மன்னரும் சுபாவும் அடிக்கடி வேஷம் மாற்றிக் கொள்ளும் வழக்கமுண்டு என்பது எனக்குத் தெரியாது. இன்று அதிகாலையில் நான் நந்தவனத்திலிருக்கையில் சற்று தூரத்துக்கப்பால் யாரோ சிலர் பயந்து பயந்து பேசுவதைப் போலிருந்தது. அந்த நேரத்தில் பூங்காவனத்தில் யார் வந்திருக்க முடியுமென்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. அவர்கள் பேசிய முறையும் சந்தேகாஸ்பதமாயிருந்தால் அருகில் போய் மறைந்து நின்று கேட்டேன். மன்னரும் மூன்று தளபதிகளும் அங்கு அந்தரங்கம் பேசிக் கொண்டிருந்தார்கள். மன்னரைக் கண்டவுடன் திரும்பிவிடலாமா என்று முதலில் நினைத்தேன்.

அவர்கள் பேச்சைக் கேட்கவேண்டு மென்ற ஆவல் என்னை அங்கேயே இருக்கத் தூண்டியது.

"இன்று நம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளா விட்டால் மறுபடி அது மாதிரி ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைக்காது. மன்னர் தாசி வீட்டில் மயங்கிக் கிடக்கிறார். இன்று காலை நான் தர்பார் நடத்துவதென்று ஏற்பாடாகியிருக்கிறது. தர்பார் நடக்கும் பொழுது மன்னர் வெளியே காவல்காரன் வேஷத்தில் நின்றுகொண்டிருப்பார். முத்திரை மோதிரத்தையும் கஜானா சாவியையும் காவல்காரன் களவாடி விட்டதாகக் குற்றஞ்சாட்டி அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டால் அதன் பிறகு அதிகாரமும் அரசும் நம் கையில்; அரச பதவி எனக்கு, ஐசுவரியங்கள் உங்களுக்கு என்றார் மன்னர் உடையிலிருந்தவர்.

"சுபா! நீ சொல்லுவதெல்லாம் சரிதான். மந்திரியும் இதற்குச் சம்மதிக்க வேண்டுமே என்றான் தளபதிகளில் ஒருவன்.

"மந்திரியை நாசுக்காகச் சரிக்கட்டுவது என் பொறுப்பு. என்மீது அவருக்கு இருக்கும் அளவு கடந்த வெறுப்பில் சுபாவைச் சிரச்சேதம் செய்யப்போவதாகச் சொல்லி மன்னரைத் தீர்த்துக் கட்டிவிடுவது பிரமாதமில்லை. அதை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். தர்பார் முடிந்து மந்திரி வீட்டுக்குத் திரும்பியதும் வீட்டோடு அவரை எரித்துச் சாம்பலாக்கிவிட நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். மந்திரி உயிரோடு இருக்கும் வரையில் நாம் நிம்மதியாயிருக்க முடியாது" என்றார் மன்னர் வேஷத்திலிருந்தவர். பிறகு அவர்கள் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து போய் விட்டார்கள்.

"ஒரு சில நிமிடம் நான் யோசித்தவுடன் எனக்கு பளிச்சென்று உண்மை உதயமாகியது. மகாராணியிடம் விஷயத்தைச் சொல்லி எச்சரிக்க ஓடினேன். அந்தப்புரத்தின் முன்புறத்தில் மன்னர் வேஷத்திலிருந்த சுபா என் அப்பாவுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் என் மனம் பதை பதைத்தது. மன்னர் வேஷத்திலிருந்த சுபாவை அந்த சமயம் நான் காட்டிக்கொடுக்க முயன்றிருந்ததால் என்னையும் என் தகப்பனரையும் அதே இடத்தில் அவன் தீர்த்துக் கட்டியிருப்பான். படைபலம் அவன் கையிலிருப்பது தெரிந்தபின் தந்திரமாகவே அவனை வீழ்த்த வேண்டுமென்று எண்ணி மகாராணியைப் பார்க்கப்போனேன். அவருடைய அறை உட்புறம் தாழிடப்பட்டிருந்ததால் ஜன்னல் வழியாக உள்ளே குதித்து கண்டதையும் கேட்டதையும் சொன்னேன். மன்னரும் சுபாவும் அடிக்கடி வேஷம் மாற்றிக்கொள்ளுவது உண்டென்பதை மகாராணி ஊர்ஜிதம் செய்தவுடன் மன்னருக்கு எவ்வளவு பயங்கரமான அபாயம் உருவாகியுள்ள தென்பதை என்னால் உணர்ந்து கொள்ளமுடிந்தது. மன்னர் வாயிற் காப்போன் வேஷத்துடன் வரும்பொழுது அவரை எச்சரிப்பதாகவும் என் முயற்சி தோல்வியுற்றால் தப்பிச் செல்லுவதற்குத் தயாராயிருக்க வேண்டுமென்றும் மகாராணியிடம் சொல்லிவிட்டு மாறு வேஷத்துடன் அரண்மனை வாசலுக்கு நான் வந்தேன். மன்னரை நான் நெருங்க முடியாதபடி சுபாவின் ஆட்கள் அவரைக் கண்காணித்துக்கொண்டிருந்தார்கள். மன்னரைச் சந்திக்க சமயம் பார்த்துக்கொண்டு நான் காத்திருக்கையில் ஏழெட்டு வீரர்கள் மன்னரைக் குண்டுக் கட்டாகக்கட்டி உள்ளே தூக்கிக்கொண்டுபோய் விட்டார்கள். தனி ஒருவனக என்னல் ஏதும் செய்ய முடியவில்லை. சிறிது நேரத்துக்குப் பின்னர் மன்னர் கொலைக்களத்துக்குக் கூட கொண்டு போகப்படாமல் அரண்மனையிலேயே சிரச்சேதம் செய்யப்பட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். உடனே மகாராணியை அந்தப்புரத்தின் பின்புற வழியாக காப்பாற்றி அழைத்துக்கொண்டு நம் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

மந்திரி குமாரன் இவ்விதம் சொல்லவும் "விளையாட்டே வினையாகியது" என்று சொல்லி மந்திரி ஒரு பெரு மூச்சு விட்டார்.

"அப்படி ஒரு நாள் நடக்குமென்று பயந்தே மன்னரிடம் பல தடவை நான் எச்சரித்தேன். என் வார்த்தையை அவர் காற்றில் பறக்கவிட்டாரே!" என்றாள் மகாராணி.

"மன்னருடைய போதாதகாலம் அவருடைய அறிவை மறைத்து விட்டது. அண்ணனைக் கொலைசெய்து அரசைக் கைப்பற்றினார் நமது மன்னர். இப்பொழுது அவரைக் கொலை செய்து வேறொருவன் ராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பது இறைவன் சித்தம்போலிருக்கிறது. நாம் முதலில் கல்யாணி ராஜ்யத்துக்குப்போய் இருந்து கொண்டு மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம்" என்றார் மந்திரி. அம்மூவரும் மந்திரியின் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் கல்யாணி ராஜ்யத்தை நோக்கிப் பிரயாணமானார்.

தண்ணீர் விளையாட்டு விழாவில் அண்ணன் சந்தமுக சிவனைப் படுகொலைசெய்து அரியணை ஏறிய யசலாளக தீசன் சுமார் ஆறு வருடகாலம் அரசாண்டபின்னர் காவலாளி சுபாவின் சதிக்குப் பலியாகி இறந்தான். சுபா அடுத்த ஆறு ஆண்டுகள் வரையில் இலங்கை வேந்தனாக அரசாண்டான்.

படைபலம் தன் பக்கமிருக்கிறதென்ற தைரியத்தில் சுபா நீண்ட காலத்துக்கு உண்மையை மறைத்து வைக்கவில்லை. மன்னரைத் தீர்த்துக் கட்டிவிட்டதை அவன் பகிரங்கமாக அறிவித்து சுபா ராஜா என்ற பெயருடன் அவன் ஆட்சி நடத்தினான். கேவலம் ஒரு வேலைக்காரன் அரசு செலுத்துகிறானே என்பதில் மக்கள் ஆத்திரமடைந்திருந்தபொழுதிலும் அவர்கள் வெளிப்படையாக சுபாவை எதிர்க்க முற்படவில்லை. தனது நிலைமையை பலப்படுத்திக்கொள்ள சுபா பெரும் தொகையைச் செலவிட்டு தாது கோபுரங்களைச் செப்பனிட்டான். உருவிளையினருகில் வள்ளி விஹாரையையும் மற்றும் இரு பெரிய விஹாரைகளையும் அவன் நிர்மாணித்து பௌத்த சங்கத்தின் ஆதரவை ஓரளவுக்குப் பெற்றுக்கொண்டான்.

சுபா ராஜாவுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த வசபா என்ற மன்னரின் காலத்தில்தான் இலங்கையில் மீண்டும் நிலையான ஆட்சி நடைபெற்றது. செல்வச் சிறப்புடனும் நீதி தவறாமலும் கி. பி. 124 முதல் கி. பி. 168 வரையில் சுமார் 44 வருட காலம் ஆட்சி நடத்திய வசபா, லம்பகர்



ணர் வம்சத்தைச் சேர்ந்த ஒரு இளவரசன். அவன் இலங்கை வேந்தனாகியதைப் பற்றி மகாவம்சத்தில் ரசமான ஒரு கதை உண்டு. தாம்பூலம் ஒரு மனிதனின் உயிரைக் காத்து அவனுக்கு ஒரு ராஜ்யத்தையும் கொடுத்ததென்றால் அது சரித்திரத்தில் ஒரு ரசமான வரலாறு அல்லவா?

# 16. கடல்சூழ் இலங்கை கயவாகு

சுபராஜா பிரஜைகளையும், பௌத்த சங்கத்தையும் திருப்திப் படுத்தி தனது ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள படாத பாடுபட்டானென்றாலும் அவனுடைய குற்றமுள்ள நெஞ்சு அவனை அச்சுறுத்திக்கொண்டேயிருந்தது. காணாமற்போன கல்யாணிதேவியும் மந்திரியும் மந்திரி குமாரனும் சேர்ந்து என்ன சதிசெய்கிறார்களோ, எந்த நேரத்தில் அவர்கன் மூலம் தனக்கு அபாயம் ஏற்படுமோ என்று அவன் அஞ்சிக்கொண்டிருந்தான். மனதில் கவலையும் பயமும் ஏற்படும்பொழுதுதான் சாதாரணமாக மனிதர்களுக்கு சோதிடத்தில் ஒரு அளவு மீறிய நம்பிக்கை ஏற்படுவது வழக்கம். அதைப்போல சுபாவும் கைதேர்ந்த சோதிடர்களைத் தருவித்து தனது வருங்காலத்தைப்பற்றி சோதிடம் கேட்டான்.

சுபராஜாவின் ஆட்சி ஆறுவருட காலத்துக்கு நீடிக்குமென்றும் அதன் பிறகு வசபா என்ற பெயருடையவன் போரில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றுவானென்றும் சோதிடர்கள் சொன்னார்கள். அடுத்த மன்னனின் பெயரை உண்மையாகவே சோதிட சாஸ்திரம் அவர்களுக்குக்காட்டிக் கொடுத்ததா? அல்லது வசபா என்ற வம்பகர்ண வம்சத்து இளவரசன் சோதிடர்களின் கூற்றில் நம்பிக்கை வைத்து விடாமுயற்சியுடன் பிரயாசப்பட்டு அரசைக் கைப்பறினானா? என்பது ஒருவருக்கும் தெரியாது. சோதிடர்கள் கூற்றின் பயனாக அவர்களுக்கு நிறையப் பொற்காசுகள் கிடைத்தன. நாட்டில் வசபா என்ற பெயருடையவர்கள் எங்கிருந்தாலும் அவர்களைப்

பிடித்து உடனே கொன்றுவிட வேண்டுமென்று உத்தரவுகள் பிறந்தன. அப்பெயருடைய அனேகம் இளைஞர்கள் அரசர் ஆக்ஞைக்கு பலியானார்கள்.

லம்பகர்ணர் வம்சத்தைச் சேர்ந்த வசபா என்ற ஒரு இளவரசன் வட இலங்கையில் தனது மாமனுடன் வசித்து வந்தான். அவனுடைய மாமன் படைத் தளபதிகளில் ஒருவன். மன்னரின் கட்டளை அவனுடைய காதுக்கு எட்டியதும் தன்னிடம் வளர்ந்துவரும் வசபாவை அரசரிடம் ஒப்படைப்பதா வேண்டாமா என்பதைப்பற்றி அவனுக்கும் அவனுடைய இளம் மனைவி பொத்தாவிற்கு மிடையில் நீண்ட நேரம் விவாதம் நடந்தது. கடைசியில் ராஜபக்தியில் சிறந்த தளபதி தனது மருமான் வசபாவை மன்னரிடம் ஒப்படைப்பதென்று தீர்மானித்து அவனை அழைத்துச் சென்றான். போகும் பொழுது பொத்தா தனது கணவனிடம் சுண்ணாம்பு இல்லாமல் வெற்றிலையையும், பாக்குத் தூளையும் மாத்திரம் கொடுத்தனுப்பினாள். தளபதிக்கு வெற்றிலை போடுவதில் அலாதியான பிரியமென்றும் சுண்ணாம்பு இல்லாவிட்டால் சுண்ணாம்பு வாங்கி வர வசபாவை வீட்டுக்குத் திருப்பியனுப்புவா னென்றும் அவள் எதிர்பார்த்தாள். அவள் நினைத்ததைப் போல நகர எல்லையை அடைந்த தளபதி வாயில் பாக்கைப் போட்டுக்கொண்டு வெற்றிலைக்கு சுண்ணாம்பைத் தேடவே வெற்றிலையில் சுண்ணாம்பு இல்லை. வீட்டுக்குத் திரும்பிப் போய் சுண்ணாம்பு வாங்கி வரும்படி வசபாவை அவன் அனுப்பினான். எங்கு போகிறோம், ஏன் போகிறோ மென்பது வசபாவிற்குத் தெரியாதாகையினால் அவன் தப்பியோடி விடுவானென்று தளபதி சிறிதும் சந்தேகிக்கவில்லை.

சுண்ணாம்பு கேட்டுக்கொண்டு வசபா வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் அவனுக்கு பொத்தா உண்மையைச் சொன்னாள். ஆயிரம் பொற்காசுகளை அவனிடம் கொடுத்து எங்காவது தப்பியோடி விடும்படி அனுப்பினாள். சிறிது நேரம் கழித்து தளபதி வீட்டுக்கு வந்து விசாரித்தான். வசபா சுண்ணாம்பு வாங்கிக்கொண்டு போய்விட்டதாக பொத்தா சொல்லவும் வசபாவைப் பல இடங்களிலும்



அவன் தேடித்திரிந்தான். இந்த விவகாரம் மன்னருக்குத் தெரிந்தால் தலை போய்விடு மென்று பயந்து தளபதி பிறகு மௌனமாக இருந்து விட்டான்.

பொத்தா அனுப்பிய தாம்பூலத்தின் பயனாக உயிர் தப்பிய வசபா மகாவிஹாரரையை அடைந்து பௌத்தச் சங்கத்திடம் சரண் அடைந்தான். வசபா என்ற பெயருடையவன் வருங்காலத்தில் மன்னனாகப் போகிறானென்ற சோதிடர் கூற்று நாடெங்கும் பரவியிருப்பதையும் மாஜி வாயில் காப்போனாகிய சுபராஜாவை வீழ்த்த வசபா என்பவனின் தோற்றத்தை மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்க ளென்பதையும் மஹாவிஹாரையி லிருக்கையிலும் வசபா கேள்விப்பட்டான். வருங்கால மன்னராகப் போகும் பாக்கியசாலி ஏன் நாமாகவே இருக்கக் கூடாது? என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது. அத்துடன் சுபராஜாவை வீழ்த்தி அரசைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையும் அவன் மனதில் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அவன் விஹாரையை விட்டு வெளியேறி ஒரு புரட்சிக்காரனாக மாறினான். மன்னரின் படைகளை மறைந்திருந்து தாக்கியும் செல்வந்தர்களைக் கொள்ளையிட்டு ஏழைகளுக்கு உதவியும் நாட்டில் பெரிய அமளியை அவன் உண்டு பண்ணினான். வசபா தோன்றி விட்டானென்பது தெரிந்ததும் அவன் யார் என்பது தெரியாமலே ஆட்சிபீடத்திடம் அதிருப்தி கொண்டிருந்த மக்களின் ஆதரவு அவன் பக்கம் அமோகமாகத் திரும்பியது. வசபா ரகசியமாகப் பெரும்படை யொன்றைத் திரட்டி சுபராஜாவுடன் பகிரங்கமாகப் போர் செய்து சுலபமாக அரசைக் கைப்பற்றினான். சோதிடர்கள் கூற்று பலித்தது. போரில் சுபராஜாவும் வசபாவின் மாமனான தளபதியும் இறந்தார்கள். தாம்பூலத்தின் மூலம் தனது உயிரைக் காப்பாற்றி அரச பதவியை அடைவதற்கு உதவிய தனது மாமன் மனைவி பொத்தா என்பவளையே வசபா திருமணம் செய்துகொண்டு அவளைச் சிங்கள ராஜ்யத்தின் மகாராணியாக்கி தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு நாற்பத்தி நான்கு வருடகாலம் சிறப்புடன் வசபா ஆட்சி செய்தான்.

இந்த வரலாறு மகாவம்சத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ராஜவழி என்ற நூலிலோ லம்பகர்ணர் வம்சத்தைச் சேர்ந்த வசபா 44 வருடகாலம் ஆட்சி செய்தான் என்று மட்டுமே கண்டிருக்கிறது. மகாவம்சத்தைக் காட்டிலும் ராஜவழி சுருக்கமான சிறிய வரலாற்று நூலாகையினால் வசபாவின் பூர்வோத்திரங்கள் குறிப்பிடப் படவில்லையென்று கருதுவார்களும் உண்டு.

வசபா தனது 44 வருட ஆட்சியில் பௌத்த தர்மத்தின் மறுமலர்ச்சிக்கு அரும் பெரும் சேவைகள் செய்தான். அவன் திருப்பணி செய்வித்த தாது கோபுரங்கள் பல. அவன் காலத்தில் பௌத்தமதம் மீண்டும் உச்ச நிலைமையை அடைந்திருந்தது. இடிந்துபோன தாது கோபுரங்களையெல்லாம் அவன் புதிதாகக் கட்டியெழுப்பி கோலாகலமாக விழாக்கள் கொண்டாடினான். பௌத்த தர்மத்தில் அவன் பிரமாதமான அக்கரை காட்டியதற்கு மகாவம்சம் ஒரு காரணமும் கற்பித்திருக்கிறது.

சோதிடர்கள் கூற்றின்படி எங்கோ கிடந்த தனக்கு ராஜபோகம் கிட்டியதினால் வசபாவிற்கு சோதிடத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. சுபராஜா செய்ததைப் போலவே வசபாவும் சோதிடர்களை அழைத்து தன்னுடைய ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்குமென்று விசாரித்தான். பன்னிரண்டு வருடகாலம் நீ அரசிருப்பாய் என்று சோதிடர்கள் அவனுக்குச் சொன்னார்கள். பிறகு பௌத்தப்பெரியார்களையும் பிட்சுக்களையும் அழைத்து சோதிடர்களின் கூற்றைத் தெரிவித்து தனது ஆட்சி நீடிக்க வழியேயில்லையா? என்று விசாரித்தான்.

"ஏன் இல்லை? தர்மம் தலைகாக்கும் என்று நீ கேள்விப்பட்டதில்லையா? பௌத்த தர்மத்துக்கு சேவை செய்வதை ஜீவிய இலட்சியமாகக் கொண்டால் உன் ஆயுளும் நீடிக்கும்; ஆட்சியும் நீடிக்கும்" என்று பௌத்தப் பெரியார்கள் சொன்னார்கள்.

அந்த உபதேசத்தைப் பின்பற்றி வசபாவும் அவன் மனைவியும் பௌத்த தர்மத்துக்கு சேவை செய்து தங்கள்



ஆயுளையும் ஆட்சியையும் நீடித்துக் கொண்டதாக மகாவம்சம் கூறுகிறது. வசபா மன்னன் செய்த திருப்பணி வேலைகளின் ஒரு நீண்ட பட்டியல் மகாவம்சத்தில் அடங்கியிருக்கிறது.

காலஞ் சென்ற சுபராஜாவுக்கு ஒரு பெண்ணிருந்தாள். மகாமத்தா என்பது அவள் பெயர். தனது ஆட்சிக்கு ஆட்டம் ஏற்பட்டு விட்டதென்பதை அறிந்தவுடன் சுபராஜா தனது மகளையும் ராஜரீகச் சின்னங்களையும் ஒரு கொத்தனிடம் ஒப்படைத்து யாருக்கும் தெரியாமல் ரக்சியமாக வளர்த்துவரச் செய்திருந்தான். சுபராஜா யுத்தத்தில் கொல்லப்பட்டு விடவே அவன் பெண்ணை கொத்தன் பரமரகசியமாக வளர்த்து வந்தான். தக்க வயதடைந்தவுடன் அவளைப் பார்த்த அரண்மனை அதிகாரிகள் வசபா மன்னனிடம் பிரமாதமாக வர்ணித்தார்கள். கொத்தனை அழைத்து வசபா விசாரிக்கவே மகாமத்தா என்ற யுவதி காலஞ்சென்ற சுபராஜாவின் பெண்ணென்பது வெளியாயிற்று. போரில் சுபராஜாவைக் கொன்றதற்குப் பிராயச்சித்தமாக அவனுடைய பெண்ணையே தனது மகன் வங்க நாசிகதீசனுக்கு ஆடம்பரமாக வசபா திருமணம் செய்து வைத்தான்.

வசபாவின் காலத்துக்குப் பின்னர் வங்கநாசிகன் அனுராதபுரியில் மூன்று வருடகாலம் ஆட்சி புரிந்தான். அவனுடைய ஆட்சி காலத்தில்தான் இலங்கைக்கு மிகப் பெரிய அபாயம் ஒன்று ஏற்பட்டது. அதன் பயனாகவே "கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்" என்று சேரன் செங்குட்டுவன் வர்ணித்த கஜபாகு என்ற சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு மாவீரன் ஈழத்தில் தோன்றினான்.

வசபாவின் மகன் வங்க நாசிகதீசன் பட்டத்துக்கு வந்தபொழுது பௌத்த தர்மத்தின் வளர்ச்சியில் அரசாங்கமும் மகா ஜனங்களும் அளவு மீறிய ஈடுபாடுடையவர்களாயிருந்தார்கள். ராணுவம் கவனிப்பாரில்லாமல் சீர்குலைந்திருந்தது. ஆத்மீகத் துறையில் மக்கள் அதிகம் ஈடுபாடுடையவர்களாயிருந்தபடியினால் உள்நாட்டு விவகாரங்களுக்கு ராணுவத்தின் தேவை அதிகம் உணரப்

படாமலிருக்கலாம். ஆயினும் வெளிதேசப் படையெடுப்புகளுக்கு மக்களின் ஆத்மீக வளர்ச்சி சற்றும் பயன்படாதென்பதை சரித்திரம் பல சந்தர்ப்பங்களில் போதித்திருக்கிறது. இந்தியாவில் அசோகனும் ஔரங்கசீப்பும் இலங்கையில் தேவ நாம்பிய தீசனும் துட்டகமுனுவும் கட்டியெழுப்பிய ராஜ்யங்கள் அவர்களுக்குப் பிறகு சிதைந்து போகக் காரணமாயிருந்தது அவர்கள் ஆத்மீகத் துறையில் அளவுமீறி ஈடுபாடுடையவர்களா யிருந்ததுதான்.

தேவனம்பிய தீசனுக்குப் பிறகு ஒரு முறையும் துட்டகமுனுவிற்குப் பிறகு ஒரு முறையுமாக இரண்டுதடவை இலங்கைமீது தென்னிந்தியப் படையெடுப்பு நடைபெற்றது. மூன்றாவது தடவையாக வங்க நாசிகதீசன் காலத்தில் இன்னொரு தடவை தென்னிந்தியத் தமிழர்களின் படையெடுப்பிற்கு இலங்கைத்தீவு இலக்காகியது. முதல் இரண்டு படையெடுப்புகளின் பொழுதும் அநுராதபுரத்தில் தமிழர்களின் ஆட்சி சில ஆண்டுகளுக்கு நீடித்தது. மூன்றாவது படையெடுப்பின் பொழுது தமிழர் இலங்கையில் நிலைத்து நின்று ஆட்சி புரிவதற்காக வரவில்லை. சிங்கள ராஜ்யத்தைக் கொள்ளையடித்து கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு பன்னிரண்டாயிரம் சிங்களவர்களையும் சிறைபிடித்துக்கொண்டு தமிழகத்துக்குத் திரும்பிவிட்டார்கள். தமிழ்ப் படைகளினால் முறியடிக்கப்பட்ட வங்க நாசிகதீசன் தலைநகரை விட்டுத் தலைதெரிக்க ஓடிவிட்டான். அழகுமிக்க அநுராதபுரி தரைமட்டமாக்கப்பட்டு சுடுகாடாக மாறிக் காட்சியளித்தது. இந்தச் சம்பவத்தைச் சோழர்களின் மூன்றாவது படையெடுப்பு என்று சிங்கள சரித்திர நூலாசிரியர்கள் வர்ணிக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த சில உண்மைகளைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. தேவனம்பிய தீசனுக்குப் பிறகு இலங்கையைக் கைப்பற்றி எல்லாளனோ அல்லது துட்டகமுனுவிற்குப் பிறகு அநுராதபுரியில் அரசிருந்த தமிழர்களோ, வங்க நாசிகதீசன் காலத்தில் தமிழகத்திலிருந்து படையெடுத்து வந்தவர்களோ சோழராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களல்லவென்பது ஈ. எல். தம்பிமுத்து போன்ற சரித்திர மேதை



கள் ஆராய்ந்து அறிந்த முடிவு. காவிரிப் பூம்பட்டினம் தமிழகத்தின் தலைசிறந்த வர்த்தகத்துறைமுகப் பட்டினமாயிருந்தபொழுது வியாபாரத்துக்காக அரபு நாட்டுக் குதிரைகள் ஆயிரமாயிரமாக அங்குவந்து இறங்குவது வழக்கம். அந்தக் குதிரைகளை அண்டை நாட்டு மன்னர்களுக்கு விற்று இலாபகரமான வாணிபம் நடத்துவதில் அனேகம் தமிழர்கள் ஈடுபட்டிருந்தார்கள். கடல் வாணிபத்தில் நிகரற்று விளங்கிய இந்த குதிரை வியாபாரிகளுக்கு மன்னர்களிடமும் வெளிதேச அரசாங்கங்களிடமும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. பெரும் பொருளீட்டிக் கொண்டு செல்வச் சிறப்புடன் வாழ்ந்த இவர்கள் கிட்டத்தட்ட குறுநில மன்னர்களைப் போலவே இருந்து வந்தனர். தேவனம்பிய தீசனுக்குப்பிறகு இலங்கையைக் கைப்பற்றி அரசாண்ட ஏலேல சிங்கன் என்ற எல்லாளனும் துட்டகமுனுவிற்குப் பிறகு சுமார் 14 வருடகாலம் அநுராதபுரியில் அரசிருந்த தமிழர்களும் குதிரை வியாபாரத்தில் பொருளீட்டிய குறுநில மன்னர்களே தவிர சோழ அரசவம்சத்துக்கும் இவர்களுக்கும் சற்றும் சம்பந்தம் கிடையாது. இதேபோல வங்க நாசிகதீசன் காலத்தில் அநுராதபுரியை அழித்து பன்னிரண்டாயிரம் சிங்களவர்களைச் சிறைபிடித்துச் சென்ற தமிழர்களும் குதிரை வியாபாரிகளான குறுநில மன்னர்களாகவோ அல்லது கரையோரக் கொள்ளைக் காரர்களாகவோ இருக்கவேண்டுமென்பது பிற்காலத்திய சோழர் படையெடுப்பு வரலாறுகளிலிருந்து தெரிகிறது. வங்க நாசிகதீசன் காலத்தில் படையெடுப்பு நடத்தியவர்கள் சோழர்களாயிருந்தால் கலாரசிகர்களான அவர்கள் அழகுமிக்க அநுராதபுரியை அழித்து சர்வநாசமாக்கிவிட்டு ஓடுவதற்குப் பதிலாக ஈழத்தைச் சோழ சாம்ராஜ்யத்துடன் இணைத்துக் கொண்டிருப்பார்கள். இவ்விதம் அவர்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் செய்து இலங்கையில் அருங்கலைகளுக்கு வித்திட்டு வளர்த்தது ஒரு உதாரணமாக விளங்குகிறது.

நிற்க, வங்க நாசிகதீசன் காலமாகியவுடன் அவனுடைய புகழ்பெற்ற மைந்தன் கயவாகு இலங்கை மன்னனானான். அவன் காலத்திலேயே ஈழநாடு இழந்த பெரு

மையைத் திரும்பவும் பெற்று அண்டைத்தேச மன்னர்களெல்லாம் மதித்துப் புகழும் அளவிற்கு உன்னத நிலைமையை அடைந்திருந்தது. இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் அதை நீராட்டி தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயிலெடுத்த சேரன் செங்குட்டுவன் காலத்தில் அந்தக் கோயிலின் விழா வைபவத்தில் பெருமையுடன் கலந்து கொண்டிருந்ததாக சிலப்பதிகாரம் கூறும். "கடல் சூழ் இலங்கைக் கயவாகு" மன்னன் என்பவன் வங்க நாசிகதீசனுக்குப் பிறகு அநுராதபுரியில் அரசிருந்த கயவாகுவேயாகும். தென்னிந்தியத் தமிழர்கள் இலங்கைமீது படையெடுத்துவந்து அநுராதபுரியை சர்வநாசமாக்கிச் சென்றது உண்மையாயிருப்பின் செங்குட்டுவன் அழைப்பை ஏற்று கயவாகு தமிழகம் சென்றிருப்பாரென்று எதிர்பார்க்க முடியாது. தமிழகத்தில் சில காலம் தங்கி கண்ணகி வழிபாட்டின் பெருமையை உணர்ந்து இலங்கை மீண்டவுடன் பத்தினித் தெய்வத்தைப் பல இடங்களிலும் இங்கு பிரதிஷ்டை செய்யவும் பிரதி வருடமும் பத்தினித் தெய்வத்திற்குக் கோலாகலமாகத் திருவிழா எடுக்கவும் கயவாகு ஏற்பாடு செய்திருக்க மாட்டான். இலங்கையில் பத்தினி வழிபாடு கயவாகுவின் காலத்திலிருந்துதான் ஏற்பட்டது. பத்தினித் தெய்வத்துக்கு தென்னிந்தியாவை விட இலங்கையில்தான் கோயில்கள் அதிகம்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே கண்ணகியம்மன் கோயில்கள் அதிகமிருக்கின்றன. சிங்களப் பகுதிகளிலிருக்கும் கோயில்களுக்கு பத்தினிக் கோயிலென்னும் தமிழ்ப்பகுதிகளிலுள்ள கோயில்களுக்கு கண்ணகியம்மன் கோயிலென்றும் பெயர். சிங்களவர்கள் எவ்விதம் துட்ட கமுனுவின் காலத்துக்குப் பிறகு கதிர்காமக் கந்தனை தங்களுடைய தெய்வங்களிலொன்றாக வணங்கி வருகிறார்களோ அதேபோல கயவாகுவிற்குப் பின்னர் பத்தினித் தெய்வமும் சிங்களவர்களின் முக்கியத் தெய்வங்களிலொன்றாகிவிட்டது. பிரதிவருடமும் ஆடி மாதம் பௌர்ணமியில் கதிர்காமத்தில் ஆடிவேல் என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புனிதமான திருவிழா



சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாகத் தவறாமல் நடந்துவருவதைப் போல ஈசால பெரஹரா என்ற ஒரு தேசியத் திருவிழாவும் இதே தினத்தில் சிங்களவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கதிர்காமத்தில் நடக்கும் ஆடிவேல் திருவிழாவுக்கு தென்னிந்தியாவிலிருந்து முக்கியமாகச் செட்டிநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் வருவதுவழக்கம். பல்லாயிரக் கணக்கான சைவர்கள் 'ஹரோஹரா' கோஷத்துடனும் ஏராளமான சிங்களபௌத்தர்கள் 'சாது சாது' என்ற கோஷத்துடனும் கதிர்காமக் கந்தனை ஒரு முகமாக வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். அங்கு முஸ்லீம்களுக்குப் புனிதமான ஒரு ஸ்தலமும் அங்கிருப்பதினால் உலகில் மூன்று பெரிய மதங்களான இந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்கள் ஒரே இடத்தில் சந்திக்கும் பெருமை கதிர்காமத்துக்கே உரியது. வள்ளியை முருகப்பெருமான் இங்கு மணந்ததாக ஐதீகம். இதன் அடையாளமாக இவ்வாலயத்தில் நீட்டிப் பிடித்த ஈட்டிகளுடன் வேடுவர்கள் பாராக் கொடுக்கும் சம்பிரதாயமும் சமீபகாலம் வரையில் இருந்தது. இன்றைக்கும் கபுராளைகள் எனப்படும் கதிர்காம ஆலய குருக்களான நாட்டுச் சிங்களவர்கள் தங்களை வள்ளியம்மன் சந்ததியில் வழி வழியாக வந்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். கதிர்காம ஆலயம் கபுராளைகளின் சொந்த சொத்தாக இருந்து வருகிறது.

நிற்க, ஆடிவேல் விழாவின் பொழுது அநுராதபுரத்தில் கயவாகு மன்னன் ஆரம்பித்து வைத்த ஈசால பெரஹரா என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையான திருவிழா பத்தினித் தெய்வத்துக்காக அவன் ஆரம்பித்து வைத்த விழாவேயாகும். சேரன் செங்குட்டுவன் அழைப்பிற்கிணங்கி கண்ணகியம்மன் ஆலயத் திருவிழாவுக்காக காவிரிப் பூம்பட்டினத்துக்குப் போயிருந்த கயவாகு மன்னன் கண்ணகியின் கால் சிலம்பு ஒன்றை இலங்கைக்கு வாங்கி வந்து அதைக் கோயிலில் பிரதிஷ்டை செய்து ஈசால பெரஹரா உற்சவத்தை ஆரம்பித்து வைத்தான்.

பெரஹரா என்றால் ஊர்வலம். ஈசால பெரஹரா என்பது ஆடிமாதத்தில் நடைபெறும். ஈசால பெரஹராவில் நான்கு ஊர்வலங்கள் உண்டு. ஒன்று மகாவிஷ்ணு ஊர்வலம். இது எந்தக் காலத்தில் யாரால் ஆரம்பிக்கப்பட்டதென்பது ஒருவருக்கும் தெரியாது. இரண்டாவது நூற்றுண்டில் கயவாகு மன்னன் பத்தினியின் காற் சிலம்பைக் கொண்டு வந்து இரண்டாவது ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தான். பிறகு இத்துடன் கதிர் காமக் கடவுளின் ஊர்வலமும் 18வது நூற்றுண்டில் புத்த பகவானின் புனித தந்தத்தின் ஊர்வலமும் இதில் சேர்ந்தது. ஆக மொத்தம் நான்கு ஊர்வலங்கள் சேர்ந்தாற்போல ஈசால பெரஹராவில் நடைபெறுகின்றன. முதலில் அனுராதபுரியில் ஆரம்பித்த ஈசால பெரஹரா சிங்கள ராஜ்யத்தின் தலை நகரமாகிய இடங்களுக்கெல்லாம் இடம்மாறி இப்பொழுது புத்தரின் புனித தந்தம் இருக்கும் கண்டிமா நகரத்தில் நடைபெறுகின்றது.

பௌத்த மதத்துக்கு மட்டுமே முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதப்பட்ட மகாவம்சத்தில் கஜவாகு சேர நாட்டுக்குச் சென்றதைப் பற்றியோ அல்லது கண்ணகியின் காற் சிலம்பைக் கொண்டு வந்து விழா எடுத்ததைப்பற்றியோ பிரஸ்தாபமே யில்லை. வங்க நாசிக தீசனுக்குப் பின்னர் பட்டத்துக்கு வந்த கயவாகு பௌத்தக் கோயில்களுக்குப் பல திருப்பணிகள் செய்தானென்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ராஜ வழி என்ற மற்றொரு வரலாற்று நூலோ பத்தினித் தெய்வத்தின் காற்சிலம்பைக் கயவாகு மன்னன் இலங்கைக்குக் கொண்டுவந்தானென்பதையும் இலங்கை திரும்பியதும் பெரிய திருவிழா நடத்தினனென்பதையும், ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் பத்தினித் தெய்வத்தை ஒப்புக்கொள்ள விரும்பாமல் கயவாகு திருவிழாக் கொண்டாடியதற்கு ஒரு விசித்திரமான கதையும் கூறுகிறது. அந்தக் கதையையும் இங்கு சொல்லுவது பொருத்தமாயிருக்கும்.

தமிழர் படையெடுப்புக்குப் பயந்து வங்க நாசிகதீசன் அநுராதபுரத்தை விட்டு ஓடி காட்டில் இறந்தபின் அவனுடைய மகன் கயவாகு பட்டத்துக்கு வந்தானும். ஒரு நாள் இரவு கயவாகு நகர் வலம் வந்து கொண்டிருக்கையில் ஒரு வீட்டில் ஒரு கைம் பெண் புலம்பிக்கொண்டிருந்தாள். மறு நாள் அப்பெண்ணை அழைத்து கயவாகு விசாரித்தான். அவன் தகப்பனுடைய காலத்தில் தமிழர்கள் படையெடுத்து வந்து 12000 சிங்களவர்களைச் சிறை பிடித்துப் போனுர்கள் என்றும் அப்படி சிறைபிடித்துக் கொண்டு போகப் பட்டவர்களில் அந்த கைம் பெண்ணின் குழந்தைகளும் இருவர் என்று தெரிய வந்தது. இதைக் கேட்டதும் கயவாகு சீற்றமடைந்தான். நீலன் என்ற ஒரு அரக்கனை மட்டும் அழைத்துக்கொண்டு சோழ நாட்டுக்குப் போய் சோழ மன்னனைப் பயமுறுத்தி யுத்தமில்லாமல் 12000 சிங்களவர்களைச் சிறை மீட்டதோடு, பதிலுக்கு 12000 தமிழர்களையும் அடிமைகளாகக் கொண்டுவந்தான். அதோடு பத்தினித் தெய்வத்தின் காற் சிலம்பையும் கவர்ந்து வந்தான். கயவாகுவின் இந்த மாபெரும் வெற்றியைக் கொண்டாட அன்று அவன் ஆரம்பித்த ஈசால பெரஹரா இன்றைக்கும் சிங்களவர்களின் வெற்றி விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதுதான் ராஜ வழி என்ற வரலாற்று நூல் கூறும் விவரம்.



இந்த வரலாறு ஆதாரமற்ற தென்பதையும் கயவாகு மன்னன் சோழ நாட்டின் மீது படையெடுத்தாகக் கூறுவது கட்டுக் கதை யென்பதையும் ஈ. எல். தம்பிமுத்து, ஜி. ஸி. மெண்டிஸ் முதலான சரித்திர மேதைகள் ஒப்புக்கொண்டிருப்பதுடன் தென்னிந்திய வரலாற்று நூல்களிலும் இம்மாதிரியான படையெடுப்புநடந்ததற்குஎவ்வித ஆதாரமும் இல்லை. தவிர சேரர்களின் கை அக்காலத்தில் ஓங்கி இருந்தபடியினால் தமிழ்ப்பெரு மூவேந்தர்களில் ஒருவரான சோழன்மீது கயவாகு படையெடுப்பதை செங்குட்டுவன் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்திருக்க மாட்டான். தமிழர் பகையை கயவாகு ஈட்டிக் கொண்டிருந்தால் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனுக்கு' கண்ணகி விழாவில் கலந்து கொள்ள சேரன் அழைப்பனுப்பியிருக்கவும் மாட்டான். போரில் தோற்ற தமிழர்களின் பத்தினித் தெய்வத்துக்கு இலங்கையில் வழிபாடு நடக்க கயவாகுஏற்பாடு செய்திருக்கவும் மாட்டான். இவைகளிலிருந்து கயவாகு

வின் காலத்தில் இலங்கைக்கும் தென் இந்தியத் தமிழ் நாட்டுக்குமிடையில் நெருங்கிய நேச உறவும் கலாசார மதத் தொடர்புகளும் இருந்தது ருசுவாகிறது. பத்தினி வழிபாட்டை ஒரு பௌத்த மன்னன் ஆரம்பித்தானென்பதை மறைக்க படையெடுப்பு நடத்தி கண்ணகியின் காற்சிலம்பைக் கயவாகு மன்னன் கொண்டு வந்தான் என்ற கதை சிருஷ்டியாகியதும் தெளிவாக ருசுவாகிறது.

## 17. அந்தகரின் ஆரூடம்.

ஒருநாள் கயவாகு மன்னன் பௌத்த பிட்சுகளுடன் உரையாடிவிட்டு அந்தப்புரத்துக்குத் திரும்பியபொழுது அவன் தாய் மகாமத்தா மகனே, உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும். என் மனதில் நீண்டகாலமாக ஒரு ஆசை இருந்து வருகிறது. அதை நீ நிறைவேற்றி வைப்பாயா?" என்றாள்.

" இதென்ன கேள்வி அம்மா! என்ன செய்ய வேண்டுமென்பதை உத்தரவிடுங்கள். அதை நிறைவேற்றி வைத்துவிட்டுப் பிறகு பகல் உணவு கொள்ளுகிறேன்" என்றான் கயவாகு.

" அவ்வளவு சுலபமாக நினைத்தவுடன் செய்து முடித்துவிடக் கூடிய காரியமல்ல மகனே நான் விரும்பும் காரியம். இதைச் சொல்லுவதற்கு முன்னால் உனக்கு வேறு சில விஷயங்களைச் சொல்லியாகவேண்டும். உன் பாட்டனாரும் என் தகப்பனாருமான சுபராஜாவின் பூர்வோத்திரங்களைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்று வினவினாள் மகாமத்தா.

" ஆமாம்!" என்றான் கயவாகு.

"அவர் விஜயன் வம்சத்தில் வந்த யசலாளகதீசனை வஞ்சகமாக் கொன்றுவிட்டு அரசைக் கைப்பற்றியவரென்பதும் உனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே!" என்று கேட்டுவிட்டு மகாமத்தா சிறிது தயங்கினாள்.



ராஜ்யத்தைக் கைப்பற்ற சுப ராஜா எவ்வளவு கொடுமையாக நடந்துகொண்டபொழுதிலும் அவன் தனது தகப்பனல்லவா? ஆகையால் அவனைப்பற்றி தன்னுடைய வயிற்றில் பிறந்த பிள்ளை துச்சமாகவும் கேவலமாகவும் நினைப்பானோ என்ற அச்சத்துடனேயே அவள் தயங்கித் தயங்கிப் பேசினாளென்று கூறவேண்டும்.

"சுபராஜா என்ன செய்தாரென்பது மட்டுமல்ல தாயே, அவரால் கொல்லப்பட்ட யசலாளகதீசன் உடன் பிறந்த அண்ணனையே நீரில் மூழ்கடித்துக் கொன்று பட்டத்துக்கு வந்தவரென்பதும் எனக்குத்தெரியும். அரச பதவியிலுள்ள ஆசை சொந்த அண்ணனையே நீசத்தனமாகப் படுகொலை செய்யத் தூண்டுமானால், என் தாத்தா செய்ததைமட்டும் எப்படித் தவறாகக் கருதமுடியும்? அண்ணனை வஞ்சித்த ஒரு மன்னனைத் தண்டிக்க ஆண்டவன் என் தாத்தாவைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்போலிருக்கிறது!" என்று கயவாகு சொல்லியபொழுது அவன் தாய் மகாமத்தா ஒருபெரிய பாரம் இதயத்தைவிட்டு நீங்கியதைப்போல நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு மௌனமாயிருந்தாள்.

" என்னவோ சொல்ல வேண்டுமென்று கூறிவிட்டு ஒன்றும் சொல்லாமலிருக்கிறீர்களே?" என்று நினைவுப்படுத்தினான் கயவாகு.

"சொல்லுகிறேன் கயவாகு! என் தகப்பனார் தவறான வழியில் அரசைக் கைப்பற்றியதால் அவர் நிம்மதியாக வாழ முடியவில்லை. அரச பதவியில்லாமல் எப்பொழுதும் போல சுதந்திர மனிதனாக இருந்திருக்கக் கூடாதா என்றுகூட பல சந்தர்ப்பங்களில் அவர் எண்ணியிருக்கவேண்டும். நான் பிறந்தவுடன் அவருடைய கவலை பன்மடங்கு அதிகரித்ததாம். எந்த நிமிடமும் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென்று அவர் அஞ்சியதால் தன்னோடு தனது வம்சம் நசித்துப் போவதை அவர் விரும்பவில்லை. ஆகையால் அவர் என்னை ஒரு கட்டிடவேலை செய்யும் கொத்தனிடம் ஒப்படைத்து ரகசியமாக வளர்த்துவரச் செய்தா

ராம். அநுராதபுரத்தை அடுத்துள்ள காட்டில் கதம்ப மலர்ச்சோலையொன்றில் என்னுடைய பூர்வோத்திரம் தெரியாமலே நான் வளர்த்துவரப்பட்டேன். ஒருநாள் உன் தகப்பனார் வேட்டையாடக் காட்டுக்கு வந்தபொழுது கதம்பமலர்ச் சோலையில் தற்செயலாக என்னைச் சந்தித்தார். மறுநாள் அரண்மனையிலிருந்து மந்திரியும் வேறு சிலரும் வந்து என் வளர்ப்புத் தகப்பனுடன் பேசினார்கள். அப்பொழுதுதான் என்னுடைய பூர்வோத்திரம் எனக்குத் தெரிந்தது. முதல்நாள் என்னைச் சந்தித்தவர் பட்டத்து இளவரசர் என்பதையும் நான் பட்டத்து இளவரசியாகப் போகிறேனென்பதையும் அறிந்து ஆச்சர்யமடைந்தேன். உன் தகப்பனாரைத் கதம்பமலர்ச்சோலையில் நான் சந்திக்க நேரிட்டதினால்தான் உன்னைப் போன்ற ஒரு உத்தம புத்திரனைப் பெற்றடுக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எனக்கு நல்வாழ்வு அளித்ததற்காக புத்த பகவானுக்கு நன்றி தெரிவிக்க அந்த கதம்ப மலர்ச் சோலையிலே ஒரு அழகான தாது கோபுரத்தைக் கட்டவேண்டும். நீண்ட காலமாக என் மனதிலிருக்கும் இந்த ஆசையை நிறைவேற்றி வைப்பாயா கயவாகு? என்றாள் மகாமத்தா.

தாயின் இந்த ஆவலைக் கேட்ட கயவாகு மன்னன் கதம்ப வனத்தில் காண்போர் வியக்கும் வண்ணம் ஒரு பிரம்மாண்டமான தாது கோபுரத்தை நிர்மாணிக்க உடனே வேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய ஆரம்பித்தான். அவனும் மகாமத்தாவுமாக நேரடியாக மேற்பார்வையிட்டு அற்புதமாகச் சிருஷ்டித்த அந்த தாதுகோபுரத்துக்கு மஹாவிஹாரை என்று பெயர். பிற்காலத்தில் இப்பெயர் மறுவிஹாரையென்று திரிவுபட்டதாகத் தெரிகிறது. சிங்கள மன்னர்கள் சுபாவத்தில் எப்படிப்பட்டவர்களாயிருந்தபொழுதிலும் பொதுவாக எல்லாச் சிங்கள மன்னர்களுமே போட்டி போட்டுக்கொண்டு ஒரு நல்ல காரியத்தைச்செய்து வந்திருக்கிறார்கள். கட்டிடக் கலையும் பொறியியல் கலையும் உச்ச நிலையை அடைந்திருக்கும் தற்காலத்தவர்களே அதிசயிக்கும்படியான வானளாவிய பல அழகிய கோயில்களை சோழர்களும் பல்லவர்களும் தமிழகத்தில் நிர்மாணித்ததைப்போல ஈழத்தில் சிங்கள மன்னர்கள்



கண்டோர் வியக்கும்படியான கணக்கற்ற தாதுகோபுரங்களையும் தடாகங்களையும் சிருஷ்டித்து நிலையான நினைவுச் சின்னங்களாக மக்கள் மனதில் என்றென்றும் நிலைபெறச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்று அனேகம் புராதன சிங்கள மன்னர்களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளுவது அவர்கள் எழுப்பிச்சென்ற அமரத்துவம் வாய்ந்த ஆலயத்திருப்பணிகளைக் கொண்டுதான்.

22 வருடகாலம் அமைதியுடன் அரசிருந்த மன்னன் கயவாகுவிற்குப் பிறகு அடுத்த ஒன்றரை நூற்றாண்டு வரையில் இலங்கையில் குறிப்பிடத் தகுந்த சம்பவங்கள் ஒன்றுமில்லை. மகா ஈழநாகன், பட்டிகதீசன், கனித்த தீசன, குஞ்சநாகன், குகநாகன், ஸ்ரீநாகன், ஒகரிக நாகன், அபயநாகன் என்று அனேகம் மன்னர்கள் அடுத்தடுத்து ஆட்சி நடத்திவந்தார்கள். நாகன் என்ற பெயர்களுடைய மன்னர்கள் தமிழ் ரத்தக் கலப்புடையவர்களென்று பொதுவாக ஊகிக்க இடமிருக்கிறது. இவர்கள் புராதன நாகர் வகுப்பைச் சேர்ந்தவர்களுடன் ரத்த சம்பந்தமுடையவர்களென்று சிலர் கருதுகிறார்கள். இன்றுள்ளதைப்போல தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் வகுப்பு வேற்றுமையோ அல்லது பாஷை வேற்றுமையோ அன்று இல்லாதபடியினால் கலப்பு மணம் நடப்பதும் ஒரே குடும்பத்தில் தமிழ்ப் பெயருடையவர்களும் சிங்களப் பெயருடையவர்களுமிருப்பதும் சர்வசாதாரணம். அனேக சிங்கள மன்னர்களின் பட்டத்து ராணிகள் தமிழ்ப் பெண்களாகவும் சுத்த சைவர்களாகவுமிருந்ததால் பௌத்தத்தையும் சைவத்தையும் அரசாங்கம் பேணி வளர்த்ததோடு ஒவ்வொரு பௌத்த விஹாரையினருகிலும் ஒரு சிவன் கோவிலிருப்பதும் இரு ஆலயங்களுக்கும் அரச தம்பதிகள் போய் வருவதும் அன்றய வழக்கமாயிருந்தது. இன்றைக்கும் கூட இடிந்து பாழடைந்து கிடக்கும் தாது கோபுரங்களுக்கு அருகில் சிவலிங்கம் தென்படுவது இந்தப் புராதன சரித்திர உண்மையையே ஊர்ஜிதப்படுத்துவதாயிருக்கின்றன.

நிற்க, கதையை மேலே தொடருவதின் முன்னால் மத்திய இலங்கையில் பாழடைந்து கிடக்கும் மண்டபம் ஒன்

ருக்கு வாசக நேயர்களை நாம் அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது. நடுக்காட்டிலிருக்கும் அந்த மண்டபத்தில் இரண்டு பேர் படுத்திருக்கிறார்கள். ஒருவர் பௌத்த பிட்சு என்பது அவர் அணிந்திருக்கும் காஷாயத்திலிருந்து தெரிகிறது. மற்றொருவர் சுமார் இருபத்தி ஐந்து வயது வரையில் மதிப்பிடக் கூடிய வாலிபன். தோற்றத்தில் அந்த வாலிபன் அரச குமாரனைப்போல கம்பீரமாகவும் மிடுக்காகவும் இருந்தபொழுதிலும் அவன் ஒரு எளிய குடும்பத்துப் பிள்ளையென்பதை அவனுடைய ஆடைகள் அறிவிக்கின்றன. இருவரும் மண்டபத்தின் ஒரு ஓரமாகப் படுத்திருந்தார்கள். ஏற்கனவே இருள் அடர்ந்திருந்த அந்தக்காட்டு மண்டபத்தில் சூர்யாஸ்தமனம் ஆகிவிட்டதின் அறிகுறியாக காரிருள் கனத்துக்கொண்டு வந்தது.

எங்கோ ஒரு *ஆந்தை கிரீச்சென்று கத்தியது. அதைத் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படும் ஒரு மனிதன் அடித் தொண்டையிலிருந்து அலறுவதைப் போன்ற ஒரு சப்தம் கேட்டது. எவ்வளவு திட நெஞ்சம் படைத்தவர்களையும் கதிகலங்கிப் போகச்செய்யும் அந்த அதி பயங்கர ஓலத்தைக் கேட்டு பௌத்த பிட்சுவின் அருகில் படுத்திருந்த வாலிபன் ஒரு கணம் தடுமாறிப் போயிருக்கவேண்டும்.

“அது என்ன கூக்குரல் சுவாமி? ஒரு பெண் அலறுவதைப்போல் அல்லவா இருக்கிறது? என்றான் அந்த வாலிபன்.

“ஏன் பயமாயிருக்கிறதா சங்கபோதி?” என்றார் அந்த பௌத்த பிட்சு.

---

* இலங்கையில் மரங்கள் அடர்ந்த காட்டில் பேய்ப் பறவை என்ற ஒரு விதமான பறவை இன்றைக்கும் இருக்கிறது. இதை DEVIL BIRD என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அது கத்தினால் மரணவேதனையிலுள்ள மனிதன் அலறுவதைப் போலிருக்கும்.



“பயமா? அது எங்கள் வம்சத்தில் யாருக்குமே கிடையாதே சுவாமி!”

“அப்படியா?” என்று ஒரு மாதிரியாக பௌத்த பிட்சு கேட்டபொழுது சங்கபோதி என்ற இளைஞன் ஒரு விநாடி தயங்கிவிட்டு ” அதர்மம் ஒன்றைத்தவிர உலகத்தில் வேறு எதனிடமும் எனக்கு பயமில்லை சுவாமி! இது நீங்கள் சொல்லிக் கொடுத்த பாடம்தானே?” என்றான்.

“சங்க போதி! நாடு ஆளும் பரிபக்குவ நிலைமைக்கு நீ வந்துவிட்டாய். சோதிடர்களின் அருள் வாக்கு விரைவில் பலித்து அநுராதபுரி சிம்மாசனத்தில் நீ அமர்ந்தால் அதர்மம் இந்த நாட்டைவிட்டே ஓடிவிடும்” என்றார் அந்த பௌத்த பிட்சு. அவர் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கையில் சற்று முன்னால் கேட்ட அதே மாதிரியான அழுகுரல் மீண்டும் அவர்களுக்குக் கேட்டது.

“பாவம் யாரோ துன்பத்தில் அலறுவதைப் போலிருக்கிறதே சுவாமி? என்றான் மறுபடியும் சங்கபோதி. அவனுடைய கருணை உள்ளம் உடனே ஓடிப்போய் பார்த்து உதவி புரியவேண்டுமென்று அவனைத் தூண்டியது.

“அது மனிதக்குரல் இல்லை சங்கபோதி. பேய்ப் பறவையின் கூப்பாடு. மனிதக் குரலைப்போலத்தானிருக்கும் அது. இந்தக் காட்டில் பேய்ப் பறவைகள் அதிகம். நிம்மதியாகத் தூங்கு சங்கபோதி என்றார் பிட்சு.

சங்கபோதி கட்டாந் தரையில் படுத்து உறங்க முயற்சித்தானென்றாலும் இடையிடையே பேய்ப் பறவை கத்திக்கொண்டிருந்ததால் அவனுக்குத் தூக்கம் வருவதாயில்லை.

“நான் அரசனாகப் போவதாக அடிக்கடி சொல்லுகிறீர்களே அதன் பொருள் என்ன சுவாமி?” என்று கேட்டான்.

“ஏன் ஆச்சரியமாயிருக்கிறதா?”

“இல்லை சுவாமி, இல்லை. ஆச்சர்யப்படும் சக்தியை நான் எப்பொழுதே இழந்து விட்டேன். சின்னஞ் சிறு

வயது முதல் உங்களுடன் வளர்ந்து வரும் எனக்கு என்னுடைய பூர்வோத்திரம் என்னவென்பது தெரியாது. நான் லம்பகர்ண குலத்தைச் சேர்ந்த ஒரு இளவரசனென்பது நீங்கள் சொல்லித்தான் தெரியும். தர்ம உபதேசம் பெற வேண்டிய உங்கள் ஆசிரமத்தில் தர்மோபதேசத்தோடுகூட போர் முறைகளிலும் எனக்கு நல்ல பயிற்சி யளித்து என்னைச் சிறந்த வீரனாக்கினீர்கள். அரசனாகப் போவதாகச்சொல்லி அந்த பதவிக்கு என்னைத் தயார் செய்வதில் அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறீர்கள். என் வாழ்க்கை ஆரம்பமுதல் ஆச்சரியமாயிருக்கையில் எதை நினைத்து நான் ஆச்சரியப் படுவது சுவாமி, அடிக்கடி நீங்கள் சொல்லி வருவதைப் போல அனுராதபுர சிம்மாசனம் எனக்காகக் காத்திருந்தால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன்" என்றான் சங்கபோதி.

"நீ லம்பகர்ண குலத்தைச் சேர்ந்த ஒரு இளவரசன் என்பது உண்மைதான் சங்கபோதி. நீ சிறுவனாயிருக்கையில் உன் ஜாதகத்தை கணித்துப் பார்த்த ஜோதிடர்கள் நீ இலங்கையின் வருங்கால மன்னனாகி தர்மஆட்சி நடத்தப் போவதாகச் சொன்னார்கள். இது அரசனுக்குத் தெரிந்தால் உங்கள் குடும்பத்தையே அவன் கருவறுத்து விடுவானென்று அஞ்சிய உன் தந்தை காட்டுக்கு வந்து என்னிடம் உன்னை ஒப்படைத்தார். அன்று முதல் நீ என்னுடைய பாதுகாப்பிலிருந்து வருகிறாய். என்றைக்காவது ஒரு நாள் நீ ராஜ்யப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவனாகையினால் அதற்குத் தகுந்த முறையில் உன்னைப் பயிற்றுவிப்பது என் கடமையல்லவா? இப்பொழுது என் கடமை முடிந்து விட்டது. உன்னை அரண்மனைக்கு அழைத்துப் போய் போர்ப் படையில் சேர்த்து விடப் போகிறேன். உரிய காலம் வரும் பொழுது மற்ற காரியங்கள் தானாகவே நடக்கும்" என்றார் பிட்சு.

சங்கபோதிக்கு சோதிடத்தில் மனப்பூர்வமாக நம்பிக்கையில்லை. சோதிடத்தை நம்பி கண்ணும் கருத்துமாகத் தன்னை வளர்த்த பெரியவரின் மனதைப் புண்படுத்தவும் அவன் விரும்பவில்லை. "உண்மையாகவே நான் அரசனாக



நேரிட்டால் பௌத்த தர்மம் கூறும் அஷ்ட சீலங்களையும் அனுஷ்டித்து நல்லாட்சி நடத்துவேன்" என்றான் அவன்.

அவன் மனதில் உண்மையாகத் தோன்றியதையே சொன்னான். வருங்காலத்தில் நீதிநெறி தவறாமல் சத்தியத்துக்காக தனது தலையையே தாரைவார்த்த மாமன்னனாகப் போகிறோமென்று தெரிந்து அவன் இதைச் சொல்லவில்லை.

மறுநாட் காலை அவர்கள் அனுராதபுரியை நோக்கி பிரயாணத்தைக் தொடங்கிய பொழுது அதே இடத்துக்குச் சென்று கொண்டிருந்த மற்றும் இரண்டு இளைஞர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவன் பெயர் சங்கதீசன். மற்றொருவன் பெயர் கோதபயன். அவர்களும் லம்பகர்ணர் குலத்தைச் சேர்ந்தவர்கள்தான். முன்னால் பௌத்த பிட்சுவும் அவருக்குப் பின்னால் சங்கபோதி, சங்கதீசன், கோதபயன் ஆகிய மூன்று இளைஞர்களுமாகக் காட்டு வழியே சென்று கொண்டிருந்த பொழுது வழியில் ஒரு தபஸ்வியை அவர்கள் சந்திக்க நேரிட்டது. அந்த தபஸ்வி அந்தகர். ஆயினும் தபோவலிமையினால் முக்காலத்தையும் உணரும் வன்மை பெற்றிருந்தார். தம்மை நோக்கி வந்தவர்களின் காலடிச் சப்தத்தை மாத்திரம் கேட்டு ' இதோ வரும் மூன்று இளைஞர்களும் அனுராதபுரியில் ஒருவரை யொருவர் அடுத்து ஆட்சிபுரியப் போகிறார்கள்" என்றார்.

இதைக் கேட்டதும் அம்மூன்று இளைஞர்களும் சிரித்துக்கொண்டே போய்விட்டார்கள். கடைசியில் சென்ற கோதபயன் சிறிதுதூரம் சென்றபின் மற்றவர்களுக்குத் தெரியாமல் அந்த அந்தகரிடம் திரும்பிவந்து "ஸ்வாமி! எங்கள் மூவரில் யாருடைய ஆட்சி அதிக காலத்துக்கு நீடிக்கும்? தயவு செய்து இதையும் சொல்லவேண்டும்" என்று வேண்டினான்.

"உங்கள் மூவரில் யார் கடைசியாக அரியணை ஏறுகிறானோ அவனுடைய ஆட்சியே அதிக காலம் நீடிக்கும்?" என்றார் தபஸ்வி.

இந்த சோதிடத்தை கோதபயன் முற்றிலும் நம்ப வில்லை. ஆயினும் சிம்மாசனம் தங்கள் மூவரையும் தேடி வருவதாயிருந்தால் கடைசியாகவேதான் அரியணை ஏற வேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். தபஸ்வியின் ஆருடம் உண்மையாகவே பலிக்கப்போகிற தென்பதை அப்பொழுது அம்மூன்று இளைஞர்களுமே நம்பவில்லை.

சங்கபோதி, சங்கதீசன், கோதபயன் ஆகிய மூவரும் அநுராதபுரியை அடைந்தவுடன் அவர்களோடு வந்த பௌத்த பிட்சுவின் ஆதரவினால் அம்மூவருக்கும் அரண் மனையில் உத்தியோகம் கிடைத்தது. ஆயினும் சங்கபோதி மாத்திரம் அரண்மனையில் தங்கவில்லை. வேலைநேரம் முடிந்த வுடன் அவன் ரூவன் வெளிசயா தாது கோபுரத்துக்குச் சென்று பௌத்த குருமார்களுடன் அவன் தங்கிவந்தான். நினைவு தெரியாத காலத்திலிருந்து பௌத்த தர்மத்தின் அடிப்படையிலேயே அவன் வளர்ந்து வந்தவனாதலால் அவனுடைய கவனமெல்லாம் தத்துவார்த்த ஆராய்ச்சி களிலேயே ஈடுபட்டிருந்தது. மற்ற இரண்டு இளைஞர் களும் அரண்மனையிலேயே நிரந்தரமாகத் தங்கி அரசருடன் நெருங்கிப்பழகி அவருடைய நம்பிக்கைக்கும் அன்புக்கும் தங்களைப் பாத்திரமாக்கிக் கொண்டார்கள். சங்க தீசன் தனது வாள்வலிமையினால் மன்னர் மனதைக் கவர்ந்து பிரதம தளபதியாக நியமனம் பெற்றான். கோதபயன் பொக்கிஷ இலாகாவின் உயர்தர அதிகாரியானான். பட்டம் பதவிகளில் அதிக நாட்டமில்லாத சங்கபோதி ஒரு சில்லறை உத்தியோகத்துடன் திருப்தியடைந்து விட்டான். பதவி பெரிதாயிருந்தால் தனது தத்துவார்த்த ஆராய்ச்சிகளுக்கு அவகாசம் கிடைக்காது என்று எண்ணியே அவன் அரசரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப் பங்களையும் வேண்டுமென்றே தவிர்த்து வந்தான்.

சங்கபோதியின் போக்கு அவனைத் தலைநகருக்கு அழைத்து வந்த பிட்சுவுக்குப் பெரிய ஏமாற்றமாயிருந்தது. சங்க போதிக்குக் கிடைக்கவேண்டிய ராஜயோகம் அவனுடைய அலட்சியத்தினால் வேறு யாருக்கோ பறி



போகிறதேயென்று அவர் எண்ணி யெண்ணி துக்கப்பட் டார். எனினும் இலங்கையின் மிகப் புராதனமானதும் செல்வாக்கு மிக்கதுமான ரூவன் வெளிசயா ஆலய பிரதம குருமார்கள் சங்கபோதி மதப்பற்றில் விசேஷ அக்கரை கொண்டிருந்தபடியினால் சங்கபோதியின் வளர்ப்புத் தந் தையைப் போலிருந்த பிட்சு சொல்லவும் முடியாமல் மெல் லவும் முடியாமல் தனது ஏமாற்றத்தை மனதுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது அர சிருந்த இரண்டாவது விஜயன் சங்கபோதியின் மார்க்க ஞானத்தில் மிகுந்த மதிப்பு வைத்திருந்தது பிட்சுவுக்கு சற்றே மன ஆறுதல் அளிப்பதாயிருந்தது.

சங்கதீசனுக்கும் கோதபயனுக்கும் அந்தக தபஸ்வி சொல்லிய ஆருடமே சதா சர்வதா மனதிலிருந்துகொண் டிருந்தது. அவ்விருவருமாகச் சேர்ந்து சதி செய்து ராணு வத்தை வசப்படுத்திக் கொண்டு தக்க சமயம் பார்த்து மன்னன் இரண்டாவது விஜயனைப் படுகொலை செய்தார் கள். சங்கதீசன் சிங்களராஜ்யத்தின் மன்னனாகத் தன் னைப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவனுடன் கோதபயன் போட்டியிடவில்லை. அந்தகரின் ஜோதிடத் தில் அவனுக்கு அதிகமான நம்பிக்கை யேற்பட்டிருந்த படியினால் சங்கதீசனும் சங்கபோதியும் அரியணையில் அமர்ந்த பிறகு மூன்றாவதாகவே தனக்குப் பட்டம் கிடைக்கவேண்டு மென்றும் அப்பொழுதுதான் தன்னு டைய ஆட்சிகாலம் நீடிக்குமென்றும் அவன் நினைத்தான். அவனுடைய திட்டப்படி சங்கதீசனுக்குப் பட்டம் கட்டி யாகிவிட்டது. அடுத்தபடியாக சங்கதீசனை ஒழித்துக் கட்டி சங்கபோதியை எப்படி அரசனாக்கலா மென்பதைப் பற்றி அவன் தீவிரமாக யோசனை செய்ய ஆரம்பித்து சங்கபோதியை பிரதம தளபதியாக நியமிக்கவேண்டு மென்று சங்கதீசனிடம் அவன் சிபார்சு செய்தான்.

அந்தக் காலத்தில் ராணுவத்தை நேரடியாக மேற் பார்வையிடும் பிரதம தளபதிக்கு மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் இருந்தபடியினால் அந்தப் பதவியில் மிகவும் நம்பிக்கையானவர்களையே நியமிப்பது வழக்கமாயிருந்தது. சுயநலம் கொண்ட தளபதி என்றைக்குமே அரசனுக்கு

எமன் போன்றவன். இரண்டாவது விஜயனைப் படுகொலை செய்வதில் சங்கதீசனும் கோதபயனும் கூட்டாகச் சதி செய்தவர்களாதலால் தன்னுடைய முந்திய சேனாதிபதி ஸ்தானத்தில் கோதபயனை நியமிப்பதை சங்கதீசனும் விரும்பவில்லை. அந்த நிலைமையில் சங்கபோதியை சேனாதிபதியாக நியமிக்கவேண்டு மென்று கோதபயனே சிபார்சு செய்தபொழுது அந்த யோசனையை சங்கதீசன் உடனே ஏற்றுக்கொண்டான். ஆனால் பௌத்ததர்மப் பிரசாரத்தில் அதிக ஈடுபாடுடையவனாயிருந்த சங்கபோதிக்கோ ராணுவத்துக்குத் தலைமைதாங்க சற்றும் விருப்பமில்லை. யுத்தம் ஏதுமில்லாத சமயத்தில் சேனாதிபதி பதவியை வகிப்பதில் பாதகமில்லையென்று சொல்லி, பலர் மூலமாக வற்புறுத்தி சங்கபோதியை ராணுவத் தலைமைப் பீடத்தில் அமர்த்தி விட்டான் கோதபயன்.

அவனுடைய மூன்றாவது திட்டம் சங்கதீசனைத் தீர்த்துக்கட்டி சங்கபோதியைச் சிம்மாசனத்தில் ஏற்றுவது. இந்த திட்டம் எதிர்பார்த்ததைப் போல அவ்வளவு சுலபத்தில் கை கூடுவதாக இல்லை. சங்கதீசன் ஏற்கனவே சேனாதிபதியாக இருந்தவனாகையாலும் இப்பொழுது சங்கபோதியின் தலைமையிலிருந்த ராணுவத்தினர் பாபத்துக்கு ஓரளவு பயப்படும் பண்புடையவர்களாக மாறியிருந்தபடியினாலும் கோதபயனின் சதித்திட்டத்துக்கு இம்முறை ராணுவ உதவி கிடைப்பதாயில்லை. ஆகவே அவசரப்பட்டு ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் நிதானமாக கோதபயன் தனது காரியத்தைச் செய்யவேண்டியதாயிற்று. நான்கு வருடங்களுக்குப் பின்னர் கோதபயன் ஒரு நாள் சங்கதீசனைச் சந்தேகத்துக்கு இடமின்றி படுகொலை செய்து தனது மூன்றாவது திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றினான்.

இதன் பிறகு தர்மத்தில் திளைத்த சங்கபோதியே அரியணை ஏறவேண்டுமென்று கோதபன் தலைமையில் ஒரு பெரிய கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. சங்கபோதிக்கு அரசாள அணுவளவும் விருப்பமில்லை. அதேசமயம் மகாஜனங்களின் ஏகோபித்த வேண்டுகோளை நிராகரிக்கவும் முடியவில்லை. வேண்டா வெறுப்புடன் அவன் அரச பதவியை



ஏற்றுக்கொண்டான். அன்று புத்த தர்மத்தின் அடிப்படைக் கொள்கையான அஷ்ட சீலத்தை அனுஷ்டித்து ஆட்சி நடத்துவதென்றும் அவன் பிரதிக்ஞை செய்துகொண்டான்.

அஷ்ட சீலத்தில் கொல்லாமை என்பதும் ஒன்று. எக்காரணத்தை முன்னிட்டும் எந்த சந்தர்ப்பத்திலும் எவரையும் கொல்லக்கூடாது என்பது அஷ்டசீலக் கொள்கையில் ஒரு அதி முக்கியமான கொள்கை. இக்கொள்கையைக் கடைபிடிக்கும் ஒருவன் எவ்விதம் வெற்றிகரமாக அரசாள முடியும்? எந்த தர்மத்தினால் மக்களை மறுமலர்ச்சியடையச் செய்து தர்ம ராஜ்யத்தை இலங்கையில் ஸ்தாபிக்க சங்கபோதி விரும்பினானோ அதேதர்மம் அவனுடைய தலையையே பலிவாங்கி விட்டது. சாதாரண மனிதர்கள் கடைபிடிக்கவேண்டிய தர்ம நெறிகளுக்கும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவனின் அரச தர்மத்துக்குமிடையில் சங்கபோதியினால் வேற்றுமை காணமுடியவில்லை. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பதைப்போல அஷ்டசீலக் கொள்கையை அளவுமீறிய பயபக்தியுடன் அனுஷ்டித்ததால் சங்கபோதி அவதியடைய நேரிட்டது. ஆயினும் இலங்கையில் அரசாண்ட நூற்றுக்கணக்கான இதர மன்னர்களைப் போலில்லாமல் சங்கபோதியின் பெயர் சரித்திர ஏடுகளில் சிரஞ்சீவியாயிருக்க அவனுடைய சீலம் உதவியதென்றும் கூறவேண்டும்.

சங்கபோதியின் காலத்தில் குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை விதிப்பதென்ற வழக்கம் அறவே ஒழிந்து போயிற்று. கொலைக்குற்றம் செய்தவர்கள் கூட தண்டனையின்றி தப்பினார்கள். மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களை மன்னன் ரகசியமாகத் தருவித்து தர்ம உபதேசம் செய்து யாருக்கும் தெரியாமல் விடுதலை செய்தான். அவர்களுடைய ஸ்தானத்தில் இயற்கையாக இறந்தவர்களின் பிரேதங்களைத் தூக்கில் தொங்கவிட்டு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டுவிட்டதாகப் பறைசாற்றச் செய்தான். கொலை செய்தால் மரண தண்டனையிலிருந்து தப்பமுடியாதென்ற பயம் பொதுஜனங்களின் மனதிலிருந்து நீங்கக்கூடாதென்பதற்காக அவன் இவ்விதம் செய்தபொழுதி

லும் அவன் செய்கை குற்றவாளிகளைச் சீர் திருத்துவதற்குப் பதிலாக புதிய புதிய குற்றங்களுக்கு ஊக்கமளிப்பதாகவே இருந்தது.

சங்கபோதியின் காலத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது. வழக்கமாக மழை பொழிய வேண்டிய சமயத்தில் மழையின்றி பயிர்கள் கருகிப் போயினவாம். மக்கள் மன்னனிடம் வந்து முறையிட்டார்கள். சங்க போதிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நான் அஷ்ட சீலங்களை அனுஷ்டித்து சத்திய வாழ்க்கை நடத்துவது உண்மையானால் மழை பொழிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு சங்கபோதி மன்னன் ருவான் வெளிசயா தாது கோபுரத்தின் முன்னால் போய்ப் படுத்துக்கொண்டான். இரண்டு தினங்களாகியும் மழை பொழியவில்லை. மன்னனும் கோபுர வாசலைவிட்டு எழுந்திருக்கவில்லை. மூன்றாவது நாள் வருணபகவான் மனம் இரங்கி மழைபொழிந்து பயிர்களைக் காப்பாற்றியதாக மகாவம்சம் கூறுகிறது.

பௌத்தர்களின் மத்தியில் பலியிடும் வழக்கத்தை முதல் முதலாக ஏற்படுத்தியவனும் சங்கபோதிதான். ஒரு சமயம் ஒரு யக்ஷிணி நாட்டில் கொடிய நோயைப் பரப்பி வந்தாளாம். அவளைத் திருப்தி செய்வதற்காக கிராமங்கள் தோறும் யக்ஷிணி தேவதைக்கு பலிகொடுக்கும் வழக்கத்தை சங்கபோதி ஆரம்பித்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொல்லாமையை ஒரு விரதமாக அனுஷ்டித்து வந்த சங்கபோதியின் காலத்தில் 'பலி' என்பது ஜீவ வதையாயிருக்க முடியாதென்றும் அந்தச் சொல்லுக்கு பூஜை என்பதே பொருளாயிருக்க வேண்டுமென்பதும் அறிஞர்களின் கருத்து. பிற்காலத்தில் 'பலி' கொடுக்கும் வழக்கம் ஆடு கோழிகளை வெட்டுவதாக மாறியபொழுதிலும் சங்கபோதியின் காலத்தில் இது சாதாரண பூஜையாகவே இருக்க வேண்டுமென்பதற்கு அந்த மாமன்னனின் சொந்த வாழ்க்கையே ஒரு உதாரணமாக விளங்குகின்றது.

சங்கபோதி தர்மம் தவறாமல் ஆட்சி நடத்தியபொழுதிலும் நாட்டில் அமைதியில்லை. குற்றங்கள் பெருகி மக்கள் மிகவும் அதிருப்தியடைந்திருந்தார்கள். இவ்விதச் சூழ்நிலைமையையே கோதபயன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அரண்மனையை விட்டு வெளியேறி கலகக்காரனாக மாறினான். சில வாரங்களுக்குள் ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு அநுராதபுரியை நோக்கிப் படையெடுத்து வந்தான். கோதபயன் பெரும்படையோடு வருகிறானென்ற தகவல் கிடைத்தவுடன் சங்கபோதி சிறிதும் கலங்கவில்லை.

"அரசைக் கைப்பற்றுவதற்குத் தானே என் ஆருயிர் நண்பன் கோதபயன் படைதிரட்டிக்கொண்டு வருகிறான்? படை ஏதுமில்லாமல் அவன் ஒருவன் வந்து கேட்டிருந்தாலும் சந்தோஷத்தோடு ராஜ்யத்தை அவனிடம் நான் ஒப்படைத்திருப்பேன். அரச பதவியை நான் விரும்பிக் கேட்கவில்லை. அவனும் மக்களும் கட்டாயப்படுத்தி ராஜ்யப் பொறுப்பை என்மீது திணித்தார்கள். இப்பொழுது கோதபயன் அரசாள வேண்டுமென்று மக்கள் விரும்பினால் நான் ஏன் ஆட்சேபிக்கப்போகிறேன்? நான் விரும்பாத அரசுக்காக ஒரு போர் நடந்து அதில் பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிர் துறக்கவேண்டாம். கோதபயனிடம் போய், ரத்தம் சிந்த வேண்டாமென்றும் அவனுக்காக அரியணை காலியாகக் காத்திருக்கிறதென்றும் சொல்லுங்கள்."

இவ்வாறு சங்கபோதி மன்னன் தனது மந்திரிகளிடம் கூறிவிட்டு நீர்வடிக்கட்டும் பாத்திரம் ஒன்றை மட்டும் கையிலெடுத்துக்கொண்டு தனது குடும்பத்துடன் அரண்மனையின் பின்புற வழியாக காட்டுக்குச் சென்றுவிட்டான். கொல்லாமை விரதத்தைக் கைக்கொண்டிருந்தபடியினால் குடி தண்ணீரில் இருக்கக்கூடிய கிருமிகளைக்கூட தன்னையறியாமல் கொன்றுவிடக் கூடாதென்பதற்காக அவன் தண்ணீரை நன்றாக வடிக்கட்டிய பிறகே பருகுவது வழக்கம். ஆகையால் நீர் வடிக்கட்டும் பாத்திரம் ஒன்றை மட்டும் அவன் தன்னுடன் எடுத்துச்சென்றான்.

கோதபயன் படைகளோடு அரண்மனையை அடைந்தபொழுது அவனுக்கு எதிர்ப்பேயில்லை. அந்தக சோதிட

ரின் வாக்குப்படி மூன்றாவதாக அரியணையேறிய தனது ஆட்சி நீடிக்குமென்ற நம்பிக்கை அவனுக்கு இருந்த பொழுதிலும் சங்கபோதி உயிருடனிருக்கும் வரையில் என்றைக்காவது ஒருநாள் அபாயம் ஏற்படுமோ என்ற அச்சம் அவன் மனதில் உள்ளூர இருக்கத்தான் செய்தது, எனவே சங்கபோதியைத்தேடி கண்டுபிடித்து சிரச்சேதம் செய்ய கோதபயன் தீவிரமாக முயற்சி செய்துபார்த்தான். அவன் முயற்சிகள் ஒன்றும் பலியாமல் போகவே தர்மசீலரான சங்கபோதி கானகத்தில் கொலை செய்யப்பட்டுவிட்டதாகத் தகவல் கிடைத்திருப்பதாயும் அவருடைய தலையை மாத்திரம் கொண்டு வருகிறவர்களுக்கு ஏராளமான பொற்காசுகள் பரிசு வழங்கப்படுமென்றும் நாடு முழுவதிலும் கோதபயன் பறை சாற்றுவிக்கச் செய்தான். இதன் பலனாக அனேகருடைய தலைகள் துண்டிக்கப்பட்டன. பெரும் தொகையைப் பரிசுபெற வேண்டுமென்ற ஆசையில் கிட்டத்தட்ட சங்க போதியின் சாயலில் இருந்தவர்களெல்லாம் ஒரு குற்றமும் செய்யாதிருக்கையில் உயிர் இழக்க நேரிட்டது. காட்டில் மறைந்து வாழ்ந்த சங்க போதிக்கு இந்தச் செய்தி எட்டியபொழுது அவன் மிகவும் வேதனைப்பட்டான். தன் ஒருவனுடைய உயிருக்காக நிரபராதிகளான நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் இழப்பதா என்பதை நினைத்தபோது சங்க போதிக்கு அவனுடைய இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

## 18. தலைகொடுத்த சங்கபோதி

ஒருநாள் காட்டில் சங்கபோதி கிழங்குகளைத் தேடிப் போய்க்கொண்டிருந்த ஒரு ஓடையின் அருகில் கட்டுச் சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஒரு கிராம வாசியைக் கண்டான். காட்டில் யாரையாவது சந்திக்க நேரிடும்பொழுதெல்லாம் தான் யாரென்பதைக் காட்டிக்கொள்ளாமல் நாட்டு நடப்புகளைப்பற்றி அவன் விசாரித்துத் தெரிந்துகொள்ளுவது வழக்கம். அதேபோல



அன்றைய தினமும் கட்டிச்சோற்றுடனிருந்த கிராம வாசியை நெருங்கி பேச்சுக்கொடுத்தான் சங்கபோதி.

அந்த மனிதன் சோற்றில் ஒரு பகுதியை எடுத்து சங்கபோதியிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னான். சங்க போதி தனக்குப் பசியில்லையென்று கூறவே "அந்தப் பேச்சுதான் என்னிடம் கூடாது. பசி இருக்கோ இல்லையோ சாப்பாட்டு நேரத்தில் யாராவது வந்தால் இருப்பதைப் பகிர்ந்து சாப்பிட வேண்டுமென்பது பௌத்த தர்மம் பிடிஉன் பங்கைக்கையில்!" என்றான் அம்மனிதன்.

அதற்குமேல் தட்டமுடியாமல் சங்கபோதி கட்டுச் சோற்றில் ஒரு பகுதியைக் கையில் வாங்கிக்கொண்டு "நீ ஆச்சரியமான மனிதனாயிருக்கிறாயே!" என்றான்.

அந்த மனிதன் ஒரு பெருமூச்சுடன் நீ இப்படிச் சொல்லுகிறாய். என்மனைவி என்ன சொல்லுகிறாள் தெரியுமா?" என்றான்.

"என்ன சொல்லுகிறாள்?"

"சங்கபோதி மன்னரைப்போல எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்ட தென்கிறாள்?"

சங்கபோதி ஒருகணம் திகைத்துப் போய்விட்டான். "பிறகு சங்கபோதி மன்னருக்கு உண்மையாகவே பயித்தியம் பிடித்திருந்ததா? நீ அவரை நேரில் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"சங்கபோதி மன்னருக்குப் பயித்தியம் பிடித்திருந்ததாகச் சொன்னால் இந்த உலகத்தில் புத்தி சுவாதீனத்துடனிருப்பவர்கள் யாருமேயில்லையென்றுதான் நான் சொல்லுவேன். அந்த தர்மப்பிரபுவை நான் நேரில் பார்த்ததில்லை. அவருடைய சிறப்பியல்களை அறிய அவரை நேரில் பார்த்திருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை?"

"அப்படியானால் அவருக்குப் பயித்தியம் பிடித்திருந்ததாக உன் மனைவிமட்டும் நினைப்பானேன்?"

"காரணம் அவளுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது. பயித்தியமென்றால் உடைகளைக் கிழித்துக்கொண்டு அலையும் பயித்தியமில்லை. பணப்பயித்தியம். எப்படியாவது சங்கபோதியின் தலையைக் கொண்டுவந்து மன்னரிடம் கொடுத்து பெருவாரியான பொற்காசுகளைப் பரிசுபெற வேண்டுமென்று இராப்பகலாக என்னை நச்சரித்துக் கொண்டிருக்கிறாள். அதற்காகத்தான் கட்டுச்சோறு கட்டிக்கொடுத்து காட்டுக்குள் என்னை விரட்டி விட்டாள்."

"நீ சொல்லுவது தலைகால் புரியவில்லையே அப்பா! உன் மனைவியின் பேராசைக்கும் சங்க போதிக்கு பயித்தியம் பிடித்திருந்ததற்கும் என்ன சம்பந்தம்? இன்னும் நீ அதைச் சொல்லவில்லை?"

"ஓ, அதுவா! தர்மம் தலைகாக்கும் என்று எண்ணி சங்கபோதி மகாராஜா தார்மீக வாழ்க்கை வாழ்ந்துவந்தார். அவர் கடைப்பிடித்த தர்மம் அவருடைய தலையைக் காப்பதற்குப் பதிலாக அவருடைய தலையைப் போக்குவதற்கு முயற்சிக்கிறது. அந்த ஒரு தர்மவானின் தலைக்காக ஆயிரக்கணக்கானவர்களின் தலைகள் ஏற்கனவே தரையில் உருண்டு விட்டன. அவரைப் போலவே நானும் தானதர்மங்கள் செய்ய வாரம்பித்தால் அதேதர்மம் என்னுடைய தலையையும் பலிவாங்கிக் கொண்டுவிடுமாம். பட்டிக்காட்டுப் பெண்ணின் வேதாந்தம் எப்படியிருக்கிறது அய்யா? நான்தான் கேட்கிறேன் தர்மம் செய்ய வேண்டுமென்று சொல்லிய பெரியவர்களெல்லாம் முட்டாள்களா? ஏன் அய்யா பதில் பேசாமலிருக்கிறீர்கள்?"

இப்படி அந்த கிராம மனிதன் கேட்ட பொழுது சங்கபோதிக்கு என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை.

"பூர்வஜன்ம வினைப்பயனாக சங்கபோதி மகாராஜா நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடித் தலைமறைவாக வாழ நேரிட்டதென்றால் அதற்காக தர்மம் தலைபோக்குமென்று சொல்லிவிட முடியுமா? முந்திய ஜன்மத்தின் பாபங்களை இந்த ஜன்மத்தில் அவர் அனுபவிக்கிறார். இந்த ஜன்மத்தில் செய்யும் புண்ணியங்களின் பலன்கள் அடுத்த



ஜன்மத்தில் அவருக்கு நிச்சயம் கிடைக்கும். தர்மம் செய்வது ஒருக்காலும் வீண்போகாதென்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான் கிராம ஆசாமி.

அதிகப்படிப்பு இல்லாத அந்த எளிய கிராமவாசியின் தர்ம சிந்தையும் தர்மத்தில் அவனுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் சங்கபோதியின் கண்களில்கண்ணீரைத் தருவித்து விட்டன. கண்களில் தூசி விழுந்து விட்டதைப்போல நடித்து கண்களைத் துடைத்துக் கொண்டு "உன்னைப் போலவே உன் மனைவிக்கும் தர்மத்தில் திட நம்பிக்கை ஏற்படுவதை விரைவில் நீ காண்பாய் நண்பா! சங்கபோதிக்கு இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலன் அடுத்த ஜன்மத்தில் கிடைக்கப் போகிறதென்கிறாய் உனக்கோ உன்னுடைய தர்ம சிந்தையின் பலன் இந்த ஜன்மத்திலேயே கிடைக்கப்போகிறது." என்றான்.

"பலனை எதிர்பார்த்துச் செய்யும் தர்மம் உண்மையில் தர்மமாகாது. அது லஞ்சத்தனத்தைப் போன்றது. தர்மம் செய்வது நமதுகடமை. பலன் கொடுப்பதும் கொடுக்காததும் இறைவன் சித்தம். நான் சங்க போதியைத் தேடிக் கண்டு பிடித்து அவருடைய தலையைக் கொண்டு போகப்போகிறேனென்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. அவரைச் சந்திக்க நேரிட்டால் அந்தப் புண்ணிய புருஷருக்குச் சேவை செய்து கொண்டு அவருடனேயே இருந்து விடத் தீர்மானித்துக்கொண்டே காட்டுக்கு வந்திருக்கிறேன்" என்றான் கிராமவாசி.

"உன்னைப் போன்றவர்களின் உதவிதான் சங்கபோதிக்குத் தேவை. அவர் இருக்குமிடம் எனக்குத் தெரியும். உன்னை அவரிடம் நான் அழைத்துப் போகிறேன். அவர் கேட்கும் உதவியை நீ செய்வாயா? என்று கேட்டான் சங்கபோதி.

"இதென்ன கேள்வி அய்யா! அந்த தர்மாத்மாவுக்காக நான் எதை வேண்டுமானாலும் செய்வேன்" என்றான் கிராமவாசி.

“பௌத்த தர்மத்தின் மீது ஆணையாக அவர் சொல்லுகிறபடிச் செய்வேனென்றும் சொல்லு! என்று சங்கபோதி கேட்கவும் அம்மனிதன் அப்படியே பிரமாணம் செய்தான்.

“நீ நிச்சயம் கொடுத்த வாக்கை மீறமாட்டாயல்லவா? நல்லது. நான் சொல்லுவதைக் கேள். என் தலையைக் கொண்டு போய் கோதபயனிடம் கொடுத்து பரிசுகளைப் பெற்றுக்கொண்டு போய் உன் மனைவியிடம் கொடு. தர்மத்திடம் அவளுக்கு இனியாவது திடநம்பிக்கை ஏற்படட்டும்” என்றான் சங்கபோதி.

“நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் அய்யா?” என்று தடுமாறினான் கிராமவாசி.

“உங்கள் குடும்பத்தின் வறுமையைத் தீர்க்கப் பிறந்த பாக்கியசாலி நான்தானப்பா! சமீப காலம் வரையில் உங்கள் மன்னனாயிருந்த சங்கபோதி நானேதான். உன் தர்ம சிந்தையை மெச்சி என் தலையை நானாகவே வலுவில் தானம் கொடுக்கிறேன். எடுத்துக்கொண்டு போ!” என்றான் சங்கபோதி.

இதைக் கேட்டதும் கிராமவாசி நடுநடுங்கிப் போய் விட்டானென்றே கூறவேண்டும். வெடவெட வென்று உடல் நடுங்க அவன் சங்கபோதியின் கால்களில் விழுந்து வணங்கி “மகாராஜா! நீங்களா? உங்களையா இந்த நிலைமையில் காண்கிறேன்?” என்று புலம்பவாரம்பித்து விட்டான் அம்மனிதன்.

சங்கபோதி அவனை ஆதரவுடன் தூக்கி நிறுத்தி “ஒரு காலத்தில் மாமன்னனாக இருந்தவன் இன்று ஆண்டியைப் போல கிழிந்த உடையுடுத்திருக்கிறானே யென்று பார்க்கிறாயா? உலகில் எதுவும் சாசுவதமில்லை நண்பா. ஆசையோடு போஷித்து வளர்க்கும் இந்தச் சரீரமே அநித்தியமாயிருக்கும்பொழுது, சரீரத்தை அலங்கரிக்கும் ஆடை ஆபரணங்கள் எப்படி நித்தியமாயிருக்கமுடியும்?” என் ஒருவனுடைய தலைக்காக நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் சிரச்சேதம் செய்யப்படுவதைக் கேள்விப்பட்டு வேதனைப் பட்டுக்கொண்டிருந்தேன். நல்ல சமயத்தில் நீ வந்தாய்.



கொழும்பு தமி

ஏற்கனவே பலர் கொலையுண்ட பாவம் என்மீது சுமந்திருக்கிறது. பாபமூட்டை மேலும் என்மீது சுமராமலிருக்க என் தலையை இப்பொழுதே கொண்டு போய்விடு. இந்த ஜன்மத்தில் எனக்கு நீ செய்யும் இந்தப் பேருதவியை எந்த ஜன்மத்திலும் நான் மறக்கமாட்டேன். இன்னொன்றும் சொல்லுகிறேன் கேள். என் தலையைக் கொண்டு போன பிறகும் இது உண்மையான சங்கபோதியின் தலையல்லவென்று கூறி மன்னன் பரிசு கொடுக்க மறுத்து விட்டால் என்ன செய்வதென்று சந்தேகப்படுகிறாயா? அந்தக் கவலை உனக்கு வேண்டாம். நான் புத்த பகவானிடம் மெய்யன்பு வைத்திருப்பதும் அஷ்டசீலத்தைக் தவறாமல் அனுஷ்டித்து வந்திருப்பதும் உண்மையாயிருந்தால் ராஜ சபையில் நானே உனக்கு சாட்சி சொல்லுவேன். பயப்படாமல் என் தலையை எடுத்துக் கொண்டு போ!” என்றான் சங்கபோதி.

உங்கள் தலையைக் கொண்டுபோய்க் கொடுத்து நான் பரிசு பெறுவதா? அது ஒருக்காலும் முடியாது மகாராஜா? அந்தப் பயங்கரமான பாபத்துக்கு தயவு செய்து என்னைப் பலியாக்காதீர்கள்” என்று புலம்பினான் அம்மனிதன்.

“நீ பிரமாணம் செய்திருப்பதை மறந்து விட்டாயா?” என்று ஞாபகப்படுத்தினான் சங்கபோதி.

“சத்தியத்தை மீறுவதற்கு என்ன தண்டனை கிடைத்தாலும் கிடைக்கட்டும். எனக்கு கவலையில்லை. தர்மப் பிரபுவான உங்களைச் கொலை செய்ய ஒரு போதும் நான் உடன் படமாட்டேன்” என்றான் அந்த கிராமவாசி.

“ஆமாம்! பாவம், என்னைக் கொலை செய்து பாப மூட்டையை நீ சுமப்பானேன்? என் தலையை நானே தருகிறேன். எடுத்துக்கொண்டு போ!” என்று சொல்லிய சங்கபோதி கிழங்குகள் வெட்டுவதற்காக வைத்திருந்த கோடாரியினால் கழுத்தைத் துண்டித்துக் கொண்டு உடல் வேறு முண்டம் வேறாகச் செத்து விழுந்தான். கண் மூடித் திறப்பதற்குள் சங்கபோதி செய்துவிட்ட இக்காரியம் கிராமவாசியைத் திடுக்கிடச் செய்து விட்டது. மாமன்ன

னின் பரிதாப முடிவை எண்ணியெண்ணி அவன் அலறித் துடித்தான். பிறகு மன்னனின் தியாகத்தையாவது உலகறியச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் சங்கபோதியின் தலையை மாத்திரம் ஒரு துணியில் சுற்றியெடுத்துக் கொண்டு தலை நகரத்தை நோக்கி அவன் விரைந்தான்.

யாரோ ஒரு கிராமவாசி சங்கபோதியின் தலையைக் கொண்டு வந்திருப்பதாக மன்னன் கோதபயனுக்கு அறிவிக்கப்பட்ட பொழுது அதை அவன் முதலில் நம்பவில்லை. இதற்குமுன் சங்கபோதியின் தலையென்று பலருடைய தலைகள் அவனுக்குக் காட்டப்பட்டிருந்ததால் அவநம்பிக்கைக் கண்களோடு கிராமவாசி கொண்டு வந்த தலையை கோதபயன் பார்த்தான். பிறகு "இது சங்கபோதியின் தலை என்பதற்கு என்ன சாட்சியாம்?" என்று கேட்டான்.

"சங்கபோதி மன்னரே தமது தலையை வலுவில் துண்டித்துக் கொடுத்தார். நீங்கள் சந்தேகப்பட்டால் தாமே சாட்சியம் கூறுவதாக அவர் வாக்களித்தார். நான் சொல்லுவதைக் கேளுங்கள் மன்னவா! உங்கள் பரிசுக்கு ஆசைப்பட்டு தர்மப் பிரபுவான சங்கபோதி மன்னரின் சிரத்தை நான் இங்கு கொண்டு வரவில்லை. பரிசு கொடுப்பதாகப் பறை சாற்றிய உங்கள் பொற்காசுகளைக் குப்பையில் கொண்டுபோய்ப் போடுங்கள். உத்தம சீலரான சங்கபோதியின் மகத்தான தியாகத்தை உலகறியச் செய்ய வேண்டுமென்பதற்காகவே அவருடைய சிரத்தை இங்கு கொண்டுவந்திருக்கிறேன். வாழ்விலும் சாவிலும் தர்மத்தைத் தவிர வேறு எதையும் அறியாத மகான் சங்கபோதியின் தலைதானா இது என்று சந்தேகப் படுகிறீர்கள் இல்லையா? இந்தக் கேள்விக்கு அவரே விடையளிப்பார். இறைவன் ஒருவர் உண்டு என்றால், தர்மத்துக்கு உலகத்தில் மதிப்பு உண்டு என்றால், சங்கபோதி மன்னர் சத்திய சீலர் என்பது உண்மையானால் அவருடைய தலையை எனக்கு சாட்சியம் சொல்லும். அவரே வாய் திறந்து பேசுவார்! என்றான் கிராமவாசி.

"இவன் தர்மம் சத்தியம் என்று சொல்லி யாரை ஏய்க்கப் பார்க்கிறான்? அவனுக்குப் பிணம் அல்லவா



சாட்சி சொல்லப் போகிறதாம்! எங்கே சங்கபோதி மகாராஜாவை வாய் திறந்து பேசச் சொல்லு அந்த அதிசயத்தை நாங்கள் பார்க்கிறோம்!" என்று நையாண்டி செய்தான் கோதபயன். அவன் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. மேடையின் மீது நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்த சங்கபோதியின் தலை சிறிது அசைந்தது. பிறகு உதடுகள் அசைந்தன. சங்கபோதி மன்னனின் வழக்கமான குரல் கிணீரென்று கேட்டது.

"கோதபயா! இந்த எளிய கிராமவாசியைச் சந்தேகிக்காதே. உண்மையில் இது என்னுடைய தலையேதான். வலுவில் நானே என் சிரத்தைத் துண்டித்து அவனுக்கு தானமாக வழங்கினேன். அவனுக்கு உரிய பரிசைக் கொடுத்து விட்டு நல்லாட்சி நடத்துவாயாக. பகவான் புத்தர் உனக்கு சகல சௌபாக்கியங்களையும் அளிக்கட்டும்."

இவ்விதம் சொல்லியதும் சங்கபோதியின் தலை மேடையில் சாய்ந்துவிட்டது. அந்த அதிசயத்தைப் பார்த்து கோதபயனும் அவனுடைய மந்திரிகளும் வெலவெலத்துப் போய்விட்டார்கள். தர்மத்தின் சக்தியினால் இறந்தவனின் தலை பேசிய அற்புதம் கோதபயனைப் புதிய மனிதனாக்கி விட்டதென்றே கூறவேண்டும். அவன் சங்கபோதியின் சிரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அலறித் துடித்தான். தான் செய்துவிட்ட பாபத்தை எண்ணி எண்ணி வாய் விட்டுப் புலம்பினான். இனி அவன் என்ன செய்து என்ன பலன்? புகழ் உலகம் போய்விட்ட சங்கபோதி திரும்பி வரப் போகிறானா?

காட்டில் தனக்கும் சங்கபோதிக்கு மிடையே நடந்த வாக்கு வாதங்களைக் கிராமவாசியிடமிருந்து கேட்டறிந்த கோதபயன், சங்கபோதியின் சிரத்தை பட்டத்து யானையின் மீது வைத்து ராஜாங்க விருதுகளுடன் கானகத்துக்கு எடுத்தும் போனான். சங்கபோதியின் முண்டம் கிடந்த இடத்தில் அவனுடைய மனைவியும் பிணமாகக் கிடந்தாள். கணவனைத் தேடிக்கொண்டு வந்த மனைவி கணவன் கொலையுண்டு கிடப்பதைக் கண்டதும் பிராணத்தியாகம்

செய்து கொண்டிருக்க வேண்டுமென்று எல்லோரும் தீர்மானித்தார்கள். அதே இடத்தில் சங்கபோதியையும் அவன் மனைவியையும் ராஜாங்க மரியாதைகளோடு அடக்கம் செய்து அவர்களுடைய ஞாபகார்த்தமாக அந்த இடத்தில் ஒரு தாது கோபுரத்தையும் கோதபயன் கட்டுவித்தான். இந்த ஞாபகார்த்த தாதுகோபுரம் கால வெள்ளத்தில் சிதைந்து விட்டதென்றாலும் சிதைந்தகோபுரத்தை அத்தனகலைஎன்னுமிட த்தில் இன்றைக்கும் காணலாம். அகால மரணமடைந்த இலங்கையின் பிரதம மந்திரியான ஸ்ரீ எஸ். டபிள்யு, ஆர். டி. பண்டார நாயகாவின் தேர்தல் தொகுதியான அத்தனகலையில் இருக்கும் (Attanacalai) ஸ்ரீசங்கபோதி தாதுகோபுரம் இன்றைக்கும் பௌத்தர்களின் புனிதஸ்தலங்களில் ஒன்றாக விளங்கிவருகிறது.

சங்கபோதியின் வரலாற்றுக்கும் குமணன் வரலாற்றுக்குமிடையில் பல ஒற்றுமை அம்சங்கள் இருப்பது கவனிக்கத் தகுந்தது. குமணன் தலையைக் கொண்டுவரச் சொல்லியவன் அவன் தம்பி. உண்மையில் குமணன் கொல்லப்படவில்லை. சங்கபோதியின் தலையைக்கொண்டு வருமாறு உத்தர விட்ட கோதபயன் லம்பகர்ண குலத்தைச் சேர்ந்தவனென்றாலும் சங்கபோதியுடன் கூடப் பிறந்தவனல்ல. குமணனைப் போலில்லாமல் சங்போதி உண்மையிலேயே கொல்லப்பட்டுவிட்டான். இந்தச் சில வேற்றுமை அம்சங்களைத்தான் ஒற்றுமையான பல அம்சங்கள் குமணன் வாழ்க்கையிலும் சங்கபோதியின் வாழ்க்கையிலுமிருக்கின்றன. இருவரையும் அவர்களுடைய சீலத்துக்காகவே உலகம் மறவாமல் நினைவு கூறுகிறது.

கோதபயன் கபடமாக ராஜ்யத்தைக் கைப்பற்றியது உண்மைதானென்றாலும் சங்கபோதியின் சத்தியவாழ்க்கையையும் தர்மத்துக்காக தனது தலையையே கொடுத்த சீலத்தையும் அறிந்தது முதல் அப்படிப்பட்ட ஒரு மகா புருஷனின் குரூரமான மரணத்துக்குக் காரணமாயிருந்து விட்டோமேயென்று அவன் எண்ணி யெண்ணி வெதும்பினான். மன்னர்களாகட்டும் அல்லது சாதாரண மனிதர்களாகட்டும் பாபத்துக்குப் பயந்து பச்சாத்தாபமும் வேதனையும் அடையும் பொழுதெல்லாம் மதகுருமார்களிடம்



சரணாகதியடைந்து பிராயச்சித்தம் செய்து கொள்ள வழி தேடுவது வழக்கம். கடவுள் இல்லையென்றுநாஸ்திகவாதம் பேசுகின்றவர்கள் கூட கஷ்டப்படும் சமயங்களில் கடவுளே என்று தம்மையறியாமல் புலம்புவதைப் பார்க்கிறோம். இந்த மனித இயற்கைக்கு முடிதரித்த மாமன்னர்களும் விலக்கானவர்களல்ல. எனவே செய்யத் தகாத ஒரு பாதகச் செயலைச்செய்துவிட்டதாக வேதனைப்பட்ட கோதபயன் அந்தப் பாபத்தைக் கழுவிக் கொள்ள பௌத்த தர்மத்திடம் பரிபூரணமாகச் சரண் அடைந்தான். மிகப் பல புராதன தாதுகோபுரங்களை முழு மூச்சுடன் அவன் திருப்பணி செய்துவித்து புதுப்பித்ததுடன் புதிய தாது கோபுரங்களையும் கட்டுவித்தான்.

தேவனாம்பிய தீசன் காலத்தில் அசோகச் சக்கரவர்த்தியின் புதல்வியெனக் கருதப்படும் சங்கமித்தையினால் கொண்டுவந்து அனுராத புரத்தில் நடப்பட்டதும் அருள் ஒளி பரப்பிக்கொண்டு நிற்பதுமான புனித போதி விருக்ஷத்தைச் சுற்றி கோதபயன் அழகான கருங்கல் வீதியொன்றைச் சமைத்தான். பிட்சுக்களைத்தினசரி அழைத்து உணவளிப்பதற்காக பிரத்யோகமானதொரு மாளிகையைக் கட்டி அதில் தினசரி ஓராயிரம் பிட்சுக்களுக்கு அரண்மனையின் செலவில் அன்னதானம் செய்தான். மகாகவிஹாரையென்னும் ரூவான் வெலிசயா தாது கோபுரத்தில் கண்டோர் வியக்கும் வண்ணம் ஒரு கருங்கல் மண்டபத்தை அமைத்தான். இதேபோல அவன் ஆற்றிய திருப்பணிகள் இன்னும் பல.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் பௌத்த மதம் இருந்த நிலைமையைக் குறிப்பிடுவது கதையின் போக்கிற்கு அவசியமாகிறது. அசோக சக்கரவர்*த்தியின் மைந்தர் என்று வருணிக்கப்படும் மஹான் மஹிந்தர் என்பவரால் கி.மு. மூன்றாம்நூற்றாண்டில் தேவனாம்பிய தீசனின் காலத்தில் இலங்கைக்கு முதன் முதலாக வந்த பௌத்த மதத்தை திராவிட பௌத்தக் கோட்பாடுகளென்பார்கள். மிகமிகப் புராதனமான கோட்பாடுகள் அவைகளேயாகும். இதற்கு மஹா விஹாரையே தலைமைக் குரு பீடமாக விளங்கியது. கி. பி. 29-ம் ஆண்டில் வட்டகாமினி

அபயன் என்ற மன்னன் அனுராதபுரியின் தென்புரத்தில் அபயகிரி விஹாரை என்று ஒரு அற்புதமான தாது கோபுரத்தை நிர்மாணித்தான். அப்பொழுது பௌத்தமத வளர்ச்சிக்கு தனது முன்னோர்களைப்போல தானும் சேவை செய்வதாக அவன் எண்ணினானே தவிர பக்தி சிரத்தை யுடனும் பெரும் பிரயாசையுடனும் கட்டிய பௌத்த விஹாரை பௌத்த மதத்தில் பெரும்பிளவை உண்டு பண்ணப் போகிறதென்பதை அப்பொழுது அவன் உணர்ந் திருக்க வில்லை.

மஹாவிஹாரையின் சட்ட திட்டங்களையும் கடுமை யான கட்டுப்பாடுகளையும் விரும்பாத சில பௌத்த பிட் சுக்கள் அங்கிருந்து வெளியேறி அபயகிரி விஹாரையில் குடியேறி பழமையான கோட்பாடுகளுக்கு மாறுபட்ட ஒரு புதிய கோட்பாட்டை உபதேசம் செய்யவாரம்பித்தார் கள். அவர்கள் உபதேசித்த பௌத்தக் கோட்பாடுகளுக்கு வைதூலிய பௌத்த நெறியை அபயகிரி விஹாரை போதிக்க பௌத்தமதத்தைப் பின்பற்றுபவர்களுக்கிடை யில் தெளிவான இரண்டு போட்டி முகாம்கள் ஏற்பட் டன. சில சந்தர்ப்பங்களில் போட்டியும் எதிர்ப்பும் தோன் றுவது நன்மையாகவே இருப்பது வழக்கம். வைதூலிய நெறி நாட்டில் கால் ஊன்றிவிடுமோ என்று அஞ்சிய மஹாவிஹாரை பிட்சுக்கள் அவ்வளவு காலமும் வாய் மொழியாக வந்த பௌத்த தர்மங்களை இதன் மூலமாக எழுத்தில் எழுதிவைக்கலானார்கள். பௌத்த தர்மம் பிட்சுக்களின் கடமைகள் முதலிய விஷயங்களை யெல்லாம் அடங்கிய இந்த நூலிலேயே திரிபீடகம் என்கிறார்கள். உலகிலுள்ள சகல பௌத்தப் பெரியார்களும் சமீபத்தில் பர்மாவில் கூடி திரிபீடகத்தைச் சீர்திருத்தி எழுதியது ஞாபகப்படுத்திக் கொள்ளத்தக்கது.

இவ்விதம் வட்டகாமினி அபயன் காலத்தில் பிரிந்து போன திராவிட பௌத்தத்துக்கும் வைதூலிய பௌத்தத் துக்கு மிடையில் நாளடைவில் போட்டி அதிகரித்து கோத பயன் காலத்தில் கடும்பகைமை ஏற்பட்டிருந்தது. இதைக் கவனியாமல் வைதூலிய சித்தாந்தத்தைப் போதிக்கும்



சங்கமித்திரன் என்ற பிட்சுவிடம் கோதபயன் தனது இரு குழந்தைகளின் கல்வி போதனையை ஒப்படைத்தான். கோதபயனுக்கு ஜததீசன், மகாசேனன் என்று இரண்டு பிள்ளைகள். இவ்விருவரில் ஜததீசன் மூத்தவன்; மகா சேனன் இளையவன். ஜததீசனுக்கு தனது ஆசான் சங்க மித்திரன் படிப்பித்த வைதூலிய புத்த நெறிபிடிக்கவில்லை. பழமையான மஹா விஹாரை குருபீடத்தையே அவன் நாடினான். இளையவனோ சங்க மித்திரனிடம் மிகுந்த பக்தி விசுவாசம் கொண்டிருந்தான். கோதபயன் இறக்கும் சமயத்தில் மூத்தவனான ஜததீசனைவிட்டு இளையவனான மகாசேனனை அரியணையிலேற்ற அபயகிரி விஹாரையி லுள்ளவர்கள் சங்க மித்திரன் தலைமையில் சதிசெய்ய வாரம்பித்தார்கள். அவர்களுடைய சதி முறியடிக்கப் பட்டு ஜததீசன் முறைப்படி சிம்மாசனமேறினான். அதைக் கண்டதும் சங்க மித்திரன் உயிருக்குப் பயந்து இந்தியா விற்கு ஓட்டம் பிடித்துவிட்டான். அவர்களுடைய சதியில் மகாசேனன் உண்மையில் சம்பந்தப்படாமலிருந்தபடி யினால் நாட்டைவிட்டு ஓடவேண்டிய நிர்ப்பந்தம் அவ னுக்கு ஏற்படவில்லை.

ஜததீசன் மஹாவிஹாரையும் திராவிட பௌத்தக் கோட்பாடுகளையும் பலமாக ஆதரித்ததோடு அபயகிரி விஹாரை போதித்து வந்த வைதூலிய நெறியை இலங் கையிலிருந்து அடியோடு ஒழித்துக்கட்டுவதில் முழுமூச் சுடன் ஈடுபட்டான். அபயகிரி விஹாரையிலிருந்த பிட்சுக் களைக் கொலை செய்தும் அங்கஹீனப்படுத்திக் கொடுமை செய்தும் வந்ததோடு வைதூலிய நெறியைப் பின்பற்றிய வர்கள் எல்லோரையுமே அவன் கடுமையான தண்ட னைக்கு உட்படுத்தினான். இதனால் அவனுக்குக் கொடுங் கோல் தீசன் என்றபெயர் சரித்திரத்தில் வழங்கலாயிற்று. அபயகிரி விஹாரையைச் சார்ந்தவர்களை ஜததீசன் கொடு மைப்படுத்திய பொழுதிலும் மகாவிஹாரைக்கும் திராவிட பௌத்தக் கோட்பாடுகளுக்கும் அவன் அரிய பல சேவைகள் செய்தான். தனது தகப்பனார் விட்டுச்சென்ற அனேகம் திருப்பணி வேலைகளை ஜததீசன் தொடர்ந்து நடத்தி பூர்த்திசெய்தான். அவனுடைய பத்து வருடகால

ஆட்சி நன்மையும் தீமையும் கலந்ததாக இருந்தது. ஆயினும் அவனுக்கு அடுத்தபடியாகப் பட்டத்துக்கு வந்த அவன் தம்பி மகா சேனன் ஆட்சியோ இலங்கைச் சரித்திரத்தில் ஒரு அதி முக்கியமான கட்டத்தைக் குறிப்பதாகவும் விசேஷமானதாகவு மிருந்தது.

## 19. நாடு நலம்பெற்றது

ஜததீசன் காலமாகி மகாசேனன் பட்டத்துக்கு வந்துவிட்டானென்ற செய்தி எட்டியவுடன் இந்தியாவுக்கு ஓடிப்போய் தலைமறைவாக வாழ்ந்து வந்த பிட்சு சங்க மித்திரன் இலங்கைக்கு விரைந்து வந்தான். மகாசேனுக்கு சங்க மித்திரன் என்ன இருந்தாலும் ஆசிரியனாக இருந்து வந்தவனல்லவா? அரண்மனையில் சங்க மித்திரனுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. ராஜகுருவின் ஸ்தானத்தில் அமர்ந்து சங்க மித்திரன் தனது திருவிளையாடல்களை நடத்த ஆரம்பித்தான். அவனுடைய அதிர்ஷ்டம் பிரதம மந்திரியான சோணன் என்பவனுடைய ஆதரவும் உதவியும் சங்கமித்திரனுக்கு அமோகமாகக் கிடைத்தது. வைதூரிய நெறியைக் கடைப்பிடிக்கும் அபயகிரி விஹாரையைச் சேர்ந்தவர்களை ஜததீசன் எவ்வளவு கொடுமைப் படுத்தினனோ அதற்கு முதலும் வட்டியுமாகச் சேர்த்து மஹாவிஹாரையைச் சேர்ந்தவர்களை மகாசேனன் ஆதரவுடன் சங்கமித்திரன் கொடுமைப் படுத்தினன். இங்கிலாந்தின் சரித்திரத்தில் பிராடஸ்டன்ட் மன்னர்கள் கத்தோலிக்கர்களையும், கத்தோலிக்க மன்னர்கள் பிராடஸ்டன்டுகளையும் எப்படி பகிரங்கமாக நடுத்தெருவில் உயிரோடு கொளுத்தி வதைத்தார்களோ அதேபோல ஜததீசன் காலத்திலும் மகாசேனன் காலத்திலும் இலங்கையில் கொடுமைகள் நடந்தன. ஆயினும் மகாசேனன் காலத்தில் சங்கமித்திரன் செய்த அக்கிரமங்களுக்கு உலக சரித்தில் முன் மாதிரியே இல்லையென்று கூறலாம். பிற்காலத்தில் போர்ச்சுகீஸியர்கள் இலங்



கையை ஆக்ரமித்தபொழுது இந்துக்களுக்கு அவர்கள் இழைத்த கொடுமையோடு வேண்டுமானல் இதை ஓரளவு ஒப்பிடலாம்.

தேவனம்பியதீசன் காலத்தில் கட்டப்பட்ட மகா விஹாரையையும் நூற்றுக்கணக்கான தாது கோபுரங்களையும் சங்க மித்திரன் தரை மட்டமாக்கி அவற்றின் கட்டிடச் சாமான்களைக் கொண்டுபோய் அபயகிரி விஹாரையை விஸ்தரித்தான். இலங்கைக்கே அக்காலத்தில் பெருமையை அளித்து வந்த ஆயிரங்கால் மண்டபத்தையும் அதன் செப்புக்கூறைகளையும் சின்னபின்னப்படுத்தினன். திராவிட பௌத்த நெறியைப் போதித்து வந்த பௌத்த பிட்சுக்களில் தென்னிலங்கைக்குத் தப்பியோடிப் போனவர்கள் நீங்கலாக மற்றவர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் மகாசேனனும் அவனுடைய பிரதம மந்திரியும் உடந்தையாயிருந்தார்கள்.

ஆனல், பொது ஜனங்கள் வெகுண்டு எழுந்தார்கள். மிகமிகப் புராதனமானதும் பவித்திரமானதுமான மகா விஹாரை நாசம் செய்யப்பட்டு விட்டதையறிந்ததும் ஆட்சி பீடத்தை எதிர்த்து கலகம் உருவாகியது. கலகத்தை அடக்க சங்க மித்திரனும் பிரதம மந்திரி சோணனும் எவ்வளவு கொடூரமாக நடந்தும் கூட, மக்களே திரண்டு எழுந்த பிறகு மன்னர் ஆணைக்கு நாட்டில் மதிப்பு எப்படியிருக்கும்? கொடுங்கோலாட்சியைக் கவிழ்க்க நாட்டில் கொந்தளிப்பு ஆரம்பித்து விட்டதென்பது தெளிவாகத் தெரிந்தவுடன் மகாசேனனின் மந்திரிகளில் ஒருவனை மேகவர்ண அபயன் என்பவன் மன்னரைவிட்டுப் பிரிந்து போய் கலகப்படைகளுக்குத் தலைமை தாங்கினன்.

மேகவர்ணன் ஒரு சாதாரண மந்திரியென்றாலும் மன்னன் மகாசேனனின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருந்தன். அரசனை கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து பக்தியும் விசுவாசமும் காட்டி வந்தவன். அரசனுக்காக உயிர்த்தியாகம் செய்வதற்கும் ஆயத்தமாயிருந்தவன். அப்படிப்பட்ட மேகவர்ணன் கலகப்படைகளுக்குத் தலைமைதாங்கி ஆட்சிபீடத்தை அசைக்க ஆரம்

பித்து விட்டானென்பதை அறிந்ததும் மன்னன் மகாசேனனுக்கு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. எந்த மந்திரி தனக்கு உயிருக்கு உயிரான நண்பனாக இருந்தானோ அவனே ஆட்சியைக் கைப்பற்றச் சதிசெய்ய விட்டானென்றால் அதை மகாசேனன் எவ்விதம் நிம்மதியோடு நோக்க முடியும்?

சில மாதங்கள் வரையில் மேகவர்ணனைப்பற்றித் தகவலே இல்லை. மலைநாட்டிலும் ரொஹுணை (தென்னிலங்கை)விலும் மேகவர்ணன் பெரும்படைகளைத் திரட்டிக்கொண்டு தலைநகரை நோக்கி விரைந்துவரும் சமயத்தில்தான் அரசனுக்குச்செய்தி எட்டியது. யுத்தம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லையென்பதை அறிந்த மகாசேனனும் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு போருக்குக் கிளம்பினான். அருவி ஆற்றின் இரு கரைகளிலும் இருதரப்பு சேனைகளும் பாசறை போட்டுக்கொண்டு போரை ஆரம்பிக்க சூர்யோதயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. ஆனால் சூர்யோதயத்துக்கு முன்னால் யுத்தத்தைத் தவிர்க்கக்கூடிய ஒரு அதிசயம் நிகழப்போகிறதென்பதை அப்பொழுது அவ்விருவருமே அறிந்திருக்கவில்லை.

அன்றிரவு மேகவர்ணனுக்கு இரவுப்பாடு வந்தபொழுது அதில் மன்னருக்கு மிகமிகப் பிரியமான சில பலகாரங்கள் இருப்பதை மேகவர்ணன் கவனித்தான். அவற்றைப் பார்த்தவுடன் அவனுடைய கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. ஆஹா, இவைகளை அரசர் எவ்வளவு ஆசையோடு சாப்பிடுவாரென்பதை நினைத்தபொழுது அரசருக்குக் கொடுக்காமல் அவைகளை நாம் மட்டும் சாப்பிடுவதா? என்று மேகவர்ணன் நினைத்தான். அரசருடன் பலப்பரிசோதனை நடத்துவதற்காக பெரும்படைகளுடன் வந்து முகாம் போட்டுக்கொண்டிருப்பதையும் ஆற்றின் மறுகரையிலே அரசரின் சைன்யங்கள் திரண்டு நிற்பதையும் மேகவர்ணன் ஒரு கணம் அறவே மறந்தான். மன்னருக்குப்பிரியமான பலகாரங்களை ஒரு பட்டுத்துணியில் கட்டிக்கொண்டு முகாமை விட்டுக்கிளம்பி ஆற்றை நோக்கி வேகமாக அவன் நடக்கலானான்.



சாப்பிடுவதற்கு உட்கார்ந்த மேகவர்ணன் பலகாரங்களைச் சுருட்டியெடுத்துக்கொண்டு திடீரென்று எழுந்து போனது படைத்தலைவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. மேகவர்ணன் எங்கு போகிறான்? ஏன் போகிறான்? என்று ஒன்றும் புரியாமல் அவர்கள் திகைத்துப் போனார்கள். ஓரிருவர் அவனைப் பின்தொடர்ந்து மறுகரைக்குப்போக மேகவர்ணன் படகில் ஏறுகையில் அவனைத்தடுத்து நிறுத்தி “எங்கே தனியாகப் போகிறீர்கள்?” என்று கேட்டனர்.

“மன்னர் பாசறைக்குப் போகிறேன்” என்று நிதானமாகப் பதிலளித்தான் மேகவர்ணன்.

“மன்னர் பாசறைக்கா? அதிலும் இந்த நேரத்தில் தனியாகவும் நிராயுதபாணியாகவும் எதிரி முகாமிற்குப் போகிறேனென்கிறீர்களே! போருக்கு இவ்வளவு ஆயத்தங்களும் செய்துவிட்டு சரணாகதியடையவா இப்படித் தனியாகப்போகிறீர்கள்?” என்று அவர்கள் கேட்டார்கள்.

“சரணாகதியா? மஹாவிஹாரையை நாசம் செய்தவர்களிடமா சரணாகதியும் சமாதானமும்? இல்லை, நண்பர்களே இல்லை! நாளை சூர்யோதயமானவுடன் யுத்தம் நடந்தே தீரவேண்டும். அதைப்பற்றிய சந்தேகம் உங்களுக்குவேண்டாம். ஒரு சொந்த வேலையாக மறுகரைக்குப் போகிறேன். என்னைத் தடுக்காதீர்கள்!” என்று சொல்லிவிட்டு மேகவர்ணன் போய்விட்டான். தளபதிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மேகவர்ணனைத் தடுக்கவும் அவர்களுக்குத் தைரியமில்லை. தக்க காரணமில்லாமல் மேகவர்ணன் ஒன்றும் செய்ய மாட்டானென்ற நம்பிக்கையுடன் அவர்கள் பாசறைக்குத் திரும்பினார்கள்.

மறுகரையில் மன்னரின் முகாமில் கவலைதோய்ந்த முகத்துடன் மன்னன் மகாசேனன் உட்கார்ந்திருந்தான். மேகவர்ணனிடம் அவன் உயிரையே வைத்திருந்த படியினால் மேகவர்ணன் பிரிந்துபோனது முதல் மன்னனுக்கு மன அமைதியேயில்லை. மேகவர்ணனே நம்மை எதிர்க்கத் தலைப்பட்டு விட்டானே யென்பதை யெண்ணும் பொழுதெல்லாம் அவனுடைய நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்

தது. பொழுது விடிந்தால் தனது ஆருயிர் நண்பனுயிருந் தவனைக்கொடிய எதிரியாகப் போர்க்களத்தில் சந்திக்க வேண்டுமே என்பதைப்பற்றி சிந்தனையிட்டுக் கொண்டிருந்த மகாசேனனுக்கு எதிரில் வைக்கப்பட்டிருந்த சாப்பாடு ஆறிப்போனதுகூடத் தெரியவில்லை.

முகாமின் வாசல் திரையை விலக்கிக்கொண்டு யாரோ ஒருவர் உள்ளே நுழைந்து லேசாகக் கனைத்த பொழுதுதான் மகாசேனன் கனவு உலகத்திலிருந்து நினைவுலகத்துக்குத் திரும்பிவந்தான். முகாமிற்குள் வந்திருப்பது யாரென்பதை அவன்திரும்பிப் பார்த்தபொழுது அவனுடைய கண்களைகளை அவனால் நம்பமுடியவில்லை. பலகார மூட்டையுடன் நிராயுதபாணியாக மேகவர்ணன் அருகில் வருவதைப்பார்த்து அரசன் கண்களைக் கசக்கிக் விட்டுக் கொண்டான்.

"கனவு அல்ல மன்னவா, நினைவுதான்! தங்கள் முன்னாள் ஊழியன் மேகவர்ணன்தான் வந்திருக்கிறேன். ஏன் ஆச்சர்யமாயிருக்கிறதா ?" என்று கேட்டுக்கொண்டே அரசனிடம் நெருங்கினான் மேகவர்ணன்.

மன்னன் மகாசேனன் அதை ஒரு கனவாக நினைத்தானே தவிர நனவாக மதிக்கவில்லை. அரசைக் கைப்பற்ற ஆயிரமாயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு போர்க்களத்துக்கு வந்திருக்கும் மேகவர்ணன் தன்னந் தனிமையாகவும் நிராயுத பாணியாகவும் தனது முகாமிற்கு வருவானென்பதை மகாசேனன் எப்படி எதிர்பார்க்க முடியும் ? எதிரில் வரும் மேகவர்ணனிட மிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. வெளியில் பாராக் கொடுக்கும் காவலாளர்களைத் துணைக்கு அழைக்க வேண்டுமென்று அவன் எண்ணவுமில்லை. பிரமை பிடித்தவனைப்போல் கண் இமைக்காமல் மகாசேனன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அருகில் வந்த மேகவர்ணன் மன்னருக்கு முன்னால் பலகாரப் மூட்டையை அவித்துவைத்து "சாப்பிடுங்கள் மகாராஜா! உங்களுக்கு மிகவும் பிரியமான இந்தப் பலகாரங்களை என்னால் தனியாகச் சாப்பிட முடியவில்லை.



ஆகையால்தான் பலகாரத்துடன் கட்டுக்காவல்களையெல்லாம் மீறிக்கொண்டு ஆற்றைக்கடந்து தனியாகவந்தேன்." என்றான்.

"மேகவர்ணா! நிஜமாக நீ தானா?" என்று தடுமாறினான் மகாசேனன்.

"ஆமாம், மகாராஜா! உங்களுடைய அருமை நண்பனாகவும் மந்திரியாகவுமிருந்த மேகவர்ணன்தான் மகாராஜா! இந்தப் பலகாரங்களைச் சாப்பிடுங்கள். உங்களுக்கு மிகவும் பிடித்தமானவைகளாயிற்றே என்று கொண்டுவந்தேன்!" என்றான் மேகவர்ணன்.

மகாசேனன் ஒரு கணம் அவனை ஏறத்தாழப் பார்த்துக்கொண்டே மௌனம் சாதித்தான். பிறகு "நீயும் உட்கார்ந்து சாப்பிடு மேகவர்ணா!" என்று சொல்லி மேஜையின்மீது மேகவர்ணன் வைத்த பலகாரத்தில் ஒரு பகுதியை அவனுக்குக் கொடுத்து மற்றொரு பகுதியைத் தான் சாப்பிட்டான்.

சாப்பிடும் பொழுது இருவரும் பேசவேயில்லை. மௌனமாகச் சாப்பிட்டு முடிந்தபின்னர், "மேகவர்ணன் கைப்பட்டாலே பலகாரத்துக்கு ஒரு தனிருசி எப்படித்தான் வருகிறதோ தெரியவில்லை. அது கிடக்கட்டும் யுத்த சமயத்தில் நிராயுதபாணியாக வருவதற்கு உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும் மேகவர்ணா! நான் நினைத்தால் யுத்தம் இல்லாமல் இப்பொழுது உன்னைச் சிறைப்படுத்தி விடலாமல்லவா?" என்று கேட்டான் மகாசேனன்.

"என்னுடைய மன்னர் துர்ப்போதனையைக் கேட்டு தீய வழிகளில் நடந்தபொழுதிலும் நாடிவந்த நண்பனைச் சிறைப்படுத்தும் அளவிற்குப் பண்புகெட்டவரல்ல என்பது எனக்குத் தெரியும். மன்னரின் நற்பண்புகளில் சந்தேகமிருந்தால் இரவில் இப்படித் தனியாக நான் வந்திருப்பேனா?" என்றான் மேகவர்ணன்.

"நீ கொண்டுவந்த பலகாரத்தை நான் சாப்பிடுவேனென்று எதிர் பார்த்துக்கொண்டு வந்தாயா மேகவர்ணு?" என்று மறுபடியும் கேட்டான் மகாசேனன்.

"பலகாரத்தில் நஞ்சுகலந்து வஞ்சகம் செய்யும் பேடியாக நான் இருந்தால் படைதிரட்டிக் கொண்டு போருக்கு வந்திருப்பேனு? துரதிர்ஷ்டவசமாக உங்களை எதிர்த்துப் போர் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டு விட்டதென்ருலும் என்னுடைய ராஜ பக்தியை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென்பது எனக்குத் தெரியும். நான் வருகிறேன் மகாராஜா!" என்று சொல்லிக்கொண்டு எழுந்தான் மேகவர்ணன்.

"எங்கே போகிருய் மேகவர்ணு?"

"என்னுடைய பாசறைக்கு?"

"அப்படியானல் யுத்தம் நடந்துதான் தீரவேண்டுமா? உன் மன்னரை நீ எதிர்த்துச் சண்டை செய்துதான் ஆக வேண்டுமா?"

"வேறு வழியிருந்தால் நான் போருக்குப் புறப்பட்டிருக்க மாட்டேன் மகாராஜா!"

"கொஞ்சம் நில்! தலை சிறந்த ராஜபக்தனுக இருந்த நீ இப்படி ஏன் கலகக்காரனுக மாறினுய் மேகவர்ணு?"

"சொல்லட்டுமா மகாராஜா!"

"சொல்லு?"

பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் பக்தியுடன் வணங்கும் புராதனமான மகாவிஹாரையும் நூற்றுக்கணக்கான தாதுகோபுரங்களையும் மன்னர் இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டது எவ்வளவு பெரிய பாபமென்பதையும் இந்த அக்கிரமத்தைக்கண்டு பொதுஜனங்கள் எவ்வளவு தூரம் கொதிப்படைந் திருக்கிருர்களென்பதையும் மேகவர்ணன் மன்னருடைய மனதில் பதியும்படி உருக்கமாக எடுத்துச் சொன்னுன். மகான் மஹிந்தரால் போதிக்கப்



பட்ட பவித்திரமான புத்த தர்மத்துக்கு அரசாங்கம் எவ்வளவு பெரிய அநீதியை இழைத்துவிட்ட தென்பதையும் சுய நலத்துக்காக சங்கமித்திரன் ஆடும் வெறியாட்டங்களுக்கு மன்னர் உடந்தையாயிருந்து வருவதையும் மேகவர்ணன் எடுத்துச் சொல்லி பவித்திரமான மதக் கோட்பாடுகளைப் புனருத்தாரணம் செய்வதுதான் தன்னுடைய இலட்சியமே தவிர ராஜ்யத்தைக் கைப்பற்றுவது அல்ல என்றும் உருக்கமாகச் சொன்னுன்.

அவன் சொல்லிய விவரங்களும் முறையும் மன்னனின் மனதை மாற்றிவிட்டன.

"மேகவர்ணு! துர்ப்போதனைகளால் சீரழிந்து போய் விட்டதை இப்பொழுதுதான் நான் உணருகிறேன். பௌத்த தர்மத்துக்குச் செய்த அநியாயங்களுக் கெல்லாம் இன்று முதல் பரிகாரம் செய்வதாகப் பிரமாணம் செய்கிறேன். மகாவிஹாரையை முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு பெரிதாகவும் அழகாகவும் புதுப்பித்துக் கட்டுகிறேன். இடித்த தாது கோபுரங்களையெல்லாம் மறுபடி கட்டுவிக்கிறேன். இப்பொழுது உனக்குத் திருப்தி தானு?" என்ருன் மன்னர் மகாசேனன்.

மேகவர்ணன் மன்னனின் கால்களில் விழுந்து வணங்கி எழுந்து "சந்தோஷம் மகாராஜா? புத்த பகவான் உங்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் அருளுவார்!" என்று சொல்லிவிட்டுப் போகக்கிளம்பினுன்.

"இன்னும் எங்கேபோகிருய் மேகவர்ணு!" என்ருன் மகாசேனன்.

"இந்த சந்தோஷச் செய்தியைத் தெரிவித்து என் படைகளைக் கலைத்துவிட்டு விரைந்து ஓடிவருகிறேன் மகாராஜா!" என்று சொல்லிவிட்டுப் போனுன் மேகவர்ணன்.

அவன் சொல்லியபடியே அவனுடைய படைகள் களைக்கப்பட்டன, மன்னனும் மேகவர்ணனும் ஒரே ரதத்தில் அரண்மனைக்குத் திரும்பினுர்கள். பிட்சு சுமித்திரனைப் பிடித்து வருமாறு மகாசேனன் உத்தரவிட்டான். அந்த

உத்தரவை நிறைவேற்றுவதின் முன்பாகவே பிட்சு சுமித்திரன் பழம் பெருமை வாய்ந்த ஒரு பௌத்த தாது கோபுரத்தை இடிக்க முற்படுகையில் சுவர் ஒன்று மேலே விழுந்து உயிர் நீத்துவிட்டான்.

மேகவர்ணன் உதவியுடன் மகாசேனன் இடித்த பல தாது கோபுரங்களைத் திரும்பவும் கட்டுவித்தான். திராவிட பௌத்தக் கோட்பாடுகள் பழம் பெருமையுடன் மறுபடி விளங்க என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தான். இவைகளையெல்லாவற்றையும் விட அவன் செய்த வேறு சில காரியங்கள் இலங்கையின் சரித்திரத்தில் அவன் பெயரைச் சிரஞ்சீவியாக்கின.

எளிய விவசாயிகளின் நலனுக்காக லட்சக் கணக்கான ஏகரா நிலங்களுக்குச் சாகுபடி செய்யும் வசதியை முன்னிட்டு பிரம்மாண்டமான தடாகங்களை அவன் வெட்டினான். தற்கால பொறியியல் நிபுணர்களெல்லாம் கண்டு அதிசயிக்கும் மின்னேரியா ஏரியை வெட்டியது மகாசேனன்தான். இலங்கையில் நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படும் மிகமிகப் பெரிய ஏரி மின்னேரியா ஏரிதான். இதைப்பார்க்கும் பொறியியல் நிபுணர்கள் இதுமாதிரி ஒரு நீர் தேக்கத்தை அமைக்கப் பல கோடி ரூபாய் செலவாகுமென்றும் அதை அமைத்து முடிக்கப்பலவருடங்கள் பிடிக்குமென்றும் கூறி அதிசயிக்கிறார்கள். இந்த ராட்சத வேலையை மகாசேனன் செய்து முடிக்க எவ்வளவு பிரயாசைப்பட்டிருப்பானென்பதை அறிவுறுத்துவதற்காக பகலில் மனிதர்களையும் இரவில் பேய் பிசாசு, பூதம், ராட்சதர்கள் ஆகியவர்களையும் உபயோகித்து மின்னேரியா ஏரியை மன்னர் வெட்டி முடித்தார் என்று மகாவம்சம் வர்ணிக்கிறது.

மின்னேரியா ஏரி எந்தக் காலத்திலும் வற்றுவதில்லை. அதற்கு எப்பொழுதும் தண்ணீர் வந்துகொண்டிருக்கவும் அதிகப்படியான தண்ணீர் வடிந்து போகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதைத் தவிர ராஜ்யத்தின் பல பாகங்களிலும் மற்றும் 15 பெரிய தடாகங்களையும் மகாசேனன் கட்டுவித்தான். விவசாயத்துக்கு அவனைப்



போல வேறு எந்த மன்னரும் இவ்வளவு அக்கறை காட்டி உதவி புரிந்தது கிடையாது. மகாசேனன் காலத்தில் வரண்ட பூமியெல்லாம் பொன் கொழிக்கும் பூந்தோட்டங்களாக மாறியதோடு நாட்டில் செல்வம் கொழித்தது. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. பொது மக்களின் ஆதரவு மன்னனுக்கு அமோகமாக இருந்தது. ஆரம்ப காலத்தில் அவன் செய்த பல பாபக் காரியங்களாலும் பொது மக்கள் அறவே மறந்து அவனைக் கண்கண்ட தெய்வமாகக் கையெடுத்துக் கும்பிட ஆரம்பித்தார்கள். அவன் காலத்துக்குப் பிறகு விவசாயிகள் மகாசேனனுக்குக் கோயில் கட்டிக் கடவுளாக்கி வழிபடத் தொடங்கினர். நாட்டுப்புறங்களில் இன்றைக்கும் மகாசேனனுக்குச் சில இடங்களில் கோவில்களிருக்கின்றன.

மகாசேனன் கோலோச்சியது கி. பி. 352-ம் ஆண்டில். அவனுடன் மகாவம்சம் என்ற புராதன சிங்கள வரலாற்று நூல் முடிந்து விடுகிறது. மகாசேனனைச் சேர்த்து அவனுக்கு முன்னால் மொத்தம் 64 மன்னர்கள் இலங்கையை ஆண்டு வந்துள்ளனர். மகாசேனனுடன் விஜயனுடைய சந்ததி முடிந்து போகிறதென்றும் மகாசேனனுக்குப் பிந்திய மன்னர்கள் கலப்பு வம்சங்களைச் சேர்ந்தவர்களென்றும் ராஜவழி போன்ற சில நூல்கள் கருதுகின்றன. எந்த விதமாகப் பார்த்தாலும் மகாசேனனின் காலம் இலங்கை சரித்திரத்தில் ஒரு முக்கியமான சகாப்தத்தைக் குறிக்கும் காலமாகும்.

# 20. கலிங்கம் தந்த பரிசு

இலங்கையில் அரசோச்சிய சிங்கள மன்னர்களை புராதன சரித்திர நூல்கள் பொதுவாக இரண்டு பிரிவுகளில் பிரித்துக் கூறுகின்றன. ஒன்று மகாவம்சம். இந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் திராவிட ரத்த சம்பந்தமுடையவர்களென்பதற்கு அசைக்க முடியாத பல ஆதாரங்கள்

இருந்த பொழுதிலும் இவர்கள் கலப்பற்ற ஆரியச் சிங்கள மன்னர்களென்பது ஐதீகம். மகாவம்ச மன்னர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பலாத்கார முறையில் முடிவெய்தியவர்கள். தகப்பனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய பிள்ளைகள் பலர்; மன்னனைக் கொன்று மணி மகுடத்தை அபகரித்த தளபதிகள் பலர்; நண்பனை வஞ்சித்து சிம்மாதனமேறிய மித்திரத் துரோகிகள் சிலர், படையெடுப்பு சமயங்களில் பொதுஜன ஆதரவில்லாமல் நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடியவர்கள் அனேகர். மகாவம்ச மன்னர்களில் தேவனம்பிய தீசன், துட்டகமுனு, ஸ்ரீ சங்கபோதி, மகாசேனன் முதலான ஒரு சில மன்னர்களைத் தவிர பிரமாதமான காரியங்களைச் சாதித்தவர்கள் அதிகமில்லாவிட்டாலும் இலங்கையில் பௌத்த மதத்தை வேரூன்றச் செய்த பெருமை மகாவம்ச மன்னர்களையே சாரும். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக பௌத்தம் தழைக்கப் பாடுபட்டு பணியாற்றினர்கள். இன்று இலங்கையிலிருக்கும் புராதனப் பெருமை வாய்ந்த பெரும்பாலான விஹாரைகளும் தாதுகோபுரங்களும் தடாகங்களும் பிரார்த்தனை மண்டபங்களும் இவர்களது பக்திப் பண்புக்கு அழியாத நினைவுச் சின்னங்களாக விளங்குபவை. இந்த ஒரு அம்சத்தை முன்னிட்டே விஜயன் முதல் மகாசேனன் வரையிலுள்ள மன்னர்களை மகாவம்சத்தினர் என்று சரித்திரம் கூறுகிறது.

மகாசேனனுக்குப் பிறகு அரசாண்ட மன்னர்களுக்கு சுளுவம்சத்தினர் என்று பெயர். சுளுவம்சம் என்றால் தாழ்ந்த வம்சம் அல்லது இரண்டாம் பட்சமான வம்சம் என்று பொருள். இவர்கள சுத்தச் சிங்கள பௌத்தர்களல்ல வென்பதும் இவர்களது காலத்தில் பௌத்த தர்மத்தைப் போதிக்க விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்த பெரியார்கள் இருந்ததில்லை யென்பதும் ஐதிகம்.

ஆனல் இலங்கையிலே இலக்கிய மறுமலர்ச்சி யேற்பட்டதும் கலை, கல்வி, கலாசாரம் உச்சநிலைமையை அடைந்ததும் சுளுவம்ச மன்னர்களின் ஆட்சியில்தான். ஈழத்தின் தலைசிறந்த மேதைகள் கவிதைகளையும் காப்பியங்களையும் எழுதி மக்களின் அறிவை வளர்த்தார்கள். வாழையடி வாழையாக வாய்மொழியாக வந்த பல காவியங்கள், புராண இதிகாசங்கள், வேதாந்த விளக்கங்கள், பௌத்த தர்மத்தின் ஆதார பூர்வமான வியாக்கியானங்கள், தேச சரித்திரம், வரலாற்று நூல்கள் முதலியவைகளெல்லாம் வருங்கால சந்ததிகளின் நலனுக்காக ஏட்டில் வடிக்கப்பட்ட பொற்காலம் இந்தக் காலம். பாரதத்தின் மகாகவி காளிதாஸன் ஈழத்திரு நாட்டுக்கு விஜயம் செய்ததும், தர்ம சாஸ்திரங்களைக் கரை கண்ட புத்த கோஷர் இலங்கைக்கு வந்து சிங்கள மொழியையும் இந்நாட்டின் தர்ம சாஸ்திரங்களையும் கற்று விஸுத்தி மாகா, என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற பெத்த தத்துவார்த்த நூலை எழுதியதும், மகானுமன் என்ற பௌத்தத் துறவி மகாவம்சத்தை எழுதி முடித்ததும் இதே காலத்தில்தான். இம்மட்டல்ல; வைத்தியத் துறையில் முதன் முதலாக ஒரு விரிவான சிங்கள நூலை எழுதிய பெருமையும் சுளுவம்ச மன்னர்களில் ஒருவரையே சார்ந்தது. அகில உலகப் பிரசித்தி பெற்ற சிகிரியா ஓவியங்களும் இக்காலத்திலேயே ஏற்பட்டன. மகாவம்ச மன்னர்களின் ஆட்சி ஆத்மீகப் புரட்சியை ஏற்படுத்திய தென்றால் சுளுவம்சத்தவர்களின் ஆட்சி அறிவுப் புரட்சியைத் தோற்றுவித்த தென்று தயங்காமல் கூறலாம்.

சுளுவம்சத்தவர் காலம் இலங்கையில் இவ்வளவு பெருமை வாய்ந்ததாயிருக்க ஒரு முக்கியமான காரணமுண்டு. வடபாரதத்திலே குப்தர்களின் ஆட்சி மேலோங்கியிருந்த காலம் அது. குப்த மன்னர்களின் ஆட்சி பாரதத்தில் சகல துறைகளிலும் மின்னல் வேக மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பௌத்தத்தை அரசாங்க மதமாகப் பிரகடனப்படுத்திய அசோகன் காலத்திலிருந்து இந்தியாவின் பல பகுதிகளிலும் பௌத்த தர்மம் ஆதிக்கம் செலுத்தியதினல் இந்து சமயமும் இந்து கலாசாரமும் இலக்கியங்களும் படிப்படியாக மங்கிக்கொண்டிருந்தன. இந்த நிலைமையை குப்த மன்னர்கள் தலைகீழ்ப்பாடமாக மாற்றியமைத்து இந்து தர்மத்தைப் பழைய உன்னத நிலைமைக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டார்கள். வடமொழி எனப்படும் சம்ஸ்கிருதத்துக்கு நாடு முழுவதிலும் பிரமாதமான செல்வாக்கு ஏற்பட்டதுடன் இன்று மகா

காவியங்களென்று நாம் போற்றும் இராமாயணமும் மகா பாரதமும் மனுதர்ம சாஸ்திரமும் ஏட்டில் எழுதப்பட்டது குப்தர்களின் ஆட்சிகாலத்தில்தான். மகாகவி காளிதாசன், பட்டபாணன், பவபூதி, புத்தகோஷர், பாணினி முதலான மகா மேதைகள் வடமொழியை வளப்படுத்திய பாரத பொற்காலம் அண்டையிலுள்ள இலங்கையிலும் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் என்ன ஆச்சர்யம்?

மகாசேனனுக்குப்பின் அவனுடைய மூத்த பிள்ளையான ஸ்ரீ கீர்த்தி சிரிமேகவர்ணன் சிங்கள சிம்மாதனமேறினான். தகப்பன் செய்த தவறுகளை நீக்கி மகாவிஹாரையை சிரிமேகவர்ணன் ஆதரித்து நடந்ததால் அவன் ஆட்சி சிறந்தது. அன்பும் அறமும் நாட்டில் தழைத்தன. புத்தர் பிறந்த பொன்னாட்டுடன் மிகமிக அந்நியோன்யமான உறவுகளை அவன் ஏற்படுத்திக்கொண்டான். அப்பொழுது மகத சாம்ராஜ்யத்தில் அரசோச்சிய சமுத்திரகுப்தனின் அவைக்களத்தை சிங்கள தூதர்கள் அலங்கரித்தார்கள். அசோகன் மைந்தரான மஹிந்தரினால் பௌத்த தர்மம் ஈழநாட்டில் புகுத்தப்பட்டவரலாற்றை அந்த தூதர்கள் சமுத்திரகுப்தனுக்குக் கதை கதையாகச் சொன்னார்கள். அகில உலகிலும் பாரதகலாசாரம் பரிமளிப்பதையே ஜீவிய இலட்சியமாகக் கொண்ட சமுத்திரகுப்தன் புத்தபிரான் மூலமாக ஈழத்திலும் இந்திய கலாசாம் செல்வாக்குடனிருப்பதைக் கேட்டு பரவசமடைந்தான். இந்திய கலை கலாசாரம்பரவ தூதர்கள் பலரை சிங்களத்வீபத்துக்கு விரைந்தனுப்பினான்.

இந்த சந்தர்ப்பத்தில் புத்தகயாவிற்கு யாத்திரை போய்விட்டுத் திரும்பிய சில பிட்சுக்கள் புத்தகயாவின் சீர்கேட்டைப்பற்றி சிரிமேகவர்ணனிடம் பலமாகப் புகார் செய்தார்கள். பாரதத்தில் பௌத்த தர்மம் க்ஷீணித்து வருவதால் புத்தகயாவைக் கவனிப்பாரில்லை யென்றும் யாத்ரீகர்கள் தங்குவதற்குக்கூட அங்கு வசதியான இடமில்லை யென்றும் புத்தகயா அழிந்தால் புத்த தர்மமே அஸ்தமித்து விடுமென்றும் முறையிட்டார்கள். இதைக் கேட்டு துக்கித்த சிரிமேகவர்ணன் ஏராளமான பொன்னை



யும் மணியையும் முத்துக்களையும் பரிசுகளாக எடுத்துக் கொடுத்து சமுத்திரகுப்தன் சமூகத்துக்கு தூதர்களை அனுப்பிவைத்தான்.

விலையுயர்ந்த பரிசுகளைப்பார்த்த சமுத்திரகுப்தன் "ஆஹா, சிரிமேகவர்ணனின் அன்பு என்னைப் பரவசப் படுத்துகின்றது. தர்மம் தவறாமல் செங்கோல் செலுத்தும் உங்கள் மன்னன் என்னிடம் என்ன நாடுகிறான்?" என்று கேட்டான்.

"பிரமாதமாக ஒன்றுமில்லை சக்கரவர்த்தி! பௌத்தர்களாகிய எங்களுக்கு உங்கள் ராஜ்யத்திலிருக்கும் புத்தகயா புனிதமான க்ஷேத்திரம் அங்கு பிரதிவருடம் ஆயிரக்கணக்கான எம்மக்கள் அங்கு யாத்திரை போகிறார்கள். அவர்கள் தங்கியிருக்க வசதியில்லை. தங்கள் அனுமதியுடன் புத்தகயாவில் ஒரு யாத்ரீகர் விடுதியைக் கட்ட எமது மன்னர் விரும்புகிறார். இந்த வேண்டுகோளைத் தங்களிடம் சமர்ப்பிக்கவே வந்தோம்" என்று சிங்களத் தூதர்கள் மகதச் சக்கிரவர்த்தியிடம் அறிவித்தனர்.

"புத்தகயா பௌத்தர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் புண்ணிய க்ஷேத்திரம்தான் தூதுவர்களே! உங்கள் மன்னனின் விருப்பத்தை நானே நிறைவேற்றி விடுவேன். ஆயினும் சிரிமேகவர்ணனைச் சேரவேண்டிய புண்ணியத்தை நான் பறித்துக்கொள்ள விரும்பவில்லை. திருப்பணி வேலைகளை உடனே ஆரம்பிக்கலாமென்றும் தேவையான உதவிகளைச் செய்ய நான் சித்தமாயிருப்பதாகவும் என் நண்பனிடம் போய்ச் சொல்லுங்கள்" என்றான் சமுத்திரகுப்தன்.

அனுமதி கிடைத்ததுதான் தாமதம். கீர்த்தி சிரிமேகவர்ணன் பல்லாயிரக்கணக்கான பொற்காசுகளைச் செலவிட்டு சிங்கள இந்தியச் சிற்பிகளின் உதவியுடன் புத்தகயாவில் ஒரு பிரம்மாண்டமான யாத்ரீகர் விடுதியை நிர்மாணித்தான். பழமையின் சின்னங்கள் தெரிய ஆரம்பித்த விஹாரையையும் அற்புதமாகப் புதுப்பித்தான். படிப்படியாக இழந்து கொண்டு வந்த செல்வாக்கை புத்த

கயா திரும்பவும் பெறுவதற்கு மற்றும் பல ஆக்கவேலைகளையெல்லாம் அவன் அங்கு செய்தான். இதோடு சமுத்திரகுப்தன் தர்பாருடன் அந்நியோன்யமான உறவை அவன் ஸ்திரப்படுத்திக்கொண்டு இலங்கையின் கலை, கலாசார, கல்வித்துறைகளிலும் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினான். இருநாட்டு நல்லறிஞர்களும் கலைவாணர்களும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பயமின்றி போய்வரும் சகஜ நிலைமை ஏற்பட்டது. இதன் பயனாக குப்தர்களின் ஆட்சியிலே பாரதம் கண்ட மறுமலர்ச்சி ஈழத்திலும் தெளிவாகப் பிரதிபலித்தது, இலங்கையின் சரித்திரத்திலேயே இது ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது.

கண்டிமா நகரில் தலத மாளிகை என்ற ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் புத்த பகவானின் புனிதப் பல் இலங்கைக்கு வந்ததும் இதே காலத்தில் தான். மஹான் மஹிந்தர் பௌத்தமதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த சுமார் 580 ஆண்டுகளுக்குப் பின்னர் புத்தபகவானின் புனித தந்தம் இலங்கைக்கு வந்த வரலாறு ஆச்சரியமானது. மயிர்க் கூச்சவிடச் செய்யும் பல திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்தது.

கலிங்கத்தின் தலைநகரமான தந்தபுரம் அன்று திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. வண்ணமலர்ப் பந்தல்களும் மகர தோரணங்களும் வாசலெங்கும் தென்பட்டன. சித்திரக் கோலங்கொண்டிருந்த தந்தபுரம் அன்று கந்தர்வ புரியைப் போலக் காட்சிதந்தது. மக்களின் முகங்களில் தான் எத்தனை மகிழ்ச்சி சாரி சாரியாக, ஆயிரமாயிரம் மாந்தர்கள் வழிமேல் விழி வைத்து வீதிகளின் ஓரமாகக் காத்திருந்தார்கள். எவருடைய வருகையையோ? இல்லை, பட்டினப் பிரவேசத்தையா அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது அவர்களது தோற்றத்திலிருந்தும் துடிப்பிலிருந்தும் தெரிவதாயிருந்தது. இடையிடையே குதிரைப்படையினர் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மகாஜனங்கள் வேலை வைக்கவில்லை. ஆவலுடன் காத்திருந்த



வர்கள் அமரிக்கையாகவுமிருந்தால் ராணுவத்தினருக்கு என்ன வேலை?

பாடலிபுரத்துக்குப் போயிருந்த கலிங்க நாட்டு மன்னன் குஹசிவன் அன்று வெற்றிவாகை சூடி தலைநகருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அவனை வெற்றி வீரனை வரவேற்கத்தான் தந்தபுரத்தில் அன்று அத்தனை உற்சாகம். குஹசிவன் யாரை வென்றான்? எப்படி வெற்றிகொண்டான்? அவன் பெற்ற வெற்றி வாள்முனையில் பெற்ற வெற்றியல்ல. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் காரவேலன் என்ற கலிங்க மன்னன் மகதநாட்டைக் கத்திமுனையில் அடிபணியச் செய்ததைப்போல குஹசிவன் படையுடன் பாடலிபுரத்துக்குச் சென்று திரும்பவில்லை. படைக்குப் பதிலாக ஒரு பல்லவ புத்தபகவானின் புனிதமான இடதுபக்கத்துக் கடவாய்ப் பல்லை குஹசிவன் மகத சாம்ராஜ்யாதிபதியிடம் எடுத்துச் சென்றான். அன்பும் அறமும் அவனுக்குப் பக்கபலமாயிருந்து. ஒரு மகத்தான வெற்றியை, போர்க்களத்தில் கிடைப்பதைக் காட்டிலும் பெருமை வாய்ந்த வெற்றியை அவனுக்கு அளித்தன. பெருமிதத்துடன் திரும்பும் மன்னனுக்கு கோலாகலமான வரவேற்பு தந்தபுரத்திலே காத்திருந்தது. அவன் வெற்றி எத்தகையது என்பதை உணர புத்தர் புனித தந்தத்தின் பூர்விக வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லுவது இங்கு அவசியமாகிறது.

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னால் மகதநாட்டில் அஜாதசத்ரு என்ற பேரரசன் ஆட்சிபுரிந்த காலத்தில் குசிநகரம் என்னுமிடத்திலே புத்தர் பரிநிர்வாணமடைந்தார். வருங்காலச் சந்ததியினர் வணங்குவதற்காக புத்தரின் சீடர்கள் அவரது அஸ்தியையும் எலும்புத் துண்டுகளையும் சேகரித்து தங்கப் பேழைகளிலே பத்திரப்படுத்தினார்கள். வட பாரதத்தின் பல பகுதிகளிலும் இந்தப் பேழைகள் அடக்கம் செய்யப்பட்டு அவற்றின்மீது பிரம்மாண்டமான தாதுகோபுரங்கள் நிறுவப்பட்டன. புத்தரின் இடது கடவாய்ப்பல் ஒன்றை ஒரு சீடர் கலிங்கத்துக்குக் கொண்டுவந்தார். புத்தரின் வரலாற்றையும் அவர் செய்த அற்புதங்களையும் கேள்விப்பட்ட கலிங்க மன்னனாகிய

பிரம்மதத்தன் பௌத்த மதத்தைத் தழுவியதோடு தனது தலைநகரிலே புத்தரின் புனித தந்தத்துக்கு வானளாவிய கோபுரம் ஒன்றையும் கட்டினான். அன்று முதல் புத்தரின் புனிததந்தம் பூஜைக்குரியதாகியது. அத்துடன் தலைநகரத்தின் பெயரும் தந்தபுரம் என்று மாறியது.

தென்பாரதத்தில் புத்தமதம் முதன் முதலாகக் காலூன்றியது கலிங்கத்தில்தான். அன்று முதல் அடுத்த ஓராயிரம் ஆண்டுகள் வரையில் கலிங்கம் தென்னிந்தியாவிலே பௌத்தர்களின் கோட்டையா யிருந்தது. இதற்கிடையில் ஜைனமதமும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பரவ ஆரம்பித்ததால் ஜைனர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடைவிடாமல் சச்சரவு மூண்டு கொண்டிருந்தது. இவ்விரண்டுக்கு மிடையில் அகப்பட்டுக்கொண்டு இந்து மதம் எல்லா இடங்களிலுமே க்ஷீணித்துக் கொண்டிருந்தது.

புத்தர் காலமாகிய 800 ஆண்டுகளுக்குப் பின்னர் மகதப் பேரரசு குப்தர்களின் ஆட்சிக்கு வந்ததும் இந்து சமயம் இழந்த தனது பழைய செல்வாக்கைத் திரும்பவும் அடைய ஆரம்பித்தது. இந்து சமயம் ஒரு புறமும் ஜைன சமயம் மற்றொரு புறமுமாக பௌத்த மதத்தைக் கடுமையாகத் தாக்குவதற்கு ஆரம்பிக்கவே, இந்தியா முழுவதிலும் பௌத்த மதம் க்ஷிணிக்க ஆரம்பித்தது. இந்த மாதிரியான சூழ்நிலைமையில்தான் குஹசிவன் கலிங்கத்திலே மகதப் பேரரசுக்குக் கப்பம் செலுத்தும் ஒரு சிற்றரசனாயிருந்தான்.

கலிங்கத்தில் பௌத்தமதம் உச்ச நிலைமையிலிருப்பதைக் காணச் சகியாத ஜைனர்களும் இந்துக்களும் குஹசிவன் ஆட்சியைக் கவிழ்க்கவும் புத்தரின் புனித தந்தத்தை அழிக்கவும் சதி செய்தார்களாம். இதைக்கண்டு சீற்றமடைந்த குஹசிவன் இந்துக்களையும் ஜைனர்களையும் கடுமையாக தண்டித்ததோடு அவர்களை தேசப் பிரஷ்டம் செய்துவிட்டான். தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் மகதப் பேரரசனிடம் முறையிட்டார்கள். அப்பொழுது மகதநாட்டில் சக்கிராதிபத்தியம் செலுத்தியவன் பெயர்



பாண்டு என்று இலங்கை வரலாற்று நூல்கள் கூறிய பொழுதிலும் உண்மையில் பாண்டு என்ற பெயருடைய மன்னர் யாரும் குப்தர் வம்சவழியில் இருந்ததில்லை. வடக்கே காஷ்மீரம், காம்போஜம், காமரூபம் முதற்கொண்டு தெற்கே கோதாவரி நதிக்கரை வரையில் ஜயித்து அசுவமேதயாகம் செய்து சக்கிராதிபத்தியம் செலுத்திய முதலாவது மகதப் பேரரசன் சமுத்திர குப்தனேயாகும். குஹசிவன் கலிங்கத்தை ஆண்ட சமயம் இலங்கையில் ஸ்ரீ கீர்த்தி சிரிமேக வர்ணன் அரசு செலுத்தியதையும் அவனது தூதர்கள் சமுத்திர குப்தனின் அவைக்களத்துக்கு அனுப்பப் பட்டதையும் கவனிக்கும் பொழுது குஹசிவனுக்கு மாறாக கலிங்நாட்டு இந்துக்களும் ஜைனர்களும் முறையிட்ட மகதப்பேரரசன் சமுத்திரகுப்தனாகவேயிருக்க வேண்டுமென்று ஊகிக்கும்படியா யிருக்கிறது.

இந்துக்கள் இம்சிக்கப் படுகிறார்களென்பதைக் கேள்விப்பட்டவுடன் சமுத்திரகுப்தனால் பொறுக்க முடியவில்லை. சித்ராயணன் என்ற வேறொரு சிற்றரசனை பெரும்படைகளுடன் கலிங்கத்துக்கு அனுப்பினான் சமுத்திர குப்தன். குஹசிவனையும் கிளர்ச்சிகளுக்குக் காரணமாயிருக்கும் புத்தரின் புனித தந்தத்தையும் பாடலீபுரத்துக்குக் கொண்டு வரவேண்டு மென்பது சக்ரவர்த்தியின் ஆணை. இந்த இலட்சியத்தோடு வந்த சித்ராயணனையும் அவனது படைத்தலைவர்களையும் கலிங்கமன்னன் போர்முனையில் சந்திப்பதற்குப் பதிலாக ராஜாங்க விருந்தாளிகளாக அன்புடன் வரவேற்று உபசரித்தான். இந்துக்களையும் ஜைனர்களையும் கலிங்கத்திலிருந்து காரணமில்லாமல் பிரஷ்டம் செய்யவில்லை யென்பதையும் அமைதியான ஆட்சிக்கு அவர்கள் பங்கம் விளைவித்ததாயும் குஹசிவன் தனது கட்சியை எடுத்துச் சொன்னான்.

“உண்மை என்ன வென்பது சக்ரவர்த்திக்குத் தெரியாது. பேரரசின் ஆக்ஞைக்குப் பணியக் கடமைப் பட்டவர்கள் நாம். புத்தரின் புனித தந்தத்தை எடுத்துக் கொண்டு என்னுடன் பாடலீபுரத்துக்கு வந்து, தர்மமும் நேர்மையும் தவறாத மாமன்னரிடம் நடந்ததைச் சொன்

னால் உனக்கு நிச்சயம் நியாயம் கிடைக்கும்!" என்றான் சித்ராயணன்.

குஹசிவன் யோசித்தான். தர்மமும் நியாயமும் வெற்றிபெறுமென்ற நம்பிக்கை அவன் மனதில் ஏற்பட்டது. கடமை உணர்ச்சியும் மகதப் பேரரசனிடம் போகும்படி அவனைத் தூண்டியது. சித்ராயணன் யோசனைப்படி புத்தரின் புனித தந்தத்தோடு பாடலீபுரத்துக்கு அவன் பிரயாணமானான். அவன் நம்பியதைப் போலவே அறமும் அன்பும் வெற்றிபெற்றது. பௌத்தத் திடம் கொண்ட துவேஷத்தினால் அமைதியான ஆட்சியைச் சீர் குலைப்பதற்கு நடந்த சதிகள் அம்பலமாயின. சமுத்திரகுப்தன் இந்து சமய மலர்ச்சியில் நாட்டம் கொண்டவனாயினும் பிறமதத் துவேஷத்தினால் மட்டுமே இந்து சமயத்தை வளர்க்க முடியுமென்பதை சிறிதும் ஆதரியாமல் நல்லாட்சிக்கு சர்வமத சமரச மனப்பான்மை வளருவதில் நம்பிக்கை கொண்டவன். இந்தப் பரந்த மனப்பான்மையுடைய பேரரசனிடம் குஹசிவனுக்கு நியாயம் கிடைத்தது. மகதமன்னனின் அன்பையும் ஆசியையும் பெற்று புனித தந்தத்துடன் அவன் தனது ராஜ்யத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். ஆயுத பலத்தினாலல்லாமல் அன்பினால் வெற்றிவாகை சூடிக்கொண்டு பட்டினப் பிரவேசம் செய்யும் மன்னவனை குதூகலத்துடன் வரவேற்கவே தந்தபுரமக்கள் திரண்டிருந்தார்கள். பௌத்த தர்மத்தில் திளைத்த அந்த மக்களுக்கு புனிததந்தம் அதற்குரிய திருக்கோயிலுக்குத் திரும்பி வருகிறதென்ற நற்செய்தி அளவிலா சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது. ஆனால் விதியின் விளையாட்டை அவர்கள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. தங்களுடைய அன்றைய சந்தோஷம் அற்ப சந்தோஷமாக முடியப் போகிறதென்பதும் அப்பொழுது அவர்களுக்குத் தெரியாது. புத்தரின் புனித தந்தத்துக்கு உரிய இடம் இலங்கையாயிருக்கும் பொழுது கலிங்க நாட்டில் அந்தப் புனிதச் சின்னம் எப்படி நீடித்திருப்பது சாத்தியம்?

சில மாதங்களுக்குப் பின்னர் ஜைனர்களின் தூண்டுதல் பேரில் சுவேதன் என்ற ஒரு சிற்றரசன் புத்தரின்



புனித தந்தத்தைக் கைப்பற்றி குஹசிவனை அடிபணிய வைப்பதற்காக பெரும் சேனையுடன் கலிங்கத்தின் மீது படையெடுத்து வந்தான். மகதப் பேரரசுக்கு அபயச் செய்தியனுப்பி உதவி பெறுவதற்குக்கூட குஹசிவனுக்கு வழியில்லாதபடி சுவேதன் திடீர் தாக்குதலை ஆரம்பிக்கவே போர்முனையில் கலிங்க சேனைகள் படு தோல்வியடைவது நிச்சயமாகிவிட்டது. அந்த அபாயகரமான நிலைமையிலும் புத்தரின் புனித தந்தம் எதிரிகளிடம் சிக்கிவிடக் கூடாதென்பதிலேயே குஹசிவன் கவலைகொண்டிருந்தான். போரில் தோற்றுப் போவது நிச்சயம். தோல்வியுற்றால் புனித தந்தம் எதிரிகளின் வசப்பட்டு விடுவதும் நிச்சயம். பௌத்த தர்மத்தில் நம்பிக்கையற்றவர்கள் புனித தந்தத்தை சர்வநாசம் செய்துவிடுவதும் நிச்சயம். தனது பட்டமும் பதவியும் போனாலும் புனித தந்தம் அதைப் பாதுகாக்கக் கூடியவர்களிடம் போய்ச் சேரவேண்டுமென்று குஹசிவன் கடுமையான யுத்தம் நடைபெறுகையில் சிந்தனையிட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் அவனுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று.

தனது அருமை புதல்வி ஹேமமாலாவையும் (இவள் பெயரை ரணமாலா என்கிறது ராஜவழி என்ற நூல்) அவனது கணவனும் உஜ்ஜயினி ராஜ்ய இளவரசனுமான தந்தபுத்திரனையும் குஹசிவன் அழைத்தான்.

"இதோ பாருங்கள் என் அருமைச் செல்வங்களே! போரில் நாம் தோற்றுப் போவது நிச்சயம். மகதப் பேரரசுக்கு அபயச் செய்தியனுப்பி உதவி வருவதற்கு வழியில்லை. நம் ராஜ்யத்தை எதிரிப்படைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. போரின் போக்கு நம்பிக்கையளிப்பதாயில்லை. போரில் உயிர் துறந்தாலும் துறப்பேனே தவிர புனித தந்தத்தை எதிரிகளின் வசம் ஒப்படைக்க மாட்டேன். நாளை சூர்யோதயமானவுடன் மூலபல சேனைகளுடன் நானே போர் முனைக்குப் போகிறேன். வெற்றியும் தோல்வியும் நாளை சூர்யாஸ்தமனத்துக்குள் தெரிந்துவிடும். யுத்தம் நமக்கு தோல்வியில் முடிந்தால் போர்க்களத்தில் சிகப்புக் கொடி பறக்கும். அரண்மனையின் உப்பரிக்கையிலிருந்து போர்க்களத்தைப்

பார்த்துக்கொண்டே யிருங்கள். போர்க்களத்தில் சிகப்புக்கொடி உயர்த்தப்படுவதைக் கண்டால் ஒரு விநாடியும் தாமதியாமல் நீங்கள் இருவரும் துறவிகளைப்போல மாறு வேடம் தரித்து புனித தந்தத்தை எடுத்துக்கொண்டு தலைநகரிலிருந்து தப்பியோடிவிடவேண்டும். நேரே தூத்துக்குடிக்குச் செல்லுங்கள். அங்கு ஒரு மரக்கலத்திலேறி ஈழத்துக்குச்சென்று மன்னன் மகா சேனனிடம் புனித தந்தத்தை ஒப்படைத்து விடுங்கள். பகவானின் புனிதச் சின்னத்தைப் பயபக்தியுடன் பாதுகாக்கக்கூடியவன் எனது நண்பன் மகாசேனன் ஒருவன்தான். உயிரைக் கொடுத்தேனும் புனிதச்சின்னத்தை நீங்கள் காப்பாற்றி இலங்கையில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். போர்முனையில் என் கதி என்ன ஆகுமோ என்று கலங்கிக் கொண்டு காரியத்தைக் கெடுத்துவிடாதீர்கள். பாசம் பயத்தைத்தூண்டும். பயம் பாபத்தை வளர்க்கும். பாசத்துக்கும் நேசத்துக்கும் இது நேரமல்ல. உங்களிடம் ஒப்படைத்திருக்கும் புனிதமான கடமையை நிறைவேற்றி வையுங்கள். இந்த சேவைக்காக பௌத்தப் பெருமக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு உங்களை வாழ்த்துவார்கள். அவர்கள் வணக்கத்துக்கு புனிததந்தம் என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும். நான் வருகிறேன். புத்தர் உங்களைக் காப்பாற்றுவார்.

கலிங்க மன்னன் குஹசிவன் இவ்விதம் தனது மகளிடம் புத்தர் தந்தத்தைப் பாதுகாக்கும் புனிதமான பணியை ஒப்படைத்துவிட்டு போர்முரசுகள் முழங்க யுத்தக் களத்துக்குப் புறப்பட்டான். அவனை மறுபடி காணப்போவதில்லையென்ற துயரத்துடன் கதறியழுது கண்ணீர் விட்டவண்ணம் ஹேமமாலாவும் தந்தபுத்திரனும் குஹசிவனை வழியனுப்பி வைத்தார்கள்.

**போர்**முனைக்குச் சென்ற குஹசிவன் சொல்லிவிட்டுப் போனதைப் போலவே அன்று அந்தி மயங்குவதற்குள் யுத்தத்தின் முடிவு தெரிந்துவிட்டது. ஒரு காலத்தில் மௌரியப் பேரரசன் அசோகனை முறியடித்து யுத்தத்தை அறவே வெறுக்கும்படி அவனுக்குப் பீதியூட்டிய கலிங்க

25355



சேனைகள், இன்னொரு சமயம் பிரகஸ்பதி மித்திரனை அடிபணியச்செய்து மகத சாம்ராஜ்யத்தை வெற்றிகொண்ட அதே கலிங்க நாட்டு மாவீரர்கள் இன்று சுவேதன் என்ற ஒரு சிற்றரசனிடம் படுதோல்வியடைந்து தலைதெறிக்க திரும்பி ஓடி வந்துகொண்டிருந்தார்கள். குஹசிவன் செய்த முன்னேற்பாட்டின்படி போர்க்களத்திலே சிகப்புக் கொடி, ஆபத்தை அறிவுறுத்தும் செங்கொடி பறப்பதை ஹேமமாலாவும் தந்தபுத்திரனும் அரண்மனை உப்பரிக்கையிலிருந்து கண்டார்கள். கண்டதுதான் தாமதம், ஹேமமாலாவிற்கு இதயமே நின்றுவிடும்போலிருந்தது. மடைதிறந்த வெள்ளம்போல கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அவள் கதறியழுதாள். தோல்வியையே அறியாத கலிங்கம் அடிமைப்பட்டு விட்டதேயென்ற துயரம் ஒருபுறம்; தகப்பன் கதி யாதாகுமோ என்ற கவலை மற்றொருபுறம். இத்துடன் செல்வம் கொழிக்கும் நாட்டைச் சீரழித்து சூறையாட சில நாழிகைகளில் எதிரிகள் வந்துவிடுவார்களே என்ற பயமும் சேர்ந்து அவளை நிலை தடுமாறச் செய்துவிட்டது. வெட்கமும் வேதனையும், பயமும் பரபரப்பும் இரத்தக் கண்ணீராகமாறின. பாவம், அவள் வேறு என்ன செய்வாள்?

இதற்கிடையில் தீப்பந்தங்களுடன் கொள்ளிவாய்ப் பிசாசுகள் பாய்ந்து வருவதைப்போல ஓடும் கலிங்கப்படைகளை விரட்டிக்கொண்டு எதிரிகள் விரைந்து வருவதை தந்தபுத்திரன் கண்டான். சற்று நேரத்துக்குள் அவர்கள் அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு விடுவார்களென்றும் அதன் பிறகு தப்புவது அசாத்தியமென்றும் நினைத்து அவன் ஹேம்மாலாவை எப்படியாவது காப்பாற்றிக் கொண்டுபோய்விட அரும்பாடு பட்டான். தன்னை மறந்து புலம்பிய இளவசிக்கு கணவன் பேச்சுகூடக் காதில் விழவில்லை. அவள் அழுகையை நிறுத்தாததைக் கண்டு சினமடைந்த தந்தபுத்திரன், நயமாகப் பேசுவதைவிட்டு “ஹேமா! நீ இங்கேயே அழுது புலம்பிக்கொண்டிரு! நான் போகிறேன். தகப்பனுக்கு நீ துரோகம் செய்யலாம். ஆனல் மன்னருக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன். அவருக்கு அளித்த வாக்குறுதியின்படி புத்த பகவானின்

புனித தந்தத்தை எடுத்துக்கொண்டு நான் ஈழத்துக்குப் போகிறேன். இனி உன் வழிவேறு, என் வழிவேறு. புத்தர் உன்னைக் காப்பாற்றுவாராக!" என்றுசொல்லிக்கொண்டு அங்கிருந்து புறப்பட ஆரம்பித்தான்.

கடமையுணர்ச்சியை இவ்விதம் அவன் குத்திக் காட்டியபொழுதுதான் இளவரசியின் கண்ணீர் நின்றது.

"நீங்கள் என்னைவிட்டுவிட்டாபோகிறீர்கள்? இல்லை நானும் வருகிறேன். அருமைத் தந்தையின் ஆத்மா திருப்தியடைய அவர் இட்ட பணியை நிறைவேற்றிவைப்ப தற்கு இதோ நானும் வருகிறேன். புத்த பகவானின் புனித தந்தத்தை எப்படியும் ஈழம்கொண்டுபோய்ச் சேர்ப் போம்!" என்று சொல்லிக்கொண்டு ஹேமமாலாவும் கிளம் பினாள். புத்தர் தந்தத்தையும் எடுத்துக்கொண்டு, துறவி களைப்போல காஷாய மணிந்து அவர்கள் அரண்மனைக்கு வெளியே வந்தார்கள். ஊர்முழுவதும் அமளிதுமளிப் பட்டத்தினால் தலை நகரத்தைவிட்டுத் தப்பிப்போவதில் அவர்களுக்குக் கஷ்டமேதும் ஏற்படவில்லை.

சுவேதனின் இலட்சியம் புனிததந்தத்தைக் கைப் பற்றி அழிப்பதே தவிர கலிங்கத்தைக் கட்டியாள வேண்டுமென்பதல்ல. ஆகையால் எதிரிப்படைகள் எந்த நேரத்திலும் பின்பற்றி வரலாமென்ற பயத்துடன் இள வரசியும் தந்தபுத்திரனும் இரவு பகலென்று பாராமல் ஓட்டமும் நடையுமாக கோதாவரி நதி தீரத்தையடைந்த னர். நதியைக் கடந்து ஆந்திரபாதத்தை அடைந்துவிட் டால் அதன்பிறகு அச்சமின்றி நடமாடலாம். ஆனால் கரை புரண்டு ஓடும் கோதாவரியை எப்படிக் கடப்பது என்று அவர்கள் தயங்கிக்கொண்டிருந்த சமயம் புத்தர் அருளி னால் ஒரு படகோட்டி அவர்கள் உதவிக்கு வந்து சேர்ந் தான். ஒரு நாழிகை நேரத்தில் நதியைத்தாண்டி ஆந்திர பாதத்தில் அடியெடுத்து வைத்தபொழுதுதான் அவர்கள் நிம்மதியாக மூச்சுவிட ஆரம்பித்தார்கள்.

கால்நடையாகவே அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. இடையில் எவ்வளவோ ஆபத் துகள்; கஷ்டங்கள்; இடையூறுகள். இவைகளையெல்